பிஸ்மில்லாஹி.

பீர்முகம்மது ஸாகிபு ஒலியுல்லா அவர்களின்

ஜீவியசரித்திரம்

மகா மகத்துவமும், வரிசையும் பொருந்திய மெய்ஞ்ஞானசொரூபரான ஹலரத்து ஆரிபுபில்லாஹி பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லா அவர்கள் பிறந்து வளர்ந்த ஊரானது:—தென்னிந்தியாவின் முக்கிய பாகங்களில் இருக்கும் அநேக ஜில்லாக்களில் நீர்வளம் நிலவளங்களிற் சிறந்துவிளங்கிய திருநெல்வேலி ஜில்லாவின் தென்மேற்காகவும், ஆகாய கெங்கையாகிய தாம்பிரபருணி யென்னும் மஹாநதியானதுபிரவாகித்து ஜுனை கூடுந்தலமான பாபநாசத்தின் கீழ்புறமாகவும், பொதிகைமாமலையின் அடிவாரமாகவும், வடமலையற்ளத்தின் கணவாய் எல்லையாகிய ஆயிரங் காவுக்கு வழிமுனையாகவும் இருக்கின்ற தென்காசி யென்று சொல்லப்படும். இந்தத் தென்காசி நகரத்தில் வீரசைவ வெள்ளாளர்களும், சைவ முதலிமார்களும், பராக்ரமசாலிகளான பாளையப்பட்டு மறவர்களும், நெசவுத் தொழில் செய்கின்ற கைக்களர்களும், பட்டு நூல் ஜாதியர்களும், வர்த்தகங்கள் பயிர் ஜீவனுதிகள் செய்கின்ற முஹம்மதியர்களுமாக அநேக ஆயிரஞ் ஜனங்கள் வாசஞ்செய்கின்றார்கள். இந்த நகரத்தில் பிரமாண்டமான ஒரு சிவமதக்கோவிலும், சதுராகாரத்திற்கு இரண்டு மைல் தூரமுள்ள ஒரு தெர்ப்பைக்குளமும் உண்டு. 400 வருடங்களுக்குமுன் பரதகண்ட முழுமைக்கும் இராஜநகரமான டில்லியென்னும் ★ அஸ்தினபுரியை அரசாக்ஷி செய்தவராகிய அவ்ரங்கசிப் என்கிற முஹம்மதிய சக்ரவர்த்தி காசி நகரத்தை முற்றிகைவிட்டு பிடித்தபோது, அவரது சைனியங்களின் கொடுமைக்குத் தாங்காமல் வலைசைவாங்கித் தெரிபட்டோடிவந்த ரஜபுத்ர பார்ப்பார்கள் முக்கிய பாகம் இந்தத் தெர்ப்பைக் குளத்தைச் சுற்றி வாசஞ்செய்கிறார்கள். அவர்கள் வசிக்கும் ஸ்தலங்களுக்கு "காசி அக்கிரா

★ சந்திரகுப்தன் அரசாண்ட காலத்தில் இந்தப்பெயர் உண்டாயிற்று

ஹரம்'' என்று சொல்லப்படுகிறது. இந்துக்களுக்கு மகா முக்கிய முக்கிய திருஸ்தலமான காசி நகரத்தில் நின்றும் வெளிப்பட்ட இராஜவம்மிஷப் பாப்பார்கள் ஆதியில்வந்து குடியேறின காரணத்தாலே இந்த நகரத்திற்கு (தென்காசி) என்று பெயர் வழங்கிற்று.

இதுநிற்க இங்கே நான் இந்த ஞானமணிமாலையைச் செய்த மகா மெய்ஞ்ஞான சொரூபரான தற்கலைப் பீர் முகம்மது சாகிபு ஒலியுல்லா அவர்களின் ஜீவிய சரித்திரத்தில் நின்றும் சிலதைமாத்திரம் சொல்ல வந்திருக்கிறேன்.

சாகிபவர்களின் இயற்கை ஊராகிய தென்காசியிலிருந்து வந்த பிரயாணிகளும், நூற்றுக்கு மேலிட்ட வயதுள்ளவர்களுமான அநேக வயோதிபர்களின் வாய்மொழியாக நான் கேட்டிருக்கிறேன். சாகிபவர்களின் தகப்பனுர் தென்காசியிலுள்ள பூர்வீக முகம்மதியக் கோத்திரத்தார்களில் உள்ளவர்கள் அவர்கள் பெயர் சின்ன மலுக்கர் என்று சொல்லப்படும் சாகிபவர்கள் பிறந்த காலங்களில் நடந்த அற்புதாதி சரிதங்கள் எதுவும் எழுதவேணுமானுல் அவர்கள் பூர்வீக சரித்திரம் எனக்கு நல்லதெளிவாய் தெரியாது சாகிபவர்கள் ஹலரத்து சுல்தானுல் ஆரிபீன் செய்யிது அகுமதுல் கபிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கலிபாக்களிலுள்ளவர்கள் என்று சிலர்சொல்லுகிருர்கள். அது அப்படியிராது. ஏனென்ருல் சுல்தானுல் ஆரிபீன் அவர்கள் காலம் இற்றைக்கு 800-வருடங்களுக்கு முன்னுள்ளது. சுல்தான் ஜமாலுத்தீன் அவர்கள் ஈஜீப்றிலுள்ள காஹிருவிலிருந்து தென்பாண்டி மண்டலத்தின் மீது படையெடுத்து வந்ததில் இருந்து தான் தென்னிந்தியா முஸ்லிம்களின் கோத்திரங்கள் முளைகண்டன இந்த கணக்கைப்பார்த்தால் சற்றேறக்குறைய 500 வருஷங்களாகின்றன. ஆனதால் சாகிபவர்கள் சுல்தானுல் ஆரிபீன் அவர்களின் கலிபாக்களின் கலிபாக்களைத் துடர்ந்தவர்களாக இருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

சாகிபவர்கள் ஷரீயாத் தரீக்கத்தில் உள்ளவர்களாயிருந்தாலும் பெரும்பாலும் காதிரீயாத்தரீக்கை ஒட்டிய நடையே அவர்கள் பாடல் போகின்ற ஜாடையில் விளங்குகிறது. சாகிபவர் தாய் தந்தை சுற்றத்தாரைவிட்டு வாலிபப்பருவத்திலேயே நீங்கி வனசஞ்சாரியாய் அநேக காலந்திரிந்து வரும்போது (பிசுபில்குறம்) ஞானமலை வள

முதலிய நாற்களைப்பாடி அவைகளை சுவடி சுவடிகளாகத் தமது வசம் வைத்திருந்தார்கள். அந்தக்காலத்தில் அவர்களின் தகுதிக்கேற்ற சீஷர்களாக காலன் குடியிருப்பு பெரிய மீருன்கனியண்ணுவியார் அவர்களும், கன்னியாகுமரி சருங்கடற்கரையிலுள்ள பெரிய துறைமுகமாகிய குலசேகரன் பட்டணம் காரியாப்புலவரவர்களும் நியமனம் பெற்று சிறிது காலம் சாகிபவர்கள் அண்டையிலிருந்து பழகி அப்பால் அவர்களின் உத்திரவின்படியே அவ்விருவரும் விலகித்தங்கள் ஊர்களுக்கு வந்துவிட்டார்கள். இருந்தாலும் ''பொன்மலையைச்சார்ந்த காகமும் பொன்னிறமாம்'' என்பதைப்போல் சாகிபவர்களின் ஞான சீஷர்களான அவ்விரு மஹான்களும் அநேக அற்புதாதிகளைச்செய்து நீண்டகால மிருந்ததாக பல உதாரணங்கள் காட்டுகின்றன. இவ்விருவரைப்பற்றிச் சுருங்கச் சொல்லுமிடத்து பெரிய மீருன்கனி யண்ணுவியார் அவர்கள் வனசஞ்சாரம் செய்துவரும்போது ஒருநாள் தண்ணீரற்று இடிந்து போய்க்கிடந்த ஓர் பாழுங்கிணற்றருகில் நின்றுகொண்டு ஒரு வோலையை வாரி எழுத்தாணியால் செய்தியொன்றுயெழுதி அக்கிணற்றுக்குள் போட்டதும் குபீரென்று ஜலப்பிரவாகஞ்செய்து கிணறுவாயளவு பொங்கி நீர்வழிந்தோடிற்று. காரியாப்புலவர் அவர்களோ! குலசேகரன் பட்டிணத்தில் இருந்து நெய்து கொண்டு இருக்கும்போது மலையாளம் தற்கலையில் இருந்து நெய்யும் கனந்தங்கிய தங்கள் சற்குருவாகிய சாகிபவர்கள் தங்களிடம் இருந்த நூற்கழி முடிந்தவுடனே அங்கிருந்து கையை நீட்டி ''காரியா கழிதாரும்'' என்று கேட்டதும் கைபதறக் கால்பதற எழுந்து நூற்கழிகளை எடுத்து தமது கையில் நிரம்ப வைத்து ஆசிரியர் சமூகம் வரையிலும் கையை நீட்டிக்கொடுத்து விட்டு இழுத்துக்கொண்டார்கள்.

ஞானவான்களுக்கு சீஷர் வந்து வாய்த்தால் இப்படியல்லவா வாய்க்க வேண்டும்! சும்மாவிழுந்து கிடக்கின்ற கழுதைகளும் குரங்குகளும் சீஷராக இருந்தால் அந்த குருவானவனுக்கு ஊர்களில் இகழ்ச்சி கிடைப்பதற்கென்ன தடை? இதுகிடக்க: சாகிபவர்களுக்கு '' தற்கலையார் '' என்று பெயர் வந்ததற்கு காரணமாவது மலையாளத்திலுள்ள தற்கலையூரிற்போய் அங்கொரு கலியாணமுஞ்செய்து சமுசாரவாளராக இருந்தார்கள். அதனுல் தற்கலையார் என்று ஜனங்கள் கூப்பிடும்படியாயிற்று, சாகிபவர்கள் வடமலையாளத்தைச் சேர்ந்த அநேக பிரமாண்டமான கணவாய்களின் கெபிகளிற் போய்

இருந்த யோகாப்பியாசஞ் செய்து அநேக காலங் கழித்து அலைகளை விட்டு விலகி மலையாள மண்டலத்திற் சென்று அங்குள்ள பல தேச சஞ்சாரங்களும் செய்து அப்பால் அங்குள்ள யானைமலையிலும் சிறிது காலம் அன்னபானமற்று பதினைந்து வருஷம் வரையிலும் ஒரே சாதனையாக நிஷ்டையிலிருந்து விட்டார்கள், அங்கிருந்து தான், ம அரிபத்துமாலை, ஞானரத்தின குரவஞ்சி, ஞான விளக்க சர நூல *ஞான உலகவுருளை, ஞான மணி மாலை, ஞானப் பூட்டுத் திறப்பு முதலான அரும்பெரும் நூல்களையெல்லாம் அருளிச் செய்தார்கள். ஆகவே சாகிபவர்கள் யானைமலையில் வந்திருக்கின்ற சமாசாரம் திசையெல்லாம் பரந்து கொச்சி நகரத்து அரசனுக்குத் தெரிய வந்தது. அவன் எப்படியோ ஒருவித தந்திரத்தால் தனிவேடம் பூண்டு புறப்பட்டு சாகிபவர்கள் சமுகம் வந்து பாதார்ச்சனை செய்து மன்றாடி நின்றதால் சாகிபவர்கள் அவன்மீது கருணாகரம் வைத்து அந்த அரசனுக்கு உபதேசஞ்செய்து அவனையாளாக்கி அனுப்பிவிட்கிதும் அவன் அப்படியே பேரானந்த வெள்ளத்தில் மிதந்தவனாகத் தேசாந்திரியாய் போய்விட்டான். அப்பால் இதுவிஷயமாகக்கொச்சி ஸமஸ்தானத்தில் அநேகமாக புரட்சிகள் நடந்தேறின. அதனால் சாகிபவர்கள் யானை மலையில் வாசஞ்செய்கின்றதும், அவர்களால் ஒரு அரசன் ராஜீய பரிபாலனத்தைவிட்டும் துறவுபூண்டு போய்விட்டதுமான சகலசெய்தியும் திருவனந்தபுரத்தின் மூலக்கர்த்தாவான சேரன் மகாராஜாவின் ஐந்தாவது பௌத்திரனாகிற முத்துச்சாமித் தம்பிரானுக்குத் தெரிய வந்தது. அவர் சற்று ஞானவிசாரணை மனத்தராயிருந்தவரானதால் நாளடைவில் சாகிபவர்களை யானைமலையை விட்டும் எழுந்தருளச் செய்து தமது மூன்றாவது பட்டணமாகிய திருவிதாங்கூரில் கொண்டு வந்து வைத்து சிறிதுகாலம் சாகிபவர்களின் சகவாசத்தில் இருந்து மகத்துவம் பொருந்திய ஞானியாகி விட்டார். ஒரு சமயங்களில் சாகிபவர்களை கூட்டிக்கொண்டு போய் தமது அரண்மனையிலும் வைத்துக் கொள்வதுண்டு. அந்த சமயங்களில் அங்கே இராஜ பெருமாட்டி முதற்கொண்டு அரச புத்திர சந்ததிகளெல்லாம் சாகிபவர்களை 'ஞானி ஞானி'' யென்றழைத்து சில சமயங்களில்

---

* இந்நப்பெயருள்ள நூலை எதோ ஒரு காரணத்தை வேண்டி அந்த காலத்திலுள்ள ஆலிம்கள் மறைத்து விட்டார்கள்.

பாட்டாத்தம்பிரான் என்று ஒரு இடுகுறி காரணப்பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுப் பரியாசசலலைகளும் செய்வார்கள். இவ்விதம் இராஜ சகவாசத்தின் செல்வாக்கினாலேயே சாகிபவர்கள் திருவிதாங்கூருக் கருகிலுள்ள தக்கலை யென்கிற ஊரில் நெசவுவேலை செய்வதும், மிக்க ஏழையுமான குடித்தனத்திலுள்ள ஒருபெண்ணை சாகிபவர்கள் விவாகம்பண்ணிக்கொண்டு அவ்விடத்திலேயே குடும்ப சமேதரா யிருந்துவிட்டார்கள்.

இதற்கிடையில் சாகிபவர்கள் திருவனந்தபுர ஸமஸ்தானத்துள்ளே போவார்கள். அரசனாகிய முத்துச்சாமித் தம்பிரான் சாகிபவர்களைக் கண்டவுடனே திடுக்கென்று ஆசனத்தைவிட்டெழுந்து வந்து அழைத்து ஆசனத்தில் உல்லாச ஸம்பிரமாக உட்கார வைத்து ஸ்தாம்பூலப்பெட்டியைத்திறந்து பரிமளப்பாக்கு நறுக்கி கொடுத்து வெற்றிலை மடித்து மடித்து மரியாதையுடன் கையிலேந்தி நீட்டுவதுமா யிருந்து உத்திரவை யெதிர்பார்ப்பார். அவரது அநேக உபசாரணையுள்ள குமாரர் குமாரத்திகளோ! சாகிபவர்களை வழக்கம் போல் ஞானி ஞானி! யென்று அழைத்து "கொய்'' யென்று மொய்த்துக்கொண்டு நிற்பார்கள். இப்படி நடந்துவரும போது சமஸ்தானத்தில் திடீரென்று ஒரு சம்பவம்வந்து நேரிட்டு விட்டத! ஒரு வாரங்கழித்து இளவரசுபட்டங் கட்டவேண்டுமென்று நியமஞ் செய்துவைத்திருந்த அரசகுமாரன் உதிரிகண்டு ஜன்னிதோஷித்து எவ்வளவோ இராஜவைத்தியமெல்லாம் செய்தும் ஒன்றும் பலிக்காமல் இறந்துபோய்விட்டான். ஆகவே இளவரசனைத் தகனம் செய்வதற்கும் தம்பிரான் குலசோழியப் பார்ப்பார்களெல்லாம் வந்து கூடி அழுகையும், கண்ணீருமாய் நின்றார்கள். சுருங்கச்சொல்லுங் காலத்தில் திருவனந்தபுரமே குல்லென்று விசாரத்தில் அழுந்தி முழுகிப்போயிற்று.

இந்தச் சமயத்தில் சாகிபவர்களும் தக்கலையிலிருந்து வந்து சமஸ்தானத்துக் கொலுவுக்குள் போனார்கள். போனதும் கொலு வாசனம் லட்சுமிகரமற்று உறங்கி நிற்பதும், அரசனைு மந்திரி பிரதானிகளும் வதனஞ் சாம்பிப்போய் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்ப்பதுமாய் வியாகுலத்துடன் இருப்பதும், கன்னிகாமடத்தின் ஒருபுறத்திலிருந்து மிருதுவான குரலோசையுடன் கேட்கும் இராஜபத்தினியின் அழுகை சப்தமானது மிகுந்த பரிதாபமா

யிருப்பதும், சாகிபவர்கள் தெரிந்து சற்றுநேரம் அங்கே நின்று அப்பால் அரசனைப் புன்சிரிப்புடன் சயிக்கினைபண்ணி யழைத்தார்கள். ''கடந்த ஞானியும் விடுவரோ மக்கள்மேல் காதல்'' என்ற முதுமொழிபோல அரசன் வாடிய முகத்துடன் சாகிபவர்கள் அண்டையில்வந்து ஒதுங்கி நின்ருன். அங்கு நடந்திருக்கின்ற சம்பவத்தை ஞானதிருஷ்டியால் தெரிந்துவந்திருக்கின்ற சாகிபவர்கள் வாய் திறந்து ''ஏ முத்துசாமி தம்பிரான்? என்று கருணையுடன் விழித்து ஞானிகளுக்கு விசனம் வேண்டாம்'' என்று சொன்னவர்களாகத் தம்பிரானை யழைத்துக்கொண்டு கன்னிகா மாடத்திற்குள்ளே நுழைந்து அங்கிருந்து அழுகின்ற ராஜபத்தினி முதலானவர்களை அதைவிட்டு விலகும்படி செய்து வாசலுக்கு வெளியே நிற்பாட்டி விட்டு, இளவரசன் இறந்துகிடக்கும் மாளிகைக்குள்ளே சென்று கதவுகளையிறுக அடைந்தார்கள்.

சாகிபவர்கள்போய் சற்று நேரத்திற்கெல்லாம் சரீரம் முழுவதும் வியர்த்து வடிந்தவர்களாகவும், வலதுகையில் இளவரசனைப் பிடித்தவர்களாகவும் உயிருடன் எழுப்பிக் கூட்டிவந்து வெளியே மனதில் உருக்கமுள்ள பக்தியுடன் அலைமோதிக்கொண்டு நிற்கின்ற அரசன் கையில் ஒப்புக்கொடுத்து ''இனி நீ நம்மைப் பார்ப்பது அரிது'' என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்கள். பிறகு முத்துச்சாமித் தம்பிரான் சாகிபவர்களைக் காணவேண்டி எவ்வளவோ அரிய பெரிய பிரயாசைகளெல்லாம் எடுத்தும் ஒன்றும் கைகூடவில்லை.

அந்தத் தடவை மறைந்துபோன சாகிபவர்கள் சற்றேறக்குறைய 100-வருஷங்களுக்குப் பின் வந்து சேர்ந்தார்கள். சாகிபவர்களின் ஜீவியகாலக் குறிப்புகளால் அவர்கள் உலகத்தில் 300-வருஷம் சுகஜீவியா யிருந்ததாகப் புலப்படுகின்றது. எப்படியாளுல் கொல்லத் தாண்டின் கணக்கின்படி முத்துசாமித் தம்பிரானைப் பக்தியரசனில்லையென்று சொன்ன ஒரு க்ஷாத்திரியத்திற்காகப் பத்மநாதபுரத்தின் தேவலாயத்திலுள்ள ஸஹஸ்த்ராயன் கெங்கையில் குளியோடிப்போய் பாதாள வலம்புரியைக் கைப்பிடியாகப் பிடித்து 60-நாழிகைக்குப் பின்னுல் வெளிதோற்றி வந்தார். இது இப்படியிருக்க சாகிபவர்கள் நிர்யாண திசை யடைந்தகாலம் ஒரு குறிப்பின்படி கொல்லம் 620-ம் வருஷம். 620-ல் 415-க் கழித்தால்

205-வருஷம் இதோடுகூட சாகிபவர்கள் பிறந்துவளர்ந்து ஞானியாய் திரிந்த காலத்திலும் தடையின்றி 95-வருஷம் செல்பிடியாயிருக்கிறது இந்த 95-வருஷத்தையும் கூட்டிப்பார்க்கும் போது சரியாகவே 300 வயது ஜீவித்திருந்தார்கள்.

மேலே சாகிபவர்கள் நிர்யாண திசையடைந்த காலம் ஒரு குறிப்பின்படி கொல்லம் 620-ம் வருஷம் என்று நான் வற்புறுத்தின தாவது காயற்பட்டணத்திலிருந்து உலகமெல்லாம் பெரும் புகழ் வாய்ந்தவரும் முகம்மதிய மார்க்காசார ஜெகத்குருவாய் இருந்தவருமான மார்க்கதீபம் ''ஷெய்குல் இஸ்லாம்' சதக்கத்துல்லா லெப்பை ஆலிம் ஒலி அப்பா என்கின்ற மஹாத்துமாவின் * ஜின் அஞ்சல் தற்கலைக்கு வந்தகாலம் கொல்லம் 620-ம் வருஷம் என்று சொல்லப்படுகிறது.

அது என்னசங்கதியென்று கேட்கவும் ஜனங்களுக்கு ஆசையுண்டு சொல்லுகிறேன். முத்து பிறந்த இடத்தில் விலைபடாது என்பதுபோல சாகிபவர்களின் தகுதி தெரியாத கெர்வஜனங்களான அந்த தற்கலையூரார்கள் சாகிபவர்களை தொழாதவரென்றும், மார்க்கம் அறியாதவரென்றும், பொய்வேஷக்காரரென்றும் மார்க்கப்படி நடப்பவர்களைப் பரியாசஞ்செய்கிருரென்றும் வீண் படாடோபஞ் சொல்லித் தூற்றத் தலைப்பட்டார்கள். இதோடும் விட்டார்களா? இவர்க்கு மார்க்கப்படி தெண்டனை விதிக்கச்செய்யவேண்டுமென்றும் ஒவ்வொருவீட்டுக்காரர்களும் யோசித்துக்கொண்டு அந்தக்காலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து மலையாளம் பொன்னுனிதேசம்வரையிலும் மார்க்கஹுக்கும் செய்யக்கூடிய காலவத்துக்காரத்தாவாகிய ஹலரத்து சதக்கத்துல்லா அப்பா அவர்கள் சமுகத்திற்குத் திருமுகப் பாசுரமெழுதி ''நாங்கள் இன்னவூர் ஜமாஅத்துகள் எங்களூரில் பீர்முகம்மது சாகிபு என்று ஒரு ஞானியிருக்கிருர். அவர் இன்னின்ன விதமாக மார்க்கப் பரியாசஞ் செய்கிருர். ஆனதால் தாங்கள் சற்று பிரயாசையை பாராமல் எங்கள் பேரில் கிருபை வைத்து ஒருவழி வந்து போவீர்களாளுல் எங்களூரும் சுகப்படும். அந்த மனிதனும் நேர்வழி பெறுவார், என்றிவ்வித சமாச்சாரத்தை தெரியப்படுத்திஞர்கள்.

---

* ஜின் அஞ்சல் என்பது முன்புறம் பின்புறம் ஆளில்லாமல் பூதங்களால் அநாந்திரமாய்த் தூக்கிச்செல்லும் ஒருவித பல்லக்கின் பெயர்.

இவ்விதம் தற்கலை யூரார் வரைந்தெழுதிய கடிதத்தை ஹலரத்து அப்பா அவர்கள் பார்த்ததும் கண்சிவந்து இப்படியும் ஒரு மனிதன் இருக்கின்றனா? போய் பார்ப்போம் என்று தங்கள் ஜின் அஞ்சலை தற்கலையை நோக்கி நடத்தினார்கள்.

ஹலுறத்து அப்பா அவர்கள் புறப்பட்டு வருவதை அங்குத் தற்கலையிலிருக்கும் மெய்ஞ்ஞான சொரூபரான சாகிபவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து கொண்டார்கள். தெரிந்ததும் உடனே மனைவியைக் கூப்பிட்டு "காயற்பட்டணத்தி லிருந்து ஒரு வாலிபர் என்னை நோக்கி வருகின்றார். அவரோ நல்ல ருசிகர போஜனங்கள் தின்னப்பட்டவர் ஆனதால் எதுவும் நம்மால் இயன்றதைச் செய்யத்தான் வேண்டும், எதுவும் நம் வீட்டில் இருந்தால் சீக்கிரம் சமைத்துவிடு என்ன சொல்கிறாய்?' என்றார்கள். அந்தப் பெண்பிள்ளையும் தற்கலைப் பிறப்பதாலே தாமரைமலரின் தேனைத் தூரத்திலிருக்கின்ற வண்டுகளுக்கன்றி அத்தாடகத்திலேயே நிந்திருக்கின்ற வாத்துகளுக்குத் தெரியா தென்பதைப் போல் அந்தம்மாளும் புருஷனரவர்களை நோக்கி உனது சம்பாதியத்துக்கு விருந்துங் கூடவா? சும்மாவிருந்துகொண்டிருக்கிறீரே யல்லாமல் காக்குழியிலிறங்கி ஒரு முழத்துண்டும் நெய்யக்காணுமே? இப்படியிருந்து கொண்டு என்ன தைரியத்தால் இந்த வார்த்தை சொல்ல உமக்கு மனம் வந்தது! என்னால் ஒன்றும் சாயாது. என்னிடம் ஒருபடியரிசியுங் கிடையாது. என்று சாதித்துவிட்டார்கள். பிறகு சாகிபு அவர்கள் பெண்சாதியைப் பார்த்து "உன் வசம் அரிசியில்லாவிட்டால் தெருவில் மண்ணுமா இல்லை? சீக்கிரந் தெருவிற்போய் நாலுபிடி மண்ணையள்ளி ஒரு பானையிலிட்டு தண்ணீர்வார்த்து அடுப்பெரிய விட்டு ஒரு சட்டியில் சப்பாத்திக் கள்ளியைப் பத்தைகளாக அறுத்துப்போட்டுத் தண்ணீர்வார்த்து வேகவை? இதற்கு இவ்வளவு சாதனையேன்?" என்றார்கள். அந்த மனுஷி கிழவன் என்னமோ வயது முதிர்ந்து போய் வாய்பினற்றுகிறார் இப்படியும் ஆகுமோ என்று இலேசாக மதித்துக்கொண்டு அவ்விதஞ் செய்து அடுப்பெரித்துக் கொண்டிருந்தார்கள். சாகிபவர்களும் தறிக்குழியிலிறங்கித் துணி நெய்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது ஒரு பெரிய தனக்கார மனுஷன் வந்து "பீர் முகம்மது சாகிபே உம்மை காயற்பட்டணம் கலாவத்து

சதக்கத்துல்லாலெப்பை ஆலிம்சாகிபவர்கள் அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்கள். சீக்கிரம் வாரும்" என்று கூப்பிட்டான் அதற்குச் சாகிபவர்கள் ஒன்றும் ஜவாபு கொடுக்காமல் தங்கள் அலுவலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த மனிதன் சற்று நேரம் நின்று விட்டுத் திரும்பிப்போய் ஹலரத்து அப்பா அவர்களிடம் இது சங்கதியைச் சொன்னான். ஹலுறத்தவர்கள் தலையைக் குனிந்து கொஞ்சம் நேரம் வரையிலும் பூமியைப் பார்த்துவிட்டு நல்லது நானே அவரிடம் போய்வருகிறேன் என்று தனியே நடந்து சாகிபவர்களின் திருமனைக்கு வந்து ஸலாம் சொன்னார்கள் அதற்கு சாகிபவர்கள் பிரதி சொல்லிவிட்டு மறுஹபா சதக்கே வாருங்கள், இருங்கள் என்று அங்குக்கிடந்த ஒருகிழிந்த வோலைத் தடுக்கை யெடுத்துப் போட்டார்கள். ஹலுறத்து அப்பா அதிலிருக்க அவர்கள் அசிங்கப்பட்டு நின்றபடியே நின்றுகொண்டு "நீர் இந்த ஊரில் ஒரு முஸ்லீமானவரா இருந்தும் அல்லாவைத் தொழாமலும், பள்ளிக்குப் போகாமலும், இருக்கின்றீரே அதென்ன கருமம்! சொல்லும்?" என்று கேட்டதும், சாகிபவர்கள், "தம்பி நீங்கள் காயற்பட்டணத்தாரா யிருப்பதனாலே உங்களிடம் நான் பொய் சொல்லமாட்டேன். நான் என நாயனை ஒரு வேளையாகிலும் தொழாமல் இருந்ததே கிடையாது. அதையறிய இந்த வூர் குருட்டு ஜனங்களுக்குத் திராணி போதாமையால் வீணுக்கு என்னிடம் கலகஞ் செய்கிறார்கள்" என்றார்கள். அதற்கு அப்பா அவர்கள் "நீர் சொல்லுகிறபடி அப்படி யொன்றும் காணவில்லை. நான் இந்த வூருக்கு லுஹறு நேரத்தில் வந்து தொழுதிருக்கின்றேன். பள்ளிவாசலுக்கு நீர் வர நான் பார்க்கவேயில்லை" யென்றார்கள்.

சாகிபவர்கள் ஹலுறத்தவர்களை நோக்கி "தம்பி! நல்லதுஇன்னொரு செய்தி; ஐந்துவேளைத் தொழுகையும் இந்தப்பள்ளியில் தொழுகிறது ஏற்றமா? அல்லது மக்காவிலுள்ள பைத்துல்லாவுடைய ஹறத்தில் தொழுகிறது ஏற்றமா?. சொல்லுங்கள்?" என்றார்கள். ஹலரத்தவர்கள் மக்காவில் தொழுகிறதுதான் ஏற்றம் அதற்கும் சந்தேகமா? என்றார்கள். சாகிபவர்கள் "நான் தொழுகிறதை நீங்கள் பார்க்கவேண்டுமானால் இதோ நான் நிற்கின்ற பாய்க்குழியைப் பாருங்கள்" என்றார்கள். ஹலுறத்தவர்கள் கிட்ட நெருங்கி

வந்து பாய்க்குழியை உற்றுப்பார்த்ததும் அங்கே அவர்கள் கண்ட காட்சிகளை நான் என்ன சொல்வேன். சுமார் ஒரு மனிதன் இறங்கி யேறும் சிறிய பாய்க்குழிக்குள்ளே அறபாத்து மலை தெரியவும், அதைச் சூழ வொட்டகைகள் அநந்தம் நின்று மேயவும், மக்காமா நகரத்தின் விஸ்தார முள்ள விதிகள் தோன்றவும், கஃபத்துல்லா என்கின்ற ஹறம் தெரியவும், அதில் அனேக ஆயிரக்கணக்கான சாதாத்துமார்களும், ஷெய்குமார்களும் வரிசைவரிசையாக நின்று தொழுகவும், அவர்கள் எல்லோர்க்கு முன்னே இமாமாக மேலே பாய்க்குழியில், நிற்கின்ற நாயகம் பீர்முகம்மது சாகிபவர்கள் நின்றுதொழுவிக்கவும், அதில் ஒரு பெரியோர்கள் இஸ்மாயீல் நபியவர்களின் மக்களைப்போல் உடையணித்து முகவஜீகத்துடன் நின்றுகொண்டு "சதக்கே சீக்ரம் ஜமாஅத்தில் வந்து சேர்ந்து கொள்ளுப்! அல்லாவுடைய குதுபை இமாமாக்கப்பட்டிருக்கின்றது!" என்று அழைக்கவும், நல்ல வெட்ட வெளிச்சமாகக் கண்டு உடம்பெல்லாம் விலவிலத்துமனப்பிரமை கொண்டவர்களாய் ஒடுங்கி நின்றுர்கள் நின்ற ஹலறத்தவர்களை சாகிப்வர்கள் நோக்கி "நல்லது வந்து வெகு நேரமாகின்றது சாப்பிட வாருங்கள்!" என்றழைத்துப்போய் அடுப்பிலிருக்கிற பானையும் சட்டியும் இறக்கி மூடியைத்திறந்து அகப்பையால் கிளறினுர்கள். உடனே தெருவெல்லாம் வாசனை செய்யும்படியான நெய்மணம் பொங்கிற்று உடனே பானையுள்ளிருந்த அகமிய நெய்ச்சோற்றைத் தாலத்திலிட்டு சட்டியிலிருந்த குர்மாவாகிய சப்பாத்துக்கள்ளியின் துண்டங்களை வள்ளி தாலத்தில் இட்டு குழம்புடன் திரட்டிக்கொண்டு "பசியாறுங்கள் தம்பி!" யென்று சொல்லி சாகிபவர்கள் அள்ளியள்ளித தின்றுர்கள். ஹலுறத்து அப்பா அவர்கள் கையிடும் பக்கம் வெறும் மணலாகவும் கள்ளிகளாகவும் இருந்தன. அந்த ரகசியத்தை அப்பா அவர்கள் கண்டு மூக்கின்மேற் கையைவைத்து சாகிபவர்கள் நெய்ச்சோறும். குர்மாவுமாக அள்ளி நெய்வடியத். தின்பதைப் பார்த்தவர்களாக சும்மா இருந்தார்கள். ஹலுறத்தவர்கள் பார்த்துக் கொண்டிருப்பதை சாகிபவர்கள் நோக்கி "என்ன தம்பி சோறுண்ணச் சொன்னுல் சும்மா இருக்கிறீர்கள்? மண்ணும் கள்ளியுமா யிருக்கிறதே! அல்லாகுத்த ஆலாவை உணர்ந்து

அவன் பாதையைப்பற்றி பிடித்தவர்களுக்கு அவன் கொடுத்திருக்கின்ற தத்துவங்களைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிவிட்டு அவர்கள் கையிடும் பக்கத்தைத் தங்கள் பக்கமாய்த்திருப்பித் தாங்கள் கையிடும் பக்கத்தைத் திருப்பி நெய்ச்சோறும் கறியுமாக அள்ளியள்ளி ஹலரத்தவர்களின் வாயில் ஊட்டினுர்கள். இப்படியாக இருவரும் பசியாறி முடிந்ததும் மஅரிபாவின் துறையிலுள்ள சில மர்மங்களை சம்பாஷனை பண்ணிக்கொண்டு சில நேரங்கழித்து அசறுந்தொழுது முடித்தார்கள் முடிந்ததும் சாகிபவர்கள் ஹலுறத்தவர்களை நோக்கி "தம்பி! இதவ்ல றகுமானுடைய தன்மைக்கேற்ற வணக்கம்! அதுவேறே யிருக்கிறது. அதைக் காட்டுகிறேன் வாருங்கள்." என்று கூட்டிக்கொண்டு தற்கலையைவிட்டு 30 மயில் தூரமுள்ள ஆனைமலைச் சாரலுக்குப் போனுர்கள். இந்த முப்பது மைல் தூரம் நடக்குமளவும் சூரியன் இறங்காமலும், பொழுது அஸ்தமிக்காமலும், ஒரே நிதானமாகவே யிருந்தது இந்த அற்புதகரத்தையும் ஹலுறத்து அப்பா அவர்கள் கண்டுகொண்டு நடக்குப்போதே நமக்கு நல்லகாலம் வந்தெட்டியதால் தான் இப்பேர்ப்பட்ட மஹானை வந்து சந்தித்தோம். இனியிவர்களைக் கைவிடலாகாது; என்று மனதில் எண்ணிக்கொண்டே போனுர்கள். சாகிபவர்களும் யானைமலைச் சாரலையடுத்தார்கள். அங்கே யொரு பிரமாண்டமான கெபி தெரிந்தது: அதன் அகலமத்தியிலே செந்தாமரை, வெண்டாமரை முதலான நீர் மலர்கள் கணக்கறப் பூத்துக் குளிர்ந்த நீராளங்கள் ததும்பி சங்குகளின் முழக்கங்களாலும், பொன்வண்டுக்கூட்டங்கள் பாடும் இன்னிசைகளாலும், சிறந்து வாளை, வரால், கெண்டை, முதலான மீன்கள் குதிபாயவும், செங்கால் நாரைகள் உலாவவும், அன்னப்பார்ப்புகள் தங்கள் தாய்களுடன் நீந்தி விளையாடவுமான இலட்சுமிவிலாசம் பொருந்தியிருக்கா நின்ற ஒரு தடாக மிருந்தது. அதன் ஒரு கரையில் சதுரமான கருங்கற்பாளமொன்று போட்டிருந்தது. அந்தக் கல்லருகே சாகிபவர்கள் போயிருந்து கொண்டு வாயைத் திறந்தார்கள். திறந்ததும் பெருங்குடல், சிறுங்குடல், மணிக்குடலும், சரசரவென்று வெளியே வந்து விழுந்தன சாகிபவர்கள் அவைகளை யெடுத்து அதன்தன் உள்ளிருக்கும் மலஜலாதிகளை உருவிக் கழுவிப் பரிசுத்தஞ் செய்து

அந்தக் கருங்கல்லில் வைத்துவஸ்திரந் துவைப்பதுபோல் துவைத்துப் பிழிந்து பழையபடி அவைகளையெடுத்தெடுத்து வாய்வழியாக உள்ளே செலுத்தினார்கள். செலுத்தியதும் உடனே அத்தடாகத்தின் மத்தியில் நீந்தி முழுகி ஈரவஸ்திரத்தோடும் கரை வந்து அங்கு நிற்கின்ற பிரமாண்ட ஆலா விருக்ஷமொன்றைக்கையால் ''வருக'' என்று சயிக்கினை பண்ணினார்கள். பண்ணிய உடன் அவ்விருக்ஷம் தன் வேராதிகளைப்பெயர்த்து நகர்ந்துவந்து தனது நீண்டதும் வடதிசை மூலையாகிய குதுபு புறமாகப் போகின்றதுமான கிளையொன்றைப் பூமி முகத்தை பார்க்கத் தாழ்த்தி நின்றது. இது கண்டு சாகிபவர்கள் தங்கள் இருபாதங்களின் பெருவிரல் இடுக்காக அக்கிளையைத் தொட்டுப் பின்னினவர்களாகத் தலையைக் கீழேதொங்க விட்டவர்களாகக் கைமடித்து மார்பில்தக்பீர் கட்டிக்கொண்டு இகபரங்களை வெறுத்து அல்லாகுத்தஆலாவின் ஜலாலியத்தில் முழுகி ஆசையால் மனம் உருகி யிருகண்களின் வழியாக நீர் தாரைதாரையாக வோடினவர்களாகப் பெருமூச்செறிந்தார்கள். அப்போது சாகிபவர்களின் காதுவழியாகவும், கண்வழியாகவும், நாசிவழியாகவும், வாய்வழியாகவு மிருந்து தாங்கமுடியாத அக்கினி சுவாலைகள் எழுந்து கொழுந்து விட்டு எறிந்துகொண்டேயிருந்தது இத்துடன் சரீரத்திலுள்ள மயிர்த்துவாரங்களெல்லாந்திறந்து கருநிறமான புகைகளும் வெளியாயிற்று

இந்த மனத்திடுக்கமுள்ள அளவிடக்கூடாத அற்புதங்களை ஹலரத்து அப்பா அவர்கள் ஒருபக்கமாக நின்று இன்னுலில்லாஹி இவர்கள் ஸமானுடைய குதுபல்லோ! இவர்களின் தகுதியையறியாமலல்லோ நாம் இவர்களுக்கு மார்க்கவிதி போதிக்கவந்தோம் என்று தங்கள் மனதுக்குள்ளேவெட்கித்தவர்களாய்ப் பார்த்து பிரமைகொண்டு நின்றார்கள். சாகிபவர்களும் தங்கள் மஹௌக்குடன் கலந்த ஆசையானது தெளிக்கின்றவரையிலும் தலை கீழே கிடந்து வணங்கினார்கள். இதற்கிடையில் இரவுகாலமும்சென்று சூரியோதயமாகும் நேரமாயிற்று. அந்தசமயம் சாகிபவர்கள் வருகிறதைப்பார்த்து ஹலரத்தவர்கள் நிரம்பவும் காலொதுக்கிக்கையொதுக்கி முகத்தை மலரவிட்டு மனம் அஞ்சியொஞ்சி பணிந்தவர்க

ளாய் மரியாதையுடன் நின்றார்கள், வந்த சாகிபவர்கள் அப்பா அவர்களை நோக்கி, ''தம்பியவர்களே! நீங்கள் நாலும் அறிந்த ஆலிமாக இருப்பதாலே கேளுங்கள். தலீலில் சொல்லியிருக்கிற பிரகாரம் இந்த பூலோகத்தில் முகக்கண்ணால் அல்லாவைக்கண்டு ஈடேற்றம் பெறாதவன் ஆகிரத்தில் ஒரு காட்சியும் காண ஏலாத விழி கண் குருடனாக இருப்பான். அவனுக்கு அப்போது எந்த ஒரு கருமமும் பயன் கொடாது ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்பது போல இந்தசரீரத்துடன் உலகவாசியாக இருக்கும்போதே ஒவ்வொருவனும் தன் அசலியத்தான மகத்துவ வஸ்துவைப் பகுத்துணர்ந்து தெரிசித்து அதனிடத்தில் வேண்டிய பிர்மமர்மமகத்துவங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும் அதல்லாமல், மரணகாலத்தையெதிர்பார்த்தவனாக இருந்து நாளைக்கடத்துவானானால் அவன் எடுத்தகஷ்டங்களும், வணக்கங்களும்வெள்ளம் புரண்டோடுகின்ற ஆற்றில் கரைத்துவிட்ட ஒரு காசு புளிக்குச் சமானமாகவே ஆகிவிடும்'' என்று இன்னம் அநேகத்துவசாரங்களையும் எடுத்துப்போதித்து உபதேசமும் செய்து அந்த இடத்தில் வைத்தே ஹலரத்து அப்பா அவர்களைக் காயற்பட்டணம் போகும்படியாய் வழிகூட்டியனுப்பிவிட்டு வீடு வந்துசேர்ந்தார்கள்.

ஹலறத்து அப்பா அவர்கள் தங்கள் ஞானாசிரியரிடம் கிடைத்த அரியபெரிய பொருட்களையெல்லாம்மனதுள்ளே பதிய வைத்தவர்களாக வந்து அந்தக்காலத்தில் முகம்மதியர்களுக்குள்ளே நிகரற்ற சீமானும், சமஸ்த ஜாதியர்களுக்கும் வரையாதுகொடுத்த ஈகையுடைய வள்ளலுமாகிய சீதக்காதி மரைக்காயர் அவர்களுக்கு ஞானஉபதேசங்கொடுத்துவிட்டு அந்தவள்ளல் இருந்து விளங்கிய கீழக்கரையிலேயே குடிபதியாய் இருந்தார்கள். இதுநிற்கஇன்னம் ஒரு சங்கதி பிரமிக்கத்தக்கது. அது என்னவெனில்:—சாகிபவர்கள் வழக்கமாய் யானைமலைச்சாரலுக்குப் போய்க்கொண்டிருக்கும் சமயங்களில் ஒருநாளைய தினம் ஹக்க ஆலாவின் இஷ்கில் முங்கினவர்களாக அச்சாரலண்டை உலாவிக்கொண்டு நின்றார்கள். அப்போது அங்கே ஆலம் விழுது போல் ஜடாபாரம் தொங்கவிட்டவனாக ஒரு கவுனசித்தாதி. நாலாபக்கங்களிலும் குனிந்து உற்றுப்பார்த்தவனாக நின்றான். அதனை சாகிபவர்கள் கண்டு அவன் அருகாகச் சென்று, 'ஓ;சித்தரே!இந்தப்பொழுது அஸ்தமிக்குத்தருணமானபிற்ப

கல் நேரத்தில் நீர் நின்றுநாலாபக்கமும் பார்வையை விடுகின்றீரே! அது என்னகருமம்? என்னிடம் சொல்லும், நானும் அறிந்துகொள்ளட்டும்'' என்றுசொன்னார்கள். சொன்னதும் அந்த கவுனச்சித்தாதி சாகிபவர்களை நல்ல திறுதிறுவென்று சற்று நிதானித்து நோக்கிவிட்டு, தன்மனதுள்ளே ஓ! இவர்துலுக்கர்களில் ஒரு பெரிய மனிதராக இருக்கலாம். அப்படியில்லாதபட்சத்தில் துஷ்ட மிருகங்கள் சஞ்சராஞ்செய்கிற இந்த மலையண்டை வந்து நின்றுஉலாவ அவ்வளவு சக்தி இராது நம்முடைய உண்மையை நாம் இவரிடம் சொல்லத்தான்வேண்டும்! என்று இவ்விதம் உத்தேசித்துக்கொண்டு சாகிபவர்களின் எதிரே நின்று கீழ்வருஞ் சங்கதிகளைச்சொல்லுகின்றான்.

''ஐயா அவர்களே, நான் பொதிகைமலையிலுள்ளவன். என்னுடன் 1000 கவுண சித்தாதிகள் இருக்கிறார்கள். அங்கே எங்களுக்கெல்லாம் சற்குருவாக ஒரு ரிஷியும் இருக்கின்றார். அவரோ அதிக கோபசக்தி உள்ளவர். அவர் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸஹத்திர ஸத்துக்குளிசம் கொடுத்திருக்கிறார். நாங்கள் அதை வாயில் ஒதுக்கினால் நினைத்த இடங்களுக்கு ஒரு நிமிஷநேரத்தில் பறவைகள் போல் பறந்து போவோம். முடிவாகச்சொல்லவேண்டுமானால் நாங்கள் எந்த தீபகற்பங்களுக்காகிலும் சென்று ஆகவேண்டிய காரியாதிகளை முடித்துக்கொண்டு சூரியன் அஸ்தமிக்கிறதற்குள்ளாக அவர் சமூகம் போய்விடவேண்டும். அப்படிக்கல்லாமல் எந்தவிதத்தினாலும் சுணங்க வேண்டியது வந்துநேரிட்டால் சுணங்கியவனை உடனே கல்லாய்ச் சாதிக்கும்படியாகச் சாபங்கொடுத்து விடுவார். அப்படி எத்தனையோ சித்தாதிகள் கல்லாய்விட்டார்கள். இது நிற்க. இந்த இடத்தில் அடியேன் நாலாபக்கமும் பார்த்துக்கொண்டிருப்பது வேறொன்றுமல்ல மேற்கூறிய அந்த ஸஹஸ்திரக்குளிசமானது நான் இங்கே இறங்கும் போது எப்படியோ அடியனையும் அறியாமல் நழுவி விழுந்துவிட்டது. அதுநழுவினதாவது அடியனுடைய ஆத்மா நழுவிவிழுந்தமாதிரியாக நான் இப்படி பறந்து பறந்து தேடுகிறேன். தேடியும் இந்த பாவி கண்ணில் அகப்படவில்லை. ஐயோ நான் என்ன செய்யட்டும். சாபம் வந்துவிடுமே! என்று மெய்சோர்ந்து மனமுருகி அழுதவனாகச்

சொன்னான். கவுனசித்தாதியானவன் சொன்னது அத்தனையும் சாகிபவர்கள்கேட்டு "நல்லது இருக்கட்டும், நீர் இன்றிரவு என்னுடன் இங்கேதான் இரும். உம்முடைய ஆசான் உமக்குஇடுகின்ற சாபத்தை நான் கண்டறியவேணும்! அப்பால் பொழுதுவிடிகிறதற்கு முன்னமே உமக்கு நான் அதைவிட அதிகவிசையுள்ள நல்ல ஒரு குளிசம் தந்து அனுப்புகிறேன்'' என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள்.

இவ்விதம் சாகிபவர்கள் சொல்லியுமென்ன? சித்தனுக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை என்பதே கிடையாது. அவனுடைய ஆசானுடைய சாபநேரம் வருகிறவரையிலும் பறக்க பறக்க முழித்தவனாக இருந்து சாகிபவர்களின் கூட ஞானமார்க்கத்தைப்பற்றி சில விஷயங்களை ஸம்பாஷித்து கொண்டிருந்தான். ஆசானுடையசாபநேரம்கழிந்ததும் இனியில்லாத மனானந்த முள்ளவனாக சாகிபவர்களை ஸ்தோத்தரித்து ஆனந்தகூத்தாடினான். பாடினான்பிரார்த்தனைதேடினான். இவ்விதமாக அன்றிரவெல்லாம் கழிந்து சூரியோதயமாயிற்று. கவுனசித்தாதி ஓ! இந்தசாகிபு மெத்தப்பெரிய அஸ்டாங்கயோகீஸ்வரராகஇருக்கின்றார். இவரை நாம் கைவிடப்படாது. எதுக்கும் இவர் கொடுக்கின்ற குளிசத்தை வாங்கிக்கொண்டு இன்று நமது ஆசான் சமுகம்போய் அவர் சாபத்தால் தப்பித்துக்கொண்ட நம்முடைய தத்துவத்தை அவர் அறியும்படியாக இருந்துகாட்டிவிட்டு நம்முடையவிநாயகக் கடவுளின் சந்நிதிக்குச்சென்று அங்கு திருக்குளத்தீர்த்தமோட்சமும் பெருமான் பாதார்ச்சனையும் செய்து வரம்பெற்றுக் கொண்டு திரும்பி இவரிடம் வந்துவிடலாம் என்றுமனதில் மெதுவாகஎண்ணினான். எண்ணினதும் சாகிபவர்கள் அந்த சித்தாதியை நோக்கி கீழ்வருமாறு இந்தக்கவியைச் சொன்னார்கள்.

விருத்தம்.

* "கோவிலாவ தேதடா குளங்களாவ தேதடா
பாவியான மூடனே நீ பாழிலேஜெபிக்கிறாய்
லாயிலாஹ இல்லல்லாஹ் முகம்மதுர் றசூலுல்லாவென்
றோய்வில்லாம லோதடா உயர்ந்தசொர்க்கம்துவடா''

---

* இந்தப்பாடலை ஞானமணிமாலையில் வருவித்திருக்கின்றது.

என்று இவ்விதம் கனந்தங்கிய சாகிபவர்கள் சொன்ன அருமையான பாட்டைக்கேட்டு அந்தச்சித்தாதி மனமுருகி உடம்பெல்லாம் ஜில்லென்று புல்லறித்தவனாக மனம் வாக்கு காயம் மூன்று மொத்துப் பரிசுத்த தீனுல்இஸ்லாம் மார்க்கத்தை உள்ளத்தில் உகந்து ஒப்புக்கொண்டவனாக சாகிபவர்களின் இருகைகளையும் பிடித்து லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் றசூலுல்லாஹி என்னும் திருக்கலிமா மந்திரத்தை சொல்லி இஸ்லாமிலாகினர். அப்பால்சாகிபவர்கள் அவர் மீது தயைகூர்ந்து அவருக்கு புதிதான ஒரு திருநாமஞ்சூட்டி முரீது என்னும் ஞானஉபதேசமும் செய்து அவரை சிறிதுகாலம் தங்களதுசகவாசத்தின்கீழ் நடைபழக்கி அவரை நேர்வழியைப் பெற்றுக்கொண்ட ஒளலியாக்களில் நின்றும் ஒருவராக ஆக்கினர்கள். இப்பால்,

சித்தாதியானவர் தமதுவாசஸ்தானமாகிய பொதிகைமாமலைக்கு போகப்பிரயாணப்பட்டார். அதை சாகிபவர்கள் தெரிந்து அவரைக் கூப்பிட்டு தெருவில் கிடக்கும் கற்களில் ஒன்றை எடுத்துவரச்செய்து அந்தக்கல்லை தங்களது சிறப்பான கழுக்கட்டில் சற்றுநேரம் வரை வைத்திருந்துஎடுத்து சித்தாதிக்கையிற்கொடுத்து, "இதை நீர் வாயில் போட்டு ஒதுக்கிக்கொண்டு எந்த திசைக்கும் போகநாடும். அங்கே உம்மை தூக்கிக்கொண்டு பறந்துபோய் இறக்கிவிடும் இதை நீர் பெரிதும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்வீராக" என்று கட்டளை பண்ணினர்கள். அவ்விதமே கவுனச் சித்தாதியானவர் சாகிபவர்களிடத்தில் பிரயாணவிடைபெற்றுக்கொண்டு சாகிபவர்கள்கொடுத்த வெறுங்கல்லாகிய அந்த அற்புதகுளிசத்தை வாயில் போட்டதும் அவரை அநாந்திரமாய் தூக்கி ஆகாயமார்க்கமாய் பறந்துபோயிற்று. அப்பால் நிகழ்ந்தனவெல்லாம் நிகழ்ந்தன.

அப்பால் சாகிபவர்களும் சிலமாதகாலம் ஜீவித்திருந்து நாம் உலகத்தில் நீண்டகாலம்வரை சரீரத்துடன் இருந்துவிட்டோம் இனி நாம் ஜீவித்திருப்பது நம் நபிபெருமானுடைய சட்டசபைக்கு விரோதமாய் விடும். ஆனதால் இந்தவாரம் வெள்ளிக்கிழமையிரவில் நாம் சரீரத்தை விட்டுவிடவேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு அதன்

பிரகாரமே கொல்லம் 620-ம் வருஷம் குறித்தமாதம் திகதி இரவையில் நிர்யாணதிசையடைந்தார்கள். தற்கலையூரார்கள் பழைய குருட்டெண்ணமாறி சாகிபவர்களின் தருநிலை தெரிந்து கொண்டதாலே எல்லோரும் ஒருப்பட வந்துகூடி செய்யும்கடமைகளை செய்து நகர பிரவேசத்துடன் சாகிபவர்களை நல்லடக்கஞ் செய்தார்கள். அப்பால் நிகழ்ந்தவைகள் நிகழ்ந்தன. சாகிபவர்கள் மிசுவாக்குச் செய்திருந்த இலந்தைமரச்சக்கை ஒன்றைத்தமது கபுறின்மேல் நடும்படி ஜனங்களை ஏவினதால் அதன்படிசெய்து பெரிய விருட்சமாக எழுந்து நிற்கின்றது அந்த மரத்தின் நிழலால் ஜுரம் முதலான பிணிகளும், அதன் இலைகளால் வாந்திபேதி யென்னும் காலரா நோய்களும், அதன் காய் பழங்களால் வெண்குஷ்டம், கருங்குஷ்டரோகங்களும் தீர்ந்து சௌஸ்தமாகி ஜனங்கள் ஆரோக்கியதேஹிகளாகின்றார்கள். சாகிபவர்களின் தர்காவென்னும் சமாதியில் வருஷத்துக்கு ஒருதடவை திருவனந்தபுர ஸமஸ்தான அதிகாரிகளால் நல்ல விமரிசையான ஊன் தீன்பானதி முதலிய ராஜபோசன விருந்துடன் அலங்கிருதமான ஒரு கந்தூரியும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த அரும் புகழ் வாய்ந்த மஹாத்மாவின் திவ்வியசரித்திரத்தை வரையறுத்து எழுதவேண்டுமானல் புதிது புதிதான அற்புதாதிகளுடன் கணக்கற்று விரிந்துவிடுமாதலால் அவைகளை வட்டுறுக்கமாக நம் சகோதர ஜனங்கள் தெரிந்துகொள்ளும்படியாக ஒருவித சம்பிரதாய தோரணையாய் சுருக்கி முடிக்கின்றேன்.

நிற்க. இந்தஞானமணிமாலை பாடிஇவ்வளவு வருஷங்களாகியும் அதன் உள்ளுறை தாற்பரியங்கள் நம் முஸ்லிமான ஜனங்களுக்குப் பயன்படும்படியாய் ஒருவர் ஏற்பட்டு உரையாக எழுதி முடிக்க இயலாமற்கிடந்ததானது நம்தமிழகத்திற்கு ஒருபெரியகுறையாகவே இருந்தது. நானும் சில பல சமயங்களில் இதைப்பற்றி சிரத்தையெடுக்க முயன்றும் எனக்கிருந்த பலபல தொல்லைகளும் அதற்கிடைகூறுய்த் தடுத்து நின்றன. அதனால் நான் இரவுபகலாய் கவலையுள்ளவனாகவேயிருந்துவந்தேன். அதுசமயத்தில் ஒருபோது நான் சென்னை திருவல்லிக்கேணிக்குப் போயிருந்தேன். அங்கு ரூப்ப முதலி வீதி 34-ம்நெம்பர் கிருஹஸ்தாபனவாசரும் யூநானிமதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின் ஆதினஸ்தரும், பிரபல வர்த்தகருப் எனது உயிர்போன்ற

உத்தம நேசருமாகிய கனதன ஸ்ரீமான் எம். ஏ ஷேக்மதாறு சாகிபு அவர்கள் என்னை கண்டு "நான் ஞானமணிமாலை உங்களைகொண்டே தாற்பரிய உரை எழுதுவித்து உலகப்பிரசித்தப் படுத்தலாமென்ற கருத்துள்ளவனாக இருக்கின்றேன். இதற்கு நீங்கள் பொருந்தத்தான் வேண்டும்" என்று வற்புறுத்திச் சொன்னவர்களாக அன்றைக்கே அதற்காகுமான பொருள் விஷயமாயுள்ள சகல உபகாரங்களும் செய்து என் மனதை திருப்திகரித் தனுப்பினார்கள்.

நானிரவு பகலாக கவலைகொண் டிருந்த பெரிய காரியமான இவ் வேலையானது இந்த உபகார புருஷ உத்தமரின் பொருட் செலவால் சீக்கிரமுடிவாகி வெளிவரத் தடைமறைவின்றிய தோதுவாயிற்று. இவர்களுக்கு இவர்கள் எடுத்த காரியங்கள் நிறைவேறவும் இவர்கள் நடத்திவருகின்ற கம்பெனியானது எந்தக்காலமும் மாறாமல் ஓங்கி வரவும், இவர்கள் உபகாரத்தனம் பொருந்திய ஆயுள் நீடிக்கவும் இந்த ஞானமணிமாலையைச் செய்த நாயகமவர்கள் உதவி செய்தருள்வார்களாக. ஆகவே இந்த ஞானமணிமாலையில் நான் செய்திருக்கின்ற தாற்பரியத்தை எண்ணுங்கள் ஒருமைப்பட்டவர்களாக உற்றனாரும் புண்ணிய நேசர்களுக்கும் மற்றுண்டான நமது முஸ்லிம சகோதரர்களுக்கும் சர்வதயாபரக்கருணாகரனான அல்லாஹுத்த ஆலா இருலோகத்திலும் துணை நின்றருள்வானாகவும். என்கின்ற ஆசீர் வதிப்புடன் சரித்திரத்தை முடிப்பதுடனே இதன் பின்னாலும் ஒன் றொன்றாக சாகிபவர்கள் பாடிய ஞானரத்தினக்குறவஞ்சி, மஅரிபத்துமாலை முதலான அரியபெரிய நூல்களையும் உரைகளுடன் வெளியாக்கப்பட்டிருக்கின்றது என்று நம்முஸ்லிம் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் அரிதான வந்தனத்துடன், தெரிவித்துக்கொள்கின்றேன்.

செவ்வல்மாநகரம்.

இராயபுரம்
31—7-1914

எம். ஏ. நெயினாமுகம்மதுப் பாவலன்
தாற்பரிய உரையாசிரியன்.

மஅரிபத்துமாலை பொழிப்புரை.

சூசிகை அட்டவணை.

(இலக்கம்.) (பக்கம்.)

ஒன்றாவது பொருட்பால்:-

1. கலிமா விளக்கம் ... ... (6)
2. பன்னிரண்டு அறிவுகளின் விபரம் ... ... (8)

இரண்டாவது பொருட்பால்:-

3. இமாமுடைய நிலை ... ... (20)
4. பாசிக்கானவர் செயல் ... ... (21)
5. பீர் நிலையறியும் வகை ... ... (24)
6. மசலாக் கேட்கும் விபரம் ... ... (26)
7. தாத்துவகை ... ... (52)
8. சிபாத்து வகை ... ... (56)
9. ஹவ்வா பிறந்தது ... ... (137)

மூன்றாவது காமப்பால்:-

10. நவகாமம் அறியும் வகை ... ... (152)
11. றூஹு வகை ... ... (174)
12. பதினான்கு முஷாஹிதாவின் விபரம் ... ... (194)

மஅரிபத்துமாலை பொழிப்புரை சூசிகை அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

மஹரிபத்துமாலை

பொழிப்புரை.

முதலாவது பொருட்பால்

காப்பு.

விருத்தங்கள்.

பொன்னுலகு சூழும் புகழிறசூல் சொல்லபடி, பொருட்பாலருட்பால் காமப்பாலுஞ், சொன்னமுறை யெழில் பெருகுந் தீனோர்களெல்லாமறிய வியம்பினேன் மஹரிபத்து மாலையிதாம், எண்ணிலங்கும் பெரும் பொருளை யெழுப்பி நிலைநிறுத்திய பீர்முகம்மதென்போன், நின்னயத்தி லிலங்கு பொருணிறைந் திருக்க நிலைநிறுத்து நீதி றப்பில் ஆலமீனே.

(இதன் பொருள்) பொன்மயமான சுவர்க்கலோகத்தின் மணவாளரான நமது நபி நாயகம் சல்லல்லாஹு அவர்கள் தங்கள் திருவாக்கினால் அருளிச் செய்த பிரகாரம் பொருட்பால் அருட்பால் காமப்பால் என்னும் மூன்றிலும் நிறைந்து போய்க்கிடக்கின்ற மெஞ்ஞான நிலைகளை நமது சகோதரர்களான தீனோர்களெல்லாம் அறிந்துணரும்படியாக இந்த பீர்முஹம்மது என்பவனான என் மனதில் பிரியங்கொண்டு செய்தேன் ஆனதால் என் ஞானக்களஞ்சியமான இந்த மஹரிபத்துமாலையை உற்றுணரும் பேர்களுக்கு ஞான நிலையைக் காட்டுவாயாக நீதியான றப்புல் ஆலமீனே! என்-று.

நால் முகம்.

மகுட விருத்தம்.

ஆதிபெரியோனே தம்பிரானே யவனி யடங்கலும் படைத்தவனே. யோதிப்புகழயா னுனக்கடிமை யுலக நிறைந்தவா வொளித்தா யெனிற். சோதியிருதயங் குறையாமலே சொல்வேன் முகம்மது மஹரிபத்தை, நீதிதெரிந்தோருந் தீனிலாக நிகழ்த்த வுலகெல்லா முதவிசெய்வாய்.

(இ-ள்):—பூர்வீகத்தில் எழுந்தருளிய பெரிய பொருளானவனே! நாயகனே! பூலோக முதலிய யாவற்றையும் படைத்தவனே உன்னை தோத்திரஞ் செய்கின்ற உன் அடிமையாகிய என் இருதயத்தில் நீ ஒளித்திருக்கின்றாயே ஆனதினாலே நீயறியும் படியான சாட்சியாக உன் ஹபீபான நூறுல் அகுமதிய்யா வாகிய முஹம்மதுடைய அகப்பொருளாகிய ஞானவழியை நான் சொல்கிறேன் இதன் நீதியை தெரிந்த யாவரும் நேர்வழி பெறுவார்கள். எ-று.

உலகம் படைத்தவ னொருவனுயனுரிய படைப்பெல்லாந்தான் படைத்து, நிலைமைதவிராமற் படைப்பனைத்தும் நீதியவன்றனை வணங்கவேண்டிக், கலையிலிறக்கினான் கண்டறியக் கருமமறியார்கள் காபிராகும், விலகுவாரிறை யருளைவிட்டும் வேதமுகம்மதின் பெலனுமில்லை, (2)

(இ-ள்):—இந்த உலகத்தை ஒரு நாட்டமானது தன் ஆசையில் நின்றும் படைத்தது அப்படிப்படைத்த படைப்புகளையெல்லாம் தன்னைவணக்கும் படியாயும், அவ்விதம் வணங்கும் தன்மை இப்படிதான் என்று தான் இறக்கிவைத்த வேதங்களில் அங்கங்கே சயிக்கினைகள் செய்தான் அந்தப் பிரகாரஞ் செய்வதை விட்டு மேனிமினுக்காய் அலைபவர்கள் உள்ளபடியே காபிராக இருப்பதுடன் றசூல்லுல்லா உடைய ஷபாஅத்தும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். எ-று.

பெலனிலாகாத குபிரர்தானும் பேசிடும்பொல்லாச் செயலோர்களும், நிலைவின் பொருணீக்கிப் பலஞானத்தை நினைத்தேயுடையோனை நினைவுகொண்டு, நிலையி லொருகோடி வருடம் நின்று

நினைவுவாக்குடன் வணங்கினாலு, மலையின் குகையுள்ளே யானந்த கால மண்ணி லறையுள்ளே மாளிகையின். (3)

(இ-ள்):—வேதங்களுடையபலனில்லாதவர்களெல்லாம்ஈடேற்ற மற்ற செயல் கேடர்களாவார்கள். இன்னும் காபிரீன் களானவர்கள். கண்ட கண்ட ஞானங்களையும் படித்து அதன்படி, நடப்பார்கள். அவ்விதம் அவர்கள் ஒருகோடி வருஷங்களாக நிலையில் நின்று வணங்கினாலும், இன்னும் அவர்கள் மலை கெபிகளில் இருக்கின்ற குகைகளுக்குள்ளே போயிருந்து வணங்கினாலும் அல்லது மண்ணுக்குள்ளே அரைகள் செய்து இருந்து வணங்கினாலும்.

மாளியிருளுக்குண் மண்டபத்தின் மாலங்குலையத்தானுடையில்லாம, லூழிநெடுங்கால முலகிழந்தே யூணுஞ்சுகமற்றிங்கோடியோடி, யாளும் வருடத்துக் கொருமூச்சுத்தா லனையுமலைழவேயின் மலையிலேறிப், பாழுங்கிணற்றிலே தலைகீழாகப் பயந்து நடுங்கியே மனங்கலங்கி. (4)

(இ-ள்.):—இன்னும் இருளான மாளிகை களுக்குள்ளிருந்து உடையில்லாமல், ஊணுறக்கமற்று, சுவாசங்களை மேலேற்றி இழுத்து வருஷத்துக்கொரு மூச்சுவிட்டு வணங்கினாலும், இனனும் பாழுங்கிணறுகளில் போய் தலைகீழாய் நின்று பேய் பிசாசைப் போல் பயமற்றிருந்து வணங்கினாலும், இன்னும் அவர்களுடைய ஆயுசெல்லாம் கண்ணீர் வடித்தழுது நின்று உருக்கத்துடன் வணங்கிணபோதைக்கும, இன்னும் கடல நீரெல்லாம் தனக்கஞ்சும் சுபாவத்துடன் கற்பாசனம் கொண்ட சித்தனானாலும், அல்லாஹுத்தஆலாவின் ரகசிய பொருளான கலிமாவை உணராதவரையிலும் அவர்கள் பயன்பெறவே மாட்டார்கள். அவர்கள் செய்த தவங்களெல்லாம் வீணாகத்தான் அழிந்துவிடும். மேலைக்கு அவர்கள் ஆண்டவனுடைய தீதாறையும், ஷபாஅத்தையும் காணமாட்டார்கள். சுவர்க்கத்தையும் பார்க்கமாட்டார்கள். கடையாக நரகத்திலேதான் போய்விழுவார்கள். அது ஏனென்றால் கீழே சொல்கிறேன் கேளுங்கள். எ-று.

கலங்கியழுதாலுங் கடனீர் மட்டுங் கற்பமருந்திய காட்சிகண்டே, யிலங்கும் பொருணிலை யறிந்திலார்க்கிங் கெல்லாத்தவமுமே யழிவதாகும், நலங்குந்தீதாறுப் ஷபாஅத்துட னல்லபதவியு நல்

வழியும், விளங்கிச் சுவர்க்கத்தை நரகந்தன்னில் வீழ்வாரேதென்றால்
விளம்பக்கேளீர். (5)

(இ-ள்): - ஏழுசத்தா சமுத்திரங்களைப் போல் கண்ணீர் வடித்து அலைந்தாலும், கற்பங்களைத்தின்று எக்காலும் இளம் பருவயதாக இருந்து வந்தாலும், (இருநேத்ரங்களிலும்) இலங்கிக் கொண்டிருக்கும்படியான "தாத்து" என்னும் சர்ஜோதியை, அதாவது தன்னைத்தெரிந்து தீரமான ஸமாதியைப் பெற்றுக்கொள்ளாத மாபாவிமனுக்கு அவர்கள் செய்த தொழுகை முதலான சர்வதயங்களுந் துலைந்துபோய் கடைசியாக ஞானகுருவாகிய நம்நபியவர்களின் "கடையுக மன்ருட்டம்" என்கின்ற (ஷபாஅத்தும்) இல்லாமல் போய்விடும் அவர்கள் ஒதுங்குந் தானமானது ஊழிக்கனல் சுலாலைப்பற்றி எரியும்படியான நரகமே ஆகும். ஏனெனின் பின் வருமாறு சொல்கிறேன். எ-று.

விளம்பக் கேளுங்கா ணுலகத்தோரே வேதமிறக்கிய பெரிய
நாயன், தழும்பில்லாநபி தமைட்புகழத் தக்ககலிமாவின் படி
நடக்க, களிப்பில்லாததோர் கலிமாவுந்தான் கதவுசுவர்க்கத்துத்
திறவுகோலாங், குளம்பிமனதிலே யறியார்குபிர் கூறுந்திறவுகோ
லில்லாததால் (6)

(இ-ள்.):—யார்காணும் உலகத்தார்களே! ஜெளுங்கள் அல்லாஹுத் தஆலா உலகத்தார்கள் தன்னை அறியுப பொருட்டு முதல் நபிகளை அனுப்பி அப்பால் வேதங்களை இறக்கி அந்த வேதங்களுக்குள்ளே தன்னை யடக்கிய பொருளான பொக்கிஷமாக கலிமாவென்னும் மூல மந்திரத்தை அடத்து வைத்தான், அதைப் பற்றி 'இந்த கலிமாவாகிறது சுவர்க்கத்து திறவுகோல் "என்றும் அறிவித்தான், ஆனபடியால் அந்தத் திறவுகோலை மனதில் பதிய வைக்காதவர்களெல்லாம் குபிரியத்தின் பேரிலுள்ள நஷ்டவாளராக இருக்கும். எ-று.

ஆனபடியாலே குபிரோரெல்லா மறந்து பாவியா யழிவதாகு,
மீனமணுகாத நாயன்ருனு மிறசூல் முகம்மதைப் பார்த்துச் சொல்
வான். ஏனுஞ் சுவர்க்கந்தோ னரகிரண்டி லெதுவே னுமக்கென
விறசூல்சொன்னர், மானநிறைந்திடுஞ் சுவர்க்கமென்க மன்னு
னிறையவன் கொடுத்தே னென்ருன். (7)

(இ-ள்.):—ஆனபடியால் அந்த திறவுகோலை கைப்பிடியாக வைத்துக் கொள்ளாத காபிரீன்களின் தவங்களெல்லாம் ஒரு பயனுங்கொடுக்காமல் போய்விடும். கருமத்தில் அல்லாஹுத் தஆலா றசூலுல்லாவுடைய ஒளிவைப்படைத்து அந்த ஒளி விடத்தில் தன்னிடமிருக்கின்ற உம்முல் கித்தாபைக் காட்டி அதிலுள்ள சுவர்க்க நரகப்பிளான்களைக் காண்பித்து முஹம்மதே! உமக்கு இந்த சுவர்க்கம் வேண்டுமா? அந்த நரகம் வேண்டுமா? "என்று கேட்டான். அதற்கு அந்த முஹம்மதியா என்னும் ஒளிவானது "எனக்கு இந்த சுவர்க்கந்தான் வேண்டும்!" என்று மறுமொழி சொல்லிற்று. அப்போது அல்லாஹுத் தஆலா "முஹம்மதே? என் ஹபீபே! அப்படியே தந்தேன் நீயும் உன் சேனைகளும் அனுபவியுங்கள்?" என்று நன்கொடை கொடுத்தான். எ-று.

கொடுத்த சுவர்க்கத்தை மறுத்தும் வாங்கக்கொடுத்தே னிரு
மொழி கூறவில்லை, யடுத்த நரகந்தான் குபிரோர்க்கென்றே யாதி
பெரியவனருளிச்செய்தான், விடுத்தகுபிர்தீனை ரெவரென்ருலும்
வேத முகம்மதின் ஷறகை நீக்கிக், கொடுத்தசெயற் குபிர் வணக்கத்
தோர்க்குக் கிடைக்கு நரகல்லால் சுவர்க்கமில்லை. (8)

(இ-ள்):— அப்பால் முஹம்மதென்னும் ஒளிவானது, மறுத்தொன்றும் பேசாமல் இருந்து விட்டது. அப்பால் அலலாஹுத் தஆலா "அந்த நரகமானது என்னுடைய மூலஸ்தான மந்திரமாகிய கலிமாவைச் சொலலாத காபிரீன்களெல்லாம் ஊழிகாலம் கிடந்து வேதனைப் படுகின்றதர்க்காக ஸ்தாபித்தேன்" என்ருன். ஆதியாகிய பொருளான அல்லா இவ்விதம் சொல்லிருப்பதாலே முஹம்மது நபியவர்களின் ஷறீ அத்தின்மணித்தீபமாகிய கலிமாவைச் சொல்லி ஈமான் கொள்ளாத காபிரீன் களுக்கெல்லாம் சதாயாதனையுள்ள நரகமே ஒதுங்குந்தான மேயன்றி சுவர்க்க மென்பது மருந்துக்குங் கிடையாது. (எ-று)

சுவர்க்கஞ்சேருவரர் குபிரோரென்று சொன்ன வுடன்காபி
ரமவனு, மிவர்க்கு மொருதரந் தவுபாச் செய்தே யிழுகாதீமானை
நிறுத்தவேணு, மவர்க்குந்தவுபாவைச் செய்யாதாலு மாதிநூன்
மாறிக்குபிருனலு. மிவர்க்கு நரகல்லால் சுவர்க்கமில்லை யென்ருர்
முகம்மது நபியிறசூல் (9)

(இ-ள்):—உலகத்துதில் எவனுவது ஒரு முஸ்லிமானவன் ஒரு காபிரானவனைப்பார்த்து இவன் சொர்க்கவாளி யென்று சொல்வானுனல் உடனே அந்த முஸ்லிமானவன், காபிருக் விடுவான். அவனைத் தவ்பா செய்யசொல்லி குபிர்க்கலிமாச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அவ்விதம் செய்ய விடாமல் அடாதுடியாக இருப்பானே ஆனுல் அவனுக்கும் ஊழியூழிகாலம் நரகமே கிடைக்கும். சுவர்க்கம் கிடையாது" என்று நபிநாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்து சொல்லி யிருக்கிறார்கள். எ-று.

நபிகள் பெருமானுர் நவச்சுடாரம் நபிகளுயக மான வள்ளல், புவியில் புறுக்கானைப் பார்த்துச் சொன்னுர் போதமிமாம்களுமிதன் கித்தாபின், கலியாமஹறிபா ஆரிபீனிற் கண்டவிசளத்தைக் கவிதையாகத், தவியாவமுதான மஹறிபத்துத் தானுமெனச் சொல்வி நவிலலுற்ரும். (10)

(இ-ள்):—இந்த மஹபத்துமாலையில் இருக்கின்ற விஷயங்களெல்லாம் நபிமார்களுக்கு கிரீடமாகிய நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்மள் திருவாய் மொழிகளான அதீது குதுஸியில் நின்றும் இமாம்கள் தங்கள் கிதாபுகளில் எதிதினுர்கள் அவைகளை எடுத்து அனேக ஆரீபீன்கள் விபரித்தார்கள் அதின் கருத்தைக்கொண்டே நானும் சொல்லியிருக்கின்றேன். எ-று,

நவில்வாருலகத்தில் தீனேரெல்லா நல்லபொருளெல்லா மறிந்தோமென்பார், புவியிலருட்பாலும் பொருளின்பாலும் புகலுங்காமப்பான் முப்பாலையுங், கவியிலறிந்தார்போ லெல்லாஞ்சொல்வார் கடுகுபோனமார்க்கங் கண்டறியார், தவியாப்புறுக்கானிற் சொன்னபடி தமிழானுலகத்தி லறியச் சொன்னேன். (11)

(இ-ள்):—உலகத்திலுள்ள நமது சகோதரர்களான தீனவர்களெலாம் நாங்கள் எல்லாம் அறிந்துவிட்டோம்! என்று கண்டதெல்லாம் பிதற்றி ஞானத்திலுள்ள பொருட்பால், அருட்பால், காமப்பால் முதலிய யாவற்றும் அறிந்து அதன்படி நடப்பவர்களைப்போல் ஜாடைபண்ணுவார்கள் அந்தசோற்று ராமன்கள் ஒரு கடுகுப்பிரமாணமாவது தன் நிலையைப்பற்றி அறிவார்களா? அறியமாட்டார்கள், ஆனதால் அல்லாஹுத்தஆலா தன் திருவேதமாகிய குர்ஆனில் சயிக்கினை செய்தபிரகாரம் பிசகாமல் ஜனங்கள்

நடந்து நேர்வழி பெறும்படியாக நான் இந்த மாலையை தமிழ்ப் பாஷையாகச் சொல்லிவிட்டேன். எ-று.

———(x)———

கலிமா விளக்கம்.

விருத்தங்கள்,

———

சொல்லுங் கலிமாத்தான் லாஇலாக இல்லல்லாகூவென்றியம்புவது, நல்ல ஷறகுட னெழுத்தீராறந் நான் மூன்றெழுத்தையு நவிலக்கேளுந், தொல்லை யணுகாத முகம்மதுற்ற சூலுல்லாகியென்றியம்புவது, மெல்லா மறுநான்கென் றிடுமெழுத்தாமிணைத்துக் கலிமாவி லியம்புவதே. (12)

(இ-ள்):—கலிமா என்பது என்னவென்ருல் ஷறஹில் வந்திருக்கின்றபடி, லாஇலாஹ இல்லல்லாஹு என்கின்ற பனிரண்டு அட்சரங்களும் அப்பால் முஹம்மதுர் றசூலுல்லாஹி என்கிற பனிரண்டு அட்சரங்களும் ஆகக்கூடி இருபத்துநான்கு அட்சரங்களாக இருக்கும். எ-று.

இயம்புங் கலிமாவின் முகம்மதுற்ற சூலுல்லாகியென் றெழுத்தின்பொரு ணயம்பெறப் பின்னுற் சொல்லுகிறே னவில்லா இலாக இல்லல்லா வென்று, லியம்பு மீராரென் றெழுத்துமாகு மியல்பா மறுநான்கு மிதுகலிமாப், பயமி லாமலே செய்வதற்குப் பறுலு நாலுண்டும் பகரக் கேளீர். (13)

(இ-ள்):— மேலே சொன்ன கலிமாவிலே முகம்மதுர் றசூலுல்லாஹி, யென்கிற அட்சரங்களின் பொருளைப் பின்னுல் சொல்கிறேன். முதல் வந்த லாஇலாஹ இல்லல்லாஹு என்கிறதாவது பன்னிரண்டு அட்சரங்களைப் பொதித்ததாக இருக்கும். இதுவே இருபத்து நான்கு அட்சரங்களுக்குரிய கலிமா முழுவதும் நிரம்பினதாக இருக்கிறது. இந்தப்பயமற்ற கலிமாவைச் சொல்வதற்கு நான்கு பறுலுகள் இருக்கின்றன. அவைகளைக் கீழே சொல்கிறேன் கண்டுக்கொள்ளுங்கள். எ-று

யகரும், கலிமாவை யுரைக்கும்போது பலதும் நினைவினி னினைந்
திடாம னிகரி லாமனத் தொருநினைவாய் நிறுத்தி வாயினு லுரைக்க
முக்கா, லு க ரு ங் கலிமாவி லருத்தம்பொரு யுவந்தோ யறிவது
பறுவிரண்டா, மிருகங் கலிமாவி லருத்தப்படி யிதமாய் நடப்பது
பறுலுமுன்றே. (14)

(இ-ள்):— அந்தக்கலிமாவைச் சொல்லும்போது மனதில் பல எண்ணங்களையும் நினைக்காமல், நிகரில்லாத ஆண்டவன் பேரில் கதிர்முனைபோல் நிலையாக நிறுத்திய ஒரே நிய்யத்துடன் வாயால் மூன்று தடவை சொல்வது, ஒரு ப று லு. அப்படிச் சொல்லும் போதே அதன் கலப்பறுதலிற்ற தெளிவான அர்த்தத்தை இருதயத்தில் நிர்ணயப்படுத்துவது ஒருபறுலு. அப்படித்தெரிந்து கொண்ட அர்த்தத்தின் பிரகாரம் சாதுவாக நடப்பது ஒரு பறுலு ஆகப் பறுலு மூன்றுடன். எ-று.

மூன்று ப று லை யு மறியச் சொன்னேன் மொழிகி றேனுலாம்
பறுலையுந்தான், தோன்றுங் கலிமாவின் முகம்மதுற்ற சூலுல்லாப்
பொருட் பின்னுற் சொல்லே, னுண்ட பெரியவன் இலாக இல்லல்
லாஹு வொன்றியம்புவது வேண்டும் பன்னிரண் டெழுத்து முண்டும்
விளம்பக் கேளுங்காண றிவதனை (15)

(இ-ள்):—நான்காவது பறுலையும் சொல்லிவிடுகிறேன். அதாவது முஹம்மதுர் றசூலுல்லாஹி, யென்று சொல்வதாக இருக்கும் இதன அர்த்தத்தைக் கடைசியில் சொல்கிறேன். அல்லாஹுத் தஆலா லாஇலாஹ இல்லல்லாஹு என்ற பனிரண்டு அட்சரங்களில்தான் ஒளித்திருககின்ருன். அந்தப் பனிரண்டு அட்சரங்களும் பனிரண்டு அறிவுகளாக இருக்கின்றன. அவைகளையும் கீழே சொல்கிறேன். கேட்பீர்களாக. எ-று.

கலிமா விளக்கம் முற்றிற்று.

———(x)———

பன்னிரண்டு அறிவுகளின் விபரம்.

விருத்தங்கள்.

———

அறியும் பன்னிரண்டெழுத்தையுந்தா னுறைந்திட்டேன்றிரு
நெறிநீதியு, லுறையாந் திருநெறி யறியாமூடர்க்குரைக்கிறேனிதிற்
சுருக்கமாகச், செறியும் ப ன் னி ர ண் டறிவுதனிற் செப்புவேன்

முதலறிவைக்கேளுங், குறியா யிறைவன் றனையறியக் கூறுங் கலி
மாவினெழுத்தொன்ருலே. (16)

(இ-ள்):—நான் இப்போது சொல்லப்போகின்ற பன்னிரண்டு அறிவுகளையும் முன்னமே என்னுடைய நெறிநீதி யென்கிற நூலில் சொல்லிவிட்டேன். அ ந் த நூலை யறிந்தில்லாத நிற்மூட ஜனங்களுக்காக வேண்டி இந்த னூலிலும் சுருக்கமாகச் சொல்கிறேன். அந்தப் பனிரண்டு அறிவுகளிலும். முதலாவது அறிவைச்சொல்கிறேன் கேளுங்கள். அதாவது அல்லாஹுத்தஆலா தன்மையான இரகசியங்களை அறியும் படியாக வந்த கலிமாவில் உள்ள ஒரு எழுத்தாலே அந்த அறிவு வெளியாகும் எப்படியென்ருல். எ-று.

எழுத்தை யிருத்தினுற் கமலத்துள்ளே யிலங்கும் பொருள் றப்பில்
ஆலமீனுஞ் சுழித்து மூச்சாகவெழுந்தசோதிச் சுடரும் யாகூவென்
றெழுத்துமாகு. மழுத்தி மேல்விழி நிலையைநோக்கி யருளை யறிவது
முதலறிவாம். ஒழித்துப் பதுக்கின்ற வரிவுதனையோது வேன்
றன்டா மறிவைக்கேளுப். (17)

(இ-ள்):—அந்த எழுத்தை இருதயத்தின் கமலத்தில் இருத்தினுல் அங்கே ஒரு ஒளிவு பிரகாசிக்கும் அதுவே றப்புல் ஆலமீன் என்பதாகும். அந்த எழுத்தாவது சுவாசத்தைச் சுழித்து வாங்கும் போது அந்த பிரகாசத்துடன் கலந்து நிற்கின்ற ஹு என்றதாக இருக்கும். இ ந் த தந்திரத்துடன் கூர்மையான நினைவுடன் கண்ணை புருவமத்தியின் மேலே ஏற்றி அந்த எற்றத்தோடும் அங்கு தோன்றுகிற ஒளிவை எதிர்பார்ப்பது தான் முதலாவது அறிவாகும் இனி இரண்டாம் அறிவைச் சொல்கிறேன் கேளுங்கள். எ-று.

அறியு முடலதை முகம்மதுற்ற சூலுல்லாகி யென்றட்சரத்
தாற். றறுகாச் சுருபமா யுடலமைத்தான் சாற்றுங்கோட்டைக்கங்
கரசு நாயன். குறியா முகந்தனில் விழிநடுவிற் கோர்க்கு முயிரறப்
பில் ஆலாமீனு, யுறுவோன் மலக்குக ளுலுபேகு முடையோனே
வலையுரைக்குகிறேன். (18)

(இ-ள்):– இந்த சரீரமானது முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்னும் கலிமாவினுல் அமைந்திருக்கின்றது, இப்படிச் சமைந்திருக்கின்ற கோட்டைக்கு அரசனுனவன் றப்புல் ஆலமீனுகை இருக்குமென்றும், அவன் முகமானதில் இருகண்ணிலும் நடுவே இலங்கு

கின்ற உயிர் நிலையான ஒளிவாக நிற்கின்ருனென்றும் அவனைச்சூழ பகவதிகளான நான்கு மலக்குகளும், இருக்கிருர்கள் என்றும் இன்னும் சொல்கிறேன், எ-று.

உரைத்த வுடலதி லைந்துவிடு முவந்த பேச்சுடன் மூச்சு
கேள்வி, நிரைத்த பார்வையு முயிர்நிலையு நீதி யெழுத்தைந்து
நற்சிறைந்தும், விரைத்த பொருட்பாலிலுரைக் கொணுது வெளியா
யருட்பாலினிமேற் சொல்வேன், றிருத்து மிருவகை யறிவதுதான்
செப்பினேன் ரண்டா மறிவிதமே. (19)

(இ-ள்):—சரீரத்தில் ஐந்து வகை மசளிகையிருக்கின்றன அவைகளில் பேச்சு, மூச்சு, கேள்வி, பார்வை, உயிர்நிலை என்னும் நீதி எழுத்தாகிய புலன்கள் ஐந்தும் இருக்கின்றன என்றும், இன்னும் அவைகளுக்காதாரமாக அணுசிறுகளான பூதங்கள் ஐந்தும் இருக்கின்றன என்றும் இவ்விதம் அறிவது இரண்டாம் அறிவாகும் இவைகளின் விபரங்களை இந்த பொருட்பாலில் சொல்லப்படாது. கீழ் வருகிற அருட்பாலில் சொல்லுகிறேன் கண்டுக்கொள்ளுங்கள் இனி மூன்ரும் அறிவைச் சொல்லுகிறேன். எ-று.

அறிவா மூன்றதை யருளக்கேளு மாதிபெரியவன் வேத
நாலு, மறையுஞ் சுருபுகள் பலஞானமு மாதி பெரியவன் வசன
மென்றுங், குறியும் வகையுள்ள பொருள்களெல்லாங்குறுவா னீத
மொன்றிருப்பதாலே மறையின் வழியெல்லாஞ் சரியேயென்று மனதி
னினைப்பது மறிவுமூன்றே. (20)

(இ-ள்):—நாலுவேதங்களும், தேவகட்டளைகளான ஸுஹ்புகளும், மஅரிபா என்னும் ஞானமும் ஆதிவஸ்து வாகிய அல்லாஹுத்தஆலாவின் திருவசனம் என்றும், அவைகளின் பொருளானது குருமுஹம்மதுடைய திருவாக்கால் வந்ததென்றும், வேதங்களிலுள்ள எல்லா ஆயத்துகளும் வணக்கங்களுக்குரிய ஸாஸனமென்றும் அதைப் பற்றியதெல்லாம் தேர்வழிதான் என்றும், நிர்ணயிப்பது தான் மூன்ரும் அறிவு ஆகும். எ-று.

மூன்று வேதாந்த னிறக்கினது முன்னுள்ள நபியனைவோர்க்
குந்தா, னுண்ட பெரியவ னொளியில்நபி யன்ன ரூபமாயிருந்த
போது, கூண்ட பெரியவ னபியைக்கண்டு கூறு முகம்மது தீனிலானுர்
தோன்று நபிகண்முன் னொளியொன்ருலே தொகுத்தார் சரியென்னு
மறிவுநாலே. (21)

(இ-ள்): முன்னுண்டான நபிமார்கள் எல்லோர்க்கும் மூன்று வேதந்தானிறக்கி வைத்தான், நமது நபியவர்கள் அன்னத்தின் வடிவாக இருந்த மகாமில் வைத்து நபிமார்களுடைய அறுவாஹுகளை அழைத்து முஹம்மதுக்குக்கலிமாச் சொல்லச்சொன்னுன் உடனே அந்த அறுவாஹுகள் இஸ்லாமிலாகி விட்டன. அப்போதுதான் அந்த அர்வாஹுகளை முஹம்மதுடைய ஒளிவுக்குள், அடைத்தான் என்றும் அறிவது, நாலாம் அறிவாகும். எ-று,

நாலாம் வேதத்தி னிறையோன் சொன்னுனைக்கியாமத்தின்
மையெழுப்பி, யாலப்படைத்தவன் றிருமுன்னுக லைம்பதாயிரம்
வருடமோர்நாள், கால்கை யுறுப்பெல்லாஞ் சாட்சிசொல்லக்கடிய
மருஷிறிற் கனத்தநன்மைப், பாலங் கடந்துதான் சுவர்க்கஞ் சேர்
வார் பகரு மறிவஞ்சா மின்னங் கேளீர். (22)

(இ-ள்.) நாலாம்வேதமாகிய நம்முடைய ஞர்ஆன் ஷரீபில் அல்லா சொன்னபடி, ஜீவராசிகளை யெல்லாம் ஞாளைகியாமத்தில் எழுப்பி அல்லாவின் திருச்சமுகமாக நிறுத்தி ஐம்பதினுயிரம் வருஷங்கொண்ட ஒரு பெரிய யுகத்தை ஒரு நாளாக நீளவைத்து சூரிய சந்திரர்களையும் அப்படியே நிற்கவைத்து மனிதர்கள் செய்த நன்மை தீமைகளை அவரவர்களின் கால்கை உருப்புகளான அவயவங்களைக் கொண்டே சொல்ல வைத்து நீதிவிஜாரித்து அந்த கடினவெப்பத்தையுடைய மஹ்ஷர் மைதானத்தை கடந்த நன்மையாளர்கள் சிருத்துல் முஸ்தக்கீன், என்னும் பாலத்தையுங் கடந்து தான் சுவர்க்கஞ் சேரவேண்டுமென்றும், உறுதிகொள்வது ஐந்தாம் அறிவாகும். எ-று.

அஞ்சி டாப்பாவஞ் செய்வதெல்லாம் அஜாசீ றனைச்சேரு
மவனுவந்தே, யெஞ்செய லிந்த வடியானென வெளி நாருக்கங்
கழைத்துச் செல்வான், மிஞ்சிடநம்மை யிறையுவந்து மீசான்
றிராசினிற் கனத்தால் நன்மை யஞ்சி டாதேட்டை வலதுகைபி
லருள்வனிஃதறி வாருநமே. (23)

(இ-ள்.):—இன்னும் அந்த மஹ்ஷரில் தீமையான பாவிகளை அதற்குரிய குருவாகிய லாஅத்துப்பெற்ற இப்லீஸானவன் "ஓ! என் கூட்டங்களே வாருங்கள்" என்றழைத்துக் கொண்டுபோய் நரகில் தள்ளுவான் என்றும், மீஜான் என்னும் தேவத்தராசில் பாவிகளேயும், சுபாவிகளேயும், வைத்து நிறுக்கப்பட்டு நன்மை

யாளருக்கு நன்மைப் பட்டோலையும், தீமையாளருக்குத் தீமைப் பட்டோலையும் கொடுத்தனுப்பப்படும் என்றும் உண்மை கொள் வது ஆரும் அறிவாகும். எ-று.

அறியு முலுமுழுக் கவுலற்காகு மத்தக்கவுலல் நீர்சுடாதப் போது, திரிந்தங் கலையாமல் சுவர்க்கஞ்சேர்வார் தீங்கு பெருமை பொய் ஹரூபகீலும், பொருந்தி ராமனம் பளிங்கியாகும் பொன் னூர்வர்க்கத்தி னமுதருந்த, நிறைந்தகசடச்சுருஞ் செரிக்கா தென்ற நீதிய றிவிஃ தேழாகுமே. (24)

(இ-ள்.)—குலாால் முழுக்குகள் கௌதர் என்னும் தேவ நதியைச் சேரும். அப்போது அவனே அந்த நதிசுடாது, பெருமை பொய், ஹரும், பகீல் இவைகள் செய்யாமல் நீதியாய் நடந்தவர் கள் எங்குந்திரிந்து அலையாமல் சுருக்காய் சுவர்க்கத்தில் அவ ரவர்கள் மாளிகையில் போய்ச் சேருவார்கள் மனதில் கசடில லாதவர்களுடைய மனங்கள் பளிங்கிக் கிண்ணாங்களாக இருந்து சுவர்க்கத்தின் தேவாமிர்தங்களைக் கொண்டுவந்து கொடுக்கும். அவ்விதம் கொடுக்கின்ற அமுதங்கள் துன்யாவில் மனக்கசடுள்ளவர் களுக்கு ஜீரணசக்தியாகாது, என்றும் இவ்வித நீதியிடன் ஒப்பு கொள்வது ஏழாம் அறிவாகும். எ-று.

என்றுந் தொழுகையிலறிவுநேர மிணையமவுத்துக்கங்கதாபில் லாதார், சென்று மலக்கலின் மவுத்தைச்சேருஞ் செப்யுமுலுநா கரவுதேட்கா, மொண்ட வுலுநீத மீக்காயிற்காம் ஜிபுரீல்க்கின்னு அன்ஸல்னுவுமாம், தன்ரும் வாங்கிசு ருபீற்காகு விலுங்காமத்தக் கொடிநிழற்கே (25)

(இ-ள்):— எந்த நாளும் தொழுகைக்குரிய நேரங்களை எதிர் பார்த் திருக்கின்றதாவது, மவ்த்துடைய தருணத்தில் அதாபு என்கிற வேதனை ஒன்றுஞ் செய்யவிடாமல் தடுத்து அப்பால் மலக்கல்மௌத்து என்னும் எமனைச்சேரும் உலுச்செய்த நீரானது நரகத்தின் பாம்பு, தேள் முதலிய கொடியவிஷ ஐந்துக்களின் வேதனைகளைத் தட்டிக்கொண்டு மீக்காயில் என்னும் தண்ணீர் அதிகாரியைச்சேரும். இன்னு அன்ஸல்னு என்னும் சூறத்தானது ஹிபுரீல் இடம் போய்ச்சேர்ந்து கொள்ளும். பாங்கு சத்தமானது இசுருபில் மலக்கிடம் சேர்ந்துகொள்ளும். காமத்துச் சொல்வது லிவாவுல்ஹம்து என்கிற கொடி நிழலில் கொண்டு போய்ச் சேர்க்கும். எ-று.

கதுபா தனைக்சேருங் கிபுலாநிலை சுத்தன் மகுமூறு தக்பீர்து ஆ, எகீன் முந்தகா மூன்றுந்தோன்று மேக னிலைல்சேருங்கிரு அத் தோதல் தவுபா லெவ்குக்கா முங்கர் நக்கீர் நம்மைச்சேருமாம் றுக்கூஉ செய்தல், சுகவாச வான சஜதாச் செய்தல் தக்க பிதா ஆதந்தம் மைச்சேரும். (12)

(இ-ள்):—கிபுலாவை முன்னோக்குதல் கடபாவைச் சேரும். தக்பீர் கட்டுவது, பைத்துல்மா உமூர்ப்பள்ளியைச் சேரும், துஆ ஓதுவது எகீன் மரத்தையும், சிதுறத்துல் முன்தஹாமரத்தையும் சேரும், கிருஅத்து வோதுதல் ஏகநிலையாகிய அறுஷைச்சேரும், தவ்பாச்செய்தல் லௌஹைச்சேரும், றுக்கூஉ செய்தல் முன்கர் நக்கீரின் கேள்விக்கு ஜவாபு கொடுக்கச் செய்யும், ஸாஜ்து நமது ஆதிபிதாவாகிய ஆதம் அலைஹிஸ்லாத்தைச் சேரும். எ-று.

சேருஞ் சமதான பின்னிருப்புச் சிறந்த குறுசத்தகிய்யாத்து வுங், கூறங் காத்தபின் கிருமனுக்குக் குணமா யினைந்திடும் சலா மிரண்டும், மாறுந் தவ்பாவும் கலத்துக்காகும் ஆமீன் கணக்கில்லா விண்ணோர்க்கென்று, மேரும் வலக்கைமிற் றசபிதொட்டா லிபுலீ சனுகாத குறடாகுமே, (27)

(இ-ள்.): — பூரணமாக சேருகின்ற கடைசியான இருப்பும், அதில் ஓதுகின்ற அத்தஹியாத்தும் கிருமன், காத்துபீன் என்ற இரண்டு மலக்குகளையும் சேரும், ஸலாங்கொடுத்தலும், தௌபாச்செய்தலும் லௌகை எழுதுகின்ற கலத்தைச் சேர்ந்துவிடும். அப்பால் ஆமீன் சொல்கிறது, கணக்கிலடங்காத வானவர்களுக் காக ஆகிவிடும். வலக்கையில் தொட்டு உருட்டி ஓதுகின்ற தஸ்பி ஹாகிறது, இபுலீஸை அணுகவொட்டாமல் ஓட்டுகின்ற குறடா வாக ஆகிவிடும். எ-று.

ஆகும் சலவாத்து மஹுஷர் தனிலங்கந் தளப்பாத பெலத்துக் காகு, நாவாலுரைதிட்ட பாத்திஹாவு நமது குலத்தார்களிறநத வர்க்காம், பூவில் மாலைபோ னபியிறகுல் புயத்திற்றரித்திடுஞ் சுன் னத்தெல்லா மேவும் செப்பிலி குருபான் செய்ய வினையு மிசுமாயீல் நபிக்குத்தானே. (28)

(இ-ள்):—அப்பால் ஸலவாத்து வோதுதல் மஹ்ஷர் நாளையில் திரேகம் வாடாதபடி பொறுத்து நிற்க்கிறதாக வேண்டிய பல

மாக வந்துசேரும். அப்பால் ஓதும்படியான பாத்திஹா வானது தமது வங்ஷெத்தார்க்குப் போய்ச்சேரும். அப்பால் தொழும் சுன்னத்துத் தொழுகையானது தமது நபிநாயகம் அவர்கள் புயத்தின் பூமாலைபோல் போய்ச்சேர்ந்துவிடும். ஹஜ்ஜுப் பெருநாளையில் கொடுக்கும் செம்பறிக்கிடாவின் குர்பானியானது நபி இஸ்மாயில அவர்களுக்குப் போய்ச்சேரும். எ-று.

தானம் பகர்குரு ஞேதிவிலக்கத் தனிமைக் கபுறினில்வெளிச்சமாகு, மேணி தனிமேலறிக் கொடுப்பதெல்லா மிணையும் வழிக்காவற்காரர்க்காகும், பூணும் ஸிபாறத்து நசறுதோஷப் பொன்னூர் வழிகாணப் பொருளுமாகும், ஈன்மனுகாத வுலகத்தோர்க்கு விளம்பினை னெட்டா மறிவிதமே, (29)

(இ-ன்):—காபில்களுக்கு திரவியங் கொடுத்து ஒருஆன் ஓதி பக்ஷ்செய்யச் செய்தல் கபுறுக்கு விளக்காகவரும், றமலான் மாதத்தில் ஸக்காத்து கொடுக்குதல் சுவர்க்கம் போகிறவரைக்கும் இடையில் வருகின்ற மலைஜிக்களுக்கு வழித்துணையாளராகவரும். மையத்தை அடக்கி மூன்றும் ஜியாறத்து முதலானது செய்தல், அதற்க்காக சோறு ரொட்டிகள் கொடுக்கிறது எல்லாம் சொர்க்கலோகத்தின் பாதையைக் காட்டுகிற தூதர்களாக இருக்கும். என்று இவ்விதம் மனதில் உறுதி கொள்ளுகிறதுதான். எட்டாம் அறிவாக இருக்கும். எ-று.

ஆன முதல்கணுற் பதிலேயொன்றை யளிக்கவெளியோர்கட்கிதுஸக்காதது, வானந் திராசுக்காம் நன்மையேட்டைவாங்கிவலக்கரத் தியப்போதும், பூனம் மினத்தோருக்கீவதெல்லாம் பொறியின் மாலிக்கு கோபமாறத், தானே யுலகத்தை யிழந்தோர்க்கியத்தலத்தினிறை முன்னே சேருமதே. (30)

(இ-ன்.):—ஸக்காத்து என்பது நம்மிடம் இருக்கிறது திரவியங்களில் நாற்பது ரூபாய்க்கு ஒரு ரூபாய் விதமெடுத்து தர்மம் செய்வது, அது மூன்று வகையாகும் வாரிஸ் இல்லாதவர்களுக்கும் மற்ற எளியவர்களுக்கும் கொடுப்பதாவது கியாமநாளையில், மீஸான் தராசானது நன்மையை முறுகவைக்கும், தன் குடும்ப ஜனங்களுக்குக் கொடுக்கிறதாவது. நரகத்தில் உள்ள மாலிக்கென்னும் செலவிட்டுமலக்கின் கோபத்தைத் தனியச்செய்யும். உலகத்தின் சுகங் ளை விட்டும் ஒதுங்கியிருக்கும் தவசிளுக்குக்

கொடுப்பதாவது அல்லாஉடைய திருசமுகத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். எ-று.

சேர்ந்த வினமெல்லா மெளியோர்க்கீயச் செம்பொற்பதி செருப்வேளை தனிர், காந்திக் கிதுமீருங் கடிநாய்க்கிது கத்நாவழி தனைக்காட்டிவைக்கும், வாழ்ந்த சுவர்க்கத்திலிருப்பாரென்றுவன்னல் முகம்மது நபிநாஞ்சொன்னார். மாந்த ரறியவே தமிழினலே மகிழ்ந்திங் குறைத்திட்டே னறிவொன்பதே. (31)

(இ-ன்):— எப்படியும் எளியவர்களுக்கு ஸக்காத்து கொடுக்கும்போது சில பகில்களைப்போல கடிநாய்கள் போல் கோபித்து விழாமல் முகமலர்ந்த குணத்தோடும் கொடுப்பார்களானல் பொதுவாக அதாவது அவர்களை சொர்க்கத்திற்கொண்டு போய்ச் சேர்த்துவிடும். என்று நபிநாயகம் அவர்கள் திருவாய்மலர்ந்து சொல்லினர்கள் என்றும் உறுதிகொள்வது ஒன்பதாம் அறிவாக இருக்கும். எ-று.

ஒன்பதா மிஃதொருபஃது முடையோன் பறுலுக்காய் நோன்பு வைக்க, வின்பமுடன் சோபம் ஹறும்பகிலு மெவர்க்கு மூதசன முரைத்திடாம. லன்பின் கயல்விழி கூறுல்கீனை யனையுஞ் சுகமொன்று மறியமாட்டா, ரின்ப நோன்பில்லா வுலகத்தோர்கட் கேழையான்கூற வின்னங்கேளீர். (32)

(இ-ன்.)— றமலான் மாதத்தில் முப்பதுநாளும் நோன்பைப் பறுலாகப் பிடித்திருந்து, பொய்பேசாமலும், ஹறும் செய்யாமலும், பெருமை பேசாமலும், கோபம் வரவொட்டாமலும் பகீல்தனம் செய்யாமலும், யாருடைய புறனிகளையும் கழுவிக்குடிக்காமலும் இருக்கவேணும். இவ்விதம் நடக்கத்தவறினல் சுவர்க்கத்தில் ஹூறுல்ஈன்களைப் போகம்செய்ய சக்தியற்றவர்களாக இருப்பார்கள் என்றறிவது தான் பத்தாம் அறிவு ஆக இருக்கும். எ-று

இன்னம் றமலானி லோரிரவி லிசையோன் லைலத்துல்கதிரியாகும், தன்னில் வணக்கந்தான் மகுஷர்தனிற்குபங்களையோட்டும் வருத்தமாற்றுஞ் சொன்ன வகையறி பத்துமிதே சுகமாம் அறபாவில்ஹச்சுசெய்யப், பொன்னூர்பசையான நரகந்தனைப் பொங்காதடக்கிடும் அரவுந்தேளும், (33)

(இ-ள்):—இன்னும் றமலான் மாதத்தில் ஒருஇரவையில் லைலத்
துல்கதறி யென்கிற தேவ கொண்டாட்டங்கள் உலகத்தில் தோன்
றும் அந்த இரவையில் வணக்கஞ்செய்தால் அது மஹ்ஷரில்
வருகின்ற பெருந்தாக முதலான எல்லா வருத்தங்களையும் போக்
கடிக்கும். மக்காவில்போய் ஹஜ்ஜுசெய்தல் நரகத்தை பொங்க
விடாமல் அடக்கி அங்குள்ள கொடிய விஷஜந்துக்களைத் தீண்ட
விடாமல் மாற்றிவிடும். எ-று.

தேனு மரவுமே தீண்டாதின்னந் தீனோர் குபகாரஞ் செய்வ
தெல்லாம், வாளிற் கூர்மையாம் பாலவழி வானினிடங்காணும்
வெளிதொலையு. மூழி லுளபதினென் றுஞ்சொன்னே னுரைக்கும்
பனிரண்டா மறிவைக்கேளு, மாளுந் தகப்பன்றாய் தனைவணங்க
வாதிபெரியோனைச் சேருமென்றே. (34)

(இ-ள்):—இன்னம் தீனவர்களுக்கும் ஒரு உபகாரஞ் செய்
தல் சிருத்துல் முஸ்தகீன் பாலத்தின் பெருந்தொலையான வழி
களைச் சுருங்கச்செய்யும் என்று இவ்விதம் உறுதிப்படுத்துவது
தான் பதினொன்றும் அறிவாக இருக்கும் இனி பனிரண்டாம்
அறிவைச் சொல்கிறேன் கேளுங்கள். அதாவது நம்முடைய அரு
மையான தாய்தகப்பன் மார்களுக்குப் பணிவிடை செய்து அவர்
களை வணங்குவதானது தான். அதுதான் அல்லாவுடைய திருச்
சமுகத்தில் போய்ச்சேரும் என்று உறுதிப்படுத்துவது தான்
பனிரண்டாம் அறிவாக இருக்கும். எ-று.

சேரு மிறையோனைத் தகப்பன்றாயை சினந்தி டாமனஞ்
செய்யுஞ்செய, லாரு மிகுலாத்தி னடையாளம்பத் தறிவு பனிரண்
டாயருளினது, கூறுந் திருநெறிப்படலநாலிற்கோர்க்கும் பனிரண்
டாந்தொகுதிதனி, லாறு பனிரண்டு பதினாலிறு மறையும் பதினைந்
தில் வழியாய்ச்சொன்னேன். (35)

(இ-ள்:)—தாய்தகப்பன் மார்கள் வணக்கந்தான் எல்லாஅறி
வுக்கு மேலானது, என்றதோடும் பனிரண்டு அறிவுகளும்சுருக்க
மாய்ச் சொன்னேன். இதன் விபரங்களை நான் செய்திருக்கின்ற
திருநெறிநீதி யென்ற நூலில் சொல்லி இருக்கிறேன். எப்படியானால்
நாலுபடலத்திலும், பனிரண்டு தொகுதிகளாக 6-வது கவியிலும்
அதிலிருந்து பனிரண்டாம் கவியிலும், பதினாலு பதினைந்தாவது
கவியிலும் நல்ல வழிமுறையாகச் சொல்லியிருக்கிறேன். எ-று.

சொன்னேன் றிருநெறி நீதந்தனிற் சோக மணுகாத படலம்
ரண்டி, லின்னம் பதின்மூன்றுந் திட்டந்தனி லியம்பினேன் காணி
யாகுவாறு. மன்ன வறிவார்க ளைம்பத்தொன்றி லறைந்த பதினா
லாந்திட்டந்தனி, லுன்னிடுமிமாம்கத்தீபுதம் முன்மைதான்பத்
தொன்பதுமுறைத்தேன்.

(இ-ள்):—இன்னும் என்னுடைய திருநெறி நீதிஎன்கிற நூலில்
இந்த விபரங்களை விரித்துஇரண்டு படலங்களிலும், பதிமூன்றுவது
திட்டத்திலும் பதினான்காவது திட்டத்திலும், ஐம்பத்தொரு
ஞான விஷயங்கள் சொல்லியிருக்கிறேன். அது உலகத்தில் எவ
ராலும் சொல்லப்படாதது. பதினாலாந் திட்டத்தில் கதீபுலெப்பை
மார்கள் நடக்கவேண்டிய பத்தொன்பது அறிவிகளையும் சொல்லி
விட்டேன். எ-று.

உரைக்கும் பதினாலாந் திட்டந்தனிலோதினேன் தீன ருயர்த்
தியெல்லாந், திறத்தி னாற்பத்தெட்டறிவுமாகுந் தீனோரிருநூற்றைம்
பதுமறியத் திறத்தின் வகையான திருநெறியைத்தெளிவாய்ப்
படலநால் முழுதறிய வுரைத்த படியேதான் தீனோரெல்லா முலகி
னடப்பது பொருட்பாலிதே. (37)

(இ-ள்):—இன்னும் அந்தப்பதினாலாவது திட்டத்தில் தீனவர்
களுக்கிருக்கின்ற தறஜாக்களை யெல்லாம் விடுவித்துச் சொல்லிப்
போட்டேன். இன்னும் அதிலுண்டான நான்கு படலத்திலும்
உலகத்திலுண்டான நாற்பத்தெட்டு அறிவுகளையும், இருநூற்
றைம்பது விஷய சூசிகையாகக் காட்டிவிட்டேன். யாராவது
ஒரு தீனவன் அந்த நாலுபடலத்தையும் உணர்ந்து விடுவா
னால் அவனுக்கு உண்மையாகப் பொருட்பாலானது நிரப்பமா
யிற்று என்று எண்ணலாம். எ-று.

பொருட்பால்-முற்றிற்று.

ஆக-திருப்பாடல் 37

இரண்டாவது-அருட்பால்.

—x—

இதுதான் அருட்பாலென் றறிவதாகு மின்னந்தலமுறை
யெளிதாய்ச்சொல்வே. னிதமுந் தொழுகவே வலுவையில் லானினை
வில் வணக்கந்தானிலே நிறுத்த, மதினாமுகம்மதைநாயன் றனை

மகிழ்ந்து புகழவும் வப்பகற்றி, நிதமுந் தகப்பன்ருய் தலைவணங்க நிகரிலாப் பலனதிகந்தானே. (38)

(இ-ள்)—சகோதரர்களே! இப்போது நான் சொல்லப்போகிறதுதான் அருட்பால் என்றறிந்து கொள்ளுங்கள். அதாவது—மஅரிபாவின்படி நடந்து வணங்க ஏலாதவர்கள் தங்களுடைய மனதில் றகுமானையும், நபிநாயகம் அவர்களையும் உருக்கத்துடன் வைத்துதியானித்து உலகத்திலுள்ள ஒரு கசடான செயலிலும் மனதை விடாமல் இருந்து தகப்பனையும், தாயையும் வணங்கிக் கொண்டுவந்தால் அதுவே பெரிய நன்மையாகு இருக்கும். எ-று.

தானே கருபாவில் ஹச்சுசெய்யார் தலத்தில் வெள்ளிநாட்ப கற்றொழுக, வான பீசபீல் வெட்டமாட்டா ரறிவுபடித்துத்தான் கொடுக்கப்போதும், வானே னறுஷோடு கருபாத்தனை வைய மனுவோர்கள் செய்யவென்ருல், வானேன் வணக்கத்தை யுலகத் தோர்க்கு வருத்தி யிணக்கியே திருத்திவைக்க. (39)

(இ-ள்):— மக்காவில் உள்ள கஃபாவிற்போய்ஹஜ்ஜுசெய்யத் திராணியற்றவர்கள், தங்கள் ஊரில் உள்ளபள்ளிகளில் ஜும்ஆ தொழுதால் போதுமானது. தீனுக்காகவேண்டி வாளையெடுத்து காபிரீன்களுடன் அடர்ந்து பீஸபீல் செய்யத்திராணி யில்லாதவர்கள், நாலு சிறுபிள்ளைகளுக்குக் குர்ஆனை யோதிக்கொடுத்தால் போதுமானது, இது ஆனது கஃபாவையும், அறுஷினடியும் தவாபு செய்வதைப்பார்க்கிலும் மேலானது. எ-று.

வையம் பலநோன்பு பிடிக்கமாட்டார் வாய்வம்பளக்காம லிருக்கப்போது, மெய்யாகிய ஆலி மாகமாட்டா ரெவர்க்குமுகப் பத்தாயிருக்கப்போதுங், கையால் கைஞெடு ஸக்காத்தியயார் ஹறமா முடைமையை விலக்கப்போது, வையம் பலதருமங்கள் செய் யாராதாயமின்றிக்கொடுத்துவாழே. (40)

(இ-ள்):—றமலான் மாதத்தில் முபபதுநாளுப்நோன்பு பிடிக்க இயலாதவர்கள், வாயால் பொய்பொல்லாங்கு சொல்லாமல் இருப்பதுபோதுமானது, இல்மைப்படித்து ஆலிமாக ஏலாதவர்கள் மனிதர்களுடன் அன்பாக இருந்தால் போதுமானது, தமது கையால் பணப்பையை அவிழ்த்து ஸக்காத்து கொடுக்க மனமில்லாத கருமிகள், ஒருவருடைய சொதநை அபகரிக்காமல் இருந்தால்

போதுமானது. ஏழைஎளியவர்களுக்கு தானதர்மங்கள் செய்யாத லோபிப்பயல்கள் வட்டியில்லாமல் கொடுக்கல் வாங்கல் செய்தால் போதுமானது. எ-று.

வாழ வுபகாரஞ் செய்யமாட்டார் வாழ்வோர்க்கிடர் செய்யா திருக்கப்போது, நாளெல்லாங்குரு ஞைதமாட்டார் நாலுதிரநிரம் குல்கூவோது, வாழுமிரவெல்லாந் தொழுகமாட்டார் வடிவு ஹறுங் கண்டால் விழியைமூடே, வாழுமிறை தீதார்காணமாட்ட ராகாச செயல் வாரா திருக்கப்போதும், (41)

(இ-ள்):—ஒருவன்பிழைக்கும் பொருட்டு உபகாரமான சகாயஞ்செய்யாத கெடுப்பர்கள், அவன் பிழைக்கும்போது அந்தப் பிழைப்புக்கு யாதொரு இடர்களும் செய்யாமல் இருந்தால் போதுமானது குர்ஆன் முப்பது அத்தியாயங்களையும் ஓதித்தமாம் செய்ய திராணியில்லாதவர்கள் குல்ஹுவல்லாஹு ஹுர்து என்கிற சூருவை ஒரு நாள் ஒன்றுக்கு நான்கு தடவை சொன்னுல் போதுமானது. இராக்காலங்களில் கண்விழித்திருந்து ஆண்டவனை வணக்கஞ் செய்யாதவர்கள் ஹறுமான பார்வைகளை விட்டும் கண்ணைமுடிக்கொண்டால் போதுமானது தவ்ஹீதான ஞானத்தை உணர்ந்து தன்னிலே யளவிற்றரிபட்டு தன் றப்பைத் தெரிசியாத ஈனஜனங்கள் உலகத்தில் ஒருபாவதோஷமும் செய்யாமல் இருந்தால் போதுமானது. எ-று.

மார்க்கமறிவுகள் படித்தறியார் மனதிற் கசடில்லாதிருக்கப் போது, மூக்க முடைமானங்கொடுக்கமாட்டா ருதாசினஞ் சொல் லா திருக்கப்போது, மார்க்க மதிலொன் றுமறியமாட்டார் மைனித் தொருநேரங் குளுப்பாட்டவு, மார்க்குங்கிடையாதேயின்ன மொன றிங் கல்லா பொருளைத்தான் கொள்ளையிட, (42)

(இ ள்):—இன்னும்வேதசாஸ்திரங்களைக்கற்று அதன்படி நடக்க மனமில்லாத ஈன ஜனங்கள் மனதில் கெட்ட எண்ணங்களை விட்டும் சாதாசீதாவாக இருந்தால் போதுமானது. இல்லாத ஏழைகளுக்கு உடுமானங்கள் கொடுக்கமாட்டாத லோபிகள் யாருடைய புறணிகளையுஞ் சொல்லாமல் இருந்தால் போதுமானது. ஷரீஅத்தின் விதவிலக்குகள் கண்டு நடக்காதமூடர்களாயுள்ளவர்கள் மையித்துகளை ஒருபோது குளுப்பாட்டினல்போதுமானது. எப்பேர்ப்பட்ட நாதாக்களுக்குங் கிடைக்க அரிதாகிய

ஒரு வணக்கம் இருக்கிறது. அது தவாபுகளைக் கொள்ளையடிக்கிற தாக இருக்கும் அதாவது கீழே சொல்கிறேன். எ-று.

கொள்ளைக் குமியலா மல்லாபொருள் கொடிய பாவிக்குந்
தவத்தோர்க்குந்தா, னுள்ள வயதெலாம் ஹச்சுப்பல னொருநாட்
கொருகோடி ஹச்சுப்பல, னென்னு மலைபோலே யெண்ணரிதெ
யெக்காலமு முள்ள முழுகுந்தீரும், பள்ளி தனில்ஸனுசாகிடத்திப்
பத்தியாய்நின்று தொழுதபேர்க்கே. (43)

(இ-ன்):—இப்போது சொல்கிறதாவது அல்லாவுடைய ஐஸ்வரியங்களைக் குமியில் குமியலாக வைத்துக் கொள்ளையிட்டதற்குச் சமானமாக இருக்கும். இன்னும் தீராத பாவிகளுக்குப், நாதாக்களுக்கும் சரிசரியாக கோடி ஹஜ்ஜு செய்த பலனைக் கொடுக்கும். இன்னும் அதனால் கிடைக்கும் நன்மைகளானவை உலகத்திலுள்ள மணல்களை பாக்கிலும் கணக்கிலுயர்ந்தது. எந்த காலமுந்திராத முழுக்கான தொடக்குகளுந்தீர்ந்துவிடும். அது என்னவென்றால் பள்ளிவாசலில்வருகிற மையித்துக்களைத்தொழுவிக்கும் கூட்டத்துடன் கூடிநின்று தொழுகிறதாக இருக்கும். எ-று.

தொழுதோ ரெடுந்தவர் துயில்கொடுத்தோர் தோளுந்தலை
மேலுஞ் சுமந்தோர்க்குத்தான், முழுதுநீர் விட்டு முழுக்காட்டினோர்
முன்னாலேயிமா மாகநின்றோ, ரழுதோரை வேண்டா மெனவே
சொன்னோ ராழக்குழிகல்லி யடக்கிவைத்தோ, ரெழுதமுடியாதே
யிவர்கள் பல னிமாமுக்குப் பலன் பத்தாகுமே (44)

(இ-ன்):—அவ்விதப் வரக்கூடியமையித்தைக்கூட்டஞ் சேர்த்து தொழுதவர்கள், தொழாமல் நிற்கின்ற ஏமாளி ஜனங்களை தொழவாருங்கள் என்றழைத்தவர்கள், சந்தூக்கைவிட்டும் தூக்கிக்கொண்டு வந்தவர்கள், அநாதியான மைத்துகளுக்குக் சுபன்வஸ்திரங்கள் கொடுத்துதவின சீதேவித் தனமுள்ளவர்கள், கஷ்டத்தைப்பாராமல் தூக்கித் தோள்மேலும், தலைமேலும் சுமந்தவர்கள், கையால் நீரைமொண்டுமொண்டு குளிப்பாட்டினவர்கள், கூட்டங்களுக்கு முன்னால் இமாமாக நின்று தொழுவித்தவர்கள், கண்ணீர்விட்டு அழுகின்ற மையித்தின் சொந்தகாரர்களுக்குத் தேறுதல் சொல்லி அமர்த்தினவர்கள், சட்டப்போல் கபுறுக் குழி வெட்டினவர்கள் முதலான இந்த சகோதரர்களிக்குக்

கிடைக்கும் நன்மையின் பெருக்கத்தை மலக்குகளும் எழுதச் சடைவார்கள். ஆனால் மையித்தை தொழுவிக்கும் இமாமானவர்க்குப் பத்துக்காரியம் விதியாக இருக்கும். அவைகளைப் பின்வருமாறு சொல்கிறேன்.

அருட்பால் முற்றிற்று.

இமாமுடைய நிலை.

பத்து காரிய மில்லாதவர் பகரிமாய்செய்யப்பாவியாவார், நித்தம்
ஷஹறிலே முழிக்கவேண்டு நேரந் தவறாமல் யெழுக வேண்டு
மர்த்தம் பொருளெல்லா மறியவேண்டு மடுத்த சுன்னத்தை விட
வொண்ணாதா, முத்து வுடுமானமுண் ஹராமையெழுகும் பனிரண்டு
நிலை பொருந்திக் கத்த னறிவுடன் ஹலாலைப் பார்த்துக் கடுந்த
முழுக்காளியாக வேண்டும். (45)

(இ-ள்):—கீழே சொல்கிற பத்துக்காரியமும் இல்லாமல் இமாமத்து செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் சரியே பாவியாகிப் போவார்கள் அந்தப் பத்துக்காரியங்களாவன பிரதி தினமும் ஸஹர் நேரத்தில் கண் விழிக்கிறதுப், ஒரு வேளையாவது கலாவில்லாமல் தொழுகிறதும், குர்ஆனைக் கிருஅத்துடன் வோதுகிறதும், அதன் அர்த்தங்களை விளங்கிருக்கிறதும். பிக்ஹுடைய இல்மில் தேர்ச்சியடைந் திருக்கிறதும், சுன்னத்து தொழுகைகளைத் தவறாமல் தொழுகிறதும், வஸ்திரங்களை ஒஜீபனங்கள் ஹலாலாக்கிக் கொள்கிறதும் சொந்த ஹலாலான பெண்களுடன் ஜிமாஉ செய்கிறதும், எந்தநேரமும் துப்புறவாக இருக்கிறதுமாக இருக்கும். எ-று.

ஆக வீரைந்தா மமல்பொருந்தி யஞ்சியிமாமஞ்சி கிபுலாவுடன்
வாகின் மிகுருபு பைந்தரிய வளமாம் பதினைந்து மிமாமுநிலை,
பாகுஞ் சரீர முமுயிருப்புத்தி பகுமு நினைவைந்து பாயிரமாய்,
வாகின் கிபுலாவின் கருபாவினேர் பைத்தூல் மகுமூறு குறு
ஷிறுசாம். (46)

(இ-ள்):—இப்படியான பத்து அமல்களும் பொருந்திருப்பதுடன் பாவமானச் செயல்செய்ய இரொம்பவும் மனதில் அச்சமுள்ளவராகவும் இமாமில் ஐந்தும் கிபுலாவில் ஐந்தும் மிதுருபில்

ஐந்தும், நல்லசரீரம் கூர்மையான அக்கில் நல்ல ஞானமும், வியாபக சக்தியும் இருப்பதுடன் பைத்துல்ம உமூர் அறுஷு குர்சு முதலான கிபுலாக்களேயும் கூடிய வரையிலுந் தெரிந்திருக்க வேணும். எ-று.

ஆருநினைவந்து கிபுலா நிலை யைந்து மிகுருபும மலைந்தாமே
யேக இசுலாமு மூமினுமா மில்மு பொருந்திய விஃதைந்தாகும்
மாகு மூமின்க ளறிவுமைந்தும் பாஸிக் கானவர் செயலுமைந்தா
மாகிச்செயல் தள்ளி மூமின்செய லைந்து மறிந்தவர் மூமினாகும். ()

(இ-ள்) நினைவுகளில் கிபுலா மிஹ்ருபுகளைப்பற்றிய அமல்கள் ஐந்து காரியங்களையும் ஞாபகம் வைக்கவேண்டும், இசுலாமாக இருப்பதுடன் முஉமீன் இல்மு முதலான ஐந்து காரியங்களும் பொருந்தி யிருக்கவேண்டும். இன்னும் மூமீன்களுடைய செயல்கள் ஐந்தையும், பாசிக்கானவர்களின் செயல்கள் ஐந்தையும் அறிந்திருக்கவேண்டும். அவைகளில் பாசிக்கீன்கள் உடைய செயல்களை விலக்கிவிட்டு மூஉமீன்களுடைய செயல்களை எடுத்து நடக்க வேண்டும். அப்படிச் செய்கின்ற இமாமே மூமினானவர். எ-று.

இமாமுடைய நிலை முற்றிற்று.

பாசிக்கானவர் செயல்.

ஆருமுலகெல்லா மலைந்தலைந்தே யந்தி தனில்மனை யுகந்தபாவி தாக முலகெல்லா மலைந்திடடாலுந் தனிமை கபுர்நிலை மூமினுக்கே யாகுந் துனியாவை யுவந்தபாவி யாகிர் நிலைநின்றோர் தாங்கள்மூமி னாகும் ஹயாத்தையே யுவந்தமூமி னவனை யுவந்தவர் மூமினாமே. ()

(இ-ள்) :— ஊர் உலகமெல்லாஞ் சுற்றிவிட்டு அந்திபட்டால் வீட்டுக்கு வந்து ஒரு வணக்கமும் செய்யாமல் அல்லாவுடைய யாது இல்லாமல் இருப்பார்கள். இவர்கள் ஆயுசெல்லாம் அலைந்த போதைக்கும் கடைசியில் கபுரில் வெளிச்சமுள்ளவர்கள் மூமினானவர்கள். தான் பாசிக்கீன்களோ! துனியாவையே உகந்திருப்பார்கள். மூமின்களோ? ஆகிரத்தையே உகந்திருப்பார்கள். பாசிக்கீன்கள் தன் சரீரத்தையும், உயிரையும் உகந்திருப்பார்கள். மூமின்கள் அல்லாவைத்தான் உகந்திருப்பார்கள். எ-று.

மூமீன் றனமெல்லா மழித்துவைக்கு முடுமைப்பாவத்தையு வந்தபாவி சீமான் றனஞ்செயு நன்மைதனைச் சிந்தைதனில் வைக்கு மூமினென, ஈமா னிலையுள்ள மூமீனென்று மிவரே யிமாமத் துக்கு கையமென்று, மாமீனர்மக ளால்நபி யண்ணல் முகம்மது நபியுரைத்தார். (49)

(இ-ள்):— இன்னும் மூமீன்களுடைய அமல்களான செல்வத்தை அழித்துவிடக்கூடிய பாவமாகிய வறுமையைச் சுமந்து திரிவார்கள் பாசுக்கீன்கள், மூமீன்களோ? எல்லா சீமான்தனமும் அல்லாவை யுகப்புவைக்கிறதுதான் என்று ஒரு முயற்சியையுந் தேடமாட்டார்கள் இப்படி யிருந்தால்தான் இமாமத்துச் செய்கிறதற்கு லாயக்காவார்கள் என்று உலகமாதாவாகிய ஆமினு அம்மா அவர்களின் திருப்பாலராகிய நமது நபிகள் பெருமானார் அவர்கள் அருளிச் செய்தார்கள். எ-று.

வேறு

நபியா முகம்மது மார்க்கமெல்லா நமக்கு நடக்கின்ற விதங்களெல்லா, நபியா முகம்மதுக் கிறையோன்சொன்னலு இமாமத் நபிசொற்படி, கவியின் பலஞானந் தவநிலையுங் கருத்தின் ஷரீஅத்தின் வகையுளதும், புவியின் மனுவெல்லாம் நடக்கும்வகை யுகன்றுரதைப் பொருட் பாலிற்சொன்னேன். (50)

(இ-ள்):— இந்த சபபான கருமங்களை அல்லாஹுத்தஆலா நமது நபியவர்களுக்கு அருளிச் செய்தான். அதையவர்கள் தங்கள் அஸஹாபுகளுக்குக் கட்டளை செய்தார்கள். அவைகளைத் திரட்டி மதுஹபையுடைய இமாம்கள் தங்கள் கிதாபுகளில் கோர்வை செய்தார்கள். அதைப் பார்த்துத்தான் நானும் இந்த மஅரிபத்துமாலையில் பொருட்பாலில் விபரமாகச் சொல்கிறேன். எ-று.

பொருளின் பாலிலே யறியசொன்னேன் புள்ளுமருட்பாலின் பொருளுரைப்ப, னிருளை விலக்கிய கலிமாத்தனி லியப்புமிருபத்து நாலெழுத்து, மருளச்சறகுநான் கறிவதுவுமாதிபெரியோனை யறிவதுவும், பொருளின் புழச்சியின் புதுமையல்லாப் பிரித்து விபாமாய் விளம்பலுற்றேன். (51)

(இ-ள்):— பொருட்பாலில் காட்டிய விபரத்தை அருட்பாலிலும் சொல்லிவிட்டேன். அதாவது கலிமாவில் இருபத்து நாலெ

முத்திலும் தன்னையறிவதுவும், தன்றப்பையறிவதுவும் இதுதான் அதன் பொருளென்று திட்டமாக அறிந்துக் கொள்ளுங்கள். எ-று.

விளம்பக் கேளுங்கா ளுலகத்தாரே வேத பெறியவன் றனி
யோனுமாந், தழும்பில்லாநபி தாபரமாந் தக்க கலிமாவு முயிர்நிலை
யாங், கழிபபில்லாததோர் கலிமாவுந்தான் கதவு கமலத்துத் திற
வுகோலா, மெழுப்புஞ் சுழற்சுற்றை யறியார்குபி ரிலங்குந் திறவு
கோ லெழுத்தானதால். (52)

(இ-ள்):—இன்னும் சொல்கிறேன். கேளுங்கள் உலகத்தார்களே! அல்லாஹுத்தஆலா என்பவன் நம்மில் தனித்ததோர் மறைபொருளாக நிற்கிறுன். முகம்மதாகிறது நம்மில் பிரதான ரூஹாக நிற்கின்றது. ஹாவென்னும் திக்ருனது உயிருக்கு அஸ்திவாரமாக நிற்கின்றது. கலிமாவோ! நமது இருதயமானது திறப்பதற்குத் திறவுகோலாக இருக்கின்றது. இந்த சூட்சாதி சூட்சங்களை யறியாத மனிதர்களெல்லாம் திட்டமாக காபிர்களாக இருக்கும். எ-று.

ஆனபடியாலேயறியாரெல்லாமறுந்த பாவியாயழிவார் தின்னை
மீன மணுகாதநாயன்ருனுமெல்லாப் படைப்புக்கு முன்னுகினுன்,
ருனேதானவ னுடலுயிராய் தரத்தில் அனைத்துமே நிறைந்த
நாயன், வானத்துயர்ந்தவ னொருவனுக வையமனைத்துமே சமதா
யினுன். (53)

(இ-ள்):— ஆனபடியால் இந்த இல்முகளைப்படித்து அறிய வேண்டியது ஒவ்வொருத்தருக்கும் முக்கிய கடமையாக இருக்க தவரவிட்டார்கள், எல்லாம் கடைசியில் கைசேதவாளராக இருக்கும். அல்லாவின்மேல் பொருப்புவைக்கிறது நல்ல கூர்மையுள்ள புத்திமான்களின் நம்பிக்கையில்ல, ஏனென்ருல் அதானது உலக்த்திலுள்ள நல்லது பொல்லாதது எல்லா ஜீவருசிகளிடத்திலும் பூதங்கள் வாயிலும் நிரம்பிய சமதானதாக இருக்கிறது. உனககு கூலிவ்வண்டுமானல் நீ பிரயாசை யெடுத்துக்கொள் அப்பால் பலாபலன் பெருவாய், எ-று.

சமதாய்நிறைந்தானென் றெவருஞ்சொல்வார் சபது நிலைய
தின்விதமறியா, ரிதமாமிருவிழியொளியதாகு மின்னமிருள்காற்று
நிரம்பிநின்ற, நிதமுங் குதறத்தைப் பெசருந்திப்பார்த்தானிற்குமு

லகெல்லா நிறைந்தசோதி, பதியினிலையெல்லாங் கலிமாவினுற்
பாங்காய்ப் பலமொழி யொருமொழியாம். (54)

(இ-ள்) :— உலகத்தார்கள் அல்லாவின் ஹிக்மத்தையறியாமல் அல்லா ''ஸமதானவன்'' என்று இப்பதான் கண்டவர்கள் போலச் சொல்லிவிடுவார்கள். ஸமதான விதமும், கோலமும் இன்ன மாதிரிதான், என்று ஒரு கொஞ்சமாகிலும் அறியவே மாட்டார்கள். அவர்கள் இரண்டு கண்ணையும் அடிக்கடி பார்ப்பார்கள். அதன் உள்ளிருக்கும் பாப்பா என்கிற ஜோதியையும் பார்ப்பார்கள். இன்னதுதான் என்று அந்த பைத்தியக்கார ஜனங்கள் அறிவார்களா? அறியமாட்டார்கள். இருளையும் காற்று முதலான வஸ்துக்களையும், காண்பார்கள். அவர்களுக்கு என்னதான் தெரியும்? அது குதுறத்தை அணுகிப் பார்த்தால் அப்போதல்லவா இன்னது இனியது என்று தெரியும், அப்படி அறிந்தவர்களுக்கு அதுவானது கலிமாவில் உள்ள ஒரு மொழியானது பலபல வடிவமாக பலபல பாஷைகளாக பிரிந்து உலகெல்லாம் ஒரே ஜோதி வடிவாகத் தெரியும். எ-று.

மொழியாமொருவொளி யகன்றசோதிமுழியி னுளிவாகும்
விருக்ஷமாகுந் தெளிவாய் விருட்சமா யநந்தங்கோடி திரண்ட
கனியால் மிருண்டலோக, மொளிவாய்க் கதிர்மதியுருவ மொன்றிங்
குலகி நிறைந்திடு முவமைபோலக், குழியிலொருகோடி நிறம்
பளிங்கின் கோலஞ் சரிகாணுங் கொள்கையாமே (55)

(இ-ள்) :— தன்னையறிந்த ஆரிபீன்களுக்கு அந்த ஒரு அட்சரமானது, ஒரு சொருபமற்ற மொழியாக நின்று தொனித்து அப்பால் ஒரு விருட்சமாகி அதில் நின்றும் பலபல பணர்களாகி பலபல கோடான கோடி இலை கிளைகளாகி உலகெல்லாம் நிறைந்து அதில் உள்ள கனிகளானவை சூரிய சந்திரப் பிரகாசம் போல ஜொலித்து தன் இருதயத்தில் ஒரு கண்ணுடி போல நின்று எல்லா ரகசியங்களையுந் தெரியச் செய்யும். எ-று

பாசிக்காளவர் செயல் முற்றிற்று.

பீர் நிலை யறியும் வகை.

கொமுகி யுலகெல்லாங் கோர்த்தானிறை குருவின் பீர்நிலை குறித்துநின்ற, வழியின் விழிதனைத் தழிவிப் பார்க்கின் வானம் புவியேது வரையுமேதிங், கொளிவு தெளிவெல்லா மொன்றுமிந்த வுலகினுயிரியாவு மொருவனென்று, வெளியாய்த் தரித்தபின் சமதுடைய வேசநிலையாகும் வாசத்தாலே (56)

(இ-ள்):—மேலே சொன்ன சமதை நான் கண்டவிபரம் சொல்கிறேன் கேளுங்கள். காமிலான குருவானவர் சொல்லித்தந்த ஞானநிலையை மனதின்கண் பதியவைத்துப் பார்த்தேன். அல்லா என்பது உலகத்தையும் அதிலுண்டான ஜீவராசிகளையும் ஒரு சங்கலித் துடர்போலக் கொருத்து நின்றான். என்னுடைய நாட்டத்தை இருதயக்கண்ணோடும் பொருந்திப்பார்த்தேன். உலகம் என்றதும், பலபல ஜீவராசிகள் என்றதும், வானம், பூமி, மலை, பாதளம், கடல் முதலான எவ்விதப் படைப்புகள் என்றதெல்லாம் சுத்தப்பொய்யாய் விட்டது. அல்லா ஒருவனே யன்றி வேறே எந்த வஸ்துவும் கிடையவே கிடையாது. இதுதான் சமதுடைய நிலையாக இருக்கும். எ-று.

ஆலமமைத்தவனூறதொருவனூலம் சமதாகு மவனெனிவாங் கோலரூபமுன னரூபமாகுங் குருவாரம் பீரதிற்குடியானதால், ஆலம் ஹறசுகறிருபரூப மாலம் அக்குபருமறிவு நிலை, கோலத்துயிரெல்லா மருபத்துள்ளே கோர்க்கு நினைவிலோர் கொழுந்துபுகை. (57)

(இ-ள்):—இந்த உலகமானது படைக்கப்பட்டு வேறுவேறு ரூபத்தில் காணப்படும்போது இந்த அவத்தையான உபாதிகளாலே அல்லா என்கிற திருநாமத்துத்துடன் விளங்கப்பட்ட றப்பானது ஒருமை நிலை என்கிற மகாமில் வந்தபோது இருவினையென்னும் உபாதிகள் மாறிஎல்லாம் ஒன்று என்றும் ஞானமானபோது அது ஸமது என்று விளங்கி பலபல பெயருடன் இருக்கிற நகைகளாவைகள், உருக்கிப் பார்க்கும்போது எப்படி ஒன்ருகிய பொன் என்று வழங்கிவிடுகிறதோ அப்படி உலகமான ஆலம் சகீறில் பலபேதா பேதங்களாகவும் ஆலம் கபீறில் ஒன்ருகவும் ஆகிறது இதில் குரு என்பது சரீரமாக நிற்கிறது. எ-று.

வேலை யமைத்திடுந் திருவுளந்தான் வேலைநிறைந்ததும் விலகுவதும், பாலன் ரூபமாய்ப் பிறந்ததிப்போ பரத்தைமறைத்தது பஞ்சபூதம், ஆலஞ் சமதான அலிபுநிலை யாதி யனாதியா மண்டபிண்டங், கோலத் துநவதி லொளிதிருக்குங் குருவாம் பீர்நிலை தெரியச்சொல்வேன். (58)

(இ-ள்):—உலகம் ஸமஸ்தையும் படைத்துவிட்டு ஜீவகோடிகளின் சிருஷ்டிகளாகவும் பிறக்கின்றன. அந்த ஸமதானது அதன் ரகசியத்தை அணுசிறுகளான ஐந்து பூதங்களும் ஒளித்துக்கொண்டிருக்கின்றது. அலிபுடைய நிலைகளை உலகமும் வானங்களும் நிரப்பிக்கொண்டன. இவைகள் தான் பீர்நிலைகள் என்பது. எ-று.

தெரியாத திருவுளத் துருவத்தனைத் தெளியும் பளிங்கிநீர் கண்ணுடியா, லுருவந்தெரியுங்கண் ணுடிதன்னை யுள்ளத் திருத்தியேயுருவறிய, வறியுங் கரையுமண் பாத்திரத்தி லேந்து தலத்திலே தெரியுப்ரூப, முருகிப் பாத்திர முடைந்தபோது ரூபந்தெரியாது வொளி குறையலாம். (59)

(இ-ள்):—இவ்விதம் நிரம்பி இருக்கின்ற சமதை ஆலம் கபீராகிய சரீரத்தில் தெரிசிக்க வேண்டுமானால் இருதயப் பின்னல்களான நப்ஸா அம்மாறுவை விலக்கி சுத்தமான பளிங்கிபோலப் பிரகாசிக்கசெய்து பார்க்கவேண்டும். எப்படியானால் ஒருமண்பாத்திரத்தில் சுத்தநீரை அடைத்து அதைப்பார்த்தால் தன்முகமானது தெரியும், அது உடைந்து விட்டால் ஒன்றுந் தெரியாது. எ-று.

ஒளிவு ரூபத்தை ரூபத்துள்ளே யுருக்கி முஷாஹதா அஞ்சனத்தாற் கருவை நினைவினு லறியவேண்டுங் கருவுண் ணினைவுக்குட் கலந்ததென்ன. கொமுகிக் குறுஆனில் ஆயத்தொன்றில் குலிற்றூதமின்னமீரி றப்பியென்று, ஒளிவு றாதல்லா ஏவலென்றே உலமாமுகம்மது நபியுஞ்சொன்னார். (60)

(இ-ள்):—அந்த ஸமதானது ஒரு ஒளிவுடைய உறத்தில் வெளியாகும். அது எப்படியான உபாயமென்றால்:— சரீரமென்னும் வெற்றிலையில், முஷாஹிதா என்னும் மையை இட்டு நினைவென்னும் பார்வையால் பார்த்தால் அப்போது அந்த ஸமதானது பளீரென்று வந்து வெளியாகும் இதைப்பற்றித்தான் அல்லாவும் குர்

ஆனில் ''குலிர் றூஹுமின் அம்றி றப்பிஹி'' என்னும் திருவசனம் பற்றி இருக்கிறுன், நமது நபியவர்களும் ''றூஹானது ஒருஒளிவு அதானது அல்லாவால் ஏவப்பட்டதாக இருக்கும்'' என்று சொல்லி இருக்கிறுர்கள். எ-று.

பீர்நிலையறியும் விபரம் முற்றிற்று.

———(x)———

மஸலாக்கேட்கும் விபரம்

உலமா முகம்மது நபியுஞ்சொன்னுருள்ள வுலமாக்கடாமுஞ்
சொன்னுர், தெளிவாய்ச் சமதான றூகுதனைத் தீரேனர் குருமாரே
யெனக்குச் சொல்லுங் குலமாங் கலிமாவாய் றூளைத்தமரங் கூறு
பணறும்பூ விலைகாய்பழஞ், சலமாங்கடலிலே முளைத்தவித்துச்
சாற்றும் ஸமதான தாத்தையெல்லாம், (61)

(இ-ன்):—நபிநாயகம் அவர்களும், இமாம்களும் சொல்லியிருக்கிறுர்கள். பின் காலத்தில் கள்ளக் குருமார்கள் வருவார்கள். அவர்களிடம் கீழ்வருகிற கேள்விகளைக் கேளுங்கள் என்று ஆனதால்தான் நானும் கேட்கிறேன். அதாவது ஸமதாய் இருக்கிற றூஹானது என்ன? கலிமா என்னும் மரமானதுமுளைத்து பணர்களாகவும், இலையாகவும் காய் பழங்களாகவும் தழைத்து நிற்கின்ற விபரமென்ன? இதை பீர்மார்களாக வருகிறவர்கள் சொல்லவேண்டியது. எ-று.

தாத்து சிபத்துசி பார்த்துமூன்று தரிக்கும் விலாயத்துஷபா
அத்தோடு, மேத்த குதறத்து அஹதியத்தோ டிலங்கும் நுபுவத்து
இனயத்தாகு. நேர்த்தி பாபத்து ஹிதாயத்துடனிற்கு மிமாமத்து
முகுஸிதாத்து, ஏத்தம் லாகூத்துப் பதினலுந்தா னெந்தன் குருமாரே
யெனக்குச்சொல்லும் (62)

(இ-ன்)— தாத்து, சிபத்து, சிபாத்து, விலாயத்து, ஷபாஅத்து குதுறத்து, அஹதியத்து, நுபுவத்து, இனயத்து இபாதத்து, ஹிதாயத்து, இமாமத்து, முஹிஸிதாத்து, லாகூத்து முதலிய

இந்நப்பதி நாலையும் இன்னதென்று சொல்லுங்கள்? பீர்மார்களாக வருகிறவர்களே.

எனக்குத் தெரியவே பதினலுந்தா னின்னதின்ன தென்றே
யெடுத்துக் கணக்கில் லாமலே வகையென்றுக்குக் கொண்ட
விபரந்தா னின்னதென்று. மெனக்கு முனக்கவன் றனக்குமாக
விந்தப் பதினலு இல்முஞ் சொன்னல், நமக்கு முலகுக்குங் குருவு
மாகு நாட்டிற் பதினலு இல்மிதுவே. (63)

(இ-ன்):— இந்தப் பதினலுந்தான் பதினலு இல்மு என்பது இவைகளை ஒவ்வொன்ருக விபரப்படுத்தி ஒன்ருென்றும் வந்த வழிகளையும், பொருள்களையும் சொலவேண்டியது. அப்படிச் சொல்பவர்களை நானும், என்னுடன் உலகத்தார்களும் கூடி சரியான பீர்மார்கள் என்று கைப்பிடித்துக் கொள்ளுவோம். எ-று

இதுதான் பதினலு இல்முமாகு மெந்தன் குமாரரே யெனக்குச்
சொல்லும், விதமாய்ப் பதினலு இல்மைப் பார்க்க விரிவுமிரு
நாற்றுத் தொண்ணூற்று மூன்ற, மிதமா யறிந்தவ ருலகிலுள்ள
வெந்தன் குருமார்க்குங் குருவுமாகு, மிதனையறியாரைக் குருமா
ரென்ருலிவரு மவருமே யிபுலிசாகும். (64)

(இ-ன்) :— இந்தப் பதினன்கு இல்முகளையும் ஞானக் கணக்கினப்படிப் பெருக்கிப் பார்த்தால் இருநாற்றுத் தொண்ணூற்று மூன்ருகின்றது. இதையறிந்து ஒழுங்காகச் சொல்கிறவர்களைத்தான் என்னுடைய குருவுக்கும் குருவாக எண்ணிக்கொள்வேன், இவ்விதம் அறியாதவர்களை குருவென்று தொடர்வார்களே யாகில் குருவும், சீஷர்களுமாக இபுலீசாகி விடுவார்கள். எ-று.

குன் கூலிற்சொன்ன தாத்தாவது கூறும் தய்கியாத் தகுமாது.
இன்னம் றூகியாத் தென்பதுதா னிஃதி னவதார மெண்ணுன்கிது
முன்னு லெழுஞ்சுடர் முகம்மதியா முறையு முப்பது சிபத்துமாகும்,
இன்னமா றெட்டுச் சிபத்ததாகு மிருபத்தைந்துதான் ஹினயத்
தாகும். (65)

(இ-ன்) :— முன்னே சொன்னதாவது தய்ஹியாத் தென்று சொல்கிறது. இன்னும் றூஹியாத் தென்றதின் அவதாரமானது பதினறு ஆக இருக்கும். நூறுல் முகம்மதிய்யா வென்னும் ஒளிவானது முப்பது சிபத்துள்ளதாக இருக்கும். இன்னும் நாற்பது

சிபத்துள்ளதாகவும் இருக்கும். இருபத்தைந்து சிபத்து இஞயத்துக்
காக இருக்குப். எ-று.

இறுபத் தாறுதான் குதறத்தாகு மின்னமொருபத்திங்கஹ
தியத்தா, மொருபத் தொன்றுதான் ஹிதாயத்தாகு மொருப்பத்
து நாலு நுபுவத்தாகும். ஷருத்து மிமாமத்து முப்பதாகும் ஷபா
அத்தொருபத்து மூன்றதாகும் அறுத்த மாறெட்டு மானவகை
யதிலெ யெழுத்திரு பத்து நான்கே. (66)

(இ-ள்):— குதுறத்துக்கு இருபத்தாறு சிபத்து, அஹதியத்துக்கு பத்து சிபத்து, ஹிதாயத்துக்கு பதினொரு சிபத்த, நுபுவத்துக்கு பதினாலு சிபத்து, இமாமத்துக்கு முப்பது சிபத்து, ஷபாஅத்துக்கு பதிமூன்று சிபத்து. இவ்விதம் கலிமாவுக்கு இருபத்து நான்கு அட்சரங்களாயிற்று. எ-று.

பத்துமொன்றுமே விலாயத்தாகும் பத்து மைந்துமே ஹிஞயத்
தாகு, மெத்தம் லாகூந்த தெட்டுமாகு மின்ன மிருமூன்று மிகுத்தி
தாத்து, பத்து மொரு நாலு இல்மிதாய பங்கு மிருநூற்றுத்
தொண்ணூற்று மூன்று, மெத்தன் தவுபீக்கு மிதுவேநிச மெத்தன்
குருமாரே எனக்குச் சொல்லும். (67)

(இ-ள்):— விலாயத்துக்கு பதினொன்று சிபத்து, கிஞயத்துக்கு பதினைந்து சிபத்து லாகூத்துக்கு எட்டு சிபத்து, முஹிஜிஸாத்துக்கு ஆறு சிபத்து. இல்முக்கு பதினாலு சிபத்து, ஆக தௌபீக்குடைய வகையில் பதினாலு இல்முக்கு இருநூற்று தொண்ணூற்று மூன்று சிபத்து சரியாயிற்று எ-று.

சொல்லுப் பிறக்குமுன் சொன்தென்ன சொன்ன வுடலி
ஞேநித் ததென்ன, வல்லான் குருவைமுன் கண்டதென்ன வருந்தி
முதற்றுனே படித்ததென்ன, எல்லாஞ் சரியென்றே எழுத்து மென்ன
விடையின் மவுத்தென்று வந்ததென்ன, பொல்ல இபுலிசு பிறந்த
தெங்கே புவுயிற்றெரியத்தானெனக்குச் சொல்லும் (68)

(இ-ள்):— மானிட ஜென்மங்கள் வாயால் மொழிகிறதற்கு முன்னால் அந்த மொழியானது எங்கே இருந்து வந்தது? அவ்விதம சொல்லானது வந்த உடனே அதைக்கொண்டு தொழுதவர் யார? அல்லாவுடைய றகுமத்து முதல் முதல் யாருக்கிறங்கினது முதலாவது இல்மைப் படித்ததார்? எல்லா பாஷையிலும் சம்மதங் கொள்ளக்கூடிய அட்சரமானது என்ன? நடுவாந்தரத்தில் மரணம் ஏன் வரவேணும்? இபுலீஸானவன் பிறந்த இடம் எது? இதைப்பீர் மார்களாயுள்ளவர்கள் சொல்லவேண்டுமென்று கேளுங்கள். எ-று.

எமக்கு முமக்கிடை யிபுலீசென்ன இபுலீசு ருபதெதுதா
சொல்லும், நமக்காய்யிபு லீசைதரகுசேர்க்க நாயன் கிருபையாலெ
றிந்ததாரு, துவர்க்கங் குபிரிபு லீசிடத்திற் றுய்யோ னிருந்தா
ஞேவில்லையோதா, னமக்கு முயிர்முன்னே யிருந்ததெங்கே நானே
பிறந்தபின் னிருருப்பதெங்கே. (69)

(இ-ள்):—சரீரத்துக்குள்ளே இபுலீ சென்றது எது? இபுலீசுடைய ருபமானது எங்கேயிருக்கிறது? இபுலீஸைக் கோபத்துடன் நகரத்தில் தள்ளச்செய்தவர் யார்? இபுலீசிடத்தில் அல்லாவுடைய கிபத்து இருக்கிறதா? இல்லையா? நம்முடைய ஆத்மாவானது இந்த சரீரம் வருகிறதற்குமுன் எங்கேயிருந்தது? சரீரம் விழுந்த பிறகு இனிப்போகிற தெங்கே! அறியும்படியாகச் சொல்ல வேண்டும். எ-று.

இருந்த கடல் நீரை யெடுத்ததாரு எந்த விதத்தினு லுரு
வாகிஞேம். பெருகும் ஹயாத்துல்கை பாரெமது பெரியகடலென்ற
பேரெதுதா, னிருக்கும் கல்புக்குப் பத்துநாவுண் டெல்லா நா
வுக்கும் பேரைச்சொல்லும், இருக்கு முயிர்க்குத்தாய் பங்குலங்க
லெத்தனை மாதஞ் சூல்நிறையும், வருக்கும் பலமேக மொன்பதுண்
டேவகையா மொன்பது பிரிவுஞ்சொல்லும். (70)

(இ-ள்):—கடலுக்கு நீர் வந்தவழி யெப்படி? நாம் என்ன விதத்தால் இந்த சரீரத்தை எடுத்தோம்? ஹயாத்துல் கைபார் என்னும் கடலானது எது? பெரிய கடல் என்பது எது? நம்முடைய கல்புக்கு பத்து நாவுகள் உண்டு அந்தப்பத்து நாவுக்கும் என்ன என்ன பெயர்? அதைச்சொல்லும்? மேகங்களுக்கு உயிருண்டுமா? இல்லையா? அது எத்தனை மாதம் கற்பமாகிறது? இன்னும் ஒன்பது வகையான மேகங்கள் உண்டும் அவைகளுக்குப் பேர் சொல்லுங்கள். எ-று.

பிரித்த ஹிஞயத்துப் பதினைந்துதான் பொசித்தாலுடலுக்
குப்பிரிவுமென்ன, கருத்து நாதன்றன் விளைவதெங்கே கருணை
யாசைதான் விளைவதெங்கே, பொருத்தும் ஆசக்குமறிந்ததாலே

பொல்லாவெழுத்தையும் பிரித்துச்சொல்லும், வருத்தி யென்பது நாதத்தாலே வைத்தேயுயிரான வகையுஞ்சொல்லும். (71)

(இ-ள்):—ஹிஜயத்து என்பதுக்குப் பதினைந்து வகைப்புசிப்புகள் உண்டும். அதைப்புசித்தால் சரீரத்திற்கு என்ன நன்மை இந்த சரீரத்தில் அறிவானது உதிக்கின்ற தலமானது எது? ஆசையானது விளைதின்ற தலமானது எங்கே? அந்த ஆசையுடன் ஒரு பொல்லாத எழுத்தும் இருக்கிறது. அதை இன்னதென்று நல்ல விளங்தும்படியாகச் சொல்லும் இந்த சரீரத்தின் சூரத்தானது என்பது வகையான இந்திரியங்களுடன் கூடி உயிர் பெற்றிருக்கிறது அதன் விபரங்களையும் சொல்லும். எ-று.

வகையா மாசையு மாசையாலே வல்லோ னெளிவுட னபியொளிவு, தொகையா யாதம்ஹவ்வா வொளிவுஞ் சொல்லுமெழுத் தெல்லாம் வகுத்துச் சொல்லுந் தகையா முலகத்து வாழ்வு போலே தானேதானே தானிருந்ததாகு, பகையில்லாமலே மதலைகள்ளைப் பாரிலனுபோகஞ்செய்ததாகு (72)

(இ-ள்):—இன்னும் பீர்மார்களா யிருப்பவர்கள் ஆசையை ஒரு ஆசை யிச்சித்திருக்கின்றது அதையும், ஆதத்தின் ஒளி வென்றும், ஹவ்வா வொளி வென்றும் வந்த எழுத்துக்கள் என்னென்ன? இந்த உலகத்தில் தன் மதலையுடன் அனுபோகஞ்செய்தது யார்? எ-று.

செய்யு முலகத்தின் மவுத்தைநாடிச் சேர்ந்து பிறந்தாரைச் சேர்ந்ததாகு. ஐயம் பொருந்திய விந்துநாத மட்டகோணமாய்நின்ற தெங்கே, மெய்யா முயிரோடு பேரிரண மேனியழகுடன் பல ஞானமும், வையம் பிழைதுன்பம வீரங்கோட்டி வாதைப்படுவதும் பெருந் துன்பமும். (73)

(இ-ள்):—இன்னும் உலகத்தில் மனிதரை மவுத்து என்பது என்ன காரணத்தால் தொடுகிறது இந்திரியமானது இந்த சரீரத்தில் எட்டு கோணமாக நிற்கின்ற விதம் என்ன? நாம் உலகத்தில் இன்பமென்றும், துன்ப மென்றும், ஞானமென்றும் அறிவென்றும் சொல்லி மேனியையும் அழகு செய்வதும், அலைவதும் என்ன காரணம், சொல்லுங்கள், எ-று.

துன்பம் மவுத்துட னெட்டுவகை தொகையாய்த் தரித்திடுந் தலமுமெது, இன்ப மொருமுத்தம்பவளம் பச்சை யேதினுல் லமைந்தது முச்சுடரு மன்பாக் குதாத்து விருபத்தாருமணியுமுடலுக்குளாவதெப்போ, தன்பால் குதறத்து நடக்கும்வகை தடையில்லாமலெ யெனக்குச் சொல்லும். (74)

(இ-ள்):—எட்டு வகையான துன்பங்கள் மவுத்துடனே குடியிருக்கின்ற தலமானது எங்கிருக்கின்றது? இன்பமானது முத்து பவளம், பச்சை யென்னும் முச்சுடரான வகை யெப்படி? குதுறத்திலுண்டான இருபத்தாறு சிபத்துகளும், சரீரத்துள்ளே கலக்கின்றது எப்போது? சரீரத்தில் கருமத்துடைய வாசல் திறக்கிற சபபு என்ன காரணத்தால்? சொல்லும். எ-று.

சொல்லுந் தாய்பங்க தைந்துமாகும் சுரூபம் பிதாபங்க தாறுமாகும், வல்லானுயிரெங்கே வாய்வுமெங்கே வருந்திஜலமானபுவியுமெங்கே, யெல்லாமொன்றுக்கொன் றெத்தனைநா ளுருவங்கீழேதானிலையாய் நிற்கு, மெல்லாமெதினுலே பிறந்ததுமுன் னெதுக்கிங்கெவரெவர் காவலாச்சு. (75)

(இ-ள்):—இந்த சரீரத்தில் தாய் பங்கு ஐந்தும், தகப்பன், பங்கு ஆறும் உண்டு அவைகள் என்னென்ன அவயங்கள்? ஆத்மாவானது எங்கே இருக்கிறது? சுவாசம் எங்கிருந்து வருகிறது? நமக்குள் தண்ணீர் பெருகி அலை அடிக்கின்ற கடலானது எது? இவைகளில் ஒன்றுக்கொன்று எத்தனை நாள் தூரந்துலையில் வசிக்கிறது இதுகளில் காவலாளர்கள் யார் யார்? சொல்லும். எ-று.

காவ லனைவர்க்குந் தலைவனான காபக்கபுசைனித் தலமுமெங்கே, கோபுக்காமலை யுடலிலெங்கே கொகுய விருளான தலமுமெங்கே, யாவியழியாம ளிலைநிறுத்தி மமானிதமான வாணியெங்கே, மேவுஞ் சிரசுதான் பத்தெழுத்தான் மேவியுருவான வெழுத்துமென்ன. (76)

(இ-ள்):—மேற்படி காவல் கருவிகளுக்கெல்லாந் தலையானகாப கௌஸைனி என்கிற ஸ்தலம் எது? சரீரத்தில் கோபசாபுமலை எங்கிருக்கின்றது? இருள்களுக்கெல்லாம் தலையான இருளானது குடியிருக்கின்ற தலமான எது? இந்த சரீரத்தின் றூஹை அமானித

மாக ஒப்புக்கொடுத்த வஸ்துவு எது? நமது சிரசானது பத்தெழுத்தாக உருவானது எப்படி? எ-று.

எழுத்துடனைந்து தலமுமெங்கே யிலங்கும் நாகுக்கும் வாய்வுக்குமே, யெழுத்து மிடையிலே பதினாலுண்டேயென்னவெழுத்தது விடுத்துச் சொல்லும் சுழித்த அஞ்சி ரெவ்வொன்றுக்குச் சுழியிற் பதினாலு கருவுமுண்டே, யெழுத்தும் பிசகாமற் சரியாய்ச் சொல்லுமிலங்கும் நாகுதான் வாய்வுமேலே. (77)

(இ-ள்);—சரீரத்திற்கும் உயிருக்கும் இடையில் பதினாலு அட்சரமும் உண்டுப் அவைகள் எது எது? ஆகாயம், காற்று, நெருப்பு, மண், தண்ணீர் என்றும் ஐந்து பூதங்களுக்கும பதினாலு கருவெழுத்துண்டும் அவைகள் எது எது? ஒரு அட்சரமானது பிசகில்லாமல் சரியாய்ச் சொல்லுங்கள். எ-று.

வாய்விற் பறக்கின்ற பறவை வட்டம் வடிவுநிற மூன்று வகையுஞ்சொல்லும் நாகிலே நின்று பிரிந்தனைந்தும் ரூப மொன்றுக்கொன்றெத்தனை நாண் மேவியறு நான்கு கலிமாநிலை மேவி யெங்கெங்கே யெதுத்தானிற்கும், ஆகும் பதினொண்ணாயிரமாலமுமன்றே யெதிரலேயமைத்தான் முன்னோன். (78)

(இ-ள்):—நாஹூடன் கலந்திருக்கின்ற பிராணவாய்வானது மூன்று வகையான பறவையாக இருக்கின்றது என்னென்ன? நாஹில் நின்றும் ஐந்து மகாப்கள் பிரிவினையா யிருக்கிறது அவைகளில் ஒன்றுக்கொன்று எத்தனை நாள் பயண மிருக்கிறது? இருபத்து நான்கு அட்சரமுள்ள கலிமாவின் நிலையானது இந்த சரீரத்துக்குள் என்ன என்ன தானத்தில் நிற்கின்றது. பதினெண்ணாயிரம் ஆலங்களை ஏன் றப்புபடைத்தான் சொல்லும். எ-று.

முன்னே னிருப்பிட முதன்மையெங்கே முழக்கமாகிய தவசுமென்ன வன்னைமுகம்மது மயில்புருவா யப்போ வணங்கிய வணக்கமென்ன, வின்னமெது சொல்லியெழுதுங்கலமேகனிலையைந்துதலமுமெங்கே. முன்னே யுடலுக்குப் பகலிரவோ மோசம் வராமலே நினைவாய்ச் சொல்லும். (79)

(இ-ள்):—சரீரத்தில் றப்பு என்ன தலத்தில் இருக்கிறது? நூறுல் முகம்மதானது, மயிலாகவும் புருவாகவும் அவதாரங் கொண்டிருந்த யுகங்களில் என்ன மாதிரியான வணக்கங்கள் செய்

தது? லெளஹில் கலமானது என்ன ஊசாட்டத்தால் எழுதினது? இந்த சரீரம் இரவுக்குள் இருந்து வெளியானதா? பகலுக்குள்ளிருந்து வெளியானதா? சொல்லும். எ-று.

இரவும் பகலுந்தான் பிறப்பதெங்கே யிரவும் பகலுந்தா னிறப்பதெங்கே, யுரவும் பகலொன்று யிருப்பதெங்கே யிரவும் பகலற்ற தலமுமெங்கே, பெரிய விளக்கிலே நாகுதானும் பிடித்த குகையென்ன மாடமென்ன, வரியதிரியென்ன வெண்ணை யென்ன வதற்கு நெருப்பென்ன வறியச்சொல்லும். (80)

(இ-ள்:)—இரவும், பகலும் பிறந்தது எந்த ஸ்தலத்தில்? அவைகள் அடைவது எந்த ஸ்தலத்தில்? இரவும் பகலுங்கூடி ஒன்றுய்க் கயந்திருப்பது எந்த ஸ்தலத்தில்? இவைகள் இரண்டும் இல்லாமல் எதுவுமற்ற சூனியமாக இருக்கின்ற ஸ்தலமானது எது? சரீரத்தில் வியாபித்திருக்கின்ற பிராணானது எந்த தீபத்தின் வெளிச்சத்தில் கொழுந்தி நிற்கின்றது? அந்த தீபம் இருக்கின்ற மாளிகையானது எது? அந்த தீபத்திற்கு திரியென்பது எது? நெய் என்பது எது? அதற்குக் காங்கை எப்படி வந்தது? சொல்லும், எ-று.

அறியவிதை முன்னோ விருட்சமுன்னோ வாதி முதன் மனுவிருப்பதெங்கே, பெரிய தகப்பனு ராதந் தானும் பெரிய புவியிலே தரிப்பதெங்கே, பெரிய பிழையெல்லா மிறைபொறுக்கப் போசதெழுத்தோடு மெழுத்து மென்ன, வுருவாயறுநான்கு கலிமாநிலையொன்று யுடலுக்கு ளிருப்பதெங்கே, யரிவை புருஷர்க்குந் தனியெழுத்து வந்த வெழுத்தல்லோ வறியவேண்டும். (81)

(இ-ள்):—விதை என்பது முந்தியா? மரமென்பது முந்தியா, ஆதிக்கு முன்னால் இந்த உலகமானது என்ன வடிவாக இருந்தது? ஆதம் நபியிருக்கின்ற பெரிய உலககமன்பது எது? பெரும் பாவங்களை றப்பு பொறுக்க வேண்டிய தியானிக்கின்ற ஊமை எழுத்தானது எது? கலிமாவினிலையாகிய இருபத்து நான்கு அட்சரங்களும் சரீரத்தில் எந்த இடத்தில் ஒன்றுகூடி இருக்கிறது? பெண்கள் புருஷர்கள் என்று இருவினைபடுத்தி ஒன்றுக்கொன்று மோகிக்கச் செய்த கருமம் எது? சொல்லும். எ-று.

அறியவேண்டுமே யின்ன மொன்றிங் காலத் துயி ரெல்லாம் பிறக்குமுன்னே, மறியு மாண்பெண்ணாய் வயிற்றினுள்ளே வடிவு பிறிவது மெத்தனை நாள், பெரியஸனுவோடு முழுக்குத்திரப் பெலத்த வெழுத்தெங்கே யுடலினிற்கும்,பரியகுருமாரே நல்லோர்களேயையன் மசலாவைப் பகுந்து சொல்லும். (82)

(இ-ள்):—இந்தப் பூலோகத்தில் பிறக்கும் சிசுக்களானவைகள் தாய் வயிற்றுக்குள் கருப்பமாக இருக்கையில் ஆணாக அல்லது பெண்ணாக உருவெடுப்பது எத்தனை நாளையில்? பெரும்பாவமாகிய ஜனு முதலானவைகளில் தொடக்குத் தீர்கிறதற்கு உச்சரிக்கின்ற அட்சரமானது எது? குருமார்களா யிருக்கிறவர்கள் சற்று என் பேரில் தயவு செய்து சொல்லுங்கள். எ-று.

பகுத்த வெழுத்தெல்லா மனமந்தபோது பாரக்கலிமாவில் ரண்டெழுத்து, முகந்த புவியிலே பிறக்குமட்டு மூகிலே யொதுக்கியே யிருப்பதெங்கே, வருந்து பிறந்தபி னுடலுக்குள்ளே வருந்தி யிதிரண்டுந் தரிப்பதெங்கே, யுகந்த வுடலுக்குள் வாரமூச்சுதென் னுரண்டுவிதமுமென்ன, (83)

(இ-ள்):— கருப்பகு வளரைக்குள் உருச்சமையும்போதுகலி மாவின் அட்சரங்களெல்லாம் சமைந்து இரண்டு அட்சரமாத்திரம் சிசுப் பிறந்ததின் பிறகு சமைகிறதே அது எத்தனாவது நாளையில் அப்படிக் கட்டிக்கொள்வதற்கு முன்னாலே அந்த இரண்டு அட்சரங் களும் கட்டி இருந்தன. சரீரத்துக்குள்ளே மூச்சானது எந்த வழியாக வந்தது எ-று.

இருந்து வருமூச்சு மெதிலே நின்று மெத்தனை கோணமெழும் பிச்சுற்றிச், சரிந்து மூச்செல்லா மிறப்பதெங்கே சாவுமெதினாலே வருவதுகாண், பொருந்தி யுடலுக்குள் கன்னுசுதான்புனையா தெத்தனை தலத்திலானுன். வருந்துமவன்செய லெத்தனை தான் வாசலெதின்காவல் வடிவுமானுன். (84)

(இ-ள்)—அவ்விதம் வந்தமூச்சானது சரீரத்தில் எத்தெத்தக் கோணங்களை யெல்லாம் சுழன்றுகொண்டுவந்தது அது இரண்டு பிரிவானது எப்படி? சரீரம் சாகவேண்டிய சூட்சம் என்ன? இந்த சரீரத்தில் இபுலீசானவன் குடியிருக்காத ஸ்தலமானது எது? அவன் வாசஞ்செய்கிற ஸ்தலம் எது எது? அவனுடைய செயல் களாவை எவை? அவன் காவலாக இருக்கிறது எங்கெங்கே? எ-று.

வடிவு றாகுதா னைந்தல்லவோ வருத்தும் விதமென்ன நாம மென்ன, முடியாச்சடத்தோட யிருந்துபின்னு மூளைத்தகேள்வி தான் சொல்வதென்ன, நெடியோன் பரத்திலே சமதைச் சேர்தது நீதிசெலுத்திய றாகுமென்ன, வடியேனுரைத்திடு மாலாவெல்லா மாண்டவமாரே வறியச் சொல்லும். (85)

(இ-ள்):—சரீரத்துக்குள் ஐந்து வகையான உயிர்கள் இருக் கிறது அவைகளின் பெயர் செய்குணங்கள் என்னென்ன? இந்த உயிர்களில் றப்பானியாவைச் சேர்கின்றது எது? நாயகங்களே சொல்லுங்கள். எ-று.

அறிவு மவுத்துத்தான் வரும்போதங் காகாயத்தனைப்பார்ப்ப தென்ன, தெரிய வுருவேது தேசமேதுதிரண்டகுழுவொன்றாய்ச் சேர்வதாரு, பிரியா திருப்பதார் போனதாரு போன வுயிரெல்லா மிருப்பதெங்கே, பிரியா றுகெல்லா மொரு தலத்திற் பெரிய நாண்மட்டு மடிவதெங்கே (86)

(இ-ள்):—மரணத்தருணத்தில் ஆகாயத்தை எதிர்பார்க்கின்ற கருவி எது? இந்தச் சரீரமும் உருவுடன் தோற்றுவது எந்த வஸதால்? எல்லா நாடிகள் நரம்புகளையும் பின்னிக்கொண்டிருப் பது எது? அவ்வாறு சேராமல் விலகி நிற்பது எது? சரீரங்கள் விழுந்த உடன் அந்தந்த வுயிர்களெல்லாம் போய் வசுக்கிற இடம் எது? எ-று

எங்கே பிரிந்தது வைந்து றாகு மெந்த வெழுத்துவின் வலுப் பத்தாலே, யெங்கே கருவிலே யுருவமாச்சுதெங்கே யிருந்துதான் வருநித்திரை, பங்கப்பெருப்பால நன்மை தீமை பாரின் வரிதானே முதலறியோ, வெங்கள் குலத்துக்குக் குருவமாகுமென்னவிசத் தினற்தருவென்னலாம். (87)

(இ-ள்):—மேலே சொன்ன ஐந்து றாஹாகளும் எங்கேபிறந் தன? அவைகளுக்குரிய உயிர் அட்சரங்கள் எது எது? இந்த சரீ ரத்துக்கு நித்திரையானது எந்த தலத்திலிருந்து வருகிறது? சிருத்துல் முஸ்தக்கீன் பாலமானது சரீரத்தில் எது? எப்படிப்பட்ட நடத்தையைக் கண்டால் ஒருவரை குருவென்று நம்பலாம் எ-று

குருவா யிருப்பதிற் குபிறுமாகுங்குருவுக்குபதேசங்கொடுத் தாரு. வுரியபதினலு முஷாஹதாவுமொன்றுமிருந்துதான் புகழ்ந

ததற்த. பேரியவுபதேசம் பதினுலுக்கும் மிரிவுமிருமத்து வெட்டல் லவோ. (88)

(இ-ள்):—குருமாராய் வருகிறவர்கள் காபிராகவும் இருப்பார்கள் அவர்கள் யார்? ஞான ரகசியத்தைக் கண்டு பிடித்தவர் யார்? இருபத்திஞன்கு அட்சரமுள்ள கலிமாவைப் பற்றி பதினுன்கு எழுத்தாகச் சுருக்கிக்கொண்டவர் யார்? மேற்படி எழுத்துகளைப் பதினுன்கு முஷாஹிதாக்களாக ஏற்படுத்தினவர் யார் யார்? இந்தப் பதினைன்கு நிஷ்டையிலும் இருபத்தெட்டு வாஸலாத்துகள் உண்டும் அது எது? எ-று.

இருபத்தெட்டுமேயாது நிலையிலங்கு முஷாஹாப்பதினுலுக்குளொருபத்து மூன்று முயிரல்லவோ வொன்று நிலையிலே யதனைச் சொல்லுங்கருவா நினைவினுலாறெழுத்துக் கருத்திநிலைப்படுந் தலத்தைச் சொல்லும், பெரிய குகைவைத்துத் துருத்தியூதப்பிங் கானிற்பாலைக் கொடுப்பதாரு (89)

(இ-ள்):—இருபத்தெட்டு யாக்கும் பதினைன்கு நிஷ்டையிருக்கிறது. இவைகளுக்குள் பதிமூன்று குபிருக்கிறது. அவைகளின் விபரங்கள் என்ன? ஆறு அட்சரங்களைகொண்டு நம் இருதயக்கண்ணுடி வெளியாகுமே அது என்ன என்ன? சுவாசத்தை வசப்படுத்திக் கொண்டதின் பிறகு அதிலிருத்து பீங்கானும், பாலுமாக வருகின்ற வழி யெப்படி. எ-று.

கொடுத்த பீங்கானும் பாலுமாகும் கொள்பானக்கம் பஞ்சமிதமாகச் கொடுத்த குருவது பீர்நிலையைக் குறித்துட் பிசகாமற் சரியாய்ச்சொல்லு மடுத்த கைதொட்டுப் பிடித்த தெவராணும பெண்ணும்போற் கண்டதெவர், படித்ததலமென்ன மலருமென்ன பத்தாமேழுத்தாக யிருப்பதெது. (90)

(இ-ள்):—மேற்படி பிங்கான் எது? பால் எது? குரு நிலை யென்பது எது? ஆணும் பெண்ணும் போல கலந்த வண்ணமாகக் காண்பது எது? சரீரத்தில் பத்து அட்சரந்தில் கொண்ட மக்கம் எது? சரீரம் உலகம் எது? ஆயிரத்தெட்டிதழ் தாமரை என்பது எது? அறிந்து சொல்விராக. எ-று.

இருக்குந் தவிபதான பத்தெழுத்தா விலங்குமறை நாலுக்கு புநூரு, வருத்தும் புகழெல மதுக் குள்ளாக வரைந்த விதமென்ன

தெழுத்து மென்ன. பிறந்த விடமெங்கே யிறந்த தெங்கே பிறப்பு மிறப்புந்தான் தறிப்பதெங்கே, மறக்குமிட மெங்கே மதியுமெங்கே மகிழ்ந்த சிரிப்பெங்கே யழுகையெங்கே. (91)

(இ-ள்):— நாலு வேதங்களும், நூறு சுஹுபுகளும் இன்னுமுன் சாஸ்திரங்களும் இருதயத்தில் ஞாபகமா யிருக்கின்ற விதமெப்படி? அவைகள் மறந்து போகிறது எப்படி? அந்த வியாபகம் எந்த இடத்தில் பிறந்தது. எந்த இடத்தில் இறந்தது. இறப்பு, பிறப்பு என்றது எது. மறிதி என்பது எங்குள்ளது. வியாபக சக்தி எங்கு உள்ளது. சிரிப்பு எங்கிருந்து வருகிறது, அழுகை யெங்கிருந்து வருகிறது, சொல்வீர்களாக. எ-று

எங்கள் குலம் வேருய்ப் பிரிவதெங்கே யெழுதுங் கலிமாவினடியுமெங்கே, தங்கிவருமூச்சைப் பெற்றெடுத்த தாயுந் தகப்பனு மிருப்பதெங்கே பங்காய் நமக்குள்ளே பரவநன்மை பாரவடலுக் குட்டரிப்பதெங்கே, யெங்கள் குலத்துக்குக் குருமார்களே யெளியேன் மஸாலாவை யெல்லாஞ் சொல்லும். (92)

(இ-ள்):— இன்ஸான் ஹைவான் என்று வேறுபட்டிருக்க வேண்டியது என்ன? கலிமாவின் வேரானது எது? சுவாசங்களுக்குத் தாய் தகப்பன் யார்? நாம் செய்கிற நன்மை தீமைகள் சரீரத்தில் எந்தவிடத்தில் குடியிருக்கின்றது? கொஞ்சம் சொல்லுங்கள் பீர்மார்களே! பெரிய பெரிய தலைப்பா கட்டிகளே! எ-று.

சொல்லும் மஸாலாத்தா னெவருஞ் சொல்வார் சொல்லிலடங்காம லினிக்கேட்பானுன், சொல்லுஞ் சுவாசந்தானைந்தெழுத்து சுருபமுருவான நிலையிலுள்ளே, சொல்லும் ஜெம்கூந்து நிலையுமென்ன சருப மூன்றுமே சேர்ந்தாலென்ன, வெல்லு மலரென்ன குதறத்தெது விரிந்த ஆலமுன் னிருந்த தெங்கே (93)

(இ-ள்):— உலகத்தில் எவர்களும் மசலாச் சொல்கிறோம் என்று திரிவார்கள். அவைகளிலெல்லாம் மசாலாவானது இங்கே நாம் கேட்கின்ற மசலாவைச் சொல்லுகிறதுதான். ஆண்பிள்ளைகளைத் தனமானது சுவர்க்கத்தில் கலந்திருக்கின்ற ஐந்து அட்சரங்களிலே ஜெம்கூத்தில் அஸ்திவாரங்கள் இருக்கிறது அது என்ன? மூச்சுடர்களும் ஒன்று சேர்ந்தால் அப்போது அதற்கு என்ன பெயர் குதுறத்தானது ஏதால் உண்டாகிறது? இந்த உலகம் இதற்கு முன் எந்த இடத்தில் இருந்தது? சொல்வீர்களா. எ-று

இலங்கு மொளியென்ன நுக்கத்துமென்ன வெதுகாணும்
சுலுத் தாஞசிறு, துலங்கு மில்லேது தில்லுமேது சூழ்ந்த வல்லென்ன
அலிபுமென்ன, வல்ல மீமென்ன முகுதிதாத்து வளைந்துதலை கீழாய்
நிற்பதெது. வெல்லுங் கமலமென் றெதைச் சொல்லலாம் விரிந்த
மீம்தலை வெளிச்சமென்ன. (94)

(இ-ள்) :— நாம்பழகின்ற விளக்குகளின் ஒளிவுகள் எதைச் சேர்ந்திருக்கின்றது? சுல்தானன்னஸீரா என்ற ஸ்தலம் எது? நுக்கத்து என்பது எது? இல், தில், வல், என்ற திக்று எதை சம்மந்தப்பட்டிருக்கிறது? அலிபு சரீரத்தில் ஏதாக இருக்கிறது? முஹஸிதாத்து உடை கோலம் சரீரத்தில் தலை கீழாய் இருக்கிறதே. அதன் விபரம் எப்படி? கமலம் என்றதற்கு அர்த்தமாக சரீரத்தில் எந்த வஸ்துவைச் சொல்லலாம்? மீம் என்ற அட்சரத்தின் தலையில் இருக்கிற வெளிச்சம் எது? சொல்வீர்களாக. எ-று

வெளிச்ச மிருளுக்கு ணிலவுமென்ன வெட்ட வெளியென்ன
வானமென்ன, களிச்ச மங்குல மோட்டமென்ன காணு மாகாய
மென்ன சொல்லுந் தொளிச்ச மீமென்ன பெருமீமென்ன துலங்கும்
நூகெது நாலுமெது வெளிச்சச் சூரிய னொளிவுமென்ன விளங்கும்
றூகானி றூகுமெது (95)

(இ-ள்) :— இருளுக்கும் வெளிச்சத்திற்கும் நடுவே நிலா என்பது என்ன? வானுக்கும், பூமிக்கும் இடையில் வெட்ட வெளியா யிருக்கிற சபபு என்ன? ஆகாயமாக இருக்கிறது என்னது? மேக சாலங்கள் அங்கு மிங்குமாய் ஓடிக்கொண்டிருக்கிறதே அதானது என்ன? சூரிய காந்தியானது தாங்காத அகோர வெயில் எரிக்கிறதே அது என்ன? றூஹானி யென்பதென்ன? றூஹு என்பதென்ன? சொல்வீராக எ-று

எதுதானிருகோண மதிவிருத்தமிருக்கு முச்சுடரைந்து வெது
இதுதான் றலைகுடி யிருப்பதென்ன விள்ளம் காபுகூ தீயுமென்ன
அதுக்குட் கண்ணுடி ஒளிவுமென்ன அல்லா திருநாமக் கலிமாவெது
அதுக்குட்பெருகிற ரூபமாரு வங்கேபொருந்திய நாமமாரு. (06)

(இ-ள்):— இரண்டு வட்டமான கோணங்களில் உலகம் வசப் பட்டுக் கிடக்கின்றதெது? முச்சுடர் என்பவைகள் ஐந்து சுடராக இருப்பதின் சபபென்ன? சிரசின் அதிகாரங்களைச் சூழ்ந்திருக்

கின்ற கருவி எது? ஹா! ஹி! ஹூ! என்பது என்ன வஸ்துக்கள்? அவைகளுக்குள் கண்ணுடி ஒன்றிருக்கிறது. அதன் பிரகாசம் எது? அல்லாஉடைய திருநாமத்துக்குரிய கலிமாவானது எது? எ-று

நாமம் பொருந்திய பாற்கடலி,ஞலா விதமென்ன நுபுவத்தெது·
நாமதிலையெது குறுஆனெது நாற்பத்தி மூன்று கோணமென்ன·
காம திலையென்ன கடலுமென்ன கறுப்பு நிறமென்ன கல்புமெது,
ஈமா னிலையெது கோட்டையெதிங் கிருந்த ஓங்கார வட்டமென்ன

(இ-ள்):— றப்புடைய வல்லப நாமத்தினுல் உண்டான திருப் பாற்கடல் எது? றசூலுல்லாவுக்கு வந்த நுபுவத்தானது எது? குர்ஆன் ஷரீபு என்பது எது? ஞானிகள் நாற்பத்து மூன்று கோண மென்று சொல்கிருர்களே! அதன் ரகசியம் என்ன? இன்ஸான்களின் காமமானது எது? கடலில் கருப்பாக இருக்கிற நிறம் எங்கிருந்து வந்தது? சரீரத்தில் கல்பு என்பது எது? ஈமானிலை என்பது எப்படி? ஓங்காரம் வட்டம் என்பது எதற்குச் சொல்கிறது! சொல்வீராக. எ-று

வட்ட வைரம் பொன் பவளம் பச்சை வடிவு நிலையென்ன
வன்னமென்ன, மட்டி லடங்காத வொளிவுமென்ன மக்காமன்
மதுமுதர் நிலையுமென்ன, விட்டசுறுமாவு நீலமென்ன வெங்கள்
முகம்மது மெதுகாண் சொல்லும், விட்டம் நடுவிலே தெளிவுமென்ன
வெள்ளை நிறமென்ன வொளிவுமென்ன. (98)

(இ-ள்) :— வட்டமாகின்ற வைரம், பொன், பவளம், பச்சை, சூட்சங்கள் என்ன, அவைகளுக்கு அந்த ரெங்குகள் எப்படி வந்தது, மகாமன் மதுமுது என்ற ஸ்தலமானது எது, சுறுமாக் கல்லில் நீல நிறம் ஏன் வரவேண்டும்: சரீரத்தில் முகம்மது என்றது எது? எ-று

ஒளிவு தெளிவென்ன ரூபமென்ன வுருபமிடையில்லா திருப்ப
தென்ன, அழிவில்லாதவ ஞதிநாய னல்லாவொளியெது ஆதமெது,
பழியனிபுலீசு ரூபமென்ன பார விருளென்ன குகையுமென்ன,
வெளியன்ன மசலாவைப் பிரித்துச் சொல்லு மெண்ணிலடங்காத
குருமார்களே. (99)

(இ-ள்):— ஒளிவு தெளிவு என்பதின் கருத்து என்ன? அவைகள் உருவம் உள்ளவைகளா, இல்லையா? ஒளிவென்றால் பல வகைகள் இருக்கின்றனவே அவைகளில் றப்புடைய ஒளிவு என்ன கோலங் குறி உள்ளது? அதற்கும் ஆத்மாவுக்கும் என்ன வித்தியாசம், நம் சரீரத்தில் இபுலீஸ் என்பது என்ன ரூபமாக இருக்கின்றது, இருளுங் குகையு மிருக்கின்றதே! அதன் தாற்பரியந்தானென்ன சொல்வீர்களாக ஓ! பகல் வேஷக் காரர்களே! எ-று

எண்ணி லடங்காத குருமார்களே எந்தன் மஸ்லாவை யெடுத்துச்
சொல்லு, மன்னர் முகம்மது மாணோ பெண்ணோ மகிழ்ந்து வணக்கந்
தானின்னதென்று, என்ன எழுத்தாக வேதனே நோக்கி யெங்கே
வணங்கிற தென்ன சொல்லும், மின்னமெதுகாணு முயிரெழுத்திங்
கென்ன விதங்காணு மெமக்கே தென்ன. (100)

(இ-ள்):— ஓ! கள்ள வேடம் போட்டுத் திரிகின்ற குருமார்களே! றசூலுல்லா அவர்கள் ஆணு! அல்லது பெண்ணு? தொழுகையானதைத் தொழவேண்டிய கிரமம் எப்படி? தொழுகையில் முக்கியம் கியானங்கொள்ள வேண்டிய உயிரெழுத்து எது? அதை எவ்விதம் பிடித்து எங்கே நோக்கித் தொழவேண்டும், சொல்லும். எ-று

எனக்குத்தெரிசனை யேதாகவே யிருக்கு மிதின்குண மெழுப்ப
மென்ன? நமக்கு மதினலே நடக்குமாறு நாடுந் தவமெல்லாஞ்
சேர்வதெங்கே, சுமக்கும் பறுலெது. சுன்னத்தெது சூழ்ந்தவறி
வெல்லாம் பிரித்து தன்ரு, யெமக்குத் தெரியவே விடுத்துச்சொன்ன
லெல்லாக் குருமார்க்கு மிமாமானதே. (101)

(இ-ள்):—நாம் தொழுகிற தொழுகையானது எவ்விதத்தாலே போய் எங்கிருந்து எவ்விதம் தத்துவம் பெற்று என்ன ஆதாரத்தால் நமக்குப் பிரயோசனம் தருகிறது? அவைகளில் பறுலு என்பது என்ன? சுனைத்தென்றது எது! இதை நல்ல வழி விபரமாகச் சொன்ன மஹான்களை உலகம் எல்லாவற்றிற்கும் சற்குவென்று சொல்லலாம். எ-று.

ஆவென்ற பார்வை அலிபாகவும் ஐனு மிருவிழி யதுதானென்று,
கூவென்றமூச்சத் தாதையுமாங் கொழுகிறுகுதானினைவாகையா
லேவி யாண்பாலா முகம்மதுமே லிணங்கி ஆவென்ற அலிபாகத்
தான், ருவும் வணக்கமு முந்திக் கீழேதாங்கு முதல் சுன்னத்
தினிமேற் சொல்வேன். (102)

(இ-ள்):— ஆ! வென்கிற பார்வையை அலிபாக்கி இரண்டு கண்களையும் ஐனாக்கொண்டு ஹூ வென்ற மூச்சுடனே எல்லா கருவி கரணாதிகளுக்கும் தகப்பனாக இருக்கின்ற தன்மையான ஆனை றூஹூக்கும், நினைவுக்கு மிடையில் கலந்திருக்கின்ற ரகசியமான முகம்மதென்கிற நிராமயத்தை பெண்பாலாகக் கொண்டு சுன்னத்து வணக்கமானது வந்தது. எ-று.

சொல்லு முகம்மது தாயமுடல் சூலுல் லாகிபெண்மகுஷூக்கு
மாம், அல்லாவேரிலே பேச்சுமீரேழ் அக்கில் மகிழ்ச்சியுமுணர்வு
மாக, நல்ல ஜெம்கூவில் கூவிமீமும் நாடு முதற்பரு விதுவேநிசம்
அல்லா திருவாணை நிசமே சொன்னேன் அறிவை யறியாதசர்
பாவியாமே. (103)

(இ-று.):—ஆனதினலே இந்த உலகங்களுக்கு முகம்மதானது ஒரு தாயாகவும், அதாவது சரீரமாக இருக்கிறது! றசூல் லல்லாஹி என்றது அல்லாவுடைய இஷ்கில் கலந்த மஉஷக்காகிய பெண் பாலர்களாயிருந்து அவன் உடன் அநந்தங்கோடி காலம் வசனித்துக் கொண்டிருந்து, அதனலே றப்பானது அந்த மீமின் பேரில் தன் சிபந்தாகிய ஹூவியத்தைக் கலக்கச்செய்து அதிலிருந்து தன் பறுலை ஜனங்கள் தொழும்படியாயிற்று. இது அல்லாவின் சத்தியமாக நிசமாயினது. இந்த ரகசியத்தை உணராதவர்கள் எல்லாம் பாவிகளாக இருக்கும். எ-று.

தன்னையறிவது பறுலுலுமாகுந் தலைவனறிவது சுன்னத்தாகு.
மின்னும் பறுலொன்று சுன்னத்தொன்று மிருக்கும் வகைதனை
யறிவாருண்டோ, மன்ன வணக்கத்தால் முகம்மதிய்யா மங்காநபி
அல்லா கூவெனவே, அண்ணல் முஹம்மதையிருத்தி அல்லா ஆவி
முகம்மது மவனையோதி. (104)

(இ-ள்.):—பறுலானது இவ்விதம் சூட்சியிலிருந்து வந்ததாலே தான் தன்னை யறிவதை பறுலென்றும் தன் றப்பை அறிவது சுன்னத்தென்றும் முதல் தொடங்கி அதிலிருந்து பறுலு சுன்னத்துக்கள் ஏற்பட்டது. ஆனதால் எந்த வணக்கத்திற்கும் முகம்மதை தியானித்து அல்லாஹூ வென்று திக்றுசெய்து கொள்ள வேண்டும் முஹம்மது அந்த திக்றைத்தான் உச்சரித்துக் கொண்டிருந்தது அதை வழக்கப் படுத்தினல் எல்லா காரியங்களும் சித்தியாகும். எ-று.

ஓது முகம்மது முருவமாக வோங்கும் வணக்கமும் முதற்பறு லாம், நீதி முகம்மதை நினைத்தசோதி நினைவை யறிவது முதல் சுன்னத்தாம், ஆதி யனாதியாம் ஆவியாகி அஹதும் அகுமது மொன் றேயாகும், நீதி முகம்மதை நிலை நிறுத்தி நினைவல் லாவை நீ நிலை யிற்சேரும். (105)

(இ-ள்.):—ஆனபடியாலே முகம்மது அந்த திக்றைத் தியானித் ததிலிருந்து பறுலு வந்தது. அந்த முகம்மதியா வென்னும் ஒளி வானது. தன் நினைவில் நின்றும் அந்த திக்றை தியானம் பண்ணின தாலே அதிலிருந்து சுன்னத்து தொழுகை ஏற்பட்டது. இந்த விபரங்களாலே ஆதியும், அனாதியும், அதாவது அஹதும், அகும துய் ஒன்றுதான். இதனால் தான் நபியவர்கள் ''நான் மீம் இல்லாத அகுமது, என்று சொன்னார்கள். ஆனபடியால் கலிமாவின் நிலையில் முகம்மதை நிறுத்தி நினைவை அல்லாவென்று தரிபடுத்த வேண்டும்.
எ-று.

சேரு மிறைபாத நபிபாதமுஞ் செப்பும் வணக்கந்தானி முகம்ம தென்றும், வேருந் திருநிலை யறிவதுதா னிதனினுட்கோலமெறு கூறுங், கூரும் பலகலை யுருவறியக் கொழுகி யிவைரண்டு மொரு பறுலாம், மாதா வணக்கமு முகம்மதென்று மன்னு னறிவது முதல் சுன்னத்நாம். (106)

(இ-ள்):—அல்லாவையும் முகம்மதையும் தியானிக்கிறதுதான் தொழுகையாயிற்று. அந்த தொழுகையானது அகுமது ஆனது மற்றெந்த நிஷ்டைகளும் இதில் நின்றுந்தான் உள்ள கோலங்களாக இருக்கின்றன. ஆகவே முகம்மதை யறிகிறது பறுலு றப்பை யறிகிறது சுன்னத்தாயிற்று.
எ-று.

சுன்னத் திரண்டு மொருசுன்னத்தாம் சொன்ன பறுல் ரண்டு மொருபறுலாம், எண்ணி லடங்காத பறுலு சுன்னத் தெல்லாத் தவத்துக்கு மிமாமிதுவாந், தன்னை யறியாதார் பொருளறியார் தவமுமிபுலீசைச்சேருமென்று, மன்னனல் முகம்மதை யாதினையனாக்கு மறிவிக்கப் பறுலாக்கினன். (107)

(இ-ள்):—சுன்னத்தில் இரண்டு வகை யிருக்கின்றது அது இரண்டு மொன்றுதான். பறுலில் இரண்டு வகையிருக்கிறது அது இரண்டும் ஒன்றுதான். இந்த பறுலு சுன்னத்துக்கள் தான்

எல்லா தவங்களுக்கும் அடி மூடானவைகள் ஆனதாலே யாரொ ருவன் தன்னை யறியவில்லையோ அவன் ஆதியை யறியவும் மாட் டான், அவன் செய்கின்ற வணக்கங்களும் இபுலீசைத் தான் சேரும், என்று நம் நபிபெருமான் அவர்கள் அருளிச் செய்தார்கள்.
எ-று.

பறுலு வகையெல்லா மிறையைச்சேரும் பாங்காய்நபிக்காகுஞ் சுன்னத்தெல்லாம், பறுலில் வகையான பறுல்சுன்னத்தின் பாங்கை யறியாரே தீங்காங்காபிர், இதனை மனதினி னிறைந்திருக்க வென்ன தவஞ் செய்வோமென்று நாடி, பருனு மீராறு பொருளறிந்தே அல்லும் பகலுந்தான் றெழுதாலென்ன. (108)

(இ-ள்):—பறுளுகளின் வகையெல்லாம் றப்பைச் சேரும், சுன்னத்துக்களெல்லாம் நபியவர்களைச் சேரும் இந்தப் பறுலு சுன்னத்துகளில் வழிவகைகளைப் பகுத்தறியாதவர்கள் தான் உலகத் திலுள்ள காபிர்களுக்கெல்லாம் பெரிய தீங்கான காபிர்களாகும். ஞான வெளிச்சமில்லாதவர்கள் தங்கள் மனதின் கண் அடங்காத இருளானது குடியிருக்க. அவர்கள் இரவும், பாலுமாக தொழுது தான் என்ன! அழுதுதான் என்ன! ஒருபயனும் பெறமாட்டார்கள்.
எ-று.

தொழுகை நோன்புடன் ஸக்காத்தும் ஹச்சும் துய்ய நடபடி தவரிடாம, லெழுத முடியாத கலிமா திக்கி றில்லென் றெழுப்பி உவோசையெங்கும். அழுது நூறுண்டு கோடிகாலம் அல்லும் பகலுந்தா னொருநினைவாய்ப், பொழுது மதிகாணு விருட்குழியிற் போதவணக்கமென் றிருந்திட்டாலும். (109)

(இ-ள்):—தன்னிலையை அறியாத மூட ஜனங்கள் ஐந்து நேரமும் தொழுது முப்பது நோன்பையும் பிடித்து, நாற்பதுக்கு ஒன்று விழுக்காடு ஸக்காத்தும் கொடுத்து மக்கமா நகரத்திற்குப் போய் ஹஜ்ஜாம். உம்றாவும் செய்து அல்லா அல்லா என்று சப்தம் போட்டு நூறுகோடி வருஷம் வரையிலும் அழுதாலும் அதே நியானமாக சூரிய சந்திரர்களுக்குங் காணாத இருட்பொதும் பறை களில் இருந்து வணங்கின போதைக்கும். (இன்னும்)

இருந்து மலைதனிற் சருகுதின் றேயேதுமருந்தாமற்குகையி னுள்ளே, வருந்திவருந்தியே வணங்கினாலும் வானம் புவியெல்லாங் கைச்செய்தாலும், திருந்தப்புவிக்குபிரெல்லாம் வெட்டித்தீர்க்க முறத்

திளைவிளைத்தாலென்ன. சிறந்த வுலதுள்ள பள்ளிமற்றத்தெய்வத்
தலமெல்லாஞ் சிறப்பித்தாலும். (110)

(இ-ள்):—மலை கெபிகளிற் போய் அலைந்து கந்த மூலங்கள் முதலிய இலை குழை சருகுகளைப் பொறுக்கித் தின்று அடர்ந்த குகைகளிலே மூச்சடக்கி எவ்வளவோ பிரயாசைகளுடன் தவஞ் செய்தாலும். இன்னும் வானம் பூமி முதலிய பூதங்களை வசியப் படுத்திகாயசித்திகள் கற்பசித்திகள் செய்தாலும், வீரபராக்ரமத் துடன் காபிரீன்களை அடர்ந்து பீஸபீல் என்னும் யுத்தஞ்செய்து வெட்டி அவர்களை இஸ்லாத்தில் வரவழைத்தாலும், இன்னும் உலகத்திலுள்ள பள்ளிவாசல்கள் முதலான தேவாலயங்களைக் கட்டி (இன்னும்) செப்பனிட்டபோதிலும்.

சிறப்பாங் கருபாப்போ லொருகோடியைச் செப்பொன்று
லேதா னெடுத்திட்டாலு, முறைப்பா மறுஷாபோலொருகோடியை
யுயர்ந்த வைரத்தா லெழுப்பினுலு, நிறப்பும் பலனிலை நாளொன்
றுக்கு நீண்ட பாவந்தா னெவ்வளவென், றிறப்பும் பிறப்பில்லா
னபிக்கு சொன்ன னென்றன்யஹாம்பர் நபிக்கோதினன் (111)

(இ-ள்):—திருமக்கமா 'நகரத்தில் இருந்து விளங்குகின்ற கஃபத்துல்லாவைப் போல் ஒரு கோடி கஃபாக்களைப் பொன் இரத்தினதிகளால் கட்டி முடித்தாலும், உயர்த்தியான அறுஷே முஹல்லாவைப்போல ஒரு கோடி அறுஷாகளை வைரவெட்டினுல் கட்டி முடித்தாலும், ஒரு பயனும் பெறமாட்டார்கள். பாவமே செய்து அலைவார்கள், என்று அல்லாகுத் தஆலா நபியவாகளுடன் மிஃருஜியில் கலந்து பேசினன். எ-று.

நபிக ளிருபத்தி ரண்டுகோடி நாட்டின்மிசையன்று கொலையே
செய்த, புவியிற்பெரும்பாவம் நாளொன்றுக்குப் போதக்கி
டைக்குங்கா ணடியார்க் கெல்லா, நபிகள் பெருமானுமுகம்மதுக்கு
நாயன்மிகுருஜில் ரகசியமாய்ச், கவியாம் ரகசிய முடிவிதுகாண்
கண்ணேமணியென் னபியேயென்ருன். (112)

(இ-ன்):—றப்புமுன்னுண்டான நபிமார்களுக்கு யுத்தத்தைப் பற்றியும் ஜனங்களை நடத்துகிறதைப் பற்றியும் தேவ கட்டளை யும் வேதங்களையும் கஹுபுகளையும் இறக்கினுன். நமது நபி பெருமானேரவர்களுக்கோ மிஃருஜியில் அழைத்து அநந்தரநந்

தம் காட்சி சுப சோபனதிகளுடன் தன்னுடைய இரகசியமான மஅரிபா வென்னும் உண்மையான இல்மை அகமியமாகக்கொடுத்து தன் அடியார்களுக்குக் கற்பிக்கும்படிச் சொல்லி அனுப்பினுன். எ-று

நபிக்கு ரகசிய மிறை சொற்பொய்யோ நாட்டிற் சொர்க்கமென்
ஞெருவன் செய்து, புவியிற் சிரசிடிந் திழந்து மாண்டு பொல்லா
நரகினி லழிந்தானப்போ, கவியா லுரைத்திடு முதற்பறுலின்
காணுமுதலான சுன்னத்தையு, மேவியெழுப்பியே யேற்றிபார்க்க
றவிலங்குந் தவமெல்லாஞ்மிஃதேயாகு. நபிகளின்றெவவரக்கொஎ
ருலு நாயன் முடிவல்லா லிவனுலில்லை. (113)

(இ-ன்):—மிஃருஜியில் வசனித்ததின் பிறகு வெளியாக்கிய சுவர்க்க வர்ணிப்புகளைக் கேட்டிருந்த ஒரு பெரிய சீமானனவன் உலகத்தில் ஒந சுவர்க்கத்தைக் கட்டினுன். அவனை உடனே உயிர் வாங்கச் செய்துவிட்டான். ஆனதாலே அப்பேர்கொத்த பறுலு சுன்னத்தை யறிந்து வணக்கஞ்செய்கிறதே பெரிய வணக்மாக இருக்கிறது: எ-று.

இவன்ரு னுலகெல்லா மருத்திட்டாலு மிமையோர் குழுவெல்
லாமிறக்கச்செய்து, செவிதாமறுஷோடுகுறுசுதன்னைத்திங்கு பல
செய்து விருந்தாரென்றும், புவியிற்பாவமொன்றிவர்க்குமுண்டோ
பொன்னு ரவர்க்கல்லாலெவர்க்குமுண்டோ, தவியுப்பிழைபோக்கி
நாளொன்றுக்குத் தருவா னன்மையெவ்வளவே யென்ருல் (114)

(இ-ள்):— தன்னிலையறிந்தவர்களுக்கே ஜெயங் கிடைக்கும். உலகமெல்லாம் அடியோடும் அழிந்துபோகின்ற கடையுக நாள் வந்த போதைக்கும் மலக்குகள் எல்லாம் இறந்துபோய் வான லோகமும் இடிந்துபோனுலும், தவங்களான நன்மைகளையும் பெருகச்செய்து வணங்கின நாதாக்களுக்கு யாதொரு குறைவும் வராது. எ-று.

என்ற பெரியவன் பயஹாம்பர் தா மிருநூற்றிருபத்தி ரண்டு
கோடி, மாண்டுபோகாம லுயிரைமீட்ட மதிக்கும் பல்னகச்சுக்
கோடியென்று, மாண்டபெரியவன் தேர்ஸ்தாமென்று மண்ணல்
முகம்மது நபியுஞ்சொன்ன, ரேன்ற அப்பியா தவாலி குத்தாபுமெல்
லாவுலமாவு மிதுவேசொன்ஞர். (115)

(இ-ள்):—தன்னிலையை அறிகிறதாகிறது, அநந்தங் கோடிக் கணக்கான ஜீவராசிகளைக் கொல்லாமல் ரக்ஷித்த நன்மையிலும், கோடிக்கணக்கான ஹஜ்ஜுக்கள் செய்த பலாபலனிலும் அதிக நன்மையுள்ளது என்று நபிமார்களும், குத்புமார்களும் சொல்லி இருக்கிறார்கள். எ-று.

எல்லாவுலமாவு நபியுஞ்சொன்னாரெவரு முலுச்செய்துதொழ
வும்வேண்டும். பொல்லாங்கு பொய்யும் பெருமைகோபம்
பொங்குநித்திரை ஹறாம்பகீலுஞ், சொல்லும்வகையேழும் விலக்கி
வைத்துச்சுருதி நிலைபற்றோ ருருவில்லாத, அல்லா வணக்கத்தை
வணங்கினோர்களாவா ரவர்க்கச்ச மொருநாளில்லை. (116)

(இ-ள்):— இன்னும் எல்லா நபிமார்களும், உலமாக்களும், உலகத்தார்கள் உலுச்செய்து தொழவேண்டும். எப்படியானால் புறணி, கோள், பொய், அகம்பெருமை, ஜினா, கோபம், லோபித் தனம், இந்த ஏழு பாதகங்களையும் விட்டு மனமுருகினவர்களாகத் தொழுதால் அந்தத் தொழுகையானது. ஆண்டவன் இடம் போய்ச் சேரும். அவர்கள் தான் நரகத்தின் பயத்தை விட்டும் நீங்கினவர்கள்.

ஒருவர் மனதுக்கு ளிருக்கும்வகை யொருவர்க்கொருவர்தா
மீயாவகை, பெரியோர் நானிலத் தோற்றநிதி பின்னுவர்தேடு
நிதியுமாகு. மரியவிசுவாச நன்மைதீமை யார்க்கும் பெரிதான
மான வெட்கம், பெரிய வயதோடு வைந்துவகை பின்னு மொரு
வர்க்கு மீயாப்பொருள். (117)

(இ-ள்):—இன்ஸான்களுடைய மனதில் இருந்து ஊசாடுகின்ற பொருளான ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் செய்துக் கொள்ளாத பொருளாக இருக்கும். நாதாக்கள் உலகத்தில் சம் பாதிக்கும் இபாதத்து முதல்களானது கியாம நாளையில் அவர் களுக்குத் திருப்பிக் கொடுக்கின்றதாக இருக்கும். இன்னும் ஐந்து கருமங்கள் யாரிடத்திலும் சொல்லப்படாதனவாக இருக் கின்றன. எ-று.

பொருளாமைந்தையு மீய்ந்தபோதும் புவியி லிருக்குந்தொன்
றுரைக்காவகை, யறியுந்திறமான விசாரமாண்மை யானகல்வியும்

பாலநன்மை, புரிய கருவித்தை யட்டகோண மூலவாடக்கையுமா
தரின்ப, மறையும் பலஞான முடற்கூற்றையும் வாய்விட்டுவெளியே
சொன்னாதே. (118)

(இ-ள்):— அந்த ஐந்து கருமங்களாவன:—தன் ஆண்மைத் தனம், மனவிசாரம், தான் செய்யப்போகு முயற்சி, உடற்கூறு தன் பெண்சாதி யிடத்தில் அனுபவித்த சம்போகம், ஆகியவை களாகும். இன்னும் மந்திரவகை முதலானவைகளையும் சொல்லப் படாது. என்பது பெரியோர்களின் கொள்கை எ-று.

பேசும் வகையெல்லாம் பேசினாலும் பேசாவகையின்ன
மொன்றுண்டுகேள், ஏசியெறிந்துதான் கோபமாகி வென்கிட்டணு
காதேயெனத்தூஷித்து. நேசமனங்கோபந்திருப்புவகை நிதமுந்
தொழுதல்லோ, கால்பிடித்துப், பேசுங் குருவின் னுபதேசத்தைப்
பின்னொருவர்க்குப் பேசொணாதே (119)

(இ-ள்):— ஒரு சமயம் இந்த கருமங்களைப் பேசினபோதைக் கும இன்னவொரு மஹா கருமம் இருக்கிறது. அதை யாருக் காவது சொன்னால் பாவியாவான். அதாவது சற்குருவானவர் தன் சீஷனை சினந்து பேசி நீ என் சமூகம் வராதே போடா, என்று அவமானமாகத் திட்டி விரட்டினாலும், அவர் விட்டு வாசல் காக்கின்ற நாய்க்குட்டிபோல் கிடந்து பணிவிடை செய்து பெற் றுக்கொண்ட ஞான உபதேச மர்ம வார்த்தையை மாத்திரம் யாரிட மாவது சொல்லி விடப்படாது. எ-று.

பேசா வகையெல்லாங் கொடுக்காவகை பெரியோனுலகெல்
லாமறியச்சொன்னே, னீசமாய்த் தனக்குத் தானென்று நினைவி
லுஞ்சற்று நினைக்காப்பொரு, ளாசை யோசையு மருணிறைந்த
அல்லாவொளிவான அரும்பொருளை, நீசமாய்த்தனக்குத் தானென்று
நினைக் காப்பொருணிலத் துரைக்கலாமோ. (120)

(இ-ள்:)—அந்த கருமமானது மிகவும் பாரதூரமானது. உல கத்தில் தனக்கிருக்கின்ற எந்த ஆஸ்திகளைக் கொடுத்தாலும் அதைமாத்திரம் கொடுக்கவே படாது. அதைப்பற்றித்தான் அல் லாவும் இரெம்பவெல்லாம் ஜாக்கிரதைப்படுத்தி மிஃறாஜில் சொல்லி இருக்கிறான். இன்னும் அதன்பெருமையை யாராலும் சொல்ல முடியாது.

உரைத்தா லுலகத்தில் வருங்கொடுமை யுள்ளதுன்பமுந் துயரங்கோடி, பெருத்த குடியன்றான் களவுசெய்தான் பின்னும் ஹறாங்கொலை செய்தானென்றும், ஷறுகி னேவலை விலக்கிவைத் துச் சறகைக் கெடுத்தசண்டாளனென்று, பெருத்த மூணிபடுதூற வர்க்கும் பேசாகை யல்லோ தாத்துவகை. (121)

(இ-ள்):—அடமகனே! நீ அந்த மர்மத்தை வெளியிட்டால் அந்த ஸாபத்தாலே உனக்கு வரக்கூடிய கேடோ ஒருமட்டுத் திட்டமுள்ளதல்ல, அதுகொண்டி உலகத்தார்கள் எல்லாம் தெரு வுக்குத் தெருவாயும் மூலைக்கு மூலையாயு மிருந்துக்கொண்டு இவன் கள்ளுக்குடிக்கிற வெறியன். அந்த வெறிமீறி வாய் பிதற் றுகிறான். என்றும், இன்னும் ஜினா ஹறாம செய்கிறவன், ஆண்டவ னுக்கும், ஷறுஉக்கும் மாறு பேசுகிறான், இந்தச் சண்டாள னுக்கு குபிர்க்கலிமாம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதோடு தாங்கமுடியாத கெடுதிகளையும் செய்து தூற்று வார்கள். இதுபோக தன்னை யறிந்த சாதுக்களான மஹான் களுக்கும் சொல்லக்கூடாத காரியம் எது என்றால்! அதுதான் கீழே பேசப்போகின்ற தாத்துடைய ரகசியமாக இருக்கும். எ-று,

மஸ்லாக்கேட்கும் வகை முற்றிற்று.

—(x)—

தாத்துவகை.

தாத்து றகுமத்துக் கடனிறைந்த ரகசியந்தனைச் சொல்லக் கேளும், வார்த்தைக் கடங்காத கடல்வலுப்பும் வருட மாயிர மனந் தங்கோடி, சேர்த்துக் கடலோட மிருந்தகாலஞ் செய்யத் தொலையாதே யவராலுந்தான், கோர்த்துக் கடலெல்லாஞ் சூடுண் டாக்கிக் கொழுந்து புகையினாற் கொதியுண்டாச்சே. (122)

(இ-ள்):—தாத்தானது றகுமத்தென்கிற கடலில் நிரம்பிநின் றது. அந்த ரகசியத்தைச் சொல்லவேண்டுமானால் முதலாவது அந்தக்கடலின் வல்லபமானது எந்த ஞானிகளாலேயுஞ் சொல்ல முடியாதே முடியாது. இவ்விதந்தன்மையுள்ள அந்தக்கடலில் மேற்

படி தாத்தானது ஆயிரங்கோடி வருஷ காலங்களாக இருந்தது இவ்விதங் கணக்கற்ற காலங்களாக இருந்து வருகையில் அதனு டைய காங்கையால் அந்தக் கடல் முழுவதும் கொதித்துவிட்டது. அதனால் புகையும் தழிம்பிற்று.

கொதித்த கடலதிலெழுந்தநுரை கோலம்வெள்ளையாம் விருத்த மாக, விதத்தி லாயிரங்கோடிகாலம் வெள்ளை நிறமெல்லாங்குருதி போல, யிதுவு மாயிரங் கோடிகால மிருந்து செந்நுரைகதையு மாகி, மதிப்பிலடங்காத கண்மணிபோல் மன்னன் சதைநடுத் தெளிவானதே.

(இ-ள்):—அவ்விதங் கொதித்த நீரில் நின்றும் வெள்ளை நுரை கள் உண்டாயிற்று. அப்பால் அதன் நிறமாறி இரத்தங்களாகப் பிரிந்து ஆயிரங்கோடி வருஷகாலம் இருந்தது, அப்பால் அந்த இரத்தங்களெல்லாங்கூடி சதையாயிற்று. அப்பால் மதிக்கமுடி யாத மணியின் உருவம் போலத் தெளிவு உண்டாயிற்று. எ-று.

தெளியுமாயிர மனந்தங்கோடி திரண்ட சதையல்லாமிருண்ட குகை, யொளிவு திரண்டுவெண் டரளமாக வொருநூறு கோடி காலஞ்சென்று, சுழியாம் வலம்புரி முனைதிரண்டு சூடுஞ் சுடரோ ளிசுழன்றதெங்கே, யொளிவு திரளெல்லா மகலமாற்றி யோசையு வந்தது தன்னைத்தானே, (124)

(இ-ள்):— அப்பால் அந்த உருவான தெளிவானது ஆயிரங் கோடி வருஷகாலங்களாக ஒரு இருண்ட குகையில் ஒரு வெள்ளை முத்தாகப் பிரண்டு அதுவும் நூறுகோடி வருஷம் அவதாரங்கொண் டிருந்தது. அப்பால் அந்த தாத்தானது தன்னைதான் விஸ்தாரம் பண்ணும் பொருட்டு அந்த முத்துக்கு ஒரு வலம் புரிச்சங்காகச் சூட்சஞ்செய்து அநந்தங்கோடி வருஷங்களாக சப்தித்துக் கொண்டி ருந்தது. எ-று.

தன்னை வணங்கிய மூச்சுறாகாய்த் தானே கூவென்று தாத்தே யென்னும், இன்னம் பிசுமிலும் கொபூறுற்றகீம் என்ற முழக்க முழுத்தொளியும், விண்ணி லெழுந்துவின் சரத்தைக்கான வெள்ளை மரகத விந்துநாதத், தன்னாலெழுந்திடு றுக்கத்துமாகத் தரித்த விருளிலே யிருந்ததாமே, (125)

(இ-ள்):— அவ்விதம் முழங்கிக் கொண்டிருந்தமூச்சானதுதான் ஹூவென்கிற தாத்தாக இருக்கும். அது சப்தித்த சப்தமானது

தான். பிஸ்மினும், கபூறுர் றஹீமுமாக இருக்கும், அப்போது அதற்குள்ள நிறங்களாவது. பச்சை அநந்தகாலம். வெள்ளையநந்த காலமாக இருந்தது. அதன் அந்தஸ்தானது நுக்தாவாக இருளில் புதைத்திருந்தது. எ-று.

இருந்த நுக்கத்து நீண்டலிபா யெழும்பியிருதலை நுக்கத்து நூறுஞ், சிறந்த பதினாலுவிதமொன்றுக்குச் செப்புமாயிர மனந்த மாண்டு, பொருந்தித் தேட்டமாய் நடுநுக்கத்தைப் போற்றியிருந்தே நபிநடுவில், வருத்தி யறுநூற்றைம்பதுகோடிதான் வருடமிருந்த பின் வகையைக்கேளே, (126)

(இ-ன்):— இவ்வித மிருந்ததுக்தாவனது நீண்டு அலிபாகப் பிரிந்தது. இரண்டு தலைகளிலும் தன்னை நிலையாக் நாட்டிவைத்துக் கொண்டது. அதில் பதினாலு கருமங்களை அடக்கினது. அதில் ஒவ்வொரு விதங்களுக்கும் ஆயிரம் ஆயிரம் வருஷம் சென்றன. இந்தப் பதினாலு விதங்களுக்கும் இடை இடையே முகம்மதாக இருந்து அந்த தரத்தை ஸ்தோத்திரஞ் செய்து கொண்டிருந்தது. இப்படியாக அந்த அலிபுடைய மகாமில் அறுநூற்று ஐம்பது கோடி வருஷம் இருந்தது. எ-று.

வகையாய்த் தேட்டவேண்டரளமாக வல்ல பெரியவன்வலைவுக் குள்ளே, நகையா நபியொளி நற்பவள ரடுவாயிறைவைத்துக் காக்கும்போது, தொகையாயிரண்டரை நூறுகோடி தோற்று மொளிநூறுந்தானுமாகி, வகையாயிருதிலே வேறென்ருக வளர்ந்தே அலிபாக விருந்ததாமே. (127)

(இ-ன்):— இவ்விதமிருந்த வெள்ளை முத்தானது ஹூவாக வும், அதை வணங்கிக்கொண்டிருந்த முகம்மதானது செவந்தபவள மாக்வுப், இருந்து வரும்போது இருநூற்று ஐம்பது கோடி வருஷங் களாகிற்று. இவைகளின் அட்சரங்களாவன. என்ன வெனில் முகம்மது ஒளிவாகவும், ஹூதாலாகவும், இருந்து இரண்டும் ஒன் ருகக்கலந்தே அலிபாய் நின்றது. எ-று.

அலிபி அலிபது தவளம்போலும் ஆதியொளிவுவெண்டரன மாக, வொலியா முகம்மது லாஇலாக இல்லல்லாகூவென் றேதுங் காலே, வலிய இறைவன் முகம்மதுற்ற சூலென்றுரைத்தல்லோ தீதிலானுன், சலியாமுகம்மது பிறவிதீனும் சகலம்படைத்தவன் மவுலாவாமே. (128)

(இ-ள்): — ஆனபோதே அந்த அலிபில் முகம்மதானது முத்தாக இருந்து இலாக இல்லல்லாஹூ என்கிற திக்றைச் சொல்லிக் கொண்டிருந்தது அதைகேட்ட அலிபானது அதன் பேரில் கிருபை பொங்கி பதில் ஜவாபாக முகம்மதுர் றசூலுல்லாஹி என்று சொல்லிற்று. இதனுல் தான் முகம்மதானது உற்பத்தியே இஸ்லாமாயிற்று அல்லா மௌலாவாகி விட்டான். எ-று.

மவுலாதனைநபி வணங்குநானின் மன்ருன்முகம்மதை வணங்கி நின்ரு, னவுலாக் கொன்பது லக்ஷமாண்டு நாயன் முகம்மதை நாடி நாடி, அவுலாக்கின்றண்டு மொன்ருய்க் கூடி யந்தமுன்சொன் னகாலமட்டு, நவுலாக்கொன்பது லக்ஷந்தர நாயன் கூடிப்பின் பிரிந்ததாமே. (129)

(இ-ள்):— அப்பேர்க்கொத்த அலிபான மௌலாவே முகம்மதை வணங்கி நின்ருன். ஒன்பது லட்சம் வருஷகாலம் வரையிலும் முகம்மதை அல்லா தன் மஉஷூக்கின் மகாமில்வைத்து இஷ்கில் மிதந்தான். அவைகள் இரண்டும் இஷ்க்கில் நின்றும் ஒன்பது லட்சந்தடவை பிரிந்து பிரிந்து சேர்ந்து கொண்டன. எ-று.

பிரிந்தா ரொன்பது லக்ஷந்தரம் பூண்டங்கிருந்துபின் பிரியுங் காலே, யிருந்த முத்தொன்று பவளமொன்று மின்னம் பவளத்தி னொளிவுபொங்கிச், சிறந்த பச்சையாம் அலிபொன்றுதான் சேர்ந்து வேறென்று தலைமூன்றுமாங், குறைந்திடாமுத்துப்பவளம் பச்சை கூடி யிருந்தநா டன்னைக்கேளே. (130)

(இ-ள்):— அலிபும், நூறும் இவ்வித இஷ்கில் இருந்துப் பிரியத் தொடங்கினவுடனே. அந்த பவளமானது தன்னில் நின்றும் ஒரு பச்சை ஒளிவை ஜெனித்தது. அந்த பச்சையானது ஒரு அலிபின் குறத்தில் தான் இருந்தது. அதற்கு மூன்று தலையிருந்தது இவ்விதம் முத்து, பவளம், பச்சை, யென்னும் மூன்றும் கூடி இருந்த விதத்தைக் கேளுங்கள். எ-று.

இருக்கு மொருகோடி வருடமட்டு மிணையு மொருகோடிவருடமட்டு, நெருங்கி யொருகோடி தாமிருந்து நீண்ட சுடர் மூன்றும் பிரிந்துவேறே. யிருக்குஞ்சுடர் மூன்றும் வணக்கமொன்ருயிருந்த விதமல்லோ தாத்தென்பதிங். குருக்கமான சிபாத்துத்தனை யொக்கக் கேளுங்கா ளுலகத்தாரே. (131)

(இ-):—இந்த முச்சுடர்களும் ஒருகோடிவருஷங்களாக ஒன்று கூடி இருக்கும். அப்பால் ஒருகோடி வருஷங்களாக வேறே பிரிந்து இருக்கும். இந்த முச்சுடர் ஒன்று கூடி இருந்து வனாங்கின வணக்கந்தான் தாத்தென்று சொல்கிறது. இனிமேல் சிபாத்தின் வகையைச்சொல்கிறேன். எ-று.

தாத்துவகை முற்றிற்று.

சிபாத்து வகை

உலக மமைக்குமு ஞெநவனுய ஞெளிவிற் பிறந்தவர் முகம்ம தியா, நிலேயின் முகம்மதி ஞெளிவளர்ந்து நின்ற அலிபொன்று அலிபாயிறைவா, ஞுறுக்கிப்பார்க்க வைந்தாய்ப் பிரிந்தபின் வகை யேதென்ருல், அலிபுலாமுடன் ஹேயுமீமும் அணிந்ததாலேந்து மெழுத்துமாச்சே. (132)

(இ-ள்):— இவ்விதம் பவளத்தின் வடிவிலிருந்த முகம்மதை ஹூவானது உறுக்கிப்பார்த்தது அந்த உடனே அது ஐந்து வகை யாகப் பிரிந்தது. அவைகள்தான் அலிபு, லாம், ஹே, மீம், தால் என்பவைகளாக இருக்கும். எ-று.

எழுத்து மைந்ததா யானதற்பி னென்கோனசையாமலிருத்திப் பார்த்தான், வெழுத்து மொன்ஞென்று மைந்தெழுத்தாலிறை முனிருப்பதைந் தறையிலாக, வழுத்தி யிறைமுன்னே அல்ஹம் தென்றுமந்தே யிநபத்தைந் தரையினிற்கு, முழுத்த மாகவே றகுமத் தென்னு முன்னுலுரைத்திடுங் கடலின்மேலே. (135)

(இ-ள்):—பவளமானது ஐந்து வகையான கோலங்கள் கொண் டதன் பின்னுல் அதன் அருகாக இருந்த பச்சையாகிய எப்பெரு மானுன முகியத்தீனுனது யாதொரு அசைவும் அற்று தீரத்து டன் இருந்தது. அப்பால் அந்த ஐந்தும் அல்ஹம்தென்று அந்த ஹூவைப் புகழ்ந்தது இவ்வளவும் றகுமத்தென்கிற கடலின் மேலாக இருக்கும். (எ-று.

மேலே அலிபென்ற பவளந்தன்னை மிகவு நிறுத்தியேமகிழ்ந்து பார்த்தான். ஆலம் அஹதென்று கிருபைப்பார்வை யந்தயலிபு தான் பிளந்திரண்டாய்ப், பாலி னிறத்திலே ரண்டாறுதான் பாரக் கடலினி லோடும்போது, வாலுந் தலைநடு வளைவுமூன்ருய் வல்லோன்திரு முன்னே ஜனுமாச்சே. (134)

(இ-ள்):—அலிபான வடிவில் இருந்த அந்த பவளத்தைஹூவா னது தன் இஷ்கில் நிற்கவைத்து ஆசையுடன் பார்த்தது, அந்தப் பார்வைக்குத் தான் ஆலம் அஹது. என்று சொல்லப்படும் அந்தப்பார்வையால் அந்த அலிபானது பிளந்து இரண்டு சுவர் களாகப்பிரிந்து இரண்டு ஆறுகளாகவும் அந்த ஆறுகள் இரண்டும் இரண்டு ஐன்களானது. எ-று.

ஐனு யிருவிழி யவஞெளிவாமந்த ஒளிவிலேமீமானது, கனியா மீமந்தக் கடலின்மேலே காட்சிக் கிருபையா னேக்கும்போது, புவியையசமைத்தவன் றிருப்பாலினிற் புகழ்ச்சி மூகியித்தீனுருமீ முமாங், கவியா லொருமீமை அருமதென்று கத்தன்கிருபைகொண் டுரைத்ததாமே. (135)

(இ-ள்):—ஐன்கள் இரண்டும் இரண்டுகண்களாக மாறி மீமா னது. அந்த மீமைப்பார்த்தான் பார்த்த உடனே மீமிலிருந்து ஒரு மீம் வெளியாயிற்று அதுதான் முஹியத்தீனுக இருக்கும். முன்னிருந்த மீமானது அகுமதாக இருக்கும. இவைகள் இரண் டுக்கும் பேர் நாமஞ் சூட்டினது ஹூவாக இருக்கும். எ-று.

உரைத்த மீமொன்று மூகம்மதியா வுயர்ந்த நுபுவத்துவமக் காமென்றும், பொருத்தமாகிய விலாயத்தெலாம் புகழ்ச்சிமுகியிதீ னுமக்கேயென்றுங், கருத்தின் முகியித்தீனீண்டமீமைக்கத்தனெடுத் தவன் மடியிலேற்றி, வருத்திக் கடன்மேலே செய்ததெனன வடிவுக் கிருபையா லிணங்கிப்பார்த்தான். (136)

(இ-ள்):— அந்த சூறத்தில் வைத்து ஹூவென்னும் றப்பானது அகுமதிய்யா வென்னும் மீமை நோக்கி உனக்கு நுபுவத்தை, ஆஸதியாகத் தந்தேன் என்று சொல்லி, அப்பால் முகியித்தீன் என்னும் மீமை நோக்கி உனக்கு விலாயத்தை ஆஸ்தியாக்கினேன் என்று சொல்லி உடனே அந்த மீமை தன் வசத்தில் வைத்து அருமைப் பாராட்டினுல் மேற்படி மீமானதை றப்புதன் கிருபை யான பார்வையாகப் பார்த்தான். எ-று.

பார்க்க மீமுட தேகமெல்லாம் பத்நிஜலமாகவேர்க்கும்போது, கோர்க்கும் வேர்வைதா னொருமுத்தாகக் கொழுத மீமுள்னே யொளிவுமாகிப் பார்க்க றகுமத்துக் கடல்விரிந்து பத்துநாவுமாயப் பகுந்ததப்போ, ஆக்கமாகவே நாவொன்றுக்கு மாதி திருநாம மோதினனே. (137)

(இ-ள்):—பார்த்தும் அந்த மீமின்சரிரமெல்லாம் ஜலமாக உருகி வேர்த்து அந்த வேர்வையில் நின்றும் ஒருமுத்து உற்பத்தியாகி அதுவே றகுமத்தென்கிற கடலாயிற்று, அந்த முத்துக்கு பத்து நாவுமாயிற்று. அந்த நாவுகள் ஒன்ரென்றுக்கும் றப்பானவன ஒவ்வொரு திருநாமமும் சூட்டினன். எ-று

நாதன் கடனுமம் நினைவறிவு, நாமம் பக்கீறுகபூறுவென்று மோதும் இல்மைந்து சபூறுமாகு மொரேழறுஷுக்குநிகமெட்டாகு, நீதி றகுமத்தி னொளிவுபத்தா திகரில்லாக்கடலொவ்வொன்றுக்குச், சோதியொளி மீமாய்த் திரண்டமுத்தைச் சொன்னு னெனைத் தானே புகழுமென்றே. (138)

(இ ள்):-அந்த நாமங்களில் முக்கியமானதுகண், நினைவு, அறிவு, பொறுமை, பகீறு, கபூறு என்ற இவைகள் ஐந்துமாக இருக்கும். இந்தப் பத்து நாவுள்ள மீமானதைப் பத்து பகுப்பாக்கி ரஸ்ஸாக் கென்னுங்கடல் முதலான பத்து தலங்களில் வைத்து ஏமீமே நீ என்னைப் புகழ்வாயாக. என்று சொன்னன். எ-று

புகழுமெனச் சொல்லக் கடலொன்றுக்கும் புகழ்ந்தா ரொருநூறு கோடியாண்டு, மகிழு மாயிரங் கோடிகால மன்னுன் கடல் பத்தின் மகிழ்ந்துமுத்து, மூகளும் பொருந்திய கடலின் முத்துமுறுகிக் குறுதியோர் கருபமாகப், பகரும் அகுமது முகம்மதென்றும் பாங்கா மகுமூது ஹாமிதென்றே. (1:9)

(இ-ள்)—றப்பு இவ்விதஞ் சொன்ன உத்திரவின்படி முகம்ம தானது ஒவ்வொரு கடலிலும் இருந்து நூறுகோடி நூறுகோடி வருஷங்களாக ஸ்தோத்திரஞ் செய்தது. அப்பால் அந்தப்பஹறுக் கடல்களிலும் இருந்த முத்துக்களை றப்பு அநேக மகிழ்சசியுடன் அழைத்து அவைகளுக்கு அஹ்மது, முஹம்மது, மஹ்மூது, ஹாமிது என்னும் (இன்னும்)

என்று யாசீனுந் தாசீனுமாமின்னைந்தாஹாவும் ஹாமீமுமா, யெனவே காபோடு ஸாதுமாக விந்த வகையாக வணங்கும்போதி, லன்றே றபியொளி விறையைநோக்கி யருளுங் காபக்கபு சைனி யென்று. கண்டே மகிழ்ந்திரை கிருபை பொங்கிக் கண்ணே மணியேநீர் வாருமென்ருர். (140)

(இ-ள்): –யாஸீன், தாஸீன், தாஹா, ஹாமீம், காபு, ஸாது, இந்தப் பத்து திருநாமங்களைச் சூட்டினன். இவ்விதம் புகழ்ந்து வணங்கி வரும்போது, முகம்மதியாவானது, றப்பை நோக்கி "காப கவ்ஸைனி" என்று திக்று சொல்லிற்று. அதைக்கண்ட றப்பானவன் ஆ! என் கண்ணே! மணியே! நீ என் சமுகம் வா! வா! என்று சவலை பாராட்டினன். எ-று.

வாரு மெனச்சொல்லி வருந்தினனே வருடமாயிரம் கோடி நீ ளம், பார வகலமு முயரநீளம் பதினறு கோணஞ்சரிநிதான, நூறு முகம்மதென் றிறையுரைத்தா னொடியிற் பறந்திறை திருமுன்வந்து, ஆறுநூருண்டு கோடிகாலம் அஹதும் அகுமதும் ஆசையாகும்.

(இ-ள்):— இவ்விதம் வா, வா, என்று ஆயிரங்கோடிவருஷ மட்டிலும் அழைத்தான். அந்த முகம்மதியாவானது அகலத்திலும் நிகளத்திலும் பதினறு கோணமாக நிரம்பிய ஒளிவாக எழுந்து நின்றது. அப்போது றப்புயாநூறு முகம்மது என்றழைத்தான் அந்தஉடன் முகம்மதானது சீக்கிரம் பறந்து வந்து தன்றப்பிடத்தில் வந்து நின்றது அழைத்த அஹதும் வந்த அகுமதும் அறுநூறு கோடி வருஷம் மட்டிலும் இஷ்கில் கலந்து பின்னிக்கொண் டிருந்தது. எ-று.

ஆசக்கானது அல்லாவுமாம் அண்ணன் முகம்மது மகுஹூபிக் குமாய், ஒசையாகவே பெரிய நாய னுரைப்பான் யாசபூ றென்று சொல்லி, நேசமாகவே முத்தொளிவு நெகிழும் யாறகீ மென்று சொல்லி, யாசையோசையா யாணும் பெண்ணு யனைந்தங்கிருந்தநா ளனந்தங்கோடி. (142)

(இ-ள்):— றப்பென்கிற ஆஷிக்குப், மூகமம்மதென்கிற மஉஷூக்கும் கலந்த காலங்களில் அல்லா "யாகபூர்" என்று திக்று சொன்னன். அதற்கு முகம்மதானது றப்பை நோக்கியா றஹீம், என்று புகழ்ந்தது, இப்படியாக றப்பும், மூகம்மதும் ஆணும், பெண் ணுமாக அனைந்திருந்தது. எத்தனையோகோடி வருஷங்களா. எ-று

அனந்த மாண்டுதானகண்ணுடிருக்கு மனந்தமாண்டுதா னுயந் திருக்கு. மனந்த மனந்தமா மனந்தங்கோடி. அஹதுப் அகம்மது மணைந்திருந்தே, இணைந்து பிரிந்து பின்னிறைமுன்னுகளிலங்கு முகத் தைப்பார்த் தேது சொல்வா, னுணர்ந்த துணைவனே யுயிர்த் தோழனேயோதுகிறேன்சற்றே கேளுமென்ருன். (143)

(இ-ள்:—இவ்விதம் இணைபிரியாமல் அணைந்திருந்த அஹதுப், அகுமதும் கோடானு கோடி காலம் பிரிந்தும் கூடியும் இருக்கும் போது றப்பானவன் முகம்மதை நோக்கி! ஓ என் பகுபூபே; என் ஹபீபே, ஒரு செய்தி சொல்லுகிறேன் கேளென்ருன். அதாவது:-
எ-று

என்றுந் துணையாக வுமைவகுத்தே னென்றே டிணங்கி நீ ரென்னுவிஞல், விண்டு பெருவீர்காண் மதலையாகவே ணபடைப்புக்கு மாதாவுநீ, ருண்டு படைப்பெரும் படைப்புக்கெல்லா மொழிவனு னல்லோ பிதாவுமானே, னன்ரு யென்னேடு முமையுங்கூட தாடார் நரகத்துக் கிரையாக்குவேன், (144)

(இ-ள்):— உன்னை நான் இவ்விதம் அன்பாக வைத்து என் நாவால் புகழ்ந்தபடியாலே, இனி நான் படைக்கும் சராசர கோடிகளுக்கெல்லாம் நீயே தாயாக இருப்பாய்? அவைகளின் கருப்பொருளாக நீ இருப்பது கொண்டு நான் உனக்கு தகப்பனுக இருப்பது கொண்டு நான் தகப்பனுக இருக்கின்றேன். நாம் இரண்டு வஸ்த்துக்களையும் நாடாத ஜனங்கள் யாவரும் நரகத்துக்கு அனுப்பி வைப்பேன். (இன்னும்)

ஆக்கையெடுத்தபின் னறிவினுலேயாருமொருதர முமையு மென்னை, நோக்கிப்பார்த்தவர் நமதுகுல தோக்கன் பிழையெல்லாம் பொறுத்துக்கொள்வேன், வாக்கி லுமைத்தள்ளி யெனைப்புகழ்ந்தால் வருத்தும் விதமென்ன தொகைதான் சொல்வேன், தாக்குமென துடமுளிவுகோபம் தரத்திலடங்காவென் றிறைவன் சொன்னுன்.

(இ-ன்):—சரீரம் இருக்கும்போதே நமது ரகசிய இல்முகளைக் கண்டு தரிசித்த பேர்களை நம்மோடு வந்து கலக்கும் படியாகச் செய்வேன். உனது சொல்லுக்கிணங்கி வழிபட்டவர்களின் பிழை களையும் பொறுத்து அவர்களை ஈடேற்ற மாக்கிவைப்பேன். உன் சொல்லுக்கிணங்காமல் தூஷிக்கும் பெருப்பாவிகளை நான் படுத்

தும் துன்பங்களை இவ்வளவென்று சொல்லமுடியாது. என்று சொன்ருன். எ-று.

சொன்ன விறைமுன்னே சுடமொழியுஞ் சோதிபெரியோனே யுருவிலானே, யென்னை யுருவமா யமைத்தகால மிலங்கு மதை யெல்லாம் வகுத்தகாலந், தன்னை யறிந்ததா லெனையுமுன்னேதாத் தினிலேயெல்லாம் வரத்தினள்ளு, மின்ன மெதுகேட்கிற்றடையில் லாம லிறையே யெனக்கு நீ கொடுப்பா யென்ருர். (146)

(இ-ள்):— றப்பானவன் சொன்ன இத்தனையும் முகம்மதானது கேட்டு றப்பே! என்னை நீ இத்தனை கோடி காலமாக வைத்திருந்த ரகசியத்தைக் கண்டு மூல இல்முகளில் தரித்து தவத்தில் இருந்து வரும் என் சீஷர்களுக்கு எனக் குரித்தானதெல்லாம் நீகொடுத் தருள்வாயா? என்று கேட்டது. எ-று.

கொடுப்பா யெனச் சொல்லக் கொடுத்தேனென்று குதறத் திறைமுத்தை கொழுகிப்பார்த்தான், கடுகி யிறைபார்வையறு கோணமாய்க் காணும் விருத்தமாய் நடுவிற்பச்சை, படவுற்றிரு கோணங் கருநிறமாய்ப் பத்திநெருப்பிலே முத்துவெந்து, நடுவில் ஹமீமாயொளிவு நின்ற நபியுமிறையு முன்னேகுதித்துநின்ருர் (147)

(இ-ள்):— இவ்விதம் கேட்க உடனே றப்பு என் ஹபீபே? அப்படியே கொடுத்தேன். என்று சொல்லினுன், சொல்லிவிட்டு உடனே றப்பு அந்த முகத்தை உறுக்கிப்பார்த்தான். பார்த்ததும் அந்தக் காங்கையால் அந்த முத்தானது ஆறுகோணமாக வட்ட வடிவமாக நடுவே பச்சை நிறமாக கோணங்களெல்லாம் கருநிற மாக ஆகி வெந்து நடுவே ஹாமீம் என்ற அட்சரத்துடன் ஜொலித்து நின்றது. எ-று.

நின்ரு ரிறைமுன்னே யொளியாய் நபி நீதி பெரியோனே அஹ தாயென்று, வன்றே யிறைநாறு முகம்மதென்றும் அகுமதே ஹாமீமெனவுரைத்தா, னன்ருய்முகம்மது லெப்பைக்கென்று நாய யன் பரத்திலே சுஜூதிலானுர், பண்டேயுரைத்திடு மொளிவுமுத் துப்பத்தியெரிந்துதே பாரத்தீயில். (148)

(இ-ள்):—நின்ற அந்த ஒளிவானது றப்பைப பார்த்து ''யா அஹது'' என்றுதிக்று செய்தது. அதற்கு றப்பு ஒளிவைப்பார்த்து யாஹாமீம், என்று, சொன்னுர். அப்போது முகம்மதானது

''லெப்பைக், என்று சொல்லி ஸஜதாவில் விழுந்து கிடந்தது அந்த உருகலான நெருப்பில் மேற்படி முத்தானது வெந்து நீறிப்போயிற்று. எ-று.

தீபட் டெரிந்த திருந்கோணமாய்த் திரண்டபுகையெல்லாம் வானமாக, வேர்பட் டொன்றுமே லொன்றுமாக வேழுதட்டுமா யிங்லகிநிற்கு, நேர்பட்ட முத்து வெந்துருகி நீரு மிருகோன முதி ரவன்ன, மேதபட்ட நீரி லெழுந்தநுரை யேகிதிறம்வெள்ளை திசை யுநாலே, (149)

(இ-ள்):— அப்படி வெந்த முகம்மதின் காங்கையானது. இரு கோணமாகிப் புகைந்தது. அந்தப் புகையில் நின்று ஆகாயம் உண்டாயிற்று. அப்பால் அந்த காங்கையானது ஒன்று மேலொன்றாக ஏழாக நின்றது. அந்த ஏழும் ஏழடுக்கானவானங்களாயிற்று, அப்பால் அந்த முத்திலிருந்து வியர்வை நீர் ஜொலித்தது. அதிலிருந்து நுரைகள் கிளம்பி நாலுபிரிவாகி அந்த நாலு திசைகளாகிற்று. எ-று.

நாலு திசையாகும் பூமியேழு நாயன் கிருபையா லமைத்த பின்பு, ஆல நிறைந்திடு மாதிநாயணண்ணல் முகம்மதேயெழுந்திருங் காண், பால னிருபைத்தைந் தறையிஸினற பஞ்சாக்ஷரத்தை நீர் படியுமென்று, ஞலம் நிறைந்திடும் அகுமதியா அல்ஹம் தெனச் சொல்லிப் படித்ததாமே. (150)

(இ-ள்):— அந்த நாலு திசைகளில் நின்றும் ஏழு பூமிகளான தீபகற்பங்களும் உண்டாயிற்று. ஸமஸ்த உலக பூஷணுதிகளும் சமைந்ததின்'பிறகு றப்பானவன் முகத்தை நோக்கி ''யாமுகம்மத் எழுந்திரு, என்று விளித்தான். உடனே எழும்ப, றப்பானவன்; ஒளிவை நோக்கி உன்னை இருபத்தைந்து ரகசியத்தில வைக்கிறேன் நீ நமது பஞ்சாட்சரத்தை உச்சரி, என்றுன். முகம்மது அல்ஹம்மதை திக்று செய்தது.

படித்தவுடனே தான் பஞ்சாசரம் பகுந்திங் கிருபத்தைந் தெழுத்தாய்விண்டு, விடுத்த அலிபைந்து லாமுமைந்து விளங்கும் ஹேயைந்து மீமுமைந்தா, மடுத்ததாலைந்து மிருபத்தைந்தா மாதி திருமுன்னே நிற்கும்போது, தொடுத்த வனைத்தையும் விடுத்துவல் லோன் சொன்ன வினைத்தேனு ன் முடியுமென்றே. (151)

(இ-ள்):—அந்த உடனே அந்த அல்ஹம்தான பஞ்சாட்சரமானது அலிபு ஐந்து, லாம் ஐந்து, ஹே ஐந்து, மீம் ஐந்து, தால் ஐந்து ஆக இருபத்தைந்தாகப் பிரிந்து விட்டது. அநத இருபத்தைந்து அட்சரங்களையும் ரப்பு நோக்கி என் நாட்டமானது இவைகளால் தான் முடிவடையப் போகின்றது என்றுன். எ-று

முடியு மெனச்சொன்னுன் முதல்வனுதி முன்னுல் அலிபைந்ததானவாறு மடிய முடிவல்லான் வேதமொன்று மாதி ஜிபுரீலு மீக்காயிலும், வடிவா மிசிருபீ லிகருயீலும் வல்லோன் மலக்கிவர் வலுப்பமோதான்; படியில்மனுருபநிறமேபச்சை பதினெண்ணு யிரமாலமெல்லாம். (152)

(இ-ள்):—என்ன ஹிக்மத்தால் என்றுல் அலிபின் ஐந்து விதத்தாலே வேதம், ஜிபுறீல், மீக்காயில், இஸ்றுபில், இஸ்ருயீல் ஆகிய இந்த ஐந்தும் வெளிவந்தது, இந்த மலக்குக்ளின் வலுப்பமாவது ருபமனுஷீகமாகவும், பச்சை நிறமுள்ளவர்களாகவும்; (இன்னும்)

ஆலம் பலதெல்லா மிடைதுகைமி லுணுப்போற் றெரிசிக்கு மாதிராஜன், காலனிகுருயீ ஞலுமுகங் காந்திமுகநிறம் அருபமாகும் வேலையுலகெல்லா மிடதுகையில் விளக்குப் பிடித்தாற்போல் விரிந்த ருபம், ஆலம் படைத்தவன் மீக்காயிலு மன்னருபமாய்ப் பறவையாமே, (153)

(இ-ள்):— பதினெண்ணுயிர ஆலங்களையும் தமது இடதுகைகளில் வைத்துத் தாங்கிறவர்கள் இவர்களில் மலக்கல் பெளத்து என்னும் இஸ்ருயீலோ நான்கு முகமும் கறியரெங்கு முள்ளவர் சில சமயங்களில் அருபியாகவும் இருப்பார். கடல் பாதாள உலகம் யாவையும் இடதுகையில் வைத்து விளக்கைப்போல் பிடித்துக் கொள்வரர் மீக்காயீலோ! அன்னப் பட்சியின் ருபத்திலுள்ளவர். எ-று.

பறவை யொருமுத்துப் பாதப்ரண்டு பாரமுகமொன்றுசிர சொன்றுதான் சிறகி ரண்டொரு சிறகுதனிற் சின்னச் சிறகுமெண்பதி னுயிரங், குறையாச் சிரகுக்கோ ிறதகோடி கூறுமிறகுக்கோர் கோடிரோம, முறையா மொவ்வொரு ரோமமதின் முகமுநாற்ப்பதி னுயிரமே. (154)

(இ-ள்):— இவர்க்குப் பறவையைப்போல் இரண்டு இடுக்கு கால்களும் பெரிய முகமும் தலையும் ஒன்றுதான் உண்டும். பறக்க

இரண்டு ரக்கைகள் உண்டும். அதில் சிறிதான சிறகுகள் எண்பதினாயிரம் இருக்கின்றன அதிலொரு சிறகுகளிலும் கோடாநு கோடி உரோமங்கள் உண்டும். ஒவ்வொரு உரோமத்தின் நடுவிலும் நாற்பதினாயிரம் முகங்கள் இருக்கின்றன. (இன்னும்)

முகமும் வாயு நாற்பதினாயிர மொழியு நாவுநாற் பதினாயிர
முதலநாவொன்று வைஞ்நாருண்டாமந்தவிரிவான நாளொன்றுக்குப்,
பகுமாநாற்பதினாயிரமாம் பாஷை பதந்திறை தனைப்புகழு, முகமை
யடங்காத ஜிபுரியீலு மொன்றே புருவடி வாகுந்தானே. (155)

(இ-ள்):—அந்த முகங்களில் ஒவ்வொன்றுக்கும் நாற்பதினாயிரம் வாய்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வாயிலும் நாற்பதினாயிரம் நாவுகள் இருக்கின்றன. அந்த நாவுகள் ஒவ்வொன்றிலும் நாற்பதினாயிரம் பாஷைகளுடன் றப்பை தஸ்பீஹு செய்வார் எ-று.

வடிவு பறவைதான் புருவின் ரூபம் வைர மரகத முத்துநிற,
படியிலிருபாத மொருமாணிக்க மழகு நவரத்ன மிருசிறகு, படி
கீழ்வாய்பச்சை மரகதமாம் பரிமளங்கரு பூரமஞ்ச, ளிருபுரஞ்சிறை
நாலுமவெட்டு விதமெட்டுச்சிற கிலங்கிநிற்கும். (156)

(இ-ள்):— ஜிபுறீலோ புருவின் ரூபத்தைப்போல் உள்ளவர் வைரம்போலும், பச்சை மரகதத்தைபோலும், முத்தைப் போலும் ரெங்குள்ளவர். இரண்டு கால்களும் மாணிக்கத்தால் சமைந்தவர் இருபக்கத்தின் இரக்கைகளும் நவரத்தின கஜிதங்களால் உற்பத்தியாயிருக்கின்றன. அவருடைய வாயானது மரகதத்தினுலும்கோமேதகத்தினுலும் உள்ளது. அதில் சதா நேரமும் அம்பர், கற்பூரப் பரிமள வாடைகள். மணந்துகொண்டேயிருக்கும், இரண்டு சிறகுகளும் எட்டு விதங்களான வர்ணங்களுடன் பிரகாசிக்கும். எ-று.

இலங்கும் வைரம்வெண்டரளமுத லிணையும்பச்சையுங்குங்கு
மமுந், துலங்கு மாணிக்கம்வைடூரியந் துதிபுட்பராகங்கோமேதக,
மலங்காரமான சிறகொன்றுக்கு மைம்பதுகோடியணியிறகு மிலங்கு
மணியாகச் சிறகொன்றுக்கு நாற்பதாயிறமிறகுமாமே. (157)

(இ-ள்): – அவ்விதம் இலங்குகின்ற சிறகுகளில் முத்துப்பவளம் பச்சை, கோமேதகம், நீலம், புட்பராகம், மாணிக்கம், வைடூர்

யம் முதலான ரத்னங்களின் பிரகாசத்தைக்கொடுக்கும். இந்த சிறகு எவ்வொன்றிலும் ஐம்பது இரகுகள் உண்டும், இந்த இறகு சிறகுகள் ஒவ்வொன்றுக்கும் இந்த இறகுகளில் சிறிய இறகுகள் எண்பத்து நான்கு லட்சம் உண்டும். (இன்னும்)

இறகிற் சிறிதான விறகொன்றுக்கு மெண்பத்துநாலு லக்ஷமுண்
டுங். குறையுஞ் சிறிதான விறகினிடங் கொண்டு பதினெண்ணாயிர
மாலமு, மறையுமறுஷோடு குறுசுசோர்க்கம் வல்லநரகேழ்பா தாள
லோக, நிறைய மூடிய இறகுதானும் நீளவகலமும் பெரிதுதானே.

(இ-ள்):— அதிலொரு இறகுக் குள்ளே பதினெண்ணாயிரம் ஆலத்தையும், அறுஷு குர்சு, லௌகு, கலம், பூமி, பாதளம், சுவர்க்கம், நரகமுதலானவைகளையும் வைத்து மூடிக்கொள்வார் அந்த இறகுகளின் அகலத்தையும், நிகளத்தையும் மட்டுப்படுத்த யாராலும் கூடாதகருமம். எ-று.

பெரியோன்திருமுன்னே வைந்துலாமும்பிரித்தே யீசன்னு
மையாளுடன், அறிய விஷ்ணுவும் பிரமாருத்ர னைந்துபேருமேய
மைத்தவாறு, முருவ நிலையிலே நினைத்த வன்ன முடையோன்
திருமுன்னேவைந்துஹேயும், பரிவாதம் ஹவ்வர். ஹசனுசைனும்
பாத்திமாவுடன் பஞ்சரத்னம்: (159)

(இ-ள்):—அப்பால்லாமுக்கு உள்ள ஐந்துவகையைக்கொண்டு ராட்சித ஜென்மங்களில் ஈஸ்பரன், பார்வதி விஷ்ணு, பிர்மா, ருத்திரன் இந்த ஐந்து பேர்களையும் உற்பத்தி செய்து மறுபடியும் அதின் ஹிக்மத்தைக் கொண்டே அவைகளுங் குறியன எல்லாம் படைத்தான். அப்பால் ஹேயிலுள்ள ஐந்து வகையால் பஞ்சத்தன்களான, ஆதம், ஹவ்வா, பாத்திமா, ஹஸன், ஹுஸைன் இந்த ஐந்துபேர்களையும் உற்பத்தி பண்ணினுன். எ-று.

ரத்ந மணியான தகுபீதன்னை ரம்மியமாக விறையெடுத்து,
மெத்தப் புகழ்ந்தானே நபிநாமத்தை மேதினியுயிர்க் கிரணமீயக்,
கத்தன் திருமுன்னேவைந்து மீமும் கண்ணின்மணி முத்தாய்த்
திரண்டதுதான், உத்த அபூபக்க ருமறு துமா னலியு *முவை சோ
டுந்துமாகும். (160)

(இ-ள்):—இந்த இரத்னங்களான ஐந்து மாணிக்கங்களையும் றப்பு தஸ்பீகு மணிபோல எடுத்து முத்திரமுகந்தான். அப்பால

* முவைசோடென்பது உவைகல் கறுனியோடென்பதாம்.

இந்த ஐந்தின் பறக்கத்தால் மேதினியெல்லாம் பெருகிஞானத்தை யறிந்து மோட்ச பதவியடையும் என்று சோபனஞ் சொன்னுன். அப்பால் மீமில் உள்ள ஐந்து வகையால் அபூபக்கர், உமறு, உதுமான், அலி, உவைசுல் கர்னீன் ஆக இந்த ஐந்து பேர்களும் உற்பத்தியானுர்கள். எ-று.

ஆகுப்விதமைந்து நின்றமுத்து மந்த விறைமுன்னே வைந்து நாலு, மேக னமைத்தனனெங்குமுன்ளோனின்னமிறையவனிருப் பென்பது, வாகி னறுஷோடு குறுசுமேலே வல்லோன் புறுக்கானி விறைதகுத்துப், பாகுந் தகுத்திலே முறையிருந்து பார்வை யணைத்துமே னிறைந்திருப்பேன். (161)

(இ-ள்):— அப்பால் தாலில் உள்ள ஐந்து வகையாறுல் அறுஷு குர்சு, லௌகு, கலம், புறுக்கான் என்னும் இந்த ஐந்தையும் உற்பத்தி செய்தான். செய்து அந்த அறுஷில் தன் நாட்டமென்னுந் ததுத்தில் வீற்றிருந்தான்.

நிறைந்தநாயக னிருக்கவென்று நிகரில் லாதொருதகுத்த மைத்தா, னிருந்த்ங் கதிகார நெறிநீதிக்கு மெடுத்த தகுத்த்லதெதினு லென்ருல், லிருந்த தாலேந்து மிறைமுன்ருக விருந்த தவிசதின் பாதநாலும், பொருந்தும் பஜிரெருடுலுகறசறு புகழ்ந்த மஹரிபு நாலுபாதம். (162)

(இ-ள்):—இன்னும் அந்த அறுஷுக்கு நாலு தூண்கள் நிற்பாட்டினுன். அந்தத் தூண்களாவன சுபுஹு லுஹறு அஸறு மகிறிபு, இந்த நாலுயாக இருக்கும். எ-று.

நாலு பாதமு நாலுநேரநாலுநேரமு நாலெழுத்தா, மேலுமெழுத்தொரு இசாவுமாகு மிதத்தி லடங்காத விரிப்புமைந்து, வாலுந் தவிசொடு பாதாநலுமைந்து தொழுகையு மைந்துநேர, மேலோன் றவிசிலே நுக் கத்தையூன்றிமெத்த அலிபாக வளர்ந்துநின்ருன் (163)

(இ-ள்):— அந்த நாலு தூண்களும் நாலு நேரமாக இருக்கும் அதிலொரு எழுத்தானது இஷாவாக இருக்கும் அதாவது றப்புடைய ஆசனமாக இருக்கும். ஆக ஐந்துஒகுத்தத் தொழுகையாயிற்று, றப்பு அந்த ஆசனத்தில் தன் பூர்விகமான நுக்தாவை ஊன்றி அப்பால் அலிபாக வளர்ந்து நின்ருன். எ-று.

நின்ற நிலே அல்லா அலிபுமாகு நிலேயி னடியிலோர் நுக்கத்து மாச்சே யென்ற நுக்கத்திலே யிறையின் ரூப மிலங்குந்தகுத்திலே யிருத்தங்காணு, மன்றே யிருப்பதைத் தாயுதித்தா னடியு முடிவில்லா னெடியநாய னன்ருய்த் தவிசினி லிறையிருந்து நபியா முகம்மதை நாடினுனே. (164)

(இ-ள்):— அப்படிநின்ற அல்லாவானது அலிபாக அதன் அஸ்திவாரத்தில் நுக்தா இருக்கிறது றப்புடைய ரூறத்தானது நுக்தாவில் தான் இருக்கிறது இருக்க மேற்படி இருப்பத்தைந்தாய் எழுந்துநின்ற முகம்மதை மறுபடியும் றப்பன் ஒருபார்வை பார்க்க நாடினுன். எ-று.

நாடி முகம்மதை நாயன்சொன்ன ஞலு வகை காற்று நெருப்பு நீருஞ் சூடிப் புவிநாலு முமதுதீனிற் சுருதி வருத்தியேவாரு மென்றுன் றேடி முகம்மது காற்றைக்கண்டு தீனில் வருத்தியே இசுருபீல்தானிடுஞ் சலத்திலே யடைத்துவைத்து நெருப்பைத் தேடியேபோனதாமே. (165)

(இ-ள்):— அவ்விதம் நாடிய றப்பானவன் முகம்மதை நோக்கி நீ போய் நாலுவகை பூதங்களான நெருப்பு, காற்று, தண்ணீர் பண் ஆகிய இவைகளே உமது தீனுல் இஸ்லாத்தில் சேரவைத்து விட்டு வா என்று சொன்னுன் உடனே முகம்மதானது முதலாவது காற்றைக்கண்டு தீனில் வரவழைத்து அப்பால் நெருப்பைத் தேடிற்று. அதற்குரிய இஸ்ருயீல் என்பவரைத்தன் றகுமத்தில் அடைத்து விட்டது. எ-று.

நெருப்பைச் சுருதியி னிலேநிறுத்தி நிகரில் லாப்பேழையதிலடைத்துக் கறுப்பு நிறமுள்ள இசுருயீல் தன் கன்னக் குவட்டிலே யடக்கிவைத்துச் சிறப்பா முகம்மது ஜலத்தைக்கண்டு செப்புங் கலிமாவி லொப்பாய்ச்செய்து மறப்பா மீக்காயீ லிடத்தில் வைக்க மண்ணும்வலிய வந்தேதுரைக்கும். (136)

(இ-ள்):—மேற்படி நெருப்பை வேதத்தில் அடைத்து அப்பால் அதை இஸ்ருயீலுடைய கன்னும்பட்டையில் அடக்கச்செய்தது. அதைக்கண்டவுடன் மீக்காயில் என்கிற ஜலமும் இஸ்லாமானது அப்பால் மண்ணும் வலியவந்தது. எ-று.

உரைக்கும் யாறசூல் யாஹபீபே யுங்கள் உதவி பதங்காணைப்
பெற்றெனென நிறப்ப மாய்நூறு முகம்மதுதா னெஞ்சு தழுவியே
மகிழ்ந்துசொல்லு மிறப்பும் பிறப்பில்லானுனக்கல்லாதேயெல்லாம்
பழுதாகு மிலங்குலாய்நீ சிரப்புஞ் சிபுரியில் பரப்புவியைச் சேர்த்தே
யிறைதிரு முன்னிற்சென்ருர். (167)

(இ-ள்),—வலியவந்த மண்ணை தமுகப்பதைப் பார்த்து யாற
சூலே! யாஹபிபே நான் உங்கள் பாதத்தைக் காணப்பெற்றதே
என் அதிர்ஷ்டம் என்றது அத கேட்டவுடன் முகம்மதியா என்
னும் ஒளிவானது அந்த மண்ணைப்பிடித்துத் தன் நெஞ்சில்
அணைத்து தழுவிக்கொண்டு ஏ மண்ணே! பிறப்பும், இறப்பும்,
உனக்கே உள்ளது என்று சொல்லிற்று அந்த உடனே ஜிபுரீலா
னவரை சேர்த்துவிட்டு அந்த மண்ணுடன் பழயபடி தன்றப்பிடம்
வந்தது. எ-று,

சென்ற முகம்மதை மகிழ்ந்துவல்லோன் சிறப்பாம் முஸ்தபா
நபியென்ரு னன்ருய் முகம்மது சஜதாச்செய்தார் நாயன் கிருபையா
லிணங்கிப்பார்த்தான் கண்டே யொளிவுதா னடுங்கி வேர்த்துக்
கருணைச்சுடர்மூன்று மூக்கில்விழ விண்டசுடர் மூன்று விருட்ச
மூன்ருய் வேதபெரியவ னமைத்ததாமே. (168)

(இ-ள்):— இவ்விதம் தன் சமுகத்தில் வந்த முகம்மதியாவை
றப்பு நோக்கி யாமுஸ்தபா என்ருன். அதைக்கேட்டதும முமம்ம
தானது உடனே ஸஜாதாவில் விழுந்தது. அதை றப்புஉறுக்கிப்
பார்த்தான் உடனே அந்த ஒளிவானது நடுநடுங் கிவேர்த்தது.
வேர்த்ததும் மூன்று ஒளிவு தோன்றி அப்பால் அந்த மூன்று ஒளிவு
களுப்மூன்று விருக்ஷங்களாகிற்று. எ-று.

அமைத்த விருட்சந்தான் தூபாவொன்ரு மறிய ஸிதுறத்துல்
முந்தகாவுஞ், சமைத்த விருட்சந்தானெனக்கீனதொன்று சங்கை
யொளிவைப்பின் னேக்கிப்பார்த்தா, னிமைப்பு னெடிக்கு முனெளி
ருபமாய் தீண்ட இறகுள்ள மயிலாகவும், மமைத்த வுருவாம பெண்
மயிலைப்பார்த்தே யந்த வெக்கினிலே யேறுமென்ருன். (169)

(இ-ள்):—அவைகள் சுவர்க்கத்தின் "தூபா" என்பது ஒன்று
"சிதுறத்துல் முன்தஹா" என்பது, என்று "எக்கீன்" என்பது
ஒன்ருகும். மறுப்டியும் அதை ஒருபார்வை பார்த்தான் அதா

னது, நிமை கொட்டி முழிப்பதற்குள்ளாக அழகிய பச்சை நிறப்
பிரகாசத்தையுடைய இரக்கைகளுடன் ஒரு பெண்மயில் ருபமா
யிற்று ஆண் அந்தப் பெண்மயிலை றப்பு நல்ல கிருபையுடன்
நோக்கி நீ அந்த எக்கீன் மரத்தில் ஏறிக்கொள் என்ருன் எ-று.

ஏறியிருந்ததே யெக்கீனின் மயில் பாசுவெனக்கூவுங்குரலோ
சையும், நூருயிரமாண்டாமதிலிருந்து நோக்கியிறையைப்பார்த்தே
துரைக்குந், தாராபுகழ்ச்சியு நிறைந்தவனே தனியேயிருக்கநான்
பயந்தேனெனப். பேரால்பெறியவ றைதிஞயன்பிரியத்துடனே தான்
பார்த்தானப்போ. (170)

(இ-ள்):— அதன்பிறகு றப்புடைய சொற்பிறகாரம் அந்த
மயிலானது எக்கீன் மரத்தில் எறியிருந்துயாஹூ என்று ஒரு லட்சம்
வருஷம் வரையிலும் திக்று செய்துகொண்டிருந்தது. அப்படி
யிருக்குங்காலத்தில் மயிலானது றப்பை நோக்கி புகழடங்கலுக்கு
முரியவனே இந்த விருட்சத்தில் நான் தனித்திருக்கிறதற்குப்பயமாக
இருக்கிறது என்று சொல்லிற்று அது கேட்டதும் றப்பானவன்
மிகுந்த அன்புடன் சொன்னதாவது:— எ-று.

பார்த்துப் பலபல புகழ்சியுள்ள பஞ்சரத்நபெண் றைந்து முத்தை
வார்தைக்கடங்காத ஹயாத்துல்கைபார் வாரிக்கட்ல்விளையாட
வென்று, பார்த்து மயில் முத்தைப் பருகுபபோது பதுங்கிக்கடலிலே
யடங்குமென்று, மேத்தமானதோர் மயிலைக்கூவி யிந்த முத்தைந்தும்
பருகுமென்ருன். (171)

(இ-ள்):—என் அன்புக்குரிய ஹபீபான மயிலே! பஞ்சரத்னம் என்
னும், ஐந்து முத்துக்களை ஹயாத்துல்கைபார்கடலில் உற்பத்திசெய்
திருக்கிறேன். நீ அந்த ஐந்து முத்துகளுடன் விளையாடிக்கொண்
டிரு? என்று உத்திரவு செய்து அப்பால் அநந்த ஆயிரம் வருஷங்கள்
சென்றபின் அந்த முத்துக்களைப்பிடித்து தின்னும்படியாக மயிலுக்கு
உத்திரவு பண்ணினை. எ-று.

பருகு மெனச்சொன்னுன் மயிலைப்பார்த்துப்பதுங்குமெனச்சொன்
னுன் முத்தைப்பார்த்தே, யுநவமொளிவைந்து முத்தானது மோகக்
க லிலே யுலாவுங்கோலம், பருகுங்கிருபையால் மயிலுமுத்தைப்
பார்த்தே யிருந்தங் கனந்தகால முருவமொளிவென்ற மயிலுமுத்தை
யோடியெடுத்ததை யுண்டுதப்போ. (172)

(இ-ள்):— மேலே மயிலுக்குத் தின்னும்படி சொல்லிவிட்டு இங்கே முத்துகளைப் பார்த்து நீங்கள் ஓடியொளியுங்கள் என்று கட்டளை செய்தான். மயிலானது முத்துகளை விரட்டும்போது அவைகள் ஓடுகிற பிரகாசத்தின் காட்சியைப் பார்த்துககொண்டு அநந்த ஆயிரம் வருஷங்களை மயிலானது கழித்தது. கடைசியாக மயிலானது முத்துகளைப் பிடித்து தின்னத் தொடங்கிற்று. எ-று.

அப்போ சுடர்விந்தாய் மயிலுஞ்சூலா யறுமூன்றுதா மண்ட
மீன்றே யொப்பா யடுக்கண்ட மாயிரமுமுவந்து பதினொண்ணு
யிரமாலமு மெப்பாய்ச் சமைந்தபின் வேறு ரூபம் வேணுமெனவல்
லோன் வேறேவைத்தே யொப்பாய்மொளின்யந்தாம் தரித்திருந்த
முத்தைத் திருக்கண்ணு லுவந்துசொல்வான். (173)

(இ-ள்):—இவைகளில் ஆயிரம் வருஷந்திற் கொரு தடவை ஒரு முத்து அதன் வாயில் அகப்படும். இவ்விதம் நான்கு முததுக்களைப் பிடித்துத் தின்றது அவைகளினால் அந்த முத்துக்களின் சுடரானது விந்தாகி சூல்கொண்டு ஒன்பது மாதஞ் சென்று ஆபிர முட்டைகளை இட்டது. ஒவ்வொன்றில் பத்து சிபத்துகள் இருந்தது. இந்த மூட்டைகளைப் பொறித்ததும் அவைகளிலிருந்து பதினொண்ணாயிரம் ஆலமும் வெளியாயின. அப்பால் வேறு ரூபங்களைச் சமைக்கவேண்டுமென்று தன் உஜூவிதென்னு முகத்தைப் பார்த்தான். எ-று.

உடை மயில்பார்வை கடலின்மேலே யுலாவுமுத்தொளிவெ
ளியிலாகக், கண்டு மயிலோட முத்துள்ளோடுங் காலமனந்தமாயி
ரமாண்டுபின், ஞென்றென் ருகவே நாலுமுகத்தை யோடிப்பருகியே
யுயரவேரிப், பண்டே யொருமுத்தை தெருகியாமற் பாதாளந்தனிற்
போனதாமே. (174)

(இ-ள்):—இந்த முத்து தான் மயில் தின்ற நாலு போக மீதமிருந்த ஒரு முத்து இந்த முத்து மயிலுக் ககப்படாமல் பாதாளத்தில் போய் ஒண்டிக்கொண்டது. ஆதியின் சொற்படி அந்த முத்தும் வரத்தின்ற உடனே மயிலானது பழயபடி எகீன் மரத்தில் ஏறியிருந்துக்கொண்டது. அப்பால் மறுபடியும் சூலாகி நான்கு மூட்டைகளையிட்டது. எ-று.

பாதாள முத்து மூலகில்வரும் பருகு மயிலுந்தான் முத்து
நாலை, வாதாள முத்து விந்துமாக வந்தப் பெண்மயில் சூலுமாகி

நீதப் விளங்த நால் முட்டையிட்டு நிகரில்லாக்குஞ்சு நாலதுதா
ஞதி யபூபக்க ருமறு துமா னல்ல திருப்பால சலியுமாமே, (175)

(இ-இ):— அந்த மூட்டைகளைப் பொறித்த வுடன் அவைகளில் நின்றும் அபூபக்கர், உமறு, உதுமான், அலியென்னும் நான்கு மஹாத்மாக்களான யார்களும் வெளிவந்தார்கள். எ-று

ஆகு மபூபக்கர் காகமாக வாதி யுமறுந்தான் கூகையாக, வாக
மிருவரு மயிலுடைய வலது புரத்திலே யிருந்தப்போ, வேகனுது
மாறு ராந்சைரூப பெங்கோ ஷலிப்புலி ராஜாளியா, யேகன் மயி
லிதி னிடப்புறத்திலிருந்த தைந்துமே யனந்தங்காலம். (176)

(இ-ள்):— அப்படி வந்த நால்வர்களும், நான்கு ரூபமாயிருந்தார்கள் எப்படி யென்றால் அபூபக்கரவர்கள், காகமாகவும், உமறு அவர்கள் கூகையாகவும், ஆக இந்த இரண்டு குஞ்சுகளும் மேற்படி மயிலுடைய வலது புரத்தில் இருந்தார்கள், உதுமான் அவர்கள் ஆந்தையாகவும், அலியவர்கள் இராஜாளியாகவும் மயிலுடைய இடது புறத்தில் இருந்தார்கள். எ-று

கால நெடுநாளாச மெக்கீன்மரத்திற் கத்தன் பறவையு மிருக்
கும்போதில், ஆலம் படைத்தோனை நினைத்துமயில் ஆ கீ கூ வென்
றோசை கூவி, வேலைப் பலகளை யெம்பிரானே யெனக்கேபசித்தாப
மெனக்கென்றதால். நாலு விதமான கனிபழுக்கு நாடி யருந்து
மென் றிறையுரைத்தான். (177)

(இ-ள்):— இவ்விதம் இருந்த குஞ்சுகள் நான்கும் வளர்ந்த காலங்களை யாராலுஞ் சொல்லத்திராணி கிடைக்காது. இப்படி ஐந்து பறவைகளும் இருந்து வரும்போது மயிலானது றப்பை நோக்கி ஹா ஹீ, ஹூ வென்கிற திக்றைச் சொல்லி யாறப்பி எனக்கு பசி அதிகமாக இருக்கிறது என்று கேட்டது கேட்டதும் றப்பு இந்த மரத்தில் நான்கு விதமான பழவர்க்கங்களை உற்பத்தி செய்கிறேன் தின்று கொள். என்று சொன்னான். எ-று.

இறையோன் திருமுன்னே வேதமாக விருக்குமொளியான
அலிபைப்பார்த்து, மறையாய்ப்பூம் பிஞ்சுதாய் பழமாய்மன்னுனைக்
கீனிலே செல்லுமன்றான், பொறையர மலருப்பூம் பிஞ்சுகாயாய்ப்
புகழுமெக்கீனிலே குறுஆன்பழம், நிறப்பொன பவளக்கால் பச்
முத்து நிறமைஞ்சுமயி லிஃதேயுண்ணும், (178)

(இ-ள்):—செல்லிவிட்டு தன் வசம் நீண்டு நிற்கின்ற ஆகார மென்னும் அலிபைப்பார்த்து அந்த மரத்தில் பூ, பிஞ்சு, காய் கனிகளாகும்படி சொல்'' என்றுன். சொன்னதும் அவ்வாறு ஆகி விட்டன. எப்படியானல் பொறுமை பூவாகவும் புகழ் பிஞ்சாகவும குர்ஆன் காயாகவும், தவ்ஹீது பழமாகவும் அலிபு தன் சிபத்களான பொன், பவளம், முத்து பச்சையாகிய நிறங்களையும் கொடுத்து விட்டது. எ-று.

அஞ்சுவிதமுண்டாய் ரசனையைந்துமைந்துவகை தீனையைந்து
முண்டே, யஞ்சுவிதமாகி யுலகமெல்லா மருந்துமை மூன்றுமொன்று
மூன்றுயப், பிஞ்சுபழமுங்காயிலேயும் பூவும் பிரிசத்துடனுன வித
மல்லவோ, மிஞ்சும் பதினைந்து இறையத்தென்று மிலத்திலறியமுன்
னிதைத்தான் சொன்னேன். (179)

(இ-ள்):—எகீன் மரத்தில் பழுந்த பழமானது வகையும் ஐந்து நிறமும் ஐந்து உருஷிகாமும் ஐந்து ஆக மூவைந்து பதினைந்து வகையானது பழங்களை மயில் தின்றதாலே கனுவுத்துக்கு பதினைந்து வகையென்று நான் மேலே சொல்லியிருக்கிறேன. எ-று.

இதைத்தா னருந்தின மகிழ்ச்சியாலேயாதல் ஐநாலிவல் இக்
குருமென்றே, யோது மயிலேத்தா னிறையுநோக்கி யொளிவு மயி
லஞ்சி யுடலம்வேர்த்தே, யாதியொளிமயிற்சிரசில் நின்றே யைந்து
மொளிகூட ரிறங்கும்போதி, லேதுங் குறைவில்லான் வேதமொன்
றையெடுத்து மகிழ்ந்துதன் திருமுன் வைத்தான். (180)

(இ-ள்):— இவ்விதவலுப்பமுள்ள பழங்கள் நாலையும்மயிலானது தின்ற ஆனந்தத்தாலே யாதல் ஜலாலிவல் இக்ரும்'' என்று திக்று செய்தது. அதை நோக்கிக் கேட்ட றப்பு மேற்படி மயிலே உறுக்கிப் பார்த்தான். உடனே மயிலின் சரீரமாதித்தமும் வியர்த்து ஐந்து விதமான ஒளிவு குலாவிற்று அவைகளில் நின்று புர்கானுல் அலி மென்னும் வேதமாகிற்று. எ-று.

வைத்தா னிறைதிரு முன்வேதத்தை வகையாய் நாலொளி
யாகும்வாறு, மெய்த்த பெருவெளி நாசூத்தொன்று மேலா மலக்
கூத்து மாடமொன்று. சுத்தப் பளிங்கிகண் ணுடியாலே சொன்னேன்
ஜெபறூத்து மிதுக்குமேலே, சுத்தன் லாகூத்து மொளிலாம் டள்ளி
காட்சி யிதினுலே சூட்சிதானே. (181)

(இ-ள்):— மற்ற நான்கு ஒளிவினுல் யாசூத்து ஒன்று மலக்கூத்து மாடமானது ஒன்று பளிங்குரத்னுகளாலே ஜபறூத்து மகாம் ஒன்று லாஹூத்து ஒன்று ஆக நான்கு மகாம்களும்வெளிமாயிற்று. எ-று.

சூழ்ச்சி விதனுலுமைத்த வல்லோன் சொன்னுனிறையவன்
மயிலேப் பார்த்துத், தாழ்ச்சி யணுகாத நாசூத்திலே தாவிவாரு
மென்றிரையுரைக்கச், காட்சி மயில்வந்து நாசூத்திலே கால்கொண்
டிருக்கவே புருவுமாச்சு, வீச்சு மமுதுகு மயிலறக்கைதான் விபமியுதறு
மென் றிறையுரைத்தான். (182)

(இ-ள்):— இப்படியான சூட்சத்தின் பிறகு றப்பு மயிலேக் கூப்பிட்டு நீ எகீன் மரத்தைவிட்டு நாசூத்துடைய ஆலத்துக்கு எழுந்துவா! என்றுன். அப்படியே மயிலானது வந்து நின்றது. நின்றவுடன் புருவாக ஆயிற்று. ஆனபுருவைப் பார்த்து உன் றக்கைகளை அடித்து உதறு என்று உத்திரவிட்டான், எ-று

உதறு [மெனச்சொன்னு னுதறும்போது வுரையி லடங்காத
பெருவெளிதா னிறையக் கடிகாகச் சொரிந்ததப்போ நீருண்டெ
னைத்தானே புகழுமென்றுன், மறையின் வழியென்னக் கேட்கும் புரு
மன்னன்ஹேறயோடு மிமைச்சேர்த்தே, யறியுக்காபோடு மீமுமொன்ரு
யந்தப் புருமுன்னே யாடிநிற்தும. (183)

(இ-ள்):— புருவானது தன் சிறகுகளை விரித்து உதரினஉடன் பதினெண்ணுயிர ஆலங்கள் நிரம்ப பொடிக் கடுகுகளாக நிறைந்திற்று ''இந்தக்கடுகளை ஒன்ரெுன்ரு கத்தின்று கொண்டு என்னைப் புகழ்வாயாக'' என்றுன். அவ்விதம் தின்ற உடன் விளையாடக் கூட்டாளிகள் யார் என்று புருக்கேட்டதும். றப்பு ஹே! மீ, இவைகளை அனுப்பிவைத்தான். இவைகள் புருக்களைப்போல் வந்து மேற்படி புருவுடன் ஆடி விளையாடிற்று. எ-று

கும் மெனச்சொலுங் கோடிகாலம் குகுமெனச்சொலும்
கோடிகால, மிப்மத் திருகோடி காலஞ்சென்று விருந்த கடுகதை
யருந்தும்புரு, நிம்மத் துடன்சொன்னுர் நாசூத்தினி னிரம்புங்
கடுகெல்லா மருந்தும்புரு வம்மை மலக்கூத்தில் வாருமென்றுன்
வந்தார் மாடத்தின் குயிலானதே. (184)

(இ-ள்):— இவ்விதம் வந்தக் கூட்டாளிபருக்களுடன் மேற்படி புருவானது தின்று கோடிவருஷங்கள் வரையிலும் ஹூப்! என்று திக்றுசெய்தது. அப்பால் அதைவிட்டு கோடிவருஷம் வரையிலும் குஹூம் என்றும் தம்! என்றுப் ஹிம் என்றும் திக்றுசெய்து அவ்வளவு கடுகுகளையும் தின்றுவிட்டது. அப்பால் றப்பு புருவைப் பார்த்து "நீ மலக்கூத்து மாடத்தில் வந்து விடு" என்று உத்திரவு பண்ணினன் அவ்விதமே புருவானது மலக்கூத்து மாடத்தில் வந்தது. வந்ததும் குயிலாகிவிட்டது. எ-று.

குயிலாய் மாடத்திற் கூவிநின்ருர் கூளிங் குரலோசை ஹக்கல் லாகு மயிலான புருக்குயிலுமாக மகிழ்ந்திரண்டிலக்கனந்தமரண்டா யகிலம் புகழான ஜெபறூத்திலே யன்னரூபமாயாடுமென்ருன் மயிலு மரகத அன்னமாக மன்னன் திருமுன்னே யாடிநிற்கும். (185)

(இ-ள்):— அவ்விதம் குயிலாகின முகம்மதியா வானது "ஹக் கல்லா ஹூ" என்று இரண்டுலட்சம் வருஷம் வரையிலும் கூவி நின்றது அப்பால் றப்பு அந்தக் குயிலைப்பார்த்து "நீ ஜபறுத்தில் வந்துவிடு" என்று உத்திரவு பண்ணினன். அப்பிரகாரம் வந்த உடனே அன்னப்பக்ஷியின் ரூபத்தில் ஆகிவிட்டது. அவ்விதமான அன்னமானது. றப்புடைய திருசமுகத்தில் நவின மான நடனமாடி நின்றது. எ-று.

ஆடி ஜெபறூத்தி லனந்தகால மந்தக்கண்ணுடி யொளிவுதனில் நீடு மது தன்னில் சுருபந்தனை நின்று பார்த்துத்தான் மகிழ்ந்து சொல்லும், பாடிப்பாடிகூ வல்லாவென்று பதினெண்யிரம் வருடம் சொல்லுந் தேடித் தவிக்கின்ற வன்னந்தனைச் சற்றே திருக்கண்ணி லிரங்கிப்பார்த்தான். (186)

(இ-ள்) — அப்படி நடனமாடிய அன்னப்பட்சியானது மேற்படி ஜெபறூத்தென்னும் கண்ணுடியில் தன் அழகிய சுருபத்தைக் கண்டு ஆநந்தங்கொண்டு றப்பை நோக்கி "ஹூ அல்லாஹ்" என்று பதினெண்ணுயிரம் வருஷம் வரையிலும் திக்று செய்தது இவ்விதம் தன் இஷ்கில் மூழ்கித் தேடுகின்ற அன்னத்தை றப்பானவன் தன் கருணைக்கண்ணுல் நோக்கினன். எ-று.

பார்த்தா னிறையவ னுசையாலே பாக்கப் பளிங்கிப்போற்பூண் டாரப்போ நேர்த்திச்சுடரான விறையினுதநே ரேயிறங்கிப்பொருண்

னன்மீதி, லார்த்து வாரன்ன மீதிலங்கி யாகமுழுதுமே நிறைந்த தப்போ, மெத்த மகிழ்ந்துதா னுடல்பூரித்தே மேனி நிறையத்தான் வேர்த்ததாச்சே (187)

(இ-ள்)— அந்தக்கிருபைப்பார்வையால் அபுருபமாக ஒருவித ஒளிவானது பொங்கி ஒரு ஜூப்பாவைப்போல் வந்து அன்னத்தின் மேனியில் பொருந்தினது அந்தக் காங்கையால் அன்னம் வேர்த்தது எ-று.

வேர்த்த வுலகந்தான் ஜலமானதால் விப்மி யிறகெல்லாமுதறும் போது, வேர்த்த நீர்த்துளி விந்துநாதம் வெள்ளை நிறக்காமம்வெகு சுடராம், பார்த்து றகுமத்துப் பாற்கடலிற் பாரமழைபோலே யுலகினிடந், தூற்றல் சொரிமழை மின்ஞெளிபோற் ருலையாதா யிரம்வருடமட்டும். (188)

(இ-ன்):— அந்த வேர்வைதான் உலகத்துள்ள சப்த சாரங்களும் உண்டாயிற்று, அப்பால் ஒரு மாதிரிப்பட்ட பூரிப்புண்டாகிதான் இரக்கைகளை உதறினது, அதிலிருந்து விழுந்துளிகளெல்லாம் உலகத்தின் ஜீவராசிகளின் மோகத்திலுள்ள இந்திரியங்களாக நிர்மித்து அதில் நின்றும் பளீர்ப்பளீரென்று சுடர்வீசி மின்வெட்டி இடியிடித்து ஆயிரம் வருஷகாலம் வரையிலும் ஒரே சோனுமாரியாக மழை பெய்தது

வருடமாயிரந்தொலையாமழை வானெருயிர்மற்றப்பல் லுயிரும், பிரிச முடன்சொன்ன றகுமத்தென்னும் பெரியோன் கடலிலே யிறங்குநாதம், வரிசை றகுமத்துப் பாற்கடலாம் வகையாயுயிர்க் காமம்வந்துகூடிக், கரிச முறவல்லோன் ஹயாத்துல் கைபார் கனகக் கடலென்றே பேரும் வைத்தான். (189)

(இ-ள்):— ஆயிரம் வருஷம்மட்டும் பெய்தமழையானது திரு பாற்கடலாகக் கூடிற்று, அதில் உலகத்தின் கல்குகளின் ஆத்மாக் களையும், ஹைவான்கள், ஜின்கள் முதலான ஆத்மங்களையும், நிரப்பி மோகத்தையும் அடைத்து அதற்கு றப்பன் ஹயாத்துல் கை பார்க்கடல் என்று திருநாமம் இட்டான். எ-று

வைத்த கடனுமம் ஹயாத்துல்கைபார் மன்னு முயிரெல்லா நிறைந்ததெப்போ கத்தன் லாகூத்தி லன்னத்தனைக்க, டுகவாரு

மென்றுரைக்கும்போது, வெற்றி லாகூத்தில் வந்ததன்னம் வேதவுல
மாக்கள் வடிவுபோலே, சுத்த மூலுவுடன் மறையுமோதித் தொழுகும்
லாகூத்துப் பள்ளியிலே. (190)

(இ-ள்):— இவ்விதமானவுடன் அந்த அன்னத்தை லாஹூத்தெனனும் மகாமில் வரும்படியாகச்சொன்னுன் அன்னமானது அப்பிரக்காரம் வந்த உடன் இன்ஸான்களின் நின்றும் உலமாக்களின் ரூபத்தில் ஆயிற்று ஆகி வேதங்கள் படிப்பதும் லாஹூத்தென்னும் பள்ளியில் தொழுகிறதுமாக இருந்தது. எ-று.

தொழுது லாகூத்துப் பள்ளியிலே சுஜூதிலிருந்ததேயனந்த
கால, மெழுதமுடியாமல் கலிமாவுயிரி ருக்குமுன்ரெருவெழுத்துமாக,
முழுதும் கூவென்ற வெழுத்துமீமா முஷாகிதா நிலேமூளேயிருத்திப்
பழுதிலாநபி யொளிவிலங்கிப் பள்ளிலாகூத்திலிருக்கும்போது

(இ-ள்):— அவ்விதம் தொழுது இல்லாஹூ வென்னும் திக்றைக் கொண்டு முஷாஹிதா முதலிய நிஷ்டைகளெல்லாம் செய்து கொண்டு அநந்த கோடிகாலமாக ஸுஜூதில் இருந்து வணங்கி வந்தார். எ-று.

இருந்தார் லாகூத்தி லொளியாம்பி யெங்கு நிறைந்தவ
ஞதிஞய,னிறைந்த வகையெல்லா மொரு நினைவால்நினைந்தநினை
வல்லோவறியவேனும், பறந்த மயில்பதி னெண்ணுயிரம் பண்டு
பெறுமந்த வண்டமெல்லாஞ், சிறந்த மயிலென்ற ஆலமொன்ருஞ்
சிறப்பா யுலகேழும் வானமேழும். (192)

(இ-ள்):— லாஹூத்தில் ஒளிவாயிருந்த முகம்மது நபியவர்கள் தன் ஒரு நினைவாலே இந்த உலக கோடிகளை சிருஷ்டித்துப் பல நினைவால் கலந்திருக்கின்ற றப்பை அறிவதுதான் மனுஷிகத் தன்மை. நபியவர்கள் மயிலாக இருக்கும்போது ஆலம் யாவும் படைக்கப்பட்டதாலே ஒரு ஆலத்துக்கு மயிலென்று பேறுமாயிற்று, அந்த உலகந்தான் பூலோக மென்பது. எ-று.

எழுவானமு மேழுபூமி யேழுகடலோடு மேழுதீவு, நாளுங்க
திர்மதி நரகுசொர்க்க நாலாவகைசைரி தனினம் வேரு, மேலும்புற்
பூடுபதவுயிரு மேனிபலவைகை யொருவகையிற், கோலம்பலரூபம்
குலமும் வேருய்க் கூறத் தொலேயாத கோடி கோடி. (193)

(இ-ள்):—இன்னும் அந்த மயிலின் தர்ஜாவைக்கொண்டு எழு கடல், ஏழுபூமி, ஏழு, வானம் ஏழு பூமி, நரகம் பாதாளம், மலே, முதலிய யாவற்றும் படைத்து, பாஷைகள் வேறு வேருகவும், புல் பூண்டு மாமட்டைகளும், இனம் வேருகவும், சரீரம் வேருகவும் படைத்தான் அவைகளை யாராலும் எண்ண முடியாது: எ-று

கோடி யடங்காமல் ஆலமென்று கொடுத்தேன் பதினெண்ணுயிர
ஆலமு, நாடும் படைப்பெல்லாம் வேறு வேருய் நபியும் வேதமுந்
தானுமொன்ருய்ப்; பாடுஞ்ஜிபுரீல் பரப்புவியைப் பதினெண்ணுயிரம்
பங்கு செய்து, ஆடிப்பரந்து முன் னெழுந்தபுகை யாலம் பலதுக்கும்
வானமாக.

(இ-ள்):— இப்படிச்செய்த பதிணெண்ணுயிரம் ஆலங்களிலும், நபிவேறு மார்க்கம்வேறு, வேதசாஸ்திரங்கள் வேறு. ஆகவும் தானே எல்லா சமயங்களுக்கும் ஒரே தெய்வமாகவும், செய்து ஜிபுரீலே எழுந்து பறக்கும்படியாகக்கட்டளை செய்தான். அவர் பறந்தபோது அவரின் இரக்கைகளில் அதறடியால் ஆலம்கள் பதிணெண்ணுயிரம் பங்குகளாகப் பிரிந்ததுமல்லாமல் அவர் பறந்த காங்கையின் புகையாலே ஆகாயங்கள் உற்பத்தியாயிற்று. எ-று,

வானம் புவியேழு மண்டமொன்று வருடமைஞ்னுறுவழியின்
தூர தானே புவியேழும் வானமேழுந் தடிப்பு மிடையுமே சரிவகையா,
மான வகையாலந் தன்னேப்பார்த்தே யதின்மேலேதானுமறுஷா
நிற்கத், தானே அருஷின்மேல் குறுகமாகத்தறுகாவதற்குமேற்
றகுத்தை வைத்தே. (155)

(இ-ள்):— ஜிபுரீல் பறந்த தோற்றத்தாலே பிரிந்த ஆலங்கள் ஒன்றுக்கொன்று ஐஞ்ஞாறு வருஷத்தின் தூலே தூரமானது, அதற்கப்பால் அறுஷுடைய ஆலம் தோன்றிற்று. அதற்குமேல் * பீடமொன்று தோன்றிற்று, எ-று.

தகுத்தி லிருந்திறை ஸமதுமாகத் தானே யரசாளவேண்டு
மென்று, நுகத் தலிபெங்த நிறைந்திருக்க நோக்கம் பலதெல்லாந்
தானுகவும், முகக்கு நெருப்போடு காற்றுநீரு முலகம் பலதெல்லாம்

---

* பிடமென்பது தான் குருசு என்று சொல்கின்றது. குருசு என்பது பரிபாஷைக்கிளவி, யென்றுணர்க

புகுதுவதும், ஹக்குத் தானென் றேதனைப்புகழக் கருணைப்படைப்
பெல்லாம் ஹயாத்துமாக, (196)

(இ-ள்):— அந்த பீடத்தில் றப்பு அமர்ந்துகொண்டு தன் நுக்தாவின் வல்லபத்தைக்கொண்டு பலபல படைப்புகளை தன் ரூஹ்த்தின் தோற்றப்பொருள்களாகவும் வரவேண்டிய காரணங்களாக பூதங்களால் ஏற்பாடு செய்து ஹயாத்துல் கைபார் என்கிறகடலில் அடைத்தான். எ-று.

ஹயாத்துல் கைபாறுக் கடலினிறில் காக்ஷியுயிரெல்லாந்தான்
படைத்து, தயாத்தி லெண்ணுன்கு படைப்புக்கெல்லாந் தானேயு
யிராகவிருக்கவென்று, சிபாத்தைமுப் பதுவில ம்பொருந்திச் சிறந்த
யிலகுயிர்பெருக்கவென்று. மவுத்தினலேதா னழிவதும் வருமைதனில்
தன்மை கேட்பதுவும். (197)

(இ-ள்):— அந்த நீரில் உயிர்களை எழும்பச்செய்து முப்பது பாங்குகளாக தன் சிபாத்தைப் பிரித்த மவுத்து என்பதில் உயிர அழியவும், நன்மை, தீமை கேட்பதும் ஆகியவைகளையும் கற்பித்தான எ-று.

நன்மை தீமைதா னுலகந்தனி னடப்பா யினித்தொகைசெய்தது
வுந், தின்மை யிபுலீசு நரகுசோத் தீனு னிறைநபிதெளில்சொர்க்கம்
வண்மையமைக்கின்ற விதங்களெல்லாம் வல்லோனெடிக்குமு
னெருநிலேவா, யுண்மை நினைத்தேனன் முடியுமென்றே யுரைத்தான்
குன்னென்று முடையவனே. (198)

(இ-ள்):— உலகத்தின் நன்மை தீமைகளும், இபுலீசுடைய பாதையாகிய நரகத்தின் பட்டோலைகளும், நபியுடைய பாதையாகிய சுவர்க்கத்தின் தங்கரீகங்களும், இதனுலேயே ஆகுமென்றும் குன்னென்னும் மொழி கூறினன். எ-று.

குன்னென்றெழுந்ததி ரண்டுமாகுங் கூறுமெழுமன் றுமைந்தி
னுலே, குன்னென் றுரைக்கவே பயக்கூனென்றுங் கோலமிறைய
வனினைப்பதெல்லாந், தன்னுலமைத்தோமென் றனைத்து மொன்ருய்த்
தானே கபூலுக்கு எமையும்போது, மன்னன் குதறத்தாற் கடலுரிமை
மகிழ்ந்தி திருமுன்னே யமைத்தவாறேன். (199)

(இ-ள்):— குன் என்கிற எழுத்தாகிறது. இரண்டு அதன் விபரமாவது ஐந்தாகும், கல்குகளைக் குன் என்றெழுப்பிய வுடன் கல்குகன் பயக்கூன் என்றெழிப்பிற்று.

அமைத்தவிதமேதால் முஹர்றமாத மாதிரு முன்னேயுரு
வாழுந்த, வகுத்த நாளைந்து ஞாயிறன்று வல்லோ னுலகானருப
மொன்றைப், பகுத்துப் பதினெண்ணு மிரவிதமாய்ப் பாரப்புவி
யேழுங்கதிர் வெவ்வேறுந், தொகுத்தவாகு நாட் டிங்களென்று
தொலையாப் புவிக்கெல்லாம் வானமேழாம். (200)

(இ-ள்):— அவ்விதம் சிருஷ்டிகள் அறுவாஹில் எழுந்தது முஹர்ற மாதமாக இருக்கும். நாளாகிறது முதல் ஞாயிற்றுக் கிழமையாக இருக்கும். இதற்குள்ளேஎல்லா ஜாதிகளும் உற்பத்தியாயிற்று. எ-று.

வான முதல்வெள்ளி பசும்பொன்ரண்டு வைரமூன்று வெண்
டானநாலா, மான மாணிக்க மைந்தாம்வான மதின்மேலாறுதான்
புட்பாரகந், தோனு மரகதம் பச்சையாகுந் துலங்கும் வானே
ழும்விதமேழுமாந், தானே நிலேப்படந் தணில்லாமற் றரித்தமீனெடு
மதியுப்ரண்டே. (201)

(இ-ள்):— ஞாயிற்றுக் கிழமையில் முதல்வானம் உண்டாயிற்று அது சுத்த வெள்ளயாலானது. இரண்டாம் வானம் திங்கள் அது பொன்னுக இருக்கும். மூன்ருவானம் செவ்வாய் அது வைரமாக இருக்கும். நாலாம் வான வானம் புதன் அது முத்தாக இருக்கும் ஐந்தாம் வானம் வியாழன் அது சிகப்பு மாணிக்கமாகஇருக்கும். ஆரும் வானம் வெள்ளிக்கிழமை அது புஷ்பராகமாக இருக்கும். ஏழாம் வானம் சனி அது நீல்முதலிய பல் ரத்தினங்களாலும் உற்பத்தியாயிற்று. எ-று.

மதியும் பலபல லெவ்குக்கலம் அந்தவானேழி லுள்ளதெல்
லாம், பதியா யருஷுமேற் குறுகவைத்துப் பாங்காய்க் குருசு
மேற் றறுகாவுமா, யிதமா யமைத்துமேற் றவிசையேற்றி யெங்கும்
ஸமதாகவிரைநிறைநது, விதனைச்சுமந்ததில் அருசதனையிறையோன்
மலக்கல்லோ வேந்திகொண்டார். (202)

(இ-ள்)— சூரிய சந்திரர்களும் அந்த வானத்தின் முகடுகளின் வழியாக ஓடியாடவும், லௌஹுல் கலம் குர்சு முதலானவைகளும் அந்த அருஷைச் சுற்றிச் சுழலவும், கிரஹங்களான நட்சத்திராதிகள் பூத்து நிற்கவும், றப்பு தன் ஆசனமாகிய பீடத்தில் வீற்றிருந்து ஸமதான கோலத்துடன் அமர்ந்தான். எ று.

எந்து மறுஷதின் வலுப்பமேதா லெழுபத்திராயிரம் வீதியாக,
* எந்து வீதிக்குங் குறையில்லாம லெழுபத்திராயிரமுத்துச்சர,
மீந்தபெரிதானசாமொன்றுக்கு மைப்பதிஞயிரமாணிமுதது. மேந்
தமுத்துமே சரிதிதான மெமுவான் புவிக்கு மேலதிகமாகும். (203)

(இ-ள்):— இவ்வளவு கனதியுள்ள அறுஷை ஒரே ஒரு மலக்கு தன் கையால் ஏந்தி நிற்கவும், அறுஷின் பெருப்பமாவது எழு பத்தீராயிரம் வீதியுடையதாகவும், வீதி ஒன்று ஒன்றுக்கும் ஈழு பத்தீராயிரம் முத்துச்சரங்கள் தொங்கவும், ஒவ்வொருசரத்திலும் ஐம்பது ஆயிரம் ஆணிமுத்துகள் இலங்கவும், ஒவ்வொரு முத்துக் களும் இந்த உலகத்தைப்போல் ஐம்பதாயிரம் உலகத்தின் திண்ணம் கொண்டது. எ-று.

அதிகம் பெரிதாக விளங்குமுத்து மடுத்த முத்திடைவைஞ்
நூறுண்டும், விடுத்த சரத்துக்கோர்சரத்தினிடை விரிவு பதினெண்
ணுயிரமாண்டுதான், ளெடுத்தசரம் பச்சை மரகதமாந் துலங்கு
வரத்நச் சுடருமாகும், பதியாயமைத்திறை தவிசிருந்த பாரம்பெரு
நாளாந் திங்களாறே (204)

(இ-ள்):— இந்த முத்துக்கள் ஒன்றுக்கொன்றுக்கிடை ஐந்நூறு வருஷத்து துலைதூரம், ஒரு சரத்துக்குச்சரம் இடையே பதிணயிர வருஷம் துலைதூரம் அந்த சரங்களின் ஒளிவுகள் நவரத்தின ஒளிவு களும் தரும். றப்பு வீற்றிருந்தநாளாகிறது பெருநாளாகும். இன் னும் ஆரும் திங்கட்கிழமை என்பதுங் கூடும். எ-று.

ஆறு திங்களி லடுத்தசெவ்வா யாழம நரகேழுமொயிலோடையு,
நாறுஞ் சுணையோடு நடக்கும்பால நஞ்சுவிடப்பாம்புதேழுங்காலி,
நிறு படுமேழு தகரலோக நிசானிநாகுக்கோர்கோடி தலந், தாறு
தலத்துக்கோர் கோடிமாளி யதற்கு மாவுதே ளனந்தமாகும். (205)

(இ-ள்):— திங்கள்போக அடுத்த செவ்வாய்க்கிழமை யன்று ஏழு நரகங்களையும், வைலுண் என்கிற அக்கினி யோடையும் நாற்றம் பொருந்திய குளிகளையும், சிருத்துல் முஸ்த்தக்கீன் பாலத்தையும், பாம்புசள் தேள்கள், நட்டுவக்காலிகள், பூரான்களையும், நகரத்து ஸபானியாக்கள், நிஷானிகள், செவிட்டு மலக்கு, ஆறு அடுக்கு நெருப்பு ஸ்தம்பங்கள், இருட்டு அறைகள் முதலானவைகளும், கோடிகோடி அக்கினி வீடுகளும் படைக்கப்பட்டது. எ-று.

* ஏந்த வீதி எந்த வீதி

அனந்தந் சதளதின் வலுப்பமேதா லைஞ்நாருண்டும் வாலினீ
அஞ், சுமந்த கடைவாலி லொன்பதாகுஞ் சுமந்தவிடமதி லனுவெ
டுத்தே, யமைந்த வானேழு முயரவைத்தா லந்த வானேழுந்தெ
றித்துப்போகு. மனந்தங் கோடிதானரகந்தன்னை யாதியமைத்த
நாட்செவ்வாயேழே. (206)

(இ-ள்):— அந்த நகரத்தின் கொடியவிஷஜெந்துக்களின் நின் றும் ஒரு தேளாகிறது அதன வால் கொடுக்காகிறது. நீளத்தில் ஐந்நூறு வருஷத்து துலைதூரம் உண்டும். அதன் நுனியில் நின்றும் ஒரு கடுகு அத்தனைப் பிரமாணப் விஷத்தை எடுத்து ஏழு வானத்தி லும் தொட்டு வைத்தால் எல்லா வானமும் அப்படியே இடிந்து போகும். இப்படியாக கொடியதுகளெல்லாம் படைக்கப்பட்டது செவ்வாய்க் கிழமையாக இருக்கும். எ-று.

ஏழு நிலைசெவ்வா யெட்டாம் புத னெட்டுச் சுவர்க்கமுமிலங்
குமொன்று, யேழு மலர்களில் பானெய்தேனு மேவி யுடைமது
மிகுமணமும், வாழும் ஜென்னத்து வஸ்துகளும் வையமணற்சோலை
கூறுல்கீனு, நாளு புதனெட்டின் முடிந்த நாளாம் நல்ல வியாழன்
தானென்பதாமே. (207)

(இ-ள்):— ஏழு போக எட்டாம் புதன்கிழமையன்று எட்டு சுவர்க்கங்களையும் படைக்கப்பட்டது பால், நெய், தேன், கன் மணம், தேவதா இன்பம் முதலான அறுவையுடைய ஹௌலல் கவ்தர் எனும் நதி, இன்னும் சுவர்கத்து வில் தான் ஹூறுல் ஈன் கற்பச்சோலை காமதேனுவு முதலான எல்லாப் பாக்கிய சௌபாக்கி யங்களும் படைத்து முடிக்கப்பட்டது. எ-று.

ஒன்பதாய் வந்தநாள் வியாழ முடையோ னமைத்திடு முயிர
னைத்து, மின்ப துன்பமும் பாவ நன்மை யிலையும் புற்பூடு மிமை
யோர்களும், வன்பு ஷைத்தானும் பரியுந்தேவும் வாரி யுயிர்ஜின்னும்
நவமேகமு, மன்பா யமைத்தநாள் வியாழமாகு மடுத்த பத்தாநாள்
வெள்ளியென்றே. (208)

(இ-ள்);— ஒன்பதாவது வியாழக்கிழமையன்று உலகத்தின், நன்மை, தீமை, மரங்கள், புற்பூண்டுகள் ஜின்கள், பசாசுபூதங்கள் மலக்குகள், பலக்குகளும், ஒன்பது வகையான மேக்ங்களும், அமைத்தான். எ-று.

வெள்ளிக்கிழமையிற் பகற்பாதியில் வேத னுலோடுங் சுருபு
நூறும், விள்ளத் தொலேயாத தவநிலேயும் விதமும் பகற்பாதி
யிறைவன்பாக, வுள்ள படியே தானமையுப்போது மொருமித்து
றைய னமைத்ததெல்லாம். விள்ளுமிறையவன், பரத்தை நோக்கி
விரும்பிச் சுஜூதிலே விடிந்த நாளாம். (209)

(இ-ள்):— வெள்ளிக்கிழமையன்று பாதிப் பகலேலலே நாலு
வேதங்களும், ஸுஹுபுகளும், மஅரிபா உடைய இல்முகளேயும்,
படைத்து மற்ற பாதிப்பகலேயில் படையுண்டெழுந்த எல்லா சிருஷ்டி
களும் ஆண்டவனேநோக்கி ஸாஷ்டாங்கம் செய்தது. எ-று.

விள்ளும் சுஜூதிலே படைப்புக்கெல்லாம் வேத பெரியவன்
பரிமானமாம். உள்ள வுயிரான படைப்புக்கெல்லா மொளிவுந
னென்றே யுனந்து நிதம், வெள்ளிவணக்கம்போ ளிதம்வணங்க
வேதமுறைசொல்லிப் படைப்புக்கெல்லாம், வள்ளலிறையவன் தனி
திறுத்தி வல்லோ னுதத்தைமுன்னே வைத்து. (210)

(இ-ள்)— இன்னும் அந்த நாளேயில் கல்குகள் தன்னே வணங்
கினபிறகு அல்லாகுத் தஆலா தன் உஜூதை ஆதமுடையநெற்றி
யில் ஏற்றி எல்லாரும் இவர்க்கு ஸுஜூது செய்யுங்கள் என்று
ஏவ. (இன்னும்)

ஆதம் சிரசதின் முகம்மதவ கழகாமொளியினி லணுப்போல்
வைத்து வேத பெரியவ னுரைத்தபடி விழுந்து சுஜூதிலேவிழுந்த
தெல்லா, பாதி விழுந்ததும் விடுகாததும் படைப்பிற்பலவிதமாகும்
போது, சோதி முகம்மதைச் சுவர்க்கமீதிற் சூழந்த கொலுவி
லேயரசிருத்தி. (211)

(இ-ள்):— மேற்படி ஆதமுடைய நெற்றியின் கண்ணே முகம்
மதிய்யாவின் நிறைந்த ஒளிவில் நின்றும் ஒரு அணுத்தனே ஒளிவை
வைத்து, ஏவினதும் உடனே சிருஷ்டிகளெல்லாம் ஸுஜூதில்
விளுந்தன அவ்விதம் விழுந்ததில் இருவிதமாயிற்று பாதிசம
மதங்கொண்டு விழுந்தன அதெல்லாம் இன்ஸான் பாதி சபமதி
யாமல் விழுந்தன அதெல்லாம் பலபல கோலமான படைப்புகளாய்
விட்டன. எ-று.

இருந்த சுவர்க்கசிங் காசனத்தி லெல்லாப் படைப்புக்கு மிக்
றையுரைத்தான் பொருந்தி முகம்மதை நடுவில் வைத்துப்போற்

றிச்சிங் காசனத் தெழுதரமாய், நிரம்பும் பிரகாசஞ் சுற்றிவந்து
நீண்டபதத்திலே பணியவென்றே, யிறப்பும் பிறப்பில்லான்ருன் விபர
மெல்லாப் படைப்புக்கும் பரிமானமாம். (212)

(இ-ள்):— அப்பால் றப்பானவன் முகம்மதியாவை ஒரு எவ்
வர்ணமான சிங்காசனத்தில் உட்காரவைத்து சிருஷ்டிகளே நோக்கி
இவரை வலஞ்சுற்றி வாருங்கள் என்ருன். அவ்விதமே உலக
கோடிகளெல்லாம் முகம்மதியாவை பிரதக்கணஞ் சுற்றி வந்தன
எ-று.

எல்லாம் படைத்தவ னுரைத்தபடி யெழுந்த வுயிரெல்லா
மொருதிரளாய்,மெல்லக் கடலேழுந்திரண்டுபொங்கி விம்மியெழுந்
தாற்போ லொருகூட்டமாய், வல்லோன் சுவர்க்கசிங்காசனத்தின்
வள்ளல்முகம்மதை நடுவேவைத்துத் துள்ளி விழுந்தோடி யேழுதரஞ்
சுற்றிப் பதத்திலே சுஜூதுசெய்தார். (213)

(இ-ள்):— கடல் வாழ் ஜீவராசிகள் முதலான யாவற்றும்,
ஜின்களும், நலகோடி ஸமஸ்தஜீர்மங்களும் நமது முகம்மதியாவை
வலம் சுற்றி வந்து ஸுஜூதும் செய்து வாழ்த்தி நின்றன. எ-று

செய்தசர் பதநோகத் திருச்சரணஞ் செய்த குழுவெல்லா
மெழுந்து நின்று, வையமுலகெல்லாம் புகழுமெங்கள் வள்ளல்
முகம்மது வடிவைப்பார்த்தார், மெய்யின் முழுதுமே கண்டோரிலே
மெனியுருவானவுறுப்பிலொன்றை, வையம் பலபேர்கள் பலவிதமாய்
வள்ளல் முகம்மது வடிவுகண்டார். (214)

(இ-ள்):— அங்கு வந்து கூடி நின்ற எண்பது கோடி ஜீவராசி
கள் எல்லாம் முகம்மதியாவைப் பார்த்தார்கள். ஒருவராவது
சரியாய் திரேக முழுமையும் கண்டவர்கள் கிடையாது. ஆனுல்
பலபேர்களும், பலமாதிரியான உறுப்புகளே மாத்திரம் கண்டார்கள்
எ-று.

வடிவு முகம்மது மிருந்தகோலம் வைய மனுவோர்க ளறியச்
சொன்னேன், முடியாப் பதினுலு நுபுவ்வத்தோட முன்னே
ளபிகீகாலு விருந்தவாறு, நெடிய சுடரோடு விளம்பலாறு னிறமுங்
கண்ணுடி யதிவிருந்தம், வடிவுக்கடலோனை முகம்மதிய்யா வடிவு
குமரிபோல் வரைதுலங்கும். (215)

(இ-ள்):— முகம்மதியாவின் வடிவானது எப்படியானல்பதி ஞன்கு நுபுவத்துடன்நாலாவித நிறங்களையுந் தரும்படியான பஞ்ச வர்ணக் கண்ணுடியின் தோற்றம்போல ஒரு பூரண சந்திர வட்டத்தின் கலையை ஒத்து முகவரை கிருத பத்து வயது கன்னிகாப் பெண்ணின் வடிவாக இருந்தது. எ-று.

துலங்குமட்சரங்குருனெழுத்துத் துய்யகருநிறம் சுறுமாவாக, விலங்கு மாணிக்கம் பச்சைமுத்து வின்னம்பலபல புட்பராக, மலங்கார மீரேழ் நுபுவத்தொன்று யந்தத் தவிசிலே கொலுவிருந்தா, சிலங்கு முகம்மதா மிருக்கும் பெண்ணை யெல்லாக்குழுவுமேயெழுந்து பார்த்தார். (216)

(இ-ள்);— அதன் மேனி முழுவதும் குர்ஆன், அட்சரங்களாற் பொதிந்தும், சுறுமாவிட்டும், இருந்த தவிசோ பதினன்கு நுபுவத்தின் ஒளிவுகளுடன் நவரத்ன சுஜிதாதிகள் வைத்தழுத்தியது. இப்பேர்ப்பட்ட சூறத்தையுடைய முகம்மதிய்யாவை ஸமஸ்த உலகங்களும் எழுந்து பார்த்தன. எ-று.

பார்த்தார் பலபேர்கள் பலவிதமாய்ப் பாவநன்மையும் பலனும் வேருய், வேற்றுமையாக வதனங்கண்டோர் வேறே வேறெதான் பலனேயென்றும், பார்த்துக் கலத்தைத்தான் லெவ்குதனிற் பாங்கா யெழுதுமென் றிரையுரைக்க. வார்த்தை நானென்னவென்று சொல் வேன் வரையும் லெவ்குட வரிசை சொல்வேன். (217)

(இ-ள்):— முகம்மதியாவைப்பார்த்த கல்குகளின் கூட்டங் களுக்கு திராணி போல் கிடைத்த பலாபலன்களை தீமைகளைப் பற்றி எழுத வேண்டியதற்காகவே லௌஹுல் மஹ்பூல் பலகையில் எழுதும்படியாகச் கலத்துக்கு உத்திரவு செய்யப்பட்டது. அதன் வரிசையைச் சொல்கிறேன். எ-று.

வரியின் முதலவன் திருநாமத்தை வகையாப்பிசுமில்லமுத லெழுதி, யுரிய படைப்பெல்லா மடியாரென்று முயிறு மவனல் லதில்லையென்று, மரிய வுயிர்க்கெல்லா முலகுதனி லன்னங் குறை யாமற்கொடுப்பேனென்றும், பெரிய தவத்தோரை மறுமைமீதில் பிரிசப்படுத்தியே வைப்பேனென்றும். (218)

(இ-ள்);— லௌஹில் முதல் வரியில் அல்லாவுடைய திருநாமமாகிய பிஸ்மில்லா எழுதி, அப்பால் இப்போது எழுத்தபடைப்பு

களெல்லாம் றப்புடைய அடியார்கள் என்றும், எல்லா றூஹுகளும் அல்லாவை அன்றி வேறில்லை யென்றும், உலகத்திலுள்ள இந்த ஜீவாத்மாக்களுக்கெல்லாம் இரணங்கள் கொடுக்கப்படு மென்றும், மஅரிபாவுடைய மஹான்களுக்கும் மறுமையில் பெரிய தராஜாத்துக்களைக் கொடுக்கப்படுமென்றும். (இன்னும்)

வையம் பாவிக ணரகுக்கென்றும் வாழுந்தவமெல்லா முகம் மதென்று, மெய்துங் கலிமாத்தான் லாஇலாக இல்லல்லாவென் றுமே யெழுதித், துய்ய கலிமாவை முகம்மதுற்றசூலுல்லா ஹியைப் பின்னெழுதிச். செய்ய நபிபேரு மியார்கள் பேருஞ் சேரவெழுதியே படைப்பையெல்லாம். (219)

(இ-ள்) —உலகத்தினுள்ள பாவிகளை நரகத்தில் தள்ளப்படு மென்றும், நன்மையாளர்களை சொர்க்கஞ் சேர்க்கபடுமென்றும், தவமெல்லாம் முகம்மதுக்கு உள்ளதென்றும், எல்லாவற்றுக்கும கலிமாவானது லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுற் றசூலுல் லாஹி யென்றும், கலிமாவை எழுதி அத்துடன் நபியவர்கள் பெயரையும், நால்யார்களின் பெயரையும் எழுதி குர்ஆனையும் எழுதி (இன்னும்)

எல்லாப்படைப்பிறை தனைவணங்க விணங்குந் தவமோடும றிவுஞ்சொல்லி, நல்லார் தவமோடு பாவநன்மை நடப்பாரினித் தொகையாகவென்று. சொல்லுஞ் செயல்நன்மை சுவர்க்கஞ்சேர்வார் துன்பநரகாள்வார் கொடியோரென்று, மெல்லாம்லெவ்கிலேகல மெழுதி யெழுந்த குழுவெல்லாம் வகுத்தெழுதும். (220)

(இ-ள்):— வணக்கம் இப்படி, பாவமிப்படி யென்றும், அது அதுகளுக்குக் கிடைக்கும் கூலிகள் இன்னது இனியது என்றும், கலமானது எழுதிவிட்டு அப்பால் முகம்மதைப் பார்த்த கூட்டங்களின் பிரிவுகளை எழுதுகிறது. எ-று.

எழுதும் விதமானபலனேதென்ரு லெங்கண்முகம்மதையெவ ருங்காணப், பழுதில் லானபி சிரசுகண்டார் படைத்தோன்மலக்கவர் குழுவுமாகு, மெழுதுந்திருநாமம் வேறவேறே யிலங்கும் நபியவர் நுதலைக்கண்டோர், முழுது நபியாகு நாமம்வேருய் முகம்மதுநபி விழியைக்கண்டோர். (221)

(இ-ள்):— என்னவென்றால் முகம்மதின் சிரசின்வடிவைக்கண்டவர்கள் மலக்குகளாவார்கள் என்றும், முகம்மதுடைய நுதலைக் கண்டவர்கள் எல்லாரும் நபிமார்களும், றசூல்மார்களுமாவார்கள். இன்னும் முகம்மதுடைய விழிகளைக் கண்டவர்கள்.

கண்டாரிறையவன் தீதாறையுங் கருணைமுகம்மது தீதாறையு,
நன்றாய்த் தெரிசித்தோர் நாமம் பெறும் நபின் னிருசெவி கண்டோ
ரெல்லா,மென்றுமறைநெறி யறிவுக்கேட்டுமிதமாய் நடப்பவர் நாமம்
வேறு. மன்றே நபிகுமிழ் கண்டோரெல்லா மவரே மூமினென்
றறியலாமே. (222)

(இ-ள்):— கண்களைக் கண்டவர்கள் அல்லாவையும் றசூலையும் கண்ட குதுபுமார்களாவார்கள். இரண்டு செவிகளையும் கண்டவர்கள், ஆலிம்கள், புலவர்கள், பாவலர்களாவார்கள். சுன்னத்தைக் கண்டவர்களெல்லாம் மூஃமினானவர்களாவார்கள். எ-று.

அறிவு பொருந்தியமறைநெறியை யறிந்தோர் நபிமொழிதிரு
வாய்கண்டோர், திறையுங்கூரலோசை கழுத்துநீள நேரே தெரிந்
தவர் காபிலாத, மறைய திறைகாபீல் குழுவெல்லோரு மார்பு
முகம்மதை மகிழ்ந்துகண்டோர், பிறகுதீனுகுமவுலாகுலம் பிரிய
முகம்மது பிறமுங் கண்டோர். (223)

(இ-ள்):— இன்னும் முகம்மதின் திருவாயைக்கண்டவர்கள் குர்ஆனை மனனமாயுள்ள ஹாபில்களாவார்கள் என்றும், இன்னும் மார்பைக்கண்டவர்கள் கல்பு திறந்த சீமான்களாவார்கள். முதுகைக் கண்டவர்கள், மல்லா இஸ்லாம்களாவார்கள். எ-று.

கண்டா ரிளவயிறல்லாவுக்காக்காங் தடிந்த பசியாற்றுங்காமி
லாகுங், கண்டாரிருப்பிட மிறைபதந்திற் காக்ஷிநிலைப்பெற்ற அவுலி
யாக்கள், நன்றும் வலக்கையைக் கண்டோரெல்லா தாயன் பரத்திலே
கைர்செய்வோரு, மென்றுமிடக்கையைக் கண்டோரெல்லா மேற்கும்
ஷகீதுகள் வெற்றிபெற்றோர். (224)

(இ-ள்):— வயிற்றைக் கண்டவர்கள், அன்னதானம் செய்கிறவர்களாவார்கள். அதன் ஆசனங் கண்டவர்கள் அவ்லியாக்களாவார்கள். இடது கையைக்கண்டவர்கள் பீஸபீல் செய்கிற ஷுஹதாக்களாவார்கள், அதிலும்வெற்றி பெறுவார்கள். எ-று.

வெற்றி முகம்மதி னிருதுடையும் விருப்பித் தெரிசித்தபேர்க
ளெல்லா, மெத்தநடந்துதான்கஃபாவிலே மேனியிலங்கவேஹச்சு
செய்தோர், முற்று முழந்தாளின்கீழே கண்டோர் முகம்மது நபியு
ம்மத்தோரிற், பத்துநாட்டொழப் பலநாள்விட்டுப் பாவமலை
யேனும் பஞ்சேயாகும். (255)

(இ-ள்):—இரண்டு துடைகளைக்கண்டவர்கள் மக்காவில் போய் ஹஜ்ஜு செய்வார்கள். முழந்தாளுக்குக் கீழே கண்டவர்கள். பத்துநாள் தொழாமலும், அப்பால் தொழுகிறதுமாய் அலைகிற ஏமாற்றுத் தொழுகையுள்ள பாவிகளாவார்கள். எ-று.

பஞ்சத்தனமான தீனோரென்றும் பாங்கு நடைபிடிபலதறியார்,
மஞ்சுகுடைநிழல் முகம்மதரின் மலரின் பாதத்தைக்கண்டோர்
களு, துஞ்சுபுகழான முகம்மதரின் மேனிமுழுதுமே கண்டாரிலை,
யஞ்சிற்பிரகாசஞ் சுற்றிவந்தே யணுவுங்கண்டிலார் குபிரானதே.

(இ-ள்):—இந்த விதமாக பலபல உறுப்புகளைக்கண்டார்களே யல்லாமல் ஒருவராவது முகம்மதைக் கண்டவர்கள் கிடையாது. ஒன்றுமே காணாத ஒரு கூட்டம் கடைசியில் நின்று பரதவித்தது அது காபிரீன்களாயிற்று.

குபிருக் கதிகமா மனந்தங்கூட்டம் கூட்டம் பிதற்கணந்
தனையகற்று. நபியைப் பிதற்கணஞ் சுற்றுமலு நாடுந்தெரிசனை
காணாமலும், ஹபியைப் பிதற்கணம்வந்த பேரைக்காண்க நாணியே
நின்றோரெல்லா, முகியாபலவுயிர் மிருகமியாவு முனுபிக்கெனும்
ஜாகில் ஷைத்தான்குலம். (227)

(இ-ள்):—அந்தக்கூட்டம் ஒவ்வொரு கூட்டத்துக்குக் கிடைத்திருக்கும் தறஜாத்துக்களைக் கண்டு வெட்கி நாணி முகங்கோணி மற்ற கூட்டங்களுடன் வந்து சேராமல் மதிமறந்து போய்நின்றது இதில் நின்றுந்தான் ஷெய்தானும் அவன் கூட்டங்களும் இணை பிரிந்தது. எ-று.

ஜாகில் குலமான ஷைத்தான் குலஞ் சகல குலமற்றச் சாதிக்
கெல்லாந், தாக்கில் லாக்குல நாமம்வேறாய்த் தங்கியவர் நின்ற
தூரத்தாலே, பாக்கியந் துன்பம் பாவநன்மை பலனுமிவனவென்
றெழுதுங்கலம். நோக்கிப்படைப்பெலாந் திருமுன்னாக நொடியில்
வரச்சொன்னானுக்கத்தானவன். (228)

(இ-ள் :— அப்போது அந்தக் கூட்டத்தாருக்கு ஜாஹில்கூட்டம் என்று பெயர் சொல்லப்பட்டது. எல்லாக் கூட்டத்தாருடைய தூஷணைகளும் செய்யப்பட்டது. இந்த விபரமெல்லாம் கலம் எழுதி முடிந்த உடனே றப்பு எல்லா கூட்டங்களையும் தன்சமுகம் வரச்சொன்னான். எ-று.

அவரே படைப்பெல்லா முன்னிறுத்தி யண்ணல் முகம்மதை
யறுஷ்ஷுதனிற், புவனம் பதினலு முகவிளக்காய்ப் புதியோன்றிரு
முன்னே கொழுகிவைத்துத், தவனமாயென்னைப் புகழுமென்றான்
தாயுங் காயுமாய்ப் புகழும்போதி, லவனி யுலகுயிர், மலக்குமற்ற
வாவியமைக்கின்ற வுயிரையெல்லாம். (229)

(இ-ள்): —படைப்புகள் கூட்டம் கூட்டமாக வந்து நின்றவுடன் தன் ஆஷிக்காகிய முகம்மதியாவை அறுஷ்ஷுடைய ஹாலின் பதினலு லோகங்களுக்கும் சுடர்விடக் கூடிய ஒரு தூண்டாமணித் தீபமாகத் தொங்கவிட்டு சொல்கிறான். (எ-று)

எல்லா வுயிரையு முன்னிருத்தி யேக பெரியவன் பரீமானமா,
மெல்லா மமைத்தேனு னெனதாசையா லென்றனுசையை யெவர்க்கு
மீந்தேன், வல்லோ னருதிசை நிறைந்தபேரும் வம்பாங் கொடும்
பாவிக் கில்லையென்றே, அல்லா வுரைப்பதுக்கெவ்வுயிரு மந்தப்பரி
மானுக் குகையுந்தானே. (230)

(இ-ள்): —நீங்கள் என்னைப்புகழுங்கள் என்றான் தாயும் காயும் என்று புகழ்ந்தார்கள். அப்பால் றப்பு கல்குகளைப்பார்த்து உங்களை யெல்லாம் படைத்தேன் என் ஆசையாலே இப்போது என் ஆசையை உங்களுக்குத் தந்து விட்டேன் என்றும், ஆனல் என்னுசை ஒன்றிருக்கிறது. அது பாவிகளுக்கு கிடையாது, நாதாக்களுக்குங் கிடையாது. எ-று.

உகைய மாகவே யிறைவகுத்த வுயிரென் றுரைப்பதுமொரு
குதிரளாம், வகையா லிறையவன் முன்னிறுத்தி வடிவதிலங்கிய
தனதாசையிற், றுகையி லடங்காத விறையாசையிற் ஜெரட்டுத்
தெறித்தசனே துள்ளிச்சுடர், பகையில் லாவுயிர் வலதுக்கெல்லாம்
பட்டு திரையாசை யொளிவானது. (231)

(இ-ள்): —உதயமென்பது ஒரு விதமான கூட்டம் அது றப்புடைய றகுமத்தாக இருக்றும், அதில் நின்றுந்தான் கல்கு

களுக்கு இஷ்க்கு கிடைத்தது, அது தான் எல்லாத்துக்கு மூல கருவியாக இருக்கும். எ-று.

ஒளிவு மிறையவ னுசையாகு மொளிவுமுயிர்க்கெல்லாமொரு
வனீந்தான், றெளிவொன் றெளிவான விறையாசைதான் றிறமுங்
குறைவுமாய் பலவிதமாய்க், கொழுகி யிறையாசைதரித்தமட்டுங்
குதாயி னருளல்லோ யுதித்ததப்போ, வழுவில் லாதவன் கமாலியத்தி
லணைத்து முயிர்பொங்கி யாசையாச்சே. (232

(இ-ள்):— ஒளிவு றப்புடைய இஷ்க்கு அதுதான் பலபல தோற்றப்பொருட்களாக சிருஷ்டிக்கப்பட்டது. றப்பு இஷ்க்கு கல்குகளின் இஷ்க்கு என்பது எப்படி என்றால்! அது அவனுடைய கமாலியத்தில் நின்றும் வெளியானது. அதுதான் ஆலம் இன்ஸான் என்பது. எ-று.

ஆசை யிறையவ னருளினலே யந்த றாகெல்லா மதிமோக
மாப், பாச பொருறாகை யொருறாகுதான் வந்து தழுவியேமுகந்
ததுவு, மாசையொருறாகை யனேகப்றாகை யாசை யாகத்தா
னெநறா தமாய்ப், பாசமாய்க் கட்டித் தழுவினதும் பாரி லுயிர்
சேரும் பரிபாரமே. (233)

அப்படி அல்லாஹுத்தாலாவின் இஷ்க்கென்ற மோகத்தால் சிருஷ்டிக்கப்பட்ட ரூஹுகளெல்லாம் ஒன்றோடொன்று அணைத்து முத்தி முகந்துக் கொண்டதுகள். அத்தகைய குதுகலத்துடனிருந்த ரூஹுகளெல்லாம் தங்களின் ரூஹுகளை உற்பத்தி செய்ய காரணபூதியமாயிருந்த நூறுல் அஹ்ம தியாவின் ரூஹில்வந்து அடைக்கலம் பூண்டுக்கொண்டதுகள் அப்படி அடைக்கலம் பூண்டுக்கொண்ட ரூஹுகளை நூறுல் அஹ்மதியாவென்ற பரஞ்சோதிதன் கருணை என்ற அன்பால் அணைத்துக்கட்டிக்கொண்டது, அந்த மதிமையின் வல்லபத்தால் எல்லா றூஹுகளும் தன் பரிவாரத்துடன் ஒன்று சேர்ந்துக்கொண்டதுகள்.

பாரப் பெரியவ னெளிவாசையிற் பலன்பெற் றிருந்தோரைப்
பகரக்கேளீர், நேரிற் பெரியோரு மிமையோர்களு நிலத்திலறியாம
லிறப்போர்களு, மாரு மிறை மிறைவாசை தரித்தில்லர் தானல்லல்
ஷெயித்தானுக் கொசருவுமா, மேரு பறுலாசை தரியார்குத மிம்மை
மறுமைக்கும் பாவிதானே (234)

(இ-ள்):— அந்த ஒளிவை யநுசரித்தவர்கள், மலக்குகளும், ஜின்களும், அநுசரியாதவர்கள் கொசுருக்களும், பாவிகளுமாகும், எ-து.

எல்லாந் திருமுன்னே நிறுதிங்கொண்டங் செங்கோன்பரி மான மேதுசொல்வா, னெல்லாப் படைப்புக்தும் பொதுவாயொரு வென்ற னமானித மிருக்குதென்றும் அல்லா வமானிதமென்ற பொரு ளறியபெரும்பொரு ளரர்சுமப்பா, ரெல்லா மலக்குஜின் பரி யுந்தேவு மென்றன் மனுவானதெவ்வுயிரே. (235)

(இ-ள்):— இவ்வளவு படைப்புகளையும் றப்பு தன் திருசமுகத்தில் நிறுத்திக்கொண்டு, என்னிடம் ஒரு அமாநிதம் இருக்கின்றது அது மெத்தப்பார தூரமானது, அதை உங்களில் யார் சுமப்பார் சொல்லுங்கள் என்றும். இன்னும்

எல்லா வுயிர்களை சொல்லக்கேளு மென்ற னமானிதஞ் சிந் தாமலே, நல்லாப்பேணுரை நாகுசேர்பே ஞயனுபிரான வமானி தத்தை வல்லாண்மையுடன் பேணிவைக்கவலுமைக்துலமாரு சொல் லுமென்ருன், அல்லாதிருமுன்னேயுயிர்கள் சொல்லு மாதிபெரியோ னேதம்பிரானே. (236)

(இ-ள்)- அந்த அமாநிதத்தைப் பேணுர்களை நரகஞ்சேர்ப்பேன் அதைப் பேணிச்சுமந்து காப்பாற்றுபவரைச் சொல்லுங்கள் என்று றப்பு சொன்ஞன். எ-று.

ஆதி பெரியோனே தம்பிரானே யறியும்வகை யெல்லாம் வகுத் தவனே, சோதி பெரியவா வமானிதத்தைச் சுமக்கத் தகுயில் லாக்குலங்களென்றும், நீதி மலக்குஜின்பலவுபிரு நேராயிறை முன்னேபே லாதென்றும், ஆத நபியொளி யிறையை நோக்கி யந்த வமானிதஞ் சுமப்பேனென்றே. (237)

(இ-ள்):— அதற்குப் படைப்புகள் சொல்லும் றப்பனே! பெரியவனே? அந்த அமாநிதப்பொருளை எங்களில் யாருக்கும் சுமக்கச் சக்தியில்லை யென்று சொல்லிவிட்டன. அதன் பிறகு ஆதம் நபியாகிறவர் றப்பை நோக்கி நான் அந்த அமாநிதத்தைத் சுமக்கிறேன். எ-று.

சுமப்பே னெனச்சொல்ல வாதநபி சொன்னஞனிறையவன் கொடுத்தேனென்று, மமைப்பேன் முகம்மதை மனுக்குலத்திலாலந் துயிரெல்லா முமக்கடுமை, சமைப்பேன் மறைநாலுமனுடர்க்காகுஞ் சகல படைப்பெல்லா மனிதர்க்காகு, மமைப்பேன் சுவர்க்க முமுலகவாழ்வை வையமனிதர்க்கே படைத்தேனென்ருன். (238)

(இ-ள்):— அவ்விதம் ஆதம் நபி நான் சுமப்பேன் என்று சொன்னதின் பிறகு றப்பு அப்படியே கொடுத்தேன், முகம்மதை உம்முடை மரபில் உற்பத்தி செய்கிறேன், ஆலத்தை யெல்லாம் உமக்கு அடிமை ஆக்கிறேன், நாலு வேதங்களும் உமது சந்ததிகளுக்காக இறக்கின்றேன், சகல ஜந்துக்களும் உமது சந்ததிகளுக்கே ஆக்கி வைக்கிறேன். என்ருன் எ-று.

படைத்த படைப்பெல்லா மனுடர்க்காகும் பார வமானித மேதோவெனி, லெடுத்த முகம்மது மார்க்கந்தனி லென்னை யவனென் றேயினையில்லாமற், சடத்தி லொளித்ததுபரமே யென்று தானே தானென்றுந் தானிறையக், கொடுத்தேன் மனுடர்க்கு மனுக்கு லத்திற் குருவுமுகம்மது நானேயானேன். (239)

(இ-ம):— நான் படைத்த படைப்பெல்லாம் மனிதற்குத்தான், அமானிதமாவது, என்னை அறிகிறது, அறிந்து வணக்கஞ் செய்கிறது, அதற்கு சற்குரு முகம்மதாக இருக்கும், முகம்மது என்பது நானேயாகுத. என்று ஆதத்துக்கு றப்பு சொன்ஞன். எ-று.

நானே மனுடர்க்குச் சொந்தமென்று நாயன் பரிமானமு ரைக்கும்போது, வேணவகையான லுயிர்களெல்லாம் வேண்ட வேண்டிய நபியைக்கேட்கு, மென்ன விதத்தாலு மனுருபமா யென் தன் முகம்மதை யமைப்பேனென்று. சொன்ன மாராயமனு டர்க்கிறை சொல்லத் தொலையாநாள் வெள்ளிபத்தே (240)

(இ-ன்):— நானே மனிதர்க்குச் சொந்தக் காரனுருவேன் என்றும் சொல்லிஞன். என் ரூபத்தில் முகம்மதை மனிதர்களுக்கிடையில் உற்பத்தி செய்வேன் என்றும் றப்பு நல்மாராயஞ் சொன்ன நாளாகிறது வெள்ளிக்கிழமையாக இருக்கும். எ-று.

பத்துத்தெய்தியி லாறுநாளிற் படைத்த படைப்பெல்லாமிறை முன்ஞக, மற்றநாளொன்றுசனிக்கிழமை மன்றன்படைப்பெல்லா முன்னேநிற்கக், குற்றப் பாவிக ளாருதனிற் கொடுமைத்தழன் மூட்ட வேணுமென்று, முத்த பரிமான மிசுருயிலே யுமது கதுப்பிட்ட பேழைவாங்கி. (241)

(இ-ள்):—பத்துதிகதி ஆறுநாளையில் எல்லா வஸ்துவும் எழுந்து நிற்க, மற்ருவது நாளாகிய சனிகிழமை யன்று பாவிகளுகாக வேண்டி நரகத்தில் நெருப்பு மூட்டவேணும் என்று இஸ்ருயிலை அழைத்து உமது பேழையைத் திறந்துவையும் என்ருன். எ-று.

பேழை திறந்தழ னாகேற்றவும் பெரியோ னுரைப்படிமெழுப் பேழையை, மீளத் திறக்கவு நெருப்பின்மீதின் வேங்கைப் புலி யொன்று வெள்ளையாகத், தாழப் பதுங்கியே வாலடித்துத் தலை

யையுயர்த்தியே யிருந்துகொண்டே, யூளை யிடுங்கோடை வானிடி
போ லொலித்துக் குரலோசையேதுசொல்லும். (242)

(இ-ள்):— அப்படியே தன் பேழையைத் திறந்து வைத்தார். குபீரென்று பத்திய நெருப்பில் ஒரு வேங்கைப்புலி வெள்ளை நிறமாக வாலை யடித்து, தலையை உயர்த்திக்கொண்டு கோடைகாலத்து இடியைப்போல் கெர்ச்சித்து சொல்லும். எ-று.

சொல்லத் தொலையாத விதங்களெல்லாஞ் சோதிபெரியவன
மைத்தெல்லாம், அல்லா வொருவனே யழியில்லாதா னரியபடைப்
பெல்லா மழியவென்று, நல்லான் படைப்பெல்லாமழிக்கும்வேங்கை
நானே மவுத்தென்ற நாமமாகுஞ், சொல்லாற் செயலாலும் வலுமை
யாலும் சுரூப வுருவான சோதியெல்லாம். (243)

(இ-ள்):— நானுகிறது. றப்புடைய படைப்புகளையெல்லாம் அழித்து விடக்கூடிய வேங்கையாகிய மவுத்து நானாக இருக்கும்.

எல்லா மழிப்பது நானேயாகு மிறையோ னொருவனேயிருப்
பதாகு, நில்லா தெனக்குமுன் னொருபடைப்பு நீறு பொடிசெய்வே
னிமிடத்துள்ளே, வல்லோ னறுஷோடு வான்புவியும் வகையு
மலக்குகள் பலவுயிருங், கல்லு மலைபுல்லும் விருட்சம் பூடுங்கத்தக்க
பெரியவனமைத்தெல்லாம், (244)

(இ-ள்):— என்னாலேதான் வஸ்துக்களும், கல்குகளும், அழியும், என் முன்னே எப்பேர்பட்ட அண்டலங்களும், பொடி, பொடிாய்ப் போகும், மலக்குகளும், ஜின்களும் என்னால் அழிந்துபோவார்கள். எ-று.

எல்லாமழிக்கவேயெனைப்படைத்தா னெங்குநிறைந்துநானிரு
பேனென்றுஞ், சொல்லுங்குரலோசைசிலமுளக்கந் தோன்ற நடுங்
கியே யுயிரனைத்து, மெல்லாந்தடுமாறி நினைவழிந்தே யிருந்த திருந்
தாப்போ லுருகிநீரு, யெல்லா முன்போலே றகுமத்தென்னு
மிறையோன் கடலிலே விழுந்துபோச்சே. (245)

(இ-ள்):— மவ்த்தானது இவ்விதம் சொன்ன சொல்லால் படைப்புகளெல்லாம் நடுநடுங்கி உருகி றகுமத்தென்னும் கடலில் நீராய்க் கலந்து விட்டன. எ-று.

விழுந்த வுயிரெல்லாங் கடனீர் தன்னில் விருப்புற்றெழுந்துமே
லிறையைநோக்கு, விழுந்து சுஜூதிலே விழுகும்போது மேலோனி

சுரூயீ றன்னைக்கூவிக், சுழிந்தநெருப்பைத்தா னாகுதனி கையால
ணன்மூட்டிச் சலவையாகச், சினந்த வேங்கையைப் பேழை மீதிற்
சீக்கிறமாக வடையுமென்றான். (246)

(இ-ள்):— அந்த படைப்புகள் றப்பை நோக்கி ஸுஜூதில் விழுந்து கிடைந்தன. அப்போது றப்பு இஸ்றாயிலைக்கூப்பிட்டுநெருப்பை நரகத்தில் அடைக்கவும், புலியைப்பேழையில் அடைக்கவும் உத்திரவு செய்தான், எ-று.

அடைத்தார்வேங்கையைப்பேழைமீதிலந் தவனலைத்தானரகின்மூட்
டவெடுத்தவாங்காரகோபமாகவெழுந்த நரகமுமொரு சுழலாய்த்,
தொடுத்த நாவுதான் பத்தொன்பது துய்யோன்ப தியெல்லாமழிப்
பேனென்று, கடுத்த சினங்கொண்டுவானை நோக்கிக்கடிகிநரகேழும்
வருகும்போது. (247)

(இ-ள்):— அதுபோல் வேங்கையைப் பேழையிலும், நெருப்பை நரகத்திலும் அடைத்தார், உடனே ஏழுநரகங்களும் அழன்றெழுந்து வானங்களைப் பொசுக்கி விடுகிறதுபோல் வரும்போது. எ-று.

ஏழு பூமியு மதிரவேங்கை யிடியின் முழக்கந்தான் மிகநடுங்கி,
தாளும் பாதாள லோக நோக்கி நழுகும் பூமியைச் சுமக்கவென்று,
காளைச்சிரசொன்றுவளைந்தகொம்பு சுவையு மொன்பது லட்சமாக
வேழு புவிபதி னெண்ணாயிரம் மெல்லா ஆலமுஞ்சுமக்வைத்தான்.

(இ-ள்):— மேற்படி புலியின் சப்தத்தாலே ஏழு பூமிகளும் அதிர்ந்துவிட்டன. அதை அசையாமல் சுமப்பதற்காக வேண்டி ஒரு காளைமாடு அதற்கு வளைவான கொம்பு அதன் பணர்கள் ஒன்பது லட்சம் உள்ளது. அதை ஏற்படுத்தினன். ம-று.

சுமக்கு மிடபத்தைத் தகுததருவுஞ் சுமக்கு மூசிதான் தகுத்
தருவை, யமைக்கு மூசியைக் கிண்ணமேந்த வந்த கிண்ணத்தை
யாவுமீதிற், சமைக்கு மரவுக்கோர் நவரமானிசல மகரத்தின்செ
குளிநிற்கும், நிமைக்கு னொடிக்குமுன் னுனிமலைவி னிருண்டசல
மேலே மகாநிற்கும். (249)

(இ-ள்):— அந்தக்காளை மாட்டைச் சுமக்க ஒரு கலசத்தை உற்பத்தி பண்ணினன், கலசத்தைத் தாங்க தஹ்தத்ருவை உண்டாக்கினன், அதிலொரு கிண்ணத்தை உண்டாக்கினன், கிண்ணத்தை ஒரு பாம்பைக்கொண்டு தாங்கச் செய்தான், பாம்பை ஒருமீனைக்

கொண்டு தாங்கச்செய்தான். அந்த மீன் இருண்ட சமுத்திரத்தில் நிற்கும். எ-று.

நிற்குக்கடருங்கிறுநிமலேயி னோராயனேத்நமே நழுவுப்போது,
வைக்கு நிலேயாக நரகினுட வடக்குவாசலினிறுத்திவைத்தா'ளெக்
குநாகுவான் குறுஷுறுக மோங்கும் விருட்சமும் லெவ்தகல, மற்ற
ஞ்சுவர்க்கபா தாளலோக மைம்பதினுயிரம புரிசைதாங்கும் (250)

(இ-ள்):— அந்த இருட்டு கடலே நரகத்தின் வடக்குவாசலின் வழியாக உள்ள அக்கினிக்கோட்டையண்டை ஆக்கிவைத்தான் எ-று.

தாக்கஞ் சரியவுஞ் ஜிபுரியீலேத் தலங்க ளனேத்திலுங் கலிமா
த்தன்னேத், தாக்ரு மிறைசொல்ல முன்னிலேயிற் றக்க பதியெல்லா
நிதானமாக, மீக்க பதியெல்லா நிலேயாய்நிற்க மேலே வாராம
னரகுசுடத், தக்கபெரியவன் ஹயாத்துல்கைபா்ர் தண்ணீர் தனேக்
கொண்டே படைத்தானெல்லாம். (251)

(இ-ள்):— அப்பால் ஜிபுரிலேக்கொண்டும் எல்லாத் தலங்களிலும் கலிமாவை எழுதச் செய்தான், நரகத்து கொதிப்பு மேலே வராமல் ஹயாத்துல் கைபார் கடலே அமைத்தான். (எ-று)

படைத்த பெரியவன்னிருள றையிற் பண்டுநுக்கத்தாகவிருந்
ததுதான், ரெடுத்த அலிபாக வொளிவளர்ந்து துய்யோன்முகம்
மது மதிற்பிறந்து, விடத்திற பவளமாய் நபியிறகு லிறையின்வலதி
ல்வெண்டாளமாகத், தொடுத்த நடுநிலேயாதம்பச்சை துலங்கு
முச்சுடரிலங்குப்போது. (252)

(இ-ள்):—றப்பு தனியே நுக்தாவில் இருந்து அலிபை வெளியாக்கி முகம்மதை அதில் நின்றும் வெளியாகச் செய்து முத்து, பவளம், பச்சை என்னும் முச்சுடர்களேயும் படைத்து இலங்கும் போது. எ-று.

முச்சுடரொன்ரு யிலங்குப்போது முந்தநிறைந்திடு மிருட்க
ளெல்லா, யச்சங் கலங்கியே திசை விட்டோடி அஜாசீ லெனுமொ
ருவுருவெடுத்துத், துட்சணத் தோஷன் கொடியன்காலன் றுஷ்ம
னரகில்வந் திருந்துகொண்டான், வைச்சநரகமே துலங்குமற்ற
வகையுமிறையவன் ருள்படைத்து. (253)

(இ-ள்):— முச்சுடர்கள் இலங்குப்போது, அதைக் கண்டு வெருண்டோடின இருட் கூட்டங்களானது அஜாஸி லென்கிற ஒரு உடம்பெடுத்து, அதன் முகூர்த்தமாக கொடிய பாதகனும், பாமரப் பயலும், காலனுமாகிய மூதேவியான இபுலீசு, நரகில் வந்திருந்து கொண்டான். எ-று

படைத்த நிறுத்தவே யுலிகுநிலே பாராரசேழிந் தரிக்குப்போதி,
லடுத்த ஹாவியா நாகப்பந்தி லஜாசீ லெனுமொரு மலக்குண்டாஞன்,
வெடித்த கழுதைபோற் குறலோசையும் வேகமிருகப்போற் சுரடி
ரோமந், துடித்த குரங்குகை நாக்குவடுத் துதிக்கை மதகரிகாலும்
வாலும். (254)

(இ-ள்):— மற்றபடி ஹாவியா என்னும் நரகத்தில் அஜாசீல் என்று ஒரு மலக்கு உற்பத்தியாஞன், அவன் குரலோசை கழுதையைப் போலும், வேகம் புலியைப்போலும், கை குரங்கைப் போலும், வாலும், காலும் யானேயைப்போலும். எ-று

வாலும் பனேத்துடலரவுதந்தம் வாயில் விசிநாற்றஞ் சிரசிற்
கொம்பு, கோலும் வலக்கையி லிடக்கைகொள்ளி கொடுமைத்தன
மெல்லாங் குடியிருந்த கோல மிபுலீசு பிறந்த நாளாங் கொள்ளி
நரகுக்கு வைத்த நாளா, மாலத்துயிரெல்லாமவுத் துண்டான
வவதிபிறந்தநாட் சனிக்கிழமை. (255)

(இ-ள்):— உடல் பாம்புபோலும், வாயில் பீ நாற்றம், தலேயில் கொம்புகள், வலது கையில் கிழக்கோலும், இடது கையில் நெருப்புக் கொள்ளியும், கொடுமைத் தனமெல்லாம் உள்ளவனுகவும், பாவி இபுலீசு பிறந்தான். ஆனதால் சனிக்கிழமை இபுலீசு பிறந்த நாள் நரகுக்கு நெருப்பு மூட்டின நாளாகவும் இருக்கும். எ-று

சனியோடேழுநாட் சரியானபின் சாற்றுமிறையவன் பரிமான
மாந், தொனியா மவுத்தான வேங்கையுட துடிக்கா லுயிரெல்லா
முருகிநீருய்ப், பனியாய்க் கடனிரிற் சேர்ந்திருந்த பாரமலக்கான
வுயிரை யெல்லாந், தனியோன் மலக்கெல்லாம் வாருமென்ருன்
ருனே மலக்கெல்லா மெழுந்தாரப்போ. (256)

(இ-ள்):— சனிக்கிழமையோடு ஏழுநாளும் சரிநிரப்பின பிறகு மேற்படி மவ்த்தின் சப்தத்தால் நடுநடுங்கி ஸாஷ்டாங்கத்தில்

விழுந்துகிடந்த மலக்குகளை யெல்லாம் றகுமான் அழைத்தான் உடனே மலக்குகள் எல்லாரும் கிட்டவந்து கூடி நின்றார்கள். எ-று

எழுந்தே யிறையவன் மலக்கின் கூட்ட மெண்ணிலடங்காத
வேககூட்டம், விழுந்தபோதுதான் றூகுமுன்னே வேறேவேற
தானுருவெடுத்துக், குளிர்ந்தநீர்சுடு நவரெத்தினக் கோலம் பல
ரூபம் பெரும் படைப்பு, மெழுந்து பெருங்கூட்ட மிறைமுன்னாக
நிற்குமிறையவ னேது சொல்வான். (257)

(இ-ள்):— அவர்களுடைய றூஹுகள் எல்லாம் வேறுவேறு ரூபங்களுடன் வந்து றப்புடைய சமுகத்தில் கூடி நின்றன. எ-று

சொல்லுமிறையவன் பரிமானந்தான் சொல்லத் தொலையாத
விமையோர்களே, யெல்லா மென்னைத்தானே புகழ்ந்திடுங்க ளென்ற
னேவலைச் செய்திடுங்கள், வல்லாண்மை பொய்யும் பெருமை
கோபம் வைய்யா முகம்மதை வரமேசெய்யு, மெல்லா மலக்குட
குலமல்லாதே யிறையோன் மலக்குக ளுலுபேரும். (258)

(இ-ள்):— றப்பு மலக்குகளைப் பார்த்து நீங்கள் எல்லாம் என்னைப் புகழுங்கள்? என்னுடைய ஏவலைச் செய்யுங்கள், ஆங்காரம், பொய், பெருமை, கோபம் இந்தப் பாவச் செயல்களைச் செய்யாதிருங்கள், என்றான். எ-று

நாலு மலக்குட னிருப்பதேழும் நாயன் பரத்திலே யிருக்க
வென்று, மேலு மிமையவர் குலத்துக்கெல்லா மேலாந் தலைவனு
பாஜாசில்தன்னைக், கோலுங் காத்தானைப் பார்த்துக் காவல்
கொண்டேயிறையவ னிறையேவலை, ஆலவமைத்தவன் அஜாசில்
தன்னை யரசுங்காவலென் றப்போவைத்தான். (259)

(இ-ள்):— இது முடிந்த உடனே நாலு பெரிய மலக்குகளையும் இருபத்தேழு மலக்குகளையும் பார்த்து நமது அறுஷுடைய அலுவலை செய்யவேணுமென்று அமைத்தான். அஜாஜீலை எல்லா மலக்குகளுக்குந் தலைமைத் தனமாக ஆக்கிவைத்தான். எ-று

அரசுக் காவல னஜாஸிலென்று மவன்கையடக்கமாமிமையோ
ரெல்லாம், வரிசைப் பணிவிடை யிறையேவலை வழமையாகவே
கோடி காலம், அருஷைப் படைத்தவன் லவ்குதனி லாதிமுதற்

றுனே யெழுதிவைத்தான், பிரிச மாகவென் மலக்கெல்லோர்க்கும்
பெரிய மலக்கொன்று காபிருகும். (260)

(இ-ள்):— இவ்விதம் மலக்குகளுக் கெல்லாம் அஜாஹீல் தலைமையாக இருந்து எத்ததனையோ கோடிகாலமாக காரியம் நடத்தி வரும்போது லௌஹில் றப்பு, மலக்குகளுக்கெல்லாம் தலைமையானவன் காபிராய்ப் போவான் என்றெழுதி வைத்தான். எ-று.

காபிர் குலத்துக்குத் தலைவனாகக் காலம் வெகுகோடி நரகா
ளுவான், பாவம் பலவுயிர் செய்வதெல்லாம் பாவி யவன்றுனே
சுமப்பானென்றுங், காவியாவிலே குடியிருப்பு ஹபீபுமுகம்மதுக்
கிவனே பகை, மேவுஞ் சுஜூதுதா னெனக்குவந்து மேலாந்தலத்
திலே செயயாதாலே. (261)

(இ-ள்):— இன்னும் காபிரீன்களுக்கெல்லாந்தலைவனாகுவான், நரகத்துக்கு அவனே இறையாகுவான், என் ஹபீபாகிய முஹம்மதுக்கு அவனே பகையாகுவான். உலகத்தார்கள் செய்கின்ற பாவங்கள் எல்லாம் அவனையே சேரும், இத்தனை கேடும் என் ஆதத்துக்கு தலைசாய்க் காததினாலே என்றெழுதினான். எ-று.

செய்யா னிறைக்கேற்ற சுஜூதெனவே தீமைக்கொடும்பாவி
யிவனேயென்று, மெய்யா லெழுதிய லவ்குதனை மெத்தக்கருத்தா
கவஜாசில் பார்த்தே, யெய்யும் பிழையெல்லாம் பொறுப்பவனே
யென்னை வருத்தாதே கொடுமையென்று, வையம் புவிவான மலைபுற்
பூடு வாரித்தலமெல்லாங் குறையில்லாமல். (262)

(இ-ள்);— இவ்விதம் எழுதினலௌஹைஅஜாஸீல்பார்த்தான், பார்த்து றப்பிடம் வந்து பிழை பொறுக்கிற றகுமானே, அது ஆர் அந்தவிதி என்னை வந்தணுகும்படி யாக்கிடாதே! என்று ஓடியோடி வணங்கினான். எ-று.

குறையில்லாமலே யிறைவகுத்த சொற்றபதினெண்ணாயிர
மாலமு, நிறையக் கடுகிடை யில்லாமலே நெற்றி தனைவைத்துச்
சுஜூதுசெய்து, மறையி னிறைந்திடு மறப்பொருளே மன்னாவெனச்
சொல்லி யழுதழுது, குறையாயெழுபதாயிரம் வருடம் கூவியழுத
தல்லோ சுஜூதுசெய்தான். (263)

(இ-ள்):— அல்லா படைத்த பதினெண்ணாயிரம் ஆலங்களிலும் ஒரு கடுகு இடஇடமில்லாமல் பார்த்து இருந்து வணங்கி எழுபதி

ஞயிரம் வருஷகாலம் வரைச்சும் அழுது உருகிஸ"ஜ"து செய்தான். எ-று.

செய்யு மிறையவன் மலக்கெல்லோருஞ் சேரப்பணிவிடையி ருந்தகாலம், வையம் பதினெண்ணுயிரமாலமும் வான மறுஷோடு குறுசுக்கெல்லா, மெய்யாத் துலங்கிய முகம்மதியா மேலோ னறுஷிலே கிந்திலாகத், தூய்யோன் கொழுகிய விளக்கைநோக்கிச் சொன்ஞன் முகம்மதே சுடரொளிவே. (264)

(இ-ள்):— இப்படி மலக்குகளெல்லாம் றப்புடையபணிவிடையி லிருந்து வந்த காலமானது முகம்மதியா வானது அறுஷில் நவரத்ன வெளிச்சமுள்ளகிர்தீலாயிருந்த காலமாக இருக்கும். அந்த வெளிச்ச மானது ஆலமெல்லாவற்றிற்கும் ஒரு ஏகஜோதி மயமாக ஒளி செய்ததாக இருக்கும். அதைப்பார்த்து எ-று.

ஒளிவி ஓயர்ந்திடு மரகதமே உண்மை முகம்மதே முஸ்தபாவே, கொழுகிச் சுடர்தீப மிளஙிக்கீழே குத்தூபுதயமாய்க் கொழுந்தொளி வாய்ப், பழுதி லாநாலாம் வானந்தனிற் பாரவிருதெல்லா மணிந்துக் கொண்டே, எழுபதாயிர மாண்டுள்ளாக விரியுமெழுபதாயிர மாண்டுபின். (265)

(இ-ள்);— அந்த தீபத்தைநோக்கி றப்புஎன்ன சொன்ஞன்? என்முகம்மதே! என் விளக்கே! மரதமே! என்ஹகீகத்தே! முஸ்த பாவே; இந்த விளக்கானது இன்னும் எழுபதிஞயிரம் வருஷத்திற் குள்ளாக கீழ்பால் முகத்தின் கண்ணே குதுபு நட்சத்திரமாக உதிக் குப் என்று அறிவித்தான். எ-று.

ஆண்டு வெழுபதிஞயிரந்தா னந்தவானத்தினிறைமுன்ஞகத், தோனறு மெழுபதா யிரமாண்டுதான் ஞெருத்துக்கீழ்பாலிற்று லங்கநோக்கித், தோன்றுமிப்படிக்குத்தூபுதயந் தொகையாயெழுப தாயிரஞ்சில நாள், பூண்டவிருதுதான் பணியேதென்ரூர் புகழும் சுரூபமா யிருப்பதாமே. (266)

(இ-ள்):—அதன் பிறகு எழுபதிஞயிரம் வருஷம் சென்றதின் பித்கு அது வானத்தளவில் வந்து எழுபதிஞயிரம் வருஷம் மட் டிலும் ஜோதி செய்யும், அப்பால் எழுபதிஞயிரம் வருஷம் சென்று மறுபடியும் கீழ்பாலில் வந்து எழுபதிஞயிரம் வருஷம் வரையிலும் நின்று, அப்பால் அது ஒரு சுருபத்தை யெடுத்து வரும் என்ருன், அதேபடி வந்தது எ-று.

இருந்த வெளிவிலே குத்தூபுதய மிலங்கும் பெண்ணல்லோ முகம்மதிய்யா, நிறைந்த சிறசிலே கிரிடந்தானு நிகரில்லாப்பச்சை வைரத்தாலே, யிருந்த சருவந்து மயிபுலியா மிருதோ டணிகாதில அசனுசைனுஞ், சிறந்தமார்பதிற் பதைக்கமேதான் செப்பத்தொலையா குறு ஆனுமே. (237)

(இ-ன்):— அது எப்படி யிருந்ததேயாஞல் ஒரு முகம்மதியா என்ற திருநாமத்துடைய பெண் உடைய சூரத்தில் இருந்தது. அதன் தலையில் கிரீடம் இருந்தது, பச்சையாலும், வைரத்தாலும் தலைப்பாகையிருந்தது. அந்த சர்பந்தானது அலியாக இருக்கும். இரண்டு காதிலும் குண்டலம் இருந்தது, அவைகள் ஹஸன் ஹுஸைன் இருபேர்களுமாக இருக்கும். அதன் மார்பில் ஒரு ரத்னப் பதக்கம் இருந்தது, அதானது குர் ஆனுக இருக்கும். எ-று.

ஆன கணையாளி யுதுமானுமா யபூபக்கருமர் கடையமாகக், காணு மிடைபூட்டு முலகமாதா காலிலிருதண்டை யாதம்ஹவ்வா. மாணிக்கச் சொண்டு பசுங்கிளிதான் மகிழ்ந்து கரத்திலே யேந் தியது, வானேன் குதறத்தா லுதித்தகொளது வள்ளல் முகய்யித்தீன் வடிவுதானே. (268)

(இ-ள்):— அதன் விரலில் ஒரு மோதிரம் இருந்தது, அது உதுமானுக இருக்கும். அதன கையில் இரண்டு கடயம் இருந்தது, அவைகள் அபூபக்கரும் உமறுமாக இருக்கும். அதன் இடையில் பட்டி இருந்தது. அது பாத்திமா நாயகமாக இருக்கும். அதன் பாதத்தில் தண்டைகள் இருந்தது, அவைகள் ஆதமும் ஹவ்வாவு மாக இருக்கும். மாணிக்கச் சொண்டுள்ள ஒரு பஞ்சவர்ணக்கிளி கையில் ஏந்தி யிருந்தது. அது நமது நாயகம் ஐகதசற்குரு முஹி யித்தீன் ஆண்டவர்களாக இருக்கும். எ-று.

வடிவு பதினென்று மருபமொன்றும் வல்லோன்குதறத்தால் குத்தூபுமாகும், அடியு முடிவில்லா னமைத்தவித மறிந்தாற் பதினெரு அகமியகம், படியிற் பதினெரு விலாயத்தொன்று பாரிலுரைத்தது மிதுதான் முன்னே, வடிவுபொருந்திய குத்தூபு தானும் வல்லோன் குதறத்தா லிருக்கும்போது. (269)

(இ-ன்):— இந்தப் பதினெருவடிவுகளும் பதினெரு இல்மு களாக இருக்கும். இவைகளை அறிந்தால் தடையில்லாமல் பதி

ஞெரு விஸாயத்துக்களும் கைகூடி வரும், ஆகவே மேற்படி குது றத்துள்ள குதுபுதயமானது இருந்து பிரகாசித்துக் கொண்டு வரும்போது. எ-று

இருக்கும்போதுதா னிறையுரைப்பா னென்றன் மலக்கெல்லாம்
வாருமென்று. நிறப்பு மலக்கான பெருங்கூட்டமே நீங்கள்
கடத்தேறும் வழிதாஞென்று, சிறப்பா முகம்மதை மனுரூபமாய்ச்
செய்யிதெனுங்கோலஞ் செய்யப்போறேன், பிறக்கு முயிர்க்கெல்லாம்
ஆதந்தனைப் பிதாவென் றுரைக்கவே தாகமானேன். (270)

(இ-ள்);— இப்படி யிருக்கும்போது றப்பு மலக்குகளை நோக்கி அழைத்தான். மலக்குகள் வந்தபோது அவர்களை நோக்கி என் மலக்குகளே! நீங்கள் கெதி பெருகிறதற்கு ஒரு வழியிருக்கிறது. என்னுடைய மஉஷுக்காகிய முகம்மதீய்யாவை இன்ஸான்களின் சூறத்தில் திருப்பப்போகிறேன் உற்பத்தியாகிற மனுஷர்களுக்கெல்லாம் ஆதத்தை தகப்பனுக ஆக்கப்போகிறேன். எ-று

இறப்பும் பிறப்பில்லா ஞனேயாகு மெனக்கிங்கு வந்தவர்
ஆதமாகு. நிறப்பமாயென்றன் மலக்கோர்களே நீண்ட வலுமையு
முறைப்பு முன்ளோர், பெருத்த மலக்காரு வலுமையாரு பேதை
யுலகமண் ணெடுத்துவா, வொருத்த ரொருத்தராய்ச்சொல்லுமென்று
னுடையோன் திருமுன்னே யுரைக்குமெல்லாம். (271)

(இ-ள்): — எனக்கு உகப்புள்ள ஆதத்தை உலகத்தாரர்களுக்குத் தகப்பனுகப் படைக்கப்போகின்றேன், ஆனதால் அவருடைய பொருட்டால் நீங்களெல்லாம் சுகமடைவீர்கள். நல்ல அவரைப் படைக்கிறதற்காக உலகத்தில் போய் மண்ணெடுத்துக் கொண்டு வரவேண்டும், அதற்கு யாருக்கு சக்தி உண்டும்? ஒருத்த ரொருத்தராய் சொல்லுங்கள்? என்ருன். எ-று.

எல்லா முரைத்திடு மொருமொழியா யாறகீம் றப்பில் ஆலமீனே,
வலலாண்மையுண்டோ வுனேயல்லாது வல்லமை யில்லேப் புவியெடுக்
கச், சொல்லரல் ஹாறூத்து மாறூந்துவுஞ் சுழன்றுவவங்கரித்
தேதுசொல்வா, ரெல்லா மலக்குக்கும் வ்லுமையாங்களொங்க
ளிருவரா லாகுமென்ருர். (272)

(இ-ள்): – அப்போது எல்லா மலக்குகளும் றப்பை நோக்கி என்ன சொன்ஞர்களாளுல், யாறப்பே! றகுமானே! அந்தப் புவி

யில் போய் மண்ணை யெடுத்துவர யாராலும் சக்தி கிடையாது என்ருர்கள். அதற்கு ஹாறூத்து மாறூத்து என்கிற இரண்டு மலக்குகளும் றப்பே! எங்களுக்கு இரெம்பவும் பலமிருக்கிறது. நாங்கள் போய் எடுத்து வருகிறோம். உத்திரவு தரவேண்டும், என்ருர்கள். எ-று

ஆகா துங்களாற்பஞ்சையென்ற யாதி பெரியவ னுரைக்கும்
போது, வேக பெரியோனே தப்பிரானே யெங்க ளாலேதானே
லுமென்று. வாகுபிரத்தின லிறையுரைத்த வசன மதைத் தட்டி
வரும் போதுதான், ருகா யிருவரும் வரும்போதுதான் றங்கள்
பெலமெலாந் தடுமாறியே. (273)

(இ-ள்):— அதற்கு றப்பு அந்த மலக்குகளைப் பார்த்து அந்த வேலே உங்களால் முடியாத காரியம், நீங்கள் மெத்தவும் வலுக் குறைந்தவர்கள், என்று றப்பு சொன்னதற்கு, அந்த மலக்குகள் மறுபடியும் றப்பை நோக்கி அந்த வேலே எங்களால்தான் முடியும் என்று வற்புறுத்திச் சொன்ஞர்கள் மலக்குகள் இவ்விதம் றப்புடைய சொல்லேத் தட்டிவரும்போதே அவர்களுடைய வல்லமை யாவும் தடமாறிப்போனது.

தங்கள் பலமெலாந் தடுமாறியே தளம்பித் தளம்பியே வரும்
போதினின், மங்கையுருவமா யிளம்பெண்ணுமதுவிற் குடமொன்று
சிரசிலேற்றிக், கொங்கைபணியாடை கொவ்வையிதழ் கூறுல்கீன்
போலே வடிவுகொண்டே, யிங்கிதமாகப் பூமாதேவி யிருவர் வரக்
கண்டங்கேது சொல்வாள். (274)

(இ-ள்);— இவ்விதம் ஹாறூத்து மாறூத்துகள் வரும்போது, ஒரு பெண் மிகுந்த அலங்காரத்துடன் ஒரு கள்ளுக் குடத்தை தலே மேலேற்றி இரு முலேகளுங் குலுங்கும்படியாக குறுக்கு வழியில் வந்து நின்றுகொண்டு சொன்னதாவது.

ஏது நெடுந்தூர மெங்கேபோறீ ரிளேப்புக் களேப்பாற லென்ன
வேண்டு, மீது பானகந் தாகந்திரு மிந்தா குடியுமென்றவள்
கொடுக்கப், பாதகமான வெறிச்சலத்தைப் பருகியிருவருமதிமயங்கிக்
கோதையொரு பூமாதேவியுடன் கூடி சஞவிலே தொழுகினரே. ()

(இ-ள்):— ஓ! வாலிபர்களே! எங்கே போகிறீர்கள் நில்லுங்கள்! இதோ என்னிடம் பானகம் இருக்கிறது, குடியுங்கள் என்று வார்த்து

வார்த்துக் கொடுத்தாள். துனியா வென்கிற பெண் கொடுத்த கள்ளை வாங்கிக் குடித்து வெறிகொண்டு அவளை ஜினச் செய்யும் படியாகக் கெஞ்சினர்கள். எ-று

கொழுகிச் சனுவிலே பூமாதேவி குழந்தை யுருவொன்று பெற்ற ளப்போ, வழுகத் துடங்கியே மயக்கந் தீர்ந்து வந்தக் குழந்தையைக் கொலையுஞ் செய்து, வழுவில் லாதவன் றிருமுன்னாக வந்தேயிருவரு நின்றாரப்போ, முழுது மிறை சொன்ன னவர்களுக்கு மோசமின்னது செய்தீரென்றான். (276)

(இ-ள்):— அந்த இரண்டு மலக்குகளுடன் ஜினச் செய்து ஒரு குழந்தையைப் பெற்றாள். பெற்ற அந்தக் குழந்தையையும் கொலையுஞ் செய்து வெறி தீர்ந்தவுடன் இருவரும் றப்புடைய சமூகத்தில் வந்துநின்றார்கள். நின்றவர்களை றப்பு நோக்கி பாதகர்களே! நான் சொல்லவில்லையா? நீங்கள் இன்ன வேலை யல்லவா செய்துவிட்டு வந்தீர்கள். எ-று

செய்யும் ஜினவுக்கும் மது வெறிக்குஞ் சிரசுபாலனை யறுத்த தற்கும், வைய முலகெல்லா மழியுமட்டும் வாதப்படுவதற் கடுமை யென்று, துய்யன் பரிமானஞ் சொன்னபடி தொலையாவமளியே துடங்கிச் செய்தார், ஐயோ வெறுப்சத்த மொழிவதில்லை. அதாபைப் பிரித்துத்தான் இருவர் சொல்வார். (277)

(இ-ள்):— நீங்கள் செய்த ஜினவுக்கும், வெறியைச் சாப்பிட்ட தற்கும், பிள்ளையைக் கொலை செய்ததற்கும் கியாமநாள் பரியந்தம் நரகயாதனைப் படுங்கள் என்றான். உடனே ஸபானியாக்கள், அவர்களை அதாபு செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் இருவரும் ஐயையோ! என்று கை சேதப்பட்டவர்களாக மனம் நொந் தழுதார்கள். எ-று

சொல்லாமற் பெரியவன் சொற்றட்டினாற் சூரையாகுமே யுலகத்தோர்க்கு, மெல்லாமிறையவன் மலக்கின்கூட்ட மிந்த வருத்தங்கண்டே நடுங்கி, அல்லா திருநாம மறந்திடாம லனைத்து மிறையைப்பார்த் தேதுரைக்கும், வல்லான் மையில்லைப் புவியெடுக்க வல்ல பெரியவா தம்பிரானே. (278)

(இ-ள்):— அவர்கள் பட்ட அதாபைப் பற்றி யாரால் சொல்லக் கூடும்! எல்லா மலக்குகளும் இவர்களின் அமளிகளைக் கண்டு

துளும்பி விட்டார்ள். துளும்பி றப்பை நோக்கி றப்பனே! அந்தப் புவியில் மண்ணை எடுத்து வர யாருக்காவது வல்லமைகிடையாது என்று சொல்லிவிட்டார்கள். எ-று.

ஆன பெரியவன் மலக்கின்கூட்ட மனைத்துஞ் சுஜூதிலே விழுந்த தப்போ, தீன மணுகாத வாதிறைய னென்றன் மலக்குநால் பேரும் வாரும், பேண வுலகுமண் ணெடுத்துவரப் பிரிசப்படுத்தியேயனுப் பிவைத்தான், வானோர்ஜிபுரீலுமீக்காயீலு மன்னனுரைத்திடுமுறை போற் சென்றார். (279)

(இ-ள்):— என்று சொல்லி ஸாஷ்டாங்கஞ்செய்துவிலகினார்கள் அப்பால் நாலுபெரிய மலக்குகளையும் வரவழைத்து மண்ணை எடுத்து வரச்சொன்னான். ஜிபுரீலும், மீக்காயிலும் புறப்பட்டார்கள். எ-று.

சென்று திருக்கையா லள்ளுமுன்னே செப்பு வாளப்போ பூம தேவி, யென்று மழியாத வாதிநாய னிறையோன் மேலாணைரெ ணந்தொடாதே, சென்றபேரெல்லாமேலாதென்று சிரசுபணிந்திறை திருமுன்சொன்னார். வண்டன் கொடுங்கால னிசுறாயிலும் வறுமை சிர ந்திட வெழுந்தாரப்போ. (280)

(இ-ள்):— இவர்கள் போய் மண்ணை அள்ளினதும் பூமாதேவி ஓ! மலக்குகளே அள்ள வேண்டாம் ஆண்டவன் பேரில் ஆணையாக என்றாள், அவர்கள் இருவரும் திரும்பி றப்புடைய ஹலாத்தில் வந்து விட்டார்கள். அப்பால் இஸ்றாயில் புறப்பட்டார். எ று.

எழுந்த வேகத்தைப் பூமிகண்டு வெல்லாந் தடுமாறி நிலை வழிந்து, துடங்கியேயுடற் சுருக்கி யொரு நூறு தரமாணையிடும் வேளையி, லெழுந்தேவலறியவாணையெல்லா மெவ்வளவாகிலுங்கேட் டிடாமல், விழிந்து வொருபிடி பெரும்பிடியாய் விசையாய் யெடுத்த வரிறைமுன் சென்று, (281)

(இ-ள்);— இஸ்றாயில் வருகிற அதறடியரால் பூமி முழுதும் பயந்து தடுங்கி நூறு தடவை ஆணை செய்தது. எதுக்கும் அவர் அஞ்சாமல் விழுந்து ஒரு பிடி மண்ணை அள்ளிக்கொண்டு விரைந்து றப்புடைய சமூகம் வந்து நின்றார். எ-று.

சென்ற யிறையவன் பரிமானத்தின் சிரசைத் தாழ்த்தியே யொருகைநீட்டிக், கொண்டு வருமண்ணைப்பிடிவிடாமற் குதாயின்

திருமுன்னே நீட்டிநின்ருர், அன்று நிலையானவிசுருயில்தா னறுப
தாயிர வருடமட்டும், வண்ட னெனசொல்லிப் பார்த்தானில்லை
வாய்சற் றௌியாம லேதுசொல்வார். (282)

(இ-ள்):— பூமி மகள் இட்ட ஆணைகளை த் தட்டிவிட்டு எடுத்த மண்ணை றப்புடைய சமுகத்தில் நீட்டி நின்ருர். அவரை அறுபதி னாயிரம் வருஷகாலமாக ஆணையைத் தவிர்த்த வண்டனென்று புறக் கணித்துவிட்டரான். எ-று.

சொன்ன ரிசுருயீ லோய்வில்லாமற் சுபுகானல்லாகூ அல்லாகூ
வென், றென்ன நினைவுள்ள னிரக்கமில்லா னெங்மேலாணை யைத்த
விர்த்ததாலே, னுன்னைத் தவிர்க்கநான் வலுப்பமில்லை யுன்றனுத்
தாரம் பெரிதினுலே, யென்ன விதத்தாலுமெவர்சொன்னாலு மிறை
யோனேவலைச் செய்த னென்ருர். (283)

(இ-ள்):— அதற்கு இஸ்ருயீல் றப்பை நோக்கி யாறப்பி! யா அல்லாஹு! நான் இந்த வேலையைச் செய்தது உன் பெரிய உத்திர வின் தைரியத்தாலே அன்றி வேறல்ல, இதை நீ மன்னிக்க வேண்டும் என்று சொல்லி அழுதார். எ-று.

நின்ரு ரோயாம லிறையோன் சொல்வா னீயென்னுணையைத்
தவிர்த்தாயென்று. மென்று மொருபேச்சாலிசுருயீலு மிறையேயு
ளதேவல் பெரிதேயென்ரு, ரென்ருர் பதினெண்ணாயிரம் வருடமிது
வேயிருவரும் வழக்குமாக, வன்றே யியெழுபதெண்ணாயிரமா மாண்டு
சென்றபின் னுதிசொல்வான். (284)

(இ-ள்):— இவ்விதம் இஸ்ருயீலுக்கும், றப்புக்கும் எண்பதினா யிரம் வருஷ்காலம் வரையிலும் தர்க்கம் நடைபெற்றது. அதன் பிறகு றப்பு பொருத்தேனென்ருன். எ-று.

ஆதிபெரியவ னிசுருயீலை யனேகம் பிழையெல்லாம் பொறுத்
தேனிபபோ, வேதுங் குறையாத மலக்கோர்களே யென்றனுதத்தை
யுருவெடுக்கப், போது மெனவல்லா ராரெனவே புகழ்ந்தாரவை
வோரு மேலாதென்ருர், நீதான் கொடுவந்துன்கரத்தினுலே நிகரில்
லாவுரு வெடுப்பாயென்ருன். (285)

(இ-ள்):— என்று சொல்லி மறுபடியும் றப்பு இஸ்ருயீலைநோக்கி இப்போது ஆதத்தைப்படைக்க நம்முடைய மலக்குகளெல்லாம்

ஏலாதென்று சொல்வதாலே சரி. நீ கொண்டு வந்திருக்கின்ற மண்ணைக்கொண்டே உருச்செய் என்ருன். எ-று

எடுக்க விறையவன் பருமான் கொண்டே யிசுருயீ லிருகையின்
மண்ணைக், கொடுக்கஞ் சுரங்காலு் வாலுடனுங் குதிரைபோலவே
யுருவெடுத்தா, ரெடுக்க விதைப்போல யுருவஞ்செய்ய வேகன்
விண்ணோர்க்குப் பரிமானமா, மெடுக்குமுயிர் மண்ணுலிதனைப்
பார்த்தே யெண்ணில்லாமலே யுருவஞ்செய்தார். (286)

(இ-ள்):— அவ்விதம் இஸ்ருயீல்தான் கொண்டுவந்த மண்ணைக் கொண்டு ஒரு குதிரைபோலே அவயவம் அமைத்தார், றப்புடைய கட்டளைப் பிரகாரம் மற்ற மலக்குகளும் எத்தனையோ குதிரை உருக்கள் செய்தார்கள். எ-று

செய்யுமுருவெல்லா மிருக்குப்போது ஜிபுரீலுக்கிரை பரிமான
மாங், கையா லுமதுட சிறகினுலே ஹயாத்துல் கைபாறு நீரைவாரி,
யெய்யும் ஆதத்தி னுருத்தவிர வெல்லாவுருமே லுமிறையு மென்ருன்,
பையநீர்வாரி யெரிந்தாரப்போ பாரப்பரிக்குழா மெழுந்ததாமே.

(இ-ள்):— இதுகள் இப்படியிருக்க றப்புடைய உத்திரவின்படி ஜீபுரீல் ஹயாத்துல் கைபார் கடலின் தண்ணீரை யள்ளி ஆதத்தின் உருவைத்தவிர மற்ற உருக்களில் சொரிந்தார் உடனே அவைகள் குதிரைக்கூட்டங்களாக எழுந்தன எ-று.

எழுந்த பரியெல்லா நிற்கும்போதி லிணையா யஜாசீ லுமவந்தா
னங்கே, விழுந்துகிடப்பது மேலாங்குல மிதத்தி லடங்காத கூட்டமெல்
லா மழுந்தக் கொடுமைதான் செய்யவென்றும் ஆதந்தனையாதி வகுத்
தாலினி, எழுந்த மண்குலங் கெடுமேதின்னா மேறியுளக்கியே யழியு
மென்ருன். (288)

(இ-ள்):— அவ்விதம் குதிரைக் கூட்டங்கள் நிற்கின்றஸ்தானத் தில் அஜாசில் வந்தான் வந்தவன் கீழே சமைந்து கிடக்கின்ற ஆதத்தைப் பார்த்து இந்த உருவம் இந்தக் குதிரைகளில் சவாரி செய்து உலகத்தை அழிப்பார்கள் என்ருன். எ-று.

அழியு மெனச்சொன்னுன் பரிக்குலத்தை யஜாசீலுரைப்பது
மறிவே யென்று நெவியும் பரிக்குலம் பாதத்தாலே நீறுதுளியாக
நிதமுளக்கப், பொழுது விடிந்திசு ருயில்வந்து பொடியெல்லாஞ்
சேர்த்து மறுத்துஞ்செய்ய, வழிந்த வுருவேறே செய்யவில்லை யடை
யாளம் வேற தாகுமங்கம். (289)

(இ-ள்):— இவ்விதம் சொன்ன மாத்திரமே ஆதமும் குதிரைகளும் பொடி பொடியாக நொருங்கி விட்டன, மறுபடியும் இஸ்ருயீல் ஒடி

வந்து எல்லாம் பொறுக்கி யெடுத்து ஆதத்தை சமைத்தார் அப்போது ஆதமுடைய சரீரம் வேறு மாதிரிபிரண்டது. எ-று

ஆகுமுருவமும் ரூபப்வேருயாதி பரிமானம் விண்ணேர்க்கெல்லா:
வாகா மிசுருயீல் செய்யுமந்த வடிவுபோலல்லோ செய்ய நித, மேகனி
சுருயீலாதந்தன்னே யெண்பத்தி நாலிலக்ஷந்தர, மாசு வெடுப்பிஞர்
பலரூபமா யந்த விதம் ஆதம்பலதுங் செய்தார். (290)

(இ-ள்):—இஸ்ருயீல் ஆதமுடைய சரீரத்தை வக்கணை செய்து செய்து அழகு பசர்த்து எண்பத்து நான்கு லட்சந்தடவை புதிது புதிதாக செய்தார். அதைப்பார்த்து மலக்குகளும் செய்தார்கள். எ-று

செய்யும் படைப்பெல்லாம் ஆதந்தனேச் செய்த விதம்பார்த்து
விண்ணேரெல்லாஞ், செய்தா ரெண்பத்து நாலுலட்சஞ் சீயாத்து
மாவும் சிறப்பும் வேருய்த், துய்ய பெரியவன் ஜிபுரியீலேச் சொன்ஞன்
றகுமத்துக்கடனீர்கன்னே, வையம் படைப்பெல்லா மெழும்பவென்று
வாரியுருமேலே வீசுமென்ருன். (291)

(இ-ள்);— மற்ற மலக்குகளும் எண்பத்துநாலு லட்சந்தடவை ஆதத்தைச் செய்தார்கள். வேறே வேறேயாசத்தான் இருந்தது. இப்படி யிருக்கும்போது றப்பு ஜீபுரீலே நோக்கி நீர் றகுமத்து என்கிற கடலின் தண்ணீரை அள்ளி உலகத்திலுள்ள படைப்புகளெல்லாம் எழும்புக என்று வீசும் என்ருன். எ-று

வீசு மெனச்சொன்ஞன் ஜிபுரியீலும் வேதறகுமத்துக் கடனீர்
தன்னேக், கூசர தவருட சிறகைதோய்த்துக் குல்கு அல்ஹம்துங்கூ
ங்யோதி, வீசப் படைப்பெல்லா மெழும்பக் கண்ட வெகு கோபங்
கொண்டே இசுருயீலு, நேசமாக நான் செய்ததுதா னிடுழி கால
முடியவில்லே. (292)

(இ-ன்):—ஜீபுரீல் இறக்கைகளாலே றகுமத்துக் கடலின் நீரை யள்ளி குல்ஹு அல்லாவும் அல்ஹம்தும் சொல்லி வீசியவுடனே சிருஷ்டிகள் எழுப்புவதைக்கண்ட இஸ்ருயீல் கோபங்கொண்டு நான் எத்தனே கோடி காலம் செய்த சரீரம் இன்னும் முடியவில்லேயே என்ருர். எ-று.

முடியாச் சடமான ஆதந்தனே முடிக்க வுதவிதாறெப்பஞவென்,
றடியில் நினறுதுஆவிரந்தே யாதி பரத்திலே யிரங்கிக்
கேட்க வடிவு முகப்மது ஆஷக்காக வந்தே யிசுருயீல் முன்னே

ளேகச், சடமுருவமா யாதந்தனேச் சமைத்தார் மாசுக்குத் தன்னேப்
பார்த்து. (293)

(இ-ள்):— இவ்விதம் முடியாத சரீரத்தை செய்து முடிக்க உதவி செய்வாய்றப்பே என்று இஸ்ருயீல் துஆக் கேட்டார். அப்போது முஹம்மதிய்யாவானது அவர் முன்பாக வந்து நின்றது, அதன் ரூபத்தைப்பார்த்து ஆதத்தை செய்தார். எ-று

பாத்துச் சமைத்திடு முருவந்தனேப் பாங்காய் நீட்டியே கிடத்தி
வைத்து, நேற்றுச் செய்ததுக் கதிகமென்ற நீயுமழிவதோ வெனக்
கோபித்து, மெத்தச் சினங்கொண்டே யுமிள்ந்தகாறல் மேனிநடுழிலே
விழுந்ததப்போ, வொற்றைச்சிறுவிரற் கொண்டெடுத்தே யுதறி
யெறிந்தவர் போயினரே. (294

(இ-ள்):—இவ்விதம் சமைந்த சரீரத்தை ஒரு மைதானத்தில் கிடத்தி இவ்வளவு காலமாக உன்னேச் செய்தேனே நீயும் அழியவா போகிருய் என்று காறிஞர். அந்தக் காரல் அதன் மேனியின் நடுவில் விழுந்து விட்டது. அதைத்தன் சிறுவிரலால் எடுத்து வீசி விட்டுப் போய் விட்டார். எ-று

போஞர் பரிக்குலம் பண்டுபோலப் பொக்லா வேகங்கொண்
டனேத்தும் வர, வரஞே ரிசுருயீ லுமிழ்ந்த காறல் வயிற்றி னடுக்குழி
மண்ஞனதங், காளகித்மீராய்க் குட்டி நாயொன்ருதந் தனேக்காத்து
நிற்கும்போது, வேண பிறகாரம் பரிக்குலத்தை விரட்டியாதத்தைக்
காத்து நிற்கும். (295)

(இ-ள்):—இந்தக்காறல் கித்மீர் என்கிற நாய்க்குட்டியாக நின்றது. பழய குதிரைக் கூட்டங்களும் அங்கு வந்தன, வந்த கூட்டங்களே அந்த நாயானது வெருட்டி ஆதத்தைக் காத்து நின்றது. எ-று

காற்றுச் சடம்ஆத மழியாவகை கண்டே யிசுருயீ லதிஜயமாய்,
எற்றமாகவே சிரசுசெய்ய வென்ஞ லாகாதென் றிறைமுன்ஞக,
நேத்தி மாமண்ணேப் பிடித்துவல்லோ னேரே யவர்வைத்து பணிந்து
நின்ருர், பார்த்தா னிறையவன் குதறத்தாலே பகர்பத் தெழுத்திஞற்
சிரகண்டாச்சே. (296)

(இ-ள்):—அந்த முறை இஸ்ருயீல் வந்து ஆதத்தைப் பார்த்தார் அது யாதொரு குறைவுமில்லாமல் இருந்ததைக் கண்டு இனிமேல் இதற்கு சிரசு செய்யவேண்டும் அது என்ஞல் முடிந்த காரியமில்லே,

என்று மீதமண்ணை எடுத்து றப்புடைய சமுகத்தில் வைத்து நின்ருர், றப்பு தன் குதுறத்தென்கிற கையால் அந்த மண்ணைத்தொட்டு ஒரு பார்வை பார்த்தான் உடனே தலையானது பத்து அட்சரங்களால் சமைந்து விட்டது. எ-று

சிரத்தையுடலோட பொருத்திப் பார்த்தார் சேர்ந்து சிரமுட
லொன்ருய்க்கூடி, பொருத்தும் ஆதத்தின் வலிவைப் பார்த்துப்
பொங்கி யிசுருயீல் மிகமகிழ்ந்து, கருத்தனபியாத முருவாய்ச்சென்று
கற்றபெரியோனைச் சுஜூது செய்தார். வரத்தைப்பொருந்திய நபி
யாதத்தை வல்லோன் மகிழ்ந்துபார்த் தேதுசொல்வான். (297)

(இ-ள்):—அந்த தலையை உடலில் வைத்தார் அது சரியாய்ப் பொருந்திக்கொண்டது, அதைக் கண்டதும் இஸ்ருயீல் சந்தோஷப் பட்டார். அதற்காக றப்பை ஸுஜூதும் செய்தார். அந்த வடிவை றப்பு நோக்கி கீழ்வருமாறு சொல்கிருன். எ-று

சொன்ருனென் றனின் ரகசியமே சுரூப மெனக்கொரு மாளிகை
யே, கண்ணு லுனைப்பார்த்து மகிழ்ந்ததுபோற் கண்டிலேஞெரு
காட்சியுமே, மன்னே வானர்க்கு நான்மலக்கே வந்து பாருமே
யாதந்தனை, முன்னோ னுரைபடி மலக்குநாலு முடியா மகிழ்ச்சிகொண்
டதனைப் பார்த்தார். (298)

(இ-ள்):—என் சிர்றே! என் வீடே! உன்னைப்பார்த்து இப்போது நான் ஆனந்தித்தது போல நான் ஒரு வஸ்துக்காவது சந்தோஷிக்க வில்லை என்று ஆசீர்வதித்து விட்டு, தன் நான்கு மலக்குகளையும் அழைத்து என் ஆதத்தின் வடிவைப்பாருங்கள் என்ருன். அவர்களும் பார்த்து மகிழ்ச்சி யடைந்தார்கள். எ-று

பார்த்தா ராதத்தை மலக்குநாலும் பார்க்கவுடலதிருலுவிடாங்
காற்று நெருப்பு நீர் மண்ணுடைய கருவுமுருவிலே கலந்ததப்போ,
பார்த்து ஆதத்தின் றாகுதன்னைப் பாதங் சடத்திலே போகவென்று,
நேத்தியாகிய றாகுதானு நின்றசிற்றிலேநுளைந்ததப்போ.

(இ-ள்):—நான்கு மலக்குகளும் ஆதத்தைப் பார்த்த உடனே நான்கு அஞசிறுகளும் ஆதத்துக்குள்ளே போய் நுழைந்தன. உடனே ஆதமுடைய றூஹை உள்ளே செல்ல உத்திரவான உடனே அதன் சிர்றில் போயிருந்து கொண்டது. எ-று

நுழைந்த வளிருலே தரிகொள்ளாம ஞெடியில் வெளியேவந்
துரைக்தம்றாகு, மொழிந்து தனியேநா னிருக்கிரிதே யுற்ற
துணையெனக் காருமில்லை, நுழைந்து நுழைந்துதா னேழுதர
ஞெடியில் வெளியேவந் திதுவே சொல்லு, மெழுந்த சுடரான
வாதிஞயனெந்தன் முகம்மதே குத்பேடியன்ருன்.

(இ-ள்):— றாஹானது தன் இருள் வெளியில்போய் இருந்து ஏழு தடவை வெளியே மீண்டது மீண்டு றப்பை நோக்கி எனது குத்துணையாருமில்லை எனக்கிருப்பிடங் கொள்ளவில்லை யென்றது அதற் கதைப்பார்த்து என் முகம்மதே என் குதுபுதையமே? என்ருன் எ-று.

என்றும் குத்பான வென்றுனையே யிரங்கி யாதத்தைப்
பாருமென்ரு, னன்றே குத்பான நபியொளிவு மாத முருத்தனை
யணுகிப்பார்க்க, வொன்ருங் கலிமாவாய் நபியொளிவு முரைத்த
விருபத்துநாலொழுத்தாற், சென்ற ஆதத்தின் சிரசுமுதற் சேரவே
முத்தெல்லாந் தரித்ததப்போ. (301)

(இ-ள்):— என்று விளித்து ஆதத்தைப் பாருமென்ருன் முகம் மதிய்யா வானது பார்த்தது. உடனே ஆதம் சரீரமானது கலிமாவில் இருபத்து நான்கு அட்சரங்களாக நிரம்பிவிட்டது. எ-று.

தரித்த நிலையெல்லாந் தவநிலையாற் தயவுமுகம்மது தாபர
மாம், வருத்தி யிருபத்து நாலெழுத்தும் வளைவு மூன்ஞெரு வெழுத்
துக்குள்ளே, யொருத்த ரறியாத நடுக்கோட்டுக்கு ளொளிவு
நபியல்லோ சுடர்துலங்கி, யிருந்தும் விளக்கொளி யிலங்கும்
போதே, யேறியலாகும் ஆதத்துள்ளே. (302)

(இ-ள்):— அந்தக் கலிமாவின் திரைக்குள்ளே ஒரு மூன்று எழுத்தில் றப்பும் ஒளித்திருந்துகொண்டான். அது நடுக்கோட்டை யாகிய இருதய கமலமாக இருக்கும். சமஸ்தத்தையும் கைகாட்டி விட்டு கன்ளனும் உள்ளேதான் ஒளித்தான். எ-று.

ஆத மறுவா ஹவ் வழதுகண்டே யந்தச் சடத்திலே யிருந்த
தப்போ, வேத பெரியவன் றாகைப்பார்த்து வெளியே வருகவென்
றுரைக்கும்போதிங்,கேது விதந்தாலும் வெளிவாறேனு னென்
றேயுதரத்தி னேறிநிற்குப்,போதலாகவே பேச்சுமூச்சும் பொங்குங்கு
கறத்து மிருபத்தாறே. (303)

(இ-ள்):— இவ்விதஞ் செய்ததின்பிறகு றூஹைறப்புவெளியே வருகிருயா என்ருன். அதற்கது எது ஒரு காரணத்தாலும் நான் வரவேண்டியதில்லை என்று சொல்லிற்று. கலிமா இருபத்து நாலுடன் குதுறத்து இரண்டுங் கூடி இருபத்தாறு இல்முகளும் ஆதத்தில் சரிவர நிரம்பிவிட்டது. எ-று.

இறுபத் தாறுமே திறையும்போதி லெழுந்த பெருந்தும்மலி
குநாசியிற், சுருபமுயிர்வந்த போதிலாதம் சொன்ஞர் அல்ஹம்து
லில்லாகியென், றிருவிழிமேலாம் முழித்துப்பார்க்க வேதனறுஷி
லேகலிமாக்கண்டே, யொருபந் துத்தரங் கலிமாச்சொல்லி யுரைப்
பரியாறப்பில் ஆலமீனே. (304)

(இ-ன்):— மேற் சொன்ன இருபத்தாறு இல்முகளும், சரிவர திரம்பின உடனே, ஆதமுடைய இரண்டு நாசியின் வழியாகவும். தும்மல் வந்து தும்பினர். அப்போது தான் ஆதத்துக்கு சரீவர றூஹு வந்தது. அந்தவுடன் அவர் வாயால் அல்ஹம் துலில் லாஹி என்ருர். மேலே அறுஷைப் பார்த்தார் அதிலே கலிமா எழுதி யிருந்ததைக் கண்டு பத்து விடுத்தம் கலிமாவைச் சொன்ஞர், சொல்லி கீழ்வருமாறு சொல்கிருர். எ-று.

உரைப்பா ரறஷினிலுனக்கிணையா யுற்றதுணைவராரெழுதும்
வரிக், குருபத் தருமுண்டோ வெனக்குமுன்ஞற் கூறு முகம்மது
குலம்வேறுண்டா, பருவத் தென்தனி ஞெளிவிஞலே படைத்தேன்
முகம்மதுப் பயஹாம்பரைக், குருவா முகம்மதி ஞெளியிஞலே
கோலப்பலதெல்லா மமைத்தேனென்ருன் (305)

(இ-ன்):— றப்புல் ஆலமீனே இந்த அருஷில் எனக்கும் முன் ஒரு வஸ்துவைப் படைத்தா இருக்கிருய்? முகம்மது என்கிறவரும் ஒரு வருண்டோ! என்ருர், அதற்கு றப்பு ஆதமே! அந்த முகம் மதின் ஒளிவாலே தான் உம்மையும் படைத்தேன், இந்த ஆலமும் உற்பத்தியாயிற்று, என்று மறுமொழி கூறினன். எ-று.

அமைத்தே னுமதுட பாலராக ஆகிறநபி யாய்ப் பிறப்பார்,
சமைத்தே னுலகெல்லா முகம்மதுகாஞ் சகல புகழ்ச்சியு முகம்ம
துக்கா, மெனைத்தான் புகழ்வது மெங்குமாகு மெந்தன் முகம்மதை
யெளைவணங்க, வுமைத்தா ஞகிறின் மண்டாடுமோ குண்மை
முகம்மது மமதுபாலர். (305)

(இ-ள்):—என்று கூறி இன்னும் ஆதமைப்பார்த்து ஆதமே! அந்த முகம்மது பின்யுகத்தில் ஆகிர் நபியாகவும்; உமது பாலராகவும் வந்து பிறப்பார். ஆலமும், ஆலங்களின் புகழ்ச்சியும் முகம்மதுக்காக வேண்டித்தான் இருக்கும். இன்னும் அவரைக் கொண்டே உம்மையும், மற்றநபிகளையும் நான் மன்ருடுவேன் என்ருன். எ-று.

பாலர் முகம்மது தீனிலென்னைப் படைத்தே னெனச்சொல்லி
யெழுதல்லாகூ, மேலு மதுபாலர் நபிக்குத்தந்தை மேன்மைதருகவு
மெழுதல்லாகூ, பாலன் றனையிரு விழியிற்காணப் பலன் பெற்றே
னென வெழுதல்லாகூ, ஆல நபிமேலே யாசைகொண்டே ஆத மழு
தழுதேதுசொல்வார். (307)

(இ-ள்):—அப்போது அதம் நபி றப்பை நோக்கி யாறப்பி அந்தப் பிள்ளையாகிய முகம்மதின் மார்க்கத்தில் நான் இருக்கிறேன் என்று நீ எழுது. நான் அந்த முகம்மதுக்குத் தகப்பன் என்பதையும் எழுது. என்று ஆதம் இன்னமும் சொல்கிருர். எ-று,

சொல்லுமிறையவன் பரிமானமாம் சொன்னவகையெல்லாம்
வரையுமென்று, வல்லோ னுரைபடிலெவுகுதனில் வரைந்ததே கல
மோய்விடாமல், அல்லா தனைப்பார்த்து லெவ்கு சொல்லு மாதி
பெரியோனே தம்பிரானே, யெல்லா ரகசியங்குரையில்லாம லினி
மேலே மூத்தல்லாதின்னமுண்டோ. (308)

(இ-ள்):—ஆதம் சொன்ன பிரகாரம் எல்லாம் லொஹில் எழுதும் படியாகக் கலத்திற்கு றப்பு உத்திரவு பண்ணிஞன். எல்லாம் கலம் எழுதி முடித்து இன்னம் எழுத வேண்டியது உண்டா! என்றது. எ-று.

உண்டோ வெனச்சொல்லிக் கேட்குப்போதங் குரைக்க
கலமொருலாமலிபை, வண்டத் தனஞ்சொன்ன பலகைதன்னை வல்
லோன் ஜிபுரியீ றன்னைக்கூவி, யன்றேதான் ஹயாத் துல்கை பாறி
லந்தக்கடனீரி லிறகைத்தோய்த்து, நன்ருயடியுமென் றுரைக்கும்
போது தாயன்ஜிபுரியீ லடித்தாரப்போ. (309)

(இ-ள்)—கலம் இப்படி கேட்டதும் றப்பு ஜிபுரீலைக்கூப்பிட்டு ஹயாத்துல் கைபார் கடலில் உமது சிறகைத் தோய்த்து லௌஹில் அடியும் என்ருன். ஜிபுரீல் அவ்விதம் செய்தார் அப்போது. எ-று.

அப்போ நிறைந்திடும் வரியினும மனேக விதமாக வழிந்த தப்போ, வெப்போது முள்ளான் படைப்புக்கெல்லா மிடையின் மவுத்தென்றே யெழுதச் சொன்ன, னட்பாம் பலவகை யிரணப்று குநாளும் புதிதென்றே யெழுதினதாற், றப்பித் தப்பியே பிழைப் பாரென்றுந் தலையி லேவரி யெழுத்துமாச்சே. (310)

(இ-ள்):—ஜிபுரீல் அடித்த சிறகின் அடியால் லொஹில் அநேக வரிகள் விழுந்தன. அவைகளால் இன்ஸான்களுக்கு இடையில் மவுத்தென்றும், ஒவ்வொருநாளும் இரணமும், மரணமும் புதிதென்றும், ஜனங்கள் தப்பிதப்பியே பிழைப்பார் களென்றும் பொருள் உண்டாயிற்று, எ-று.

எழுதி முடிந்த பிணிமையோர்கெல்லா மெம்பிரான் சொன்ன மாராயமு, முழுதும் படைப்பெல்லாம் ஆதந்தனை முன்னேயிருத் தியே சுஜூது செய்யும், பழுதி லாதவன் சொன்னபடி பார மலக் கெல்லா மொருதிரளாய்த், தொழுதே யெல்லாம் ஆதந்தனைச் சொல்வான் ஜாசீலுந் தொழுதேனென்ருன் (311)

(இ-ள்)—இந்த ரகசிய முண்டுபட்டது றப்பன் தன் மலக்குகள் எல்லாரையும் கூப்பிட்டு என்னுடைய ஆதத்துக்கு சுஜூது செய்யுங்கள் என்று ஏவினன். அதேபிரகாரம் ஸாஷ்டாங்கம் செய்தார்கள். அப்போது அஜாஸீலானவன், எ-று.

தொழுது பணிவிடையுனக்கே செய்தேன் தோன்றுமுறுவாத மண்ணல்லவோ, வழுது மண்ணைத்தான் வணங்கேனென்று மஜாசீ லுரைத்திட வானுரைப்பா, னெழுது மெனச்சொன்னன் கலத்தைப் பார்த்தே யிணங்கானஜாசீ லிபுலீசென்று, முழுதும் காபிரா மிபுலீசென்று முறையாய்வரியினி லெழுதலாச்சே. (312)

(இ-ன்):—ஆனால் அஜாசில் என்கிறவன் மாத்திரம் றப்பை நோக்கி நீ என்ன தான் உத்திரவு செய்தாலும் வணக்கம் என்பது உனக்கேயன்றி கேவலம் மண்ணைக்கொண்டு படைத்த ஆதத்துக்கு நான் ஒரு போதும் தலைசாய்க்க மாட்டேன் என்று மறுத்தான். அதுகேட்டு றப்பு கலத்தை நோக்கி அஜாசீலை இபுலீசு என்று எழுதச் சொன்னன், அப்படியே எழுதியாயிற்று. எ-று.

எழுதி மீக்காயி றனுக்குச் சொல்வா னிணங்கானஜாசீலிபுலீசனை, முழுதுங் கசடனையாணையிட்டு மோச நரகத்தி லெறியச் சொன்ன, னழுதேயிபுலீசு மென்ன சொல்வா னுதிபெரியோனே தம்பிரானே, பழுது குலமானே னென்னிடத்திற் பாரவுயிருன்னை யல்லாதுண்டோ. (313)

(இ-ள்) :— எழுதித் தீர்த்ததும் மீக்காயீலைக் கூப்பிட்டு இந்த மூதேவி லஅனத்துச் செய்யப்பட்டுப் போனன், ஆனதல் இவனைத் தூக்கி நரகத்தில் எறியும் என்று உத்திரவு பணிணினன். அந்த உடனே இபுலீஸானவன் றப்பை நோக்கி மிகுந்த துயரத்துடன் அழுது சொல்கிருன். எ-று

அல்லா வொருவனே படைத்தவனே யரிய நரகிலு மிருப்பவனே, யெல்லா வுயிருக்கு முயிரானவர் வெனக்கு முயிராய் நீயிருப்பதாலே, நல்லார்க்கு நல்லா னற்பதவி தண்ணும், பதவிதா னரகிலானே, னெல்லா நினைவையு நிரப்பவல்லோ வெனக்கு முபகாரஞ் செய்வ தென்ன. (314)

(இ-ள்):— றப்பே எனக்குள்ளே இருக்கின்ற ஆத்மாவானது உன்னையன்றி வேறு ஆரிருக்கிறது! என்னை நீ நரகத்தில் போடுவது தகுமா? வேறே மாதிரியான ஒரு உபகாரஞ் செய்ய வேணும் என்று கேட்டான். எ-று

என்ன வேணுமென் றிரையுரைக்க வெங்குந் தேடிநா னுவந்து கேட்பே, னென்ன கேட்கினுங் கொடுத் தெனக்கு மென்னை யரசனு யெனகேவலி, மெண்ணு முவந்ததை யெனக்காகவு மெந்தப் படைப் பையுந் தடையில்லாமற், சொன்னன் கொடுத்தே னென்றுனது வாக்காற் சொல்லி லடங்காதான் சரியே யென்ருன். (315)

(இ-ன்):— அதென்ன உபகாரம் நீ கேள் என்ருன் அதற்கு இபுலீசு இந்த ஆலத்தில் நான் எங்கே போனலும் போகவும், நான் என்ன செய்தாலும் செய்யவும், என்ன நாடினலும் சித்தியாகவும் நீ தத்துவங் கொடுக்கவேணும் என்ருன். அப்படியே தந்தேனென்ருன். எ-று

என்று மழியாத னெங்குமுள்ளோ னெல்லார்க் குபகாரமென் னுயகன், கண்டு கேட்டது தருவே னென்ருன் கனவேகங் கொண்டே

யஜாசில் போனுன், கண்டேயொருமாளி யுட்புகுந்து கண்ணுக்
கடங்காத வைரப் பேழை, யன்றே துறப்பினுற் துறந்து பார்த்தா
னதிலே சரமாக வைரமாலே. (316)

(இ-ள்):— கொடுத்தேன் என்று றப்பு சொன்னது கேட்டு பெரிய வீரத்துடன் போனுன், போனவன் அறுஷில் ஒரு மாளிகையைக் கண்டு அதனுள் சென்ருன், அங்கு ஒரு வைரப் பெட்டி பூட்டு சாவி தொங்கிக் கொண்டிருந்தது. அந்த சாவியால் டி பெட்டியைத் திறந்து பார்த்தான், அப்போது ஒரு வைரவ மாலேயானது இருந்தது. உடனே றப்பைப் பார்த்து இதை எனக்குத் தா என்ருன். எப்படியே தந்தேன் என்று றப்பு சொன்னுன். எ-று

என்று சரமொன்று பதக்கமேழு மிடது மார்பிலே தரித்துப்
பார்த்தான், றுன்று வடமாலே தருகவென்ருன் சொன்னு னிறை
யவனுக்கே யென்ருன், வண்ட னறுஷைவிட் டிறங்கிக் கீழே வைர
மாலேயைக் குனிந்து பார்த்தா, னன்றே சரமேழு நரகேன்மாய
வன்றன் மார்பிலே கிடக்கக் கண்டான். (317

(இ-ள்):- உடனே இபுலீசு ஒரு வைரச் சரத்தைதையும் அதோடு ஏழு பதக்கங்களேயும் எடுத்து இடது மார்பில் அணிந்தான். ல அனத்துப் பெற்றவன் உடனே அறுஷை விட்டும் கீழே யிறங்கி குனிந்து பார்த்தான், அப்போது அந்த ஏழு மாலேகளும் ஏழு நாக மாகத் தன் மார்பில் இருக்கக் கண்டான். எ-று

கண்டு நடுங்கியே நிற்கும்போது கத்தன் பரிமான மீக்காயிலே,
வண்ட னிபுலீசை யிறக்குமென்ருன் வள்ளல் மீக்காயீ ருனெழுந்தே,
யன்றே அலியார்க் கென்றே வகுத்த அறுஷூத் தலமதிலிருக்கும்
வாளேக், கொண்டே யிபுலீசின் வலக்கைகாலுங் குறையாக வேகங்
கொண்டவர் வெட்டினுர். (318)

(இ-ள்):— இவ்விதம் கண்டு நடுங்கி நிற்கும்போ துறப்பு மீக்காயிலேக் கூப்பிட்டு இபுலீசை கீழே இறக்குமென்ருன், அவர் அருஷிற் போய் அங்கு அலியார்க் கென்று செய்து வைத்திருந்த வாளேக் கையிலெடுத்து இபுலீசுடைய வலது கையும், வலது காலேயும் வேகங் கொண்டு வெட்டினுன், எ-று

வெட்ட வொரு காலுங்கையுமறுந்து விழுந்து கிடக்கையிலேது
சொல்வா, னெட்டு விதத்திஞல் வெட்டினுலு மெனக்கேவல் செய்

ய்வோ ரெங்கே யென்ருன், கெட்ட செயலாகு முனதுமாய்கை
கெட்டோருனதுட பேவலாளர், மட்டு நரகேழு முனக்கேயென்ருன்
மகிழ்ச்சியாயவன் சிரித்துக்கொண்டான். (312)

(இ-ள்):—மீக்காயீல் வெட்டிடின வெட்டால் ஒரு கையும், ஒரு காலும் அறுந்து கீழே கிடக்கையில் எங்கே எனது கூட்டங்கள? என்று கேட்டான். அதற்கு மீக்காயீல் உனது கூட்டங்கள் காபிரீன்கள் என்ருர். அதைக் கேட்டதும் கொஞ்சம் குலுங்கச் சிரித்துக் கொண்டான். எ-று.

சிரித்த இபுலீசை மீக்காயீலுஞ் சினமா யொருகையா லெடுப்பித்
தூக்கி, நிறுத்தி யி துகா லாலுதைத்து நேரே நரகத்திற்றள்ளிவிட
விருத்த மாய்சுற்றிக் காவியாவில் விழுந்தா னுயிலெனு ரோமை தனி
னிறுத்திக் கரடிபோல் வளர்ந்தரோமம் நீண்ட கொம்புடனுருக்கங்
சட்டை (320)

(இ-ள்):— சிரித்த இபுலீசை மீக்காயீல் தூக்கி எடுத்து தன் இடது காலால் உதைத்து நரகத்தில் தள்ளிவிட்டார், ஹாவியா என்கிற ஓடையில் போய் விழுந்தான். விழுந்ததும் அவன் சரீரத்தில் கரடி போல் உரோமமும் உருக்குச் சட்டையும் உண்டாய் விட்டன. எ-று

உருக்குச் சீராவை யுடல்புனேந்தா னுருகை யொருகாலு
முடன்வளர்ந்தா, னெருக்கும் பாதாள நரகமட்டு நேரடியோடியே
வெளியில்வந்தே, யுருக்கத் தலேயேழு முடலொன்றுள்ள வுவமைய
டங்காதவுருமாகிச், சிறக்கும் பெண்ணுரு மனுவடிவாய்ச் செரப்பணி
யெல்லா மணிந்துகொண்டான். (321)

(இ-ள்):— உண்டானதும் பழையபடி அறுபட்ட கால் கைகளும் வளர்ந்து விட்டன. அப்போது கொடிய விகார ரூபத்துடன் அங்கிருந்து எழுந்து பாதாள மட்டிலும் வெருண்டோடி ஒரு அழகிய ஸ்திரீயின் ரூபத்திலாகி நகை யெல்லாம் அணிந்தான். எ-று

கொண்டா னுமைபோல வடிவுரூபங் கோதிக் குழன்முடித்த
ணிந்துகொண்டு, மண்டலமெங்குந் தனதுமாயை மருட்ட வழிபார்த்
தேயிருக்குப்போதி, லொன்றுங் கிடையாமற்பண்டுபோல வொழிந்து
நரகத்தி லிருந்தானப்போ, தன்று நெடுங்காலஞ்சென் றதற்பி
னுதிபெரியவன் பரிமானமாய். (322)

(இ-ள்):— உமாதேவி போல கறுத்தகுறத்திலாகி, தன்மாயா விநோதத்தால் உலகங்களை யெல்லாம் மாட்டிவிட வழி பார்த்தான் ஒன்றும் சாயாமல் பழயபடியே நரகத்திலேயே கிடந்தான் அதிலிருந்து நெடுங்காலஞ் சென்ற பின்னால் எ-று.

ஆதியீசனு முப்மூர்த்தியு, மனேகந்தேவதைக்கடல்லெழும்பி
மாதை யுமையாளு மீசனுதன் மங்கை யிடாவிலா விற்பிறந்தே,
யீதுசலமதி லமைந்திருந்த றெல்லாங் கடலினின் றெழுந்ததப்போ
சோதி பரிமானந் தேவர்க்கெல்லாஞ் சொன்னுறைத்தைத் தொழுங்க
ளென்ற. (323)

(இ-ள்):— ஆதி யீஸ்பாறை, மும்மூர்த்திகளும், மூந்நூற்று முக்கோடி தேவர்களும், கடலில் உற்பத்தியானார்கள் அப்போது ஈஸ்பரன் தன தேவர்களைக்கூப்பிட்டு ஆதம் நபிக்கு ஸாஷ்டாங்கஞ் செய்யச் சொன்னான். எ-று.

தொழுங்க வெனச்சொன்னான் றொழுமுன்னே தோசியிபு
லீசுமோடிவந்து, முழுதங் குழுவதிற்குறைவிடர்மன் மோசமெனு
மாயைப் பொடியைத்தூவி, யழு த்ழுதுதா னெல்லோர்முன்னே
யையோ விதிப்பய னிஃதோவென்றான், றொழுதங் கிபுலீசைச்சகல
தேவுஞ் சொல்லு மெமதையா வெனசொன்னதே. (324)

(இ-ள்):— அவர்கள் தொழுகிற நேரத்தில் இபுலீஸானவன் வந்து, தன் மாயப்பொடியை அவர்கள் மேல் தூவி, அடா! என்ன வேலை செய்கிறீர்கள். அது மண்ணல்லோ! அதற்கேன் வணக்கம்! அப்படியாவது எனக்காவது செய்யுங்கள்? என்றான். அது கேட்டு அந்த தேவர்களெல்லாரும் இபுலீசை ஐயா! எங்கள் சாமியாரே! கிருபை செய்யும், தம்பிரானே! என்று அர்ச்சனை செய்தார்கள். எ-று.

சொல்லு வானப்போதிபுலீசுதான் சூழ்ந்ததேவரேபெரியோர்
களே, எல்லோர்க்குமுன்னே யெனைவகுத்தா னெக்குத் தெரியங்கா
னெவ்விதமு, நல்ல விபரமாய்ப்பிரித்துச் சொன்னேனென்சொன
சொல்லைக்கேளாமலே, அல்லா வுரைப்படி செய்வேனென்ற ஆறாத்து
மாறாத் திருபேருந்தன். (325)

(இ-ள்):—அதன் பிறகு அவர்களை இபுலீசுநோக்கி, ஓ! தேவர்களே! எல்லாப் படைப்புக்கு முந்தி என்னைத் தான் படைக்கப்

பட்டது. எனக்குத் தெரியாத வழமை புதுமையென்ன இருக்கிறது. ஆறாத்து மாறாத்தக்கள் இந்த ஆதத்தால் தான் கெட்டார்கள், அது உங்களுக்குத்தெரியாதா? என்றான். எ-று

இருபேரு மிந்த மண்ணுருத்தை யிணங்கிச் சுஜூதிட்டாரியானி
ருக்க, வுருவான மண்ணைத் தொழுதாளென்றே யோயாவமளியென்று
றைத்தான்பின்னு, முருபம பணிமாற லுனைப்பணிவோ ருயர்ந்த
அஜாசீலின் குலமுதாமே, மறுபேச் சுரையில்லர் தேலாதென்றுல்
மகிழ்ந்தே யெல்லோரும் வாழலாமே. (326)

(இ-ள்): ஆனதாலே தேவர்களே நீங்கள் யாவரும் இப்போது நான் சொல்கிற பிரகாரம் கேட்கவேண்டும், நப்பை நோக்கி இந்த மண்ணுருக்கு வணக்கஞ்செய்ய எங்களால ஏலவேயேலாது என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிடுங்கள். அப்பால் அவன் செய்கிறதை பார்த்து நாமெல்லோரும் ஒன்று கூடியிருந்து வாழலாம் என்று சொன்னான். எ-று

வாழ்வின் பெருமையை யென்னசொல்வேன் வருத்தம் வரும்
பாட்டை யென்னசொல்வே, னேழைத் தனப்வேண்டா மென்பேர்
வேண்டா மினங்கிச் சுஜூதிட வேண்டாமென்று, காளை யிபுலீசு
போனபிற்பு கத்தன் ஜிபுரியி லாதன்தனைச், சூழ்ந்த தேவர்கள்
குழுமுன்வைத்துச் சொன்னார் சுஜூதிட்டுத் தொழுகளென்றே.

(இ-ள்):—இன்னமும் இபுலீசானவன் தேவர் கூட்டங்களைப் பார்த்து அதனால் கிடைக்கிற வருத்தங்களைக் கவனிப்பீர்களானால் பின்னுக்கு அநேகசெவ்வாக்குகள் இருக்கிறது, உஷார் உஷார் என்னையாவது என் பேரையாவது சொல்லவேண்டாம். ஜாக்கிரதை! என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். மூதேவியான இபுலீசு போன பிறகு ஜிபுரீல் ஆதமைத் தூக்கி சுமந்து கொண்டு வந்து அந்த தேவர் கூட்டத்தில் வைத்து, இதுக்கு ஸுஜூது செய்யுங்கள் என்றார். எ-று

தொழுகப் பரிமானம் ஜிபுரியிலுஞ் சொன்ன மாராயந் தனக்
கொவ்வாமற், குழுவுக் காசான வீயனுதன் கோலயுமையாளுமும்
மூர்த்தியு, மெழுகைக் குலமல்லா விதைவணங்க வெங்கள் குலம்
சாகாக் குலமேயாகு, முழுதும் பணிவது மில்லையென்றார் முன்னோன்
ஜிபுரிமி லாதந்தனை, (328)

(இ-ன்):—ஜிபுரீல் சொன்ன உடனே அந்த தேவர்களெல்லாம் மன முரண்டவர்களாக ஜிபுரீலே நோக்கி, நாங்களோ! சாகாத கூட்டங்களாக இருக்கிறோம். இந்த ஆதமோசாகிறவராக இருக்கிறார். அப்படி இருக்க, நாங்கள் இருவருக்கு ஸாஷ்டாங்கஞ் செய்ய மாட்டோம். என்று சொல்லிவிட்டார்கள். எ-று

ஆதந் தனை யவர் சிரசிலேந்தி யாதிபெரியவ னறுஷில்
வைத்து வேத பெரியொனே யெப்பிரானே வேணவிதமெலலாஞ்
சொலலிபபார்த்தே, ஞதந் தனைநோக்கிச் சுஜூது செய்ய வாகாதென
சொன்ஞர்தேவரெல்லாம், வாதைக்குலமெல்லாமிபுலீசுக்கு வார்த்தை
பணிவிடை செயயவென்ருன். (329)

(இ-ன):—தேவர்கள் மறுத்த உடனே ஜீபுரீல் ஆதத்தைத் தூக்கி தலையில வைத்துக்கொண்டு, அறஷில போய் இறக்கி, றப்பனே றகுமானே! நான் அந்த தேவர்களுக்கு வேண்டியமட்டுப் சொன்னேன் அந்த முரண்டர்கள் ஒரு விதத்திலும் ஸாஷ்டாங்கம்செய்யமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள் என்ருர். அதற்குறப்பு அந்தக்கூட்டங்களைஅனைத்துப்பெற்றவனைத துயர்ந்து விட்டார்கள் என்று சொன்ஞன். எ-று

செய்யாக் குலமெல்லாம் ஷைத்தானென்றே சேர்க்கநாகத்திற்
பரிமானமாந், துய்யபரிமானஞ் சொன்னபடி தொலையாநரசேழுமி
புலீசுக்குச், செய்யும் பணிவிடை ஷைத்தான் குலச் சேனைப் பரியைந்து
பேருமென்ருய், வையநரகாண்டங் கிருக்கும் போது வல்ல பெரியவன்
பரிமானமாம். (330)

(இ-ன்):—அவ்விதம் வணங்காத குலத்தையெல்லாம் நகரவாதிகளான ஷெய்தான் கூட்டங்கள் என்ருன். அதே பிரகாரம் அவர்கள் இபுலீசுக்கு பணிவிடை செய்ய திட்டமானுர்கள். எ-று

வல்ல பெரியவன் பரிமானந்தான் வகையாம் வைரம்வெண்டரளத்
தாலே, சொல்லத் தொலையாதமரகதத்தாற் றுலங்குமுத்தாலும்பவ
ளத்தாலும், அல்லா றகுமத்தின்ஹயாத்துல்கைபா றறதக்கடலிலே
தானிருந்து. மெல்லாங்குறையாதொன்று போலேயெழுபதிலக்கத்தை
யெழும்பினனே. (331)

(இ-ன்):—அதன்பிறகு றப்புஆதி துனியா என்னும் ஒரு யுகத்தை உற்பத்தி பண்ணும் பொருட்டு முத்தாலும், மரகதத்தாலும் பவளத்தாலும், மாணிக்கத்தாலும் எழுபது லட்சம் மாளிகைகளை ஹயாத்துல் கைபார் கடலில் நின்றும் எழுப்பினன். எ-று.

எழுப்பு மாளிகை யொருமுத்தாலே யெந்த யுலகெங்கும்
கோடிமாளி, முழுப்பச்சை முத்தால் மனுடரெல்லா முடியாதவர்
காலம் வயதாயிர, மெழுப்பியுலகமு மனுவு மாளி யென்தமானிக்கு
மாண்பெண்ரண்டா, யெழுப்பியுலகத்தைவான் புவிக்குமிடையினிறுத்
தியே யிருக்கும்போது. (332)

(இ-ன்):— அப்படி எழுப்பிய மாளிகைகளில் ஆண் பெண் இரண்டு ஜோடிகளாக வைத்து அவர்களுக்கு வயதுஆயிரம்கொடுத்து பூமிக்குப், வானத்துக்குப் இடையில் நிறுத்தினன். எ-று.

இருக்கு முலகெல்லாமழிக்கவென்றே யெழுந்தானிபுலீசுவே
சருப, நிரக்கு மாணிக்க முலகமெல்லா நேரே யோளிவீச நேர்வா
சமுஞ், சிறக்கு மழகோடு நரைதாடியுஞ் சிங்கார மெனச்சொலலப்
போமோ, வெவர்க்குப் வயதார யறிவாளரா யெழுபது நகரெங்குஞ்
சென்ருன். (333)

(இ-ன்):— அந்த உலகத்தை அழித்துவிட வேண்டி இபுலீசானவன் ஆங்காரத்தோடும் பிரப்பட்டு நரைத்ததாடியுடனும், பெரிய தலைப்பாகையுடனும், கைத்தடியுடனும், பெரிய மஷாயிகு என்று பேர் வைத்துக்கொண்டு ஊர் ஊராய்ப் போனுன். எ-று.

சென்று னகருள்ள வானும் பெண்ணுஞ் சேர வந்துதான்
பதப்பணிந்தே, யென்றுங் காண்கிலோம்பெரியவரே யிவ்வூ ரிறங்
கியவிதமேதென்ருர், பண்டுநெடிங்காலம்பெரியவர்நாம் ஜிபுரீலென்று
மகிழ்ந்திங்குரைப்பதுமெனைத்தானென்ருன். (334)

(இ-ன்):— அவனைக்கண்ட அந்த வூரையுடைய ஆண்களும், பெண்களும் வந்து வந்து கூடி அவன் பாதம் பணிந்து இந்தனை தூரம் மஹாத்மாவாகிய நீர் யார்! எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்டதற்கு, இந்த உலகமெல்லாம் புகழ்பெற்ற ஜிபுரீல் என்பது நான் தான், இப்போது நான் அறுஷிலிருந்து வருகிறேன். என்ருன் எ-று.

தான்ருன் றகுமந்தக்குவந்தநென்ருன் ருழ்வுவரச் சற்றும்
பொறுக்கமாட்டே. ஞன்ரு னிறங்கினே னிறையவ்லாம னடக்கும்
விதமுற்ற செய்தி சொல்வேன், வாஞேன் பரிமானமண்ணுதத்தை
மகிழ்ந்தே யென்னுட சிரசிலேந்தி, நானே நகரெங்கும வருவேனுனே
நாயனுரைத்தானென்றதவுஞ்சொல்வேன், (335)

(இ-ள்) — இன்னும் சொன்னதாவது:— றப்புடைய றகுமத்துக்குச் செகந்தக்காரன் நான் தான் இன்னும் அல்லாவுக்குத் தெரியாத செய்திகளும் நான் சொல்வேன், ஒரு வேளை றப்புடைய உத்திரவுபடி மண் ஆதத்தைச் சுமந்துகொண்டு உங்களிடம் வந்தாலும் வருவேன் என்ருன். எ-று.

சொல்வேன் ஜிபுரியீ ஞனேயென்று சுருபம் வேருக விருப்
பேனப்போ, வல்லோ ஞதத்தைத் தொழுகச்சொனஞன் வாரு
மெனவெல்லோர் தமையழைப்பேன், அல்லா வரைத்நாலு மார்
சொன்ஞலும் ஆதமண்ணவ்லோ தெனச்சொல்லுங்கள், சொல்லாதே
நீக்கடொழிதீராகிற் சொன்னேனரகல்லாற்சுவாக்கமில்லே (336)

(இ-ள்): — அப்படி வருவது நான் தான் ஜ்புரீல் என்று சொல்வேன், ஒருவேளை உருவம் மாறி யிருப்பேன் என நிலேயிலிருக்கிறேன், ஆதத்துக்கு ஸுஜூது செய்யச்சொல்வேன், நீங்கள் ஒரு போதும் அந்த மண்ணுக்குத் தலேசாய்க்க வேண்டாம். அப்படி அத்துமீறி செய்வீர்களானல், உங்களுக்கு நரகமே அன்றி சுவாக்கமே கிடையாது என்று சொன்ஞன். எ-று.

இல்லே யொருர்சுாலம் பதவிசொர்க்க மென்பபே ரெவர்க்கொன்
றுஞ் சொல்லவேண்டா, மெல்லோரு மொன்ரு யதிர்து பேசு மிழந்த
பேர்சொன்றும் பேச வேண்டாம், பொலலா நெரியெல்லாம் வருத்தி
வைத்துப் போஞனிபுலீசு நரகநாட்டில், வல்லோ ஞரைப்படியா
தந்தமை வாரிச் ஜிபுரியீ லெடுத்துவந்தார். (337)

(இ-ள்)-— இவ்விதம் அந்த மாணிக்க உலகத்தாரை கெடுத்து அந்த நாச வழியைக்காட்டிவிட்டு இபுலீசானவன் நகரம் போய்ச் சேர்ந்தான். அதன் பிறகு றப்புடைய உத்தாரப் பிரகாரம் ஜிபுரீலும் ஆதத்தைத் தூக்கிக்கொண்டு வந்து சேர்ந்தார். எ-று.

வந்து நகரோரை வரவழைந்து வரிசை யாகவேயாதந்தமை,
முந்தக் கொலுவிலே நிறுத்தி வைத்து முன்னேன் தனைத்தொழும்

பாங்குபோலே, பந்தி யாகவே நகரிலுள் ளபடைப்பிலாணுப்பெண்ணு
லகமுமாய்ப், பிந்தா தேதொழு மெனவுரைக்கப் பேசு வாரப்போ
தெல்லாருமே. (338)

(இ-ள்);— ஜிபூரீல் வந்து அந்த உலகத்தார்களே அழைத்து அவர்களுக்கு ஆதத்தைக்காட்டி நீங்கள் ஆண்களும், பெண்களும் றப்புடைய உத்திரவுக்காக இந்த ஆதத்துக்கு ஸுஜூது செய்யுங்கள் எ-று

எல்லாருஞ் சொல்வா ரேதுகாணு மெந்த நாளுமில் லாப்பு
துமை, நில்லா தேசொல்லு நகரைவிட்டு நீநீயோ மண்ணே நிறுத்
திமுன்னே, வல்லோ ஞரைத்காலு மார்சொன்ஞலும் வருந்தோ
மினிவர வேண்டாங்கண்டீர், நில்லா தேசெல்லு நிமிசநேர நீருமினி
மேலும் வரவும் வேண்டாம் (339)

(இ-ள்):—ஜிபுரீல் சொன்ன வார்த்தையை அவ்வுலகத்தார்கள் கேட்டதும் ஒவ்வொருத்தரும் அடங்காத சினங்கொண்டு ஜிபுரீலேப் பார்த்து ''ஏதுகாணும் இது காலங்களாக இல்லாத புதுமை சும்மா கிடக்கிற ஒரு மண்ணுங்கட்டியைத்தூக்கி வந்து நிறுத்திக் கொண்டு அதற்கு வணக்கமேதக்கு காணும்! போதும் போதும் உமதுசகவாசப்! நீர் வந்து வெகு நேரமாகிறது. நடந்து காட்டும் இனிமேலும் நீர் இங்கே வரவும் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். எ-று

யேண்டா மெனச் சொன்ஞர் ஜிபுரியீலு மிக்கோ ஞதத்தைச்
சிரசிலேந்தி, யாண்ட பெரியவ னறுஷில்வைத்தே யாதி பெரியோனே
தம்பிரானே, யேன்ற விதமெல்லாஞ் சொல்லிப்பார்த்தே னிசப் பாவி
யென் றிமையோர் சொல்ல, மாண்ட விகருயி லானவர்க்கு வல்ல
பெரியவன் பரிமானமாம். (340)

(இ-ள்):—அப்பால் ஜிபுரீல் ஆதத்தைத் தூக்கித்தலேயில் வைத்து அறுஷில்வந்து, றப்பே, அந்தப்பாதகஜனங்களுக்கு நான் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் ஒருவிதத்திலும் இணங்கிஞர்களில்லே. நான் திரும்பிவிட்டேன் என்ருர். எ-று

பெரியோன் பரிமான மிசுருயிலே பேழை யதனின்முன்
வைத்தவேங்கை, யுருவந் தெரியவே காணும்விழி யுமது விழியா
லேநரகமெல்லா, மெரியுந் தணலாகக் கோபங் கொண்டே யெழுப

துலகையும் பாருமென்ரு. னுநகி யிசுரு யீலுணர்வழிந்தே யோயாதே
சொல்லி யழத்துணிந்தார். (341)

(இ-ன்):— ஜிபுரீல் சொன்னவுடன் அல்லாவுக்கு கோபமீறி இஸ்ருயீலைக் கூப்பிட்டு உபது பேழையில் இருக்கிற அழிவு என்கிற வேங்கைப்புலியைக் கொண்டு அந்த உலகத்தை ஒரு பார்வை பாரும், என்ருன். அதைக்கேட்டு இஸ்ருயீல் மனமிரங்கி அழுதார் எ-று

அழுதே சொல்லுவார் யாறஹீமே யாதி பெரியோனே யெம்
பிரானே, பழுது வருமென்று பரிமானபடி பாரப் புவிமண்ணை
யெடுக்குப்போதே, யழுது புவ்யிடு மாணைதட்டி யள்ளி யிடும்படி
மண்ணையேந்தி, யெழுபதி னெண்ணு யிரம்வருட மேங்கி யழுதது
மெனக்குப்போதும். (342)

(இ-ன்):—இஸ்ருயீல் அழுது றப்பை நோக்கி யாறப்பி முன்னமே அந்த ஆதத்தைப் படைக்க மண்ணெடுக்குப்போது அந்தப்பூமியானது தட்டிய ஆணையும் விலக்கிவிட்டு நான் கொண்டுவந்ததற்கு இந்தப் பாதகம் எனக்குப்போதும். எ-று

எனக்குப் பரிமானமிது தவிர வெந்தப் பணிவிடைக் கிணையில்
லானே, யுனக்கிங் குவந்தவர் பேரைச்சொல்லி யுண்றன் பேரையுஞ்
சொல்லியல்லோ, வெனக்குப் பெரியவன் பேரைச் சொல்லி யெந்த
வானையும் விடுவாரப்போ, தனக்குச் சரிகாணு மென்மேற் சுற்ற
முயர்ந்த பெரும்பாவஞ் சுமக்கமாட்டேன். (343)

(இ-ன்):—உலகத்தார்கள் எந்த ஒரு கருமத்துக்கு உன்னையும் உனக்கு உவந்தவர்தனையும் கொண்டல்லவா சத்தியஞ் செய்வார்கள் அதற்கெல்லாம் நான் சம்மதிக்க வேண்டியது வரும். அந்த பாவங்கள் என்னைச்சேருமே! எ-று

சுமக்கும் பெரும்பாவ நல்லசெயற் சேராம லுன்னை விலக்கி
வைப்பே, னெனக்கு வாராமல் விலகுப்போது வெல்லாஞ் சுமப்ப
துநீயோவென்ருர், நமக்குச் சேர்வது நன்மைகாணு நாயனை கொடுத்
தானென் றெவருஞ்சொல்லச், சமைக்கும் பரிபார முலகவாழ்க்கை
சகலவாழ்வுடன் மதலையேது. (344)

(இ-ன்):— அப்படி எல்லாவற்றிற்கும் சம்மதித்து ஒரு பாவத்தைச் செய்ய வேண்டுமானல் அவைகளை நீ ஏந்துக்கொள்வாயா?

என்ருர். அதற்கு றப்பு நன்மைகள் தான் நான் ஏந்துக்கொள்வேன்

ஏது பலனுந்தான் கிடைத்தபோதி லிறையோன் கொடுத்தா
னென்றினையே சொல்ல, வேதனை வந்தாலதுவேசொல்ல வெண்
ணுவுதானும் வெதுவாய்ச்செய்வேன், வேதனையெல்லா மஜாசில்
செய்ப வினைந்தபாவமு மதனைச்சேரு. மீது செய்வேனு னென்ற
போதி லிசுருயீல்செல்வா ரியாறப்பனு. (345)

(இ-ன்):—பாவங்க எல்லாம் இபுலீசைதான் சேரும். அப்படியே உலகங்களில் பேச்சு நடைபெறச் செய்கிறேன் என்றவுடன் இஸ்ருயீல் சொல்கிருர். எ-று

றெப்பனு வெங்க ளுயகனே றெப்பில் ஆலமீனுனவனே.
யொப்பான பாவச் செயலுக்கெல்லா முண்டு படச்செய்தா யிபுலீ
சென்றே, யப்போ திறையவ னிபுலீசையு மைந்து தலைவரு மனே
கந்தேவு, தட்பா யனைத்தையு முன்னிறுத்தி நாயன் பரிமானமாயுரைத்
தான். (346)

(இ-ன்):— அப்போது இஸ்ருயீல் றப்பை நோக்கி, றப்பனே! இபுலீசை பாதகச் செயலுக்கா படைத்தாயா என்ருர். ஆம் என்று உடனே இபுலீசையும், அவன் கூட்டங்களையும் அருகில் நிறுத்தி பின்வரும் செய்திகளை யெல்லாம் சொல்கிருன். எ-று

அப்பேர தஜாசிலே முன்னிறுத்தி யாதிபெரியவ னேதுசொல்வா
னெப்போது முள்ள நாயனல்லோ வெந்தன் முகம்மதையுலகுதனி,
லெசப்பா மனுருபஞ் செய்யவேணு முலகிலுயிரெல்லாம் புகழவேணுத்
தப்பல் லாமனு வெல்லோருக்குந் தகப்பனுனவராதந்தானே. (347)

(இ-ன்):— இபுலீசுக்கு றப்பு சொன்னதாவது நான் தான் உலகங்களுக்குக்கருத்தனுனவன். முகம்மதாகிறவர், என் ஹபீபாகவும் இருக்கும். ஆதமானவர் சகல உயிர்களுக்கும் மூலபிதாவாக இருக்கும் என்றும் (இன்னும்)

ஆல முலகெல்லா மரசாளவு மாணும் பெண்ணுமா யுலகமெல்
லாம், வேத முலகெல்லாம் புகழவேணும் விளங்குஞ்செய்தன்மை
திமை செய்தே. மேது முயிரெல்லாமிறக்கவேணு மென்முன்வருட

நன்மைதீமை, நீதஞ் செலுத்தியே நன்மையெல்லா நீண்ட நபி சொர்க்க மாளவேணும். (348)

(இ-ள்):—அவருடைய மக்கள் உலகத்தில் இராஜாக்களாகவும் ஆண் பெண்களாகவும், சந்ததி பெறுகிறவர்களாகவும், வேதங்களைக் கொழுகினவர்களாகவும், எனக்கு வணக்கஞ் செய்கிறவர்களாகவும், கியாம நாளையில் எல்லா உயிர்களும் ஹலாக்காகவேண்டும். நன்மை தீமைகளின் பட்டோலை என் சமுகம் வரவேண்டும், என் முகம்மது கடைசியில் சொர்க்கத்தைக் கட்டியாள வேண்டும். (இன்னும்)

ஆளு நரகந்தானுனதுதேச மனியாயமெல்லாஞ் சேரவேணும், வாழு முலகந்தான் கடன்மலையாய் மகிழ்ந்தே யிருக்கிற பலவிதமுஞ் சூழுங் கழுவேறு மலைவேறுமாய்ச் சொல்லு முலகெலாம் புவி வேறு மாய், நீள மகமேரி லியிருந்து நிதமுந் தேவர்களுனைப் பணிய, (349)

(இ-ள்): — ஏ! இபுலீசே? அந்த மனுக்கள்செய்கிற பாவத்தால் வருகிற அநியாயங்களெல்லாம் உன்னைச் சேர வேண்டும். அந்த உலகமானது கடல்களும், மலைகளும் சூழ்ந்ததாக இருக்கவேண்டும். நீயும் உன் குட்டி ஷெய்த்தான்களும் மலைகளிலும், கடல்களிலும், இருந்து வரவேணும், உன்னை ஷெய்த்தான்கள் பணிய வேணும். (இன்னும்)

பணிந்தே யுலகெலாந் திரிந்திடவும் பரிபார மெங்குஞ்செய் திடவுங், நாற்பதி லெக்ஷமாண்டு காலந் தேவர்களுலகாளவு, மணிந் திங் காதத்தின் குலங்களெல்லா மனேக நெடுங்காலமாளும் போது, துணிந்தயிசுருயி றனக்கிரையோன் சொல்வானுயிரெல்லாம் வாங்க வென்றே. (350)

(இ-ள்):—உலகம் உற்பத்தியான ஆதியில் உன் கூட்டத்தார்கள் ஆளவும்; அதன் பின்னால் ஆதமும், அவர் மக்களும் உலகத்தை யாளும்போது நீனும், உன் கூட்டங்களும் ஒதுங்குயிருக்கவேண்டும். உங்களாளுகை நாற்பது லட்சம் வருஷம் நடைபெறும். ஆதமுடைய மக்களோ! கணக்கில்லாத காலம் ஆளுவார்கள். அப்போது நான் உலகத்தை ஹலாக்காக்க வேண்டும். (இன்னும்)

செய்யும் விடத்தாலும் விபாதியாலும் செத்தா ரெனச்சொல்லத் தீங்கினாலும், வையம் பிழையாலு மருந்தினாலும் வலிய வுயிர் விட்டார் வாளா லென்றுஞ், செய்யும் சகீதானர் சலத்தினாலுஞ் செய்த சூனிய மிறந்தா ரென்று, மையோ வெனச்சொல்லி பலவி தத்தா வழிந்து பொனுரென் றுரைக்கவேனும். (357)

(இ-ள்):— இன்ஸான்கள் மரனித்தால், மருந்தால், மாயத்தால், வைத்தியத்தினல், மந்திரவாளியால், நீரால், நெருப்பால், வாளால் வியாதியால் செத்தார்கள். என்று அவர்களே சாட்சி சொல்ல வேண்டும். (இன்னும்)

உரைக்த மவுத்தெல்லாம் பலபேர்சொல்லி யுடையோன்திரு நாம முரைத்திடாமற், சிறக்கு மிசுருயி லுயிரைவாங்கிச் செத்தா ரெனச்சொல்லிக் கொள்ளாமலே, யிறக்கப் பலபல விதங்கடோன்று வெவர்க்கும் பலகோலமெடுப்பாயென்று. னுரைத்த வகையெல்லாங் கேட்டு நின்று ஞெரு பேச்சுமதிற் சொன்னனில்லை. (352)

(இ-ள்)— அல்லா மவுத்தாக்கினன் என்றும், இஸ்றுயீல் உயிர் வாங்கினனென்றும், ஒருவன் ஞாபகத்திலாது வந்து கொள்ளாமல் செய்வேன், அந்தப் பழிகளெல்லாம் உன்னைத் தானே சேர வேண்டும், என்று றப்பு சொன்னன். அதற்கு இபுலிசு ஒன்றும் பேசாமல் கழுமரம் போல நின்றான். எ-று.

சொல்லுக்கு பதிற் சொல்லாமலே சொன்ன வகையெல்லாந் தொகுத்துப்பார்த்தே, யெல்லாம் பிரயாசம் செய்தபின்னு மென் றனெதிரியோ வுலகாளுவா, னெல்லா நினைத்தல்லோ கவலையாகி யேது முறையாம னிற்குப்போது. வல்லோனவனிபு லிசைப்பார்த்து பதிலென்ன சொல்நீ சொல்நீயென்றான். (353)

(இ-ள்):— றப்பு சொன்னதெல்லாம் மனதில் பதியவைத்தவ னுக உள்ளுக்குள்ளே ஆஹா! நாம் இவ்வளவு கெதிகள் செய்துமா நம் எதிரியும் அவன் மக்களும் உலகத்தை ஆளுவார்கள். நல்லது அவர்களுக்குள் பகையை விளைவிக்கலாம். என்று எண்ணி நின்றான். அப்போது றப்பு நீ ஏதும் செய்துக்கொள் என்றுவற்புறுத்தினன். எ-று.

சொல்வேன் றெருநமூன்று பரிமான் பின்னர் சொல்லிப்பெரு நிலைநின்றனப்போ, தெல்லாங் கேட்டல்லோவிசனுத னிபுலிசு

முன்னுனின்று சொல்லான், வல்லபெரியோனேயிபுலீசுடன் வகை
யாயுரைத்திடு முரைகளெல்லா, மெல்ல மெனேபயர்த்துச் சொன்னு
யானு லிந்தநேரமே செய்வேனென்ருன். (354)

(இ-ன்):— அப்போது இப்புலீசு ஈஸ்பரன், உமர் மும்மூர்த்திகன் ஆகிய ஆறுபேர்களும் றப்பை நோக்கி நாங்கள் கேட்கிறபடி தரவேண்டும் ஏன்ருர்கள். றப்பு அப்படியேதந்தேன் என்ருன். எறு

செய்யு மோரிடம் புரிந்திருப்பேன் சிறந்த கடல் வேறு மலே
வேறுமாய், வையம் புவிவேருய் வளப்படுத்தி வருட மெண்ணேந்
தாமிலக்கமுந்தான், செய்வேன் பயனேவுந் தீங்குஎளுஞ் செத்தா
ரெனச் சொலலப் பலவிதமும், பையப் பொருத்தியே வைப்பே
னென்று பகையனிபுலீசு பகர்ந்திடவே. (355)

(இ-ன்);— உலகத்தில் நாங்கள் சென்று யுகமென்றும், பொய் கதைகளென்றும், புராணங்கள் என்றும், வருஷம், மாதம் என்றும், பலநேரவென்றும், ஏற்படுத்துவோம், காமவேலேயைத் தூண்டுவோம், என்று சொன்னுர்கள். எ-று.

அன்று பெரும்பாவம் மனேத்துமொன்ரு யஜுசி லதனேயே
செய்வேனென்ருன், என்ற போதுதா னிறைமகிழ்ந்தே யெல்லா
வரமுந்தா னுணக்தேயீந்த, னன்று நன்று நீ நினேத்ததெல்லா
நடக்கும் விதமெல்லா முனக்கேயீந்தேன். மண்டல மாளப் புவிதி
ருத்த மகாமேர் புரியவும் பரிமானமாம். (356)

(இ-ன்);— அப்போது றப்பு இபுலீசை நோக்கி நல்லது அப்படியே எல்லாவித வரங்களும் தந்தேன். உன் சம்பிரதாயங்களே யெல்லாஞ் செய்பார்ப்போம், என்று கட்டளே கொடுத்தான். எ-று.

பரிமா ணங்கொண்டே யீசனுதன் பாதை திருத்தியே நிற்கும்
போது, பெரியோன் ஜிபுரீலு மீக்காயீலும் பெரிய வுலமாககள்
போலவந்து, வரிசை யெழுபது நகரஞ் சென்று வல்லோனுதத்தை
வணங்குமென்றே, அறுஷைப் படைத்தவன் சொன்னுனென்று
மனேக விதஞ்சொன்னு ரிமையோர்களே. (357)

(இ-ன்):— உத்திரவுபோல இபுலீசும் அவன் ஜனங்களும் உலகத்தை நோக்கி நிற்கும் தருணத்தில் ஜிபுரீலும், மீக்காயீலும், பெரிய உலமாக்கள்போல அங்கே டி உலகத்திற்கு வந்து ஜனங்களே! நீங்கள் ஆதத்துக்கு ஸுஜூது செய்யுங்கள் அறுஷயுடைய நாயன் சொல்லி இருக்கின்ருன். என்ருர்கள். எ-று.

இமையோ ருரைதட்டி யேலாதென்ரு ரிமையோர் ஜிபுரீலு
மீக்காயீலு, மெமையாளும் றெப்பில் ஆலமீனே லெங்களுரை யொன்
றுங் கேட்டாரில்லே, யிமையோரேயென்ற னிசருயீலே யினிமேலாகி
லும் பாருமென்ரு, னிமையோ ரிசுருயீல் கோபங்கொண்டே யிரண்டு
விழியாலு மெரியப்பார்த்தார். (358)

(இன்):— அந்த மாணிக்க உலகத்தார்கள், இவர்கள் சொல்லே ஒரு அணுத்தனேயாகிலும் சட்ட பண்ணுதிலலே றப்பிடம் வந்து சங்கதியைச் சொன்னுர்கள் றப்பு இஸ்ருயீலேக் கூப்பிட்டு இப்பவாகிலும் பாருமே! என்ருன். இஸ்ருயீல் அடங்காத கோபத்துடன் ஒரு பார்வை பார்த்தார். எ-று

பார்த்தாரெழுபது நகரமொன்ருய்ப் பத்தியெரிந்ததே பரிந்து
சுற்றி முத்துநகரமுமனுவுமாளி முயடிக்கருதியே வெந்துநீருய்,
மெத்தமலே போலபுலகுதனில் விழுந்தெழுபது கரிக்குவியல், கத்த
னுரைப்படி யீசனுதன் காட்சிப் புவியெல்லா மாளுநாளின். (359)

(இ-ன்):— இஸ்ருயீல் பார்த்த பார்வையால் அந்த மாணிக்க உலகத்தில் உண்டான எழுபது நகரங்களும் தீப்பற்றிஎறிந்து எழுபது கரிக்குவியலாக பூமியில் வந்து விழுந்தன. இபுலீசும் அத்துடன் உலகத்தில் வந்தான். எ-று

நாளு நாற்பத்திலக்ஷமாண்டு நடத்தியுலகெல்லாநெறிநீதியாய்,
வாழு ழமையாளு மீசனுதன் வரத்தாலவர்கால முடிவான பின், அளும்
பெரியவனுதிநாய னண்ணல் ஜிபுரியீறன்னேக்கூவி, யாளும்பெரிதான
றகுமத்தென்னும் மரிய கடனீரைச் சிறகில்வாறி. (360)

(இ-ள்):—உலகத்தில் இபுலீசு வந்து நாற்பது லட்ச வருஷம் அரசாண்டான். இதற்குள்ளே பரமசிவன் பார்வதி காலம் முடிவாயிற்று அதன் பிறகு றப்பு ஜிபுரீலே அழைத்து றகுமத்தென்னும் கடல்நீரை உமதுரெக்கையில் தோய்த்து, அந்த எழுபது கரிக்குவியல்களில் வீசும் என்ருன். எ-று

சிறகிநீர் தோய்த்துக்கரியின் மீது சிதறவடியுமென் றுரைக்கும்
போதி, லிறகி லெடுத்திடுங் கடல் நீர்தன்னே யெல்லாக் கரியிது
மிணேயைச்சாத்தி, நிறைய மறையெல்லாங்கரியினின்று தெடியப்
படைப்பெல்லா மெழுந்ததப்போ, பரையுமுருவெல்லா நெருப்பினுலே
பனியாதஞ்சோ டெழுபதாச்சே. (361)

(இ-ள்):—அதே பிரகாரம் ஜிபுரீல் செய்த உடன் அந்தகரிக்கு வியல்களிலிருந்து எல்லா ஜீவராசிகளும், புற்பூண்டுகளும் உற்பத்தி யாயிற்று. அப்பால் நாற்பது பனியாதங்களும் ஜெனித்தார்கள். இன்ன ஒரு சொற்படி எழுபது ஆதங்கள். எ-று

எழுபதாதமுஞ் ஜோடுஜோடா யிருந்து பரிபார முலகமெல்லா
மெழுப தாயிரம் வருடமெட்டும் மிவர்களெடுங்கால நடக்கும் போது
பழுதிலாதவன் ஜிபுரீலுக்குப் பரிமா னுரைத்திடுங்கேதோவெனில்,
முழுதுங் குபிர்க்குலம் பனியாதங் கண் முன்னலேவையுமாதந்தமை.
(362)

(இ-ள்):—எழுபது ஆதங்களும் உற்பத்தியாகி எழுபது எழுபது ஆயிரம்வருஷகாலங்களாக உலகத்தை இராஜியபரிபாலனம் நடத்தினார்கள். அந்தக்காலத்தில் றப்பு ஜிபுரீலைக் கூப்பிட்டு இந்த பனியாதங்கள் முழுதும் காபிரீன்களாக இருப்பதாலே நீர் ஆதத்தைக் கொண்டுபோய் அவர்கள் முன்பாக வையுமென்று உத்திரவு செய்தான். எ-று

ஆலதபிதம்மை பனியாதங்க ளடங்களும் வந்து தொழுகவென்று
வேத பெரியவன் ஜிபுரீயிலே வேதநிலையிலே சேருமென்றான், பாதகஞ்
செய்யு மிபுலீசுதான் பதறி யழுதுமுன் னெழுந்து போனு. னேது
முலமாக்கள் வடிவுபோலே யொப்பிலடங்காத சிங்காரமாய். (363)

(இ-ள்):—அவ்விதம் வைத்து ஆதத்திற்குஸாஷ்டாங்கஞ்செய்யச் சொல்லும் என்றான். அப்படி ஜிபுரீல் வேதப் பிரசங்கங்கள் செய்தார். இதைக்கண்ட *இபுலீசானவன் பதறியோடி ஒரு மஹாரிஷியைப் போல் உடையணிந்து ஒரு அஞ்சனக் கோலுங்கையில் பிடித்தவனுக,
(இன்னும்

சிங்காரமாகவிபுலீசுதான் சென்றான்பனியாதங் குழுநடுவே,யங்க
மழகான வடிவைப்பார்த்த ஆராரெனக்கேட்டோர் பனியாதங்க,
ளெங்கே யிருந்தவ ரெங்கே வந்தீ ரெங்கட்குபகார மேது

---

*இவனை தமிழ் சாஸ்திரிகள் நாரதர் என்பார்கள்.

‡பனியாதங்கள் என்பது ராக்ஷஸர்கள் இராவணனும் அந்தக் கூட்டத்தான்.

சொல்வீர், பங்கப் படுத்தவே பனியாதத்தைப் படைத்தோனுரைத்
திடும் பரிசு கேளீர். (364)

(இ-ள்):— அநேக சிங்காரத்துடன் ‡பனி ஆதங்களின் குழுக்களுக்கு நடுவே சென்றான் அவர்கள் இவனைக்கண்டு ஓ! மஹாஆத்மாவே நீர் ஆர்! எங்கிருந்து வருகிறீர். என்றுகேட்டுபாதார்ச்சனை புரிந்தார்கள். எ-று.

பரிமா னஞ்சொன்னான் ஜிபுரீலுக்குப் பண்டே யுருச்செய்த
மண்ணுதத்தைக். குழுவோர் கண்முன்னே நிறுத்தி வைத்துக் கூண்ட
பனியாதங் குலங்களெல்லாந், திருவாய்ப் பணியவும் சுஜூதிட
வுஞ் செய்வேன் சுஜூதிட்டாற் றீங்குகளே, யுருவான் வாத மண்
ணுனதா லுங்கள் குலமெல்லாம் பாவிதானே. (365)

(இ-ள்): — ஓ! ராட்சஸர்களே! நீங்கள் உஷாராய்யிருக்கவேண்டும். ஜிபுரீல் ஒரு மண்ணைத் தூக்கிக்கொண்டு வந்து அதற்குஸாஷ்டாங்கஞ் செய்யச் சொல்வார் அதற்கு நீங்கள் இணங்க வேண்டாம் இணங்குவீர்களே யானல் நீங்கள் பாவியாவீர்கள். எ-று.

பாவிக் குலமென்று குப்பார்செய்யப் பரிமா னிறையவன்
ஜிபுரீலுக்குக், காவியாவிலே சேராமலே கருமா மறியவேதெரியச்
சொன்னே, ளுவி யருந்தாலும் சுஜூது செய்யோம் ஆதமண்ணல்
லோவெனச்சொல்லுங்க, ளேவுஞ்ஜிபுரீயில்வருவாரினி யென்பேர்
மீக்காயி லென்றுசொன்னான். (366)

(இ-ள்):— அவ்விதம் செய்வீர்களானல் இனி நீங்கள் ஈடேற்றம் பெறுவது எள்ளு. உங்கள் குடி யிருப்பு. நரகமாக இருக்கும், ஆனதாலே என் சொல்லை ஒரு தேவாமிர்தம் போலப்பாவித்துக் கொண்டு நாங்கள் மேலான கூட்டங்கள் அந்த மண்ணுக்குத் தலைசாய்க்க மாட்டோம் என்று ஒரே நிலையாய் நின்று விடுங்கள். இரண்டு பேரில் ஒருவர் ஜிபுரீல்வருவார். என்பேர் மீக்காயீலாக இருக்கும். என்றான். எ-று

சொல்லிக் கொடுமையை வருத்திவைத்துச் சோரனிபுலீசு
போன பின்பு, வல்லோன் ஜிபுரீயிலாதந்தமை வாரிக்கொடுவந்தார்
பனியாதமுன், அல்லா வுரைப்படி யாதந்தமை யன்று தொழு
மென்றே ஜிபுரீல் சொல்ல, வெல்லோருஞ் சொன்னார் மண்
ணல்லவோ வெங்கள் குலம் வன்னி பெரிதுதானே. (367)

(இ-ள்):— இவ்விதம் பாதகச் சொல்களை யெல்லாம் சொல்லி நல்ல ஆணியை அரைந்து விட்டு இபுலீசானவன் போன பிறகு ஜிபுரீல் ஆதத்தைக் கொண்டுவந்து அந்தப்பனி ஆதமிகள் முன்னே வைத்து ஒ! ஜனங்களே, ஆண்டவன் கட்டளைப்படி இந்த ஆதத்துக்கு ஸாஷ்டாங்கம் செய்யுங்கள், என்றார். அதற்கந்த ஜனங்களெல்லாம் ஒருப்படத் திரண்டு கூடி, இது மண்ணல்லவோ! தாங்கள் மேலான படைப்புகளாயிருக்க இதற்கு எவ்வண்ணம் வணக்கஞ் செய்வோம், ஒருக்காலும் செய்யமாட்டோம், என்றார்கள். எ-று

வன்னி வணங்குமோ புவியை நோக்கி வருந்தோ மெனச்
சொன்ன ரொருமொழியாய், முன்னோன் ஜிபுரீலாதந்தமை முன்போ
லவருடசிறகிலேந்தி, யெண்ணிலடங்கானே பெரியவனே யிணங்காக்
குலம்பனீ யாதமெனச். சொன்னான் ஜிபுரீலே யாதந்தமைச் சுவர்க்கப்
பதியிலே வையுமென்றான். (368)

(இ-ள்):—நாங்கள் சூரிய சந்திர வம்மிஷத்தார்களாக இருக்க நாங்கள் பூமியை ஒருக்காலும் வணங்கமாட்டோம். என்று ஒரே பேச்சாகச் சொல்லி விட்டார்கள். அப்பால் ஜிபுரீல் ஆதத்தைத் தூக்கி பழயபடி சுமந்து கொண்டு அறுஷில் வந்து றப்பே! அந்த பனீ ஆதமிகள் பொல்லாதவர்களாக இருக்கிறார்கள், என் சொல்லுக்கு இணங்கவேயில்லை என்றார். உடனே ஆதத்தைக்கொண்டுபோய் சுவர்க்கத்தில் வைக்கும்படியாக உத்திரவு செய்தான். எ-று

வைத்தார் சுவர்க்கத்தி லாதந்தமை வல்ல பெரியவன் பரிமான
மாங், கத்தா பெரியவன் றகுமத்தென்னும் கடலைப்பார்த்துதானேது
சொல்வார், னெத்துந்திரளான மங்குலங்க ளேகவுநவெல்லாம்
வாருமென, வெற்றி யலங்கார முழக்கமாக வெளியிலெழுந்ததே
வெகுகூட்டமாய். (369)

(இ-ள்):— அப்படியே ஜிபுரீல்வைத்துவிட்டார். அப்பால் றப்புதன் றகுமத்தென்கிற கடலை யழைத்து மேகக்கூட்டங்கள் யாவும் இந்த சமயம் வந்து சேரவேண்டும் என்றான், உடனே சண்டமாருதங்களுடன் ஆரவாரித்து மேகஜாலங்கள் கெர்ஜித்து எழுந்தன. எ-று

கூட்டமாகவே யெழுந்தமேகங் குறையில்லாமலே யெழுந்த
தப்போ, தேட்டி லடங்காத பெருங்கூட்டத்தை யிதமா யொன்பது
பிரிவுசெய்து, நாட்டில் விதமெட்டா மெட்டுமேக நபிக்குக்குடை

மேக மிராஜாவுமாங், கூட்டு மிராஜாங்கங்குடை நபிக்குக் கொள்ளு
மிருநான்கு விபரந்தானே. (370)

(இ-ள்):— அவ்விதம் வந்த மேகங்களில் எட்டுவகையும், நபியவர்களுக்கு குடை பிடிக்கின்றமேகம் ஒன்றுஆக ஒன்பதுவகைப்படுத்தி அவைகளில் எட்டுப் பிரிவினைகள் ஆனது. எ-று

தானே வைரம்பொன் முத்துரத்னந் தரணிபொழியுமங்குலமே
யொன்று, வான சந்நநம் பொழியுமேக மக்கினியொன்று பொழியு
மேக, மானமாங்கலலாற்பொழியுமேக மண்மாரியாகப் பொழியுமேகந்
தேனுஞ் சர்க்கரை பொழியுமேகந் தினமுந் பனியாகப் பேயிமொன்றே
(371)

(இ-ள்):—முத்துக்களை அள்ளிப்பெய்கிற மேகம்ஒன்று, சந்தனத்தைப் பெய்கிற மேகம் ஒன்று, நெருப்பைப் பெய்கிற மேகம் ஒன்று, கல், மரங்களை வாறிப்பொழிகிற மேகம் ஒன்று, மண்மாரி பெய்கிற மேகம் ஒன்று, தேன், பால்களை வாரிப்பொழிகிற மேகம் ஒன்று. பனித்தண்ணீரை சொரிகிற மேகம் ஒன்று, ஆக, எட்டு வகை மேகங்களும் பெருத்த கூட்டமாக வந்தன. எ-று

பேயும் விதமேழு மேகமேழும் பெருங் கூட்டமுமாகு மழைமேகங்க
ளாய மங்குல மிருநான்குக்கு மரசனாகுமே குடைமேகமூஞ், சாயநவ
மேகமிறைவகுத்துத் தக்கமீக்காயி லரசனாகப், பேயு மழையெல்லாம்
ஹயாத்துல் கைபார் பெரிய கடலிலே சலமெடுக்க. (372)

(இ-ள்):—இந்த எட்டுக்கும் அரசனாகிறது குடைமேகந்தான். இந்த ஒன்பது வகையான மேகங்களுக்கும் தலைமையாக மீக்காயிலை ஏற்படுத்தி அவைகளை ஹயாத்துல் கைபார் கடலில் போய் ஜலம் அள்ளும்படியாகக் கட்டளையிட்டான். எ-று

எடுக்கும் பாற்கடல் ஹயாத்துல் கைபா றிறங்குநிரைத்தான்
மீக்காயிலுமெடுத்து வளர்ந்தநீர் மேகமெல்லா மிருந்துசூல்முற்றிமாத
மூன்று, விடுக்கந் தலையினீர் பால்செமித்து வேண வுயிரெல்லா நீரில்
வர, வடுக்கு நீருல குயிராகவு மாதி பெரியவன் பரிமானமாம். (373)

(இ-ள்): அவ்விதம் எடுத்த நீரை மூன்று மாதக்காலங்களாக தன் கெர்ப்பங்களில் வைத்துப் பனி உண்டாகி, மிகுந்த ஆரவாரத்துடன் சோனுமாரியாகப் பொழியும் படியாய் ஆக்கியாபித்தான். எ-று

ஆதி பெரியவன் மீக்காயில்தா னள்ளி யளந்திடுங் கடனீர் தலீனை
மோதி மங்குலமழைபொழிய முழுதும் பனீயாதம் குலமழிய. வாதி
யுரைப்படி மீக்காயீலு மந்தக் கடனீரை யள்ளிவிட்டே, யேதுங்குறை
யாமன் மழைபொழிய வெல்லா மழிந்ததே பனீயாதங்கள் (374)

(இ-ள்):—இவ்விதம் பொழிந்தமழையில் அநேக ஆனைமீன்களும் தெளிந்தன இரண்டு மாதக்காலங்களாக இரவு பகல் பெய்த அடங்காப் பெருமழையால் பனீஆதமிகளின் நாடு நகரங்களெல்லாந் தவிடுபொடியாய்ப்போய் அந்தக்குளிரின் கடூரத்தால் பனீ ஆதமிகள் எல்லாரும் கொடுகி விரைத்து விலவிலத்து ஹலாக்காகி விட்டார்கள் அதோடும் ராக்ஷஸயுகங்கள் முடிந்து போயிற்று. எ-று

ஹவ்வா பிறந்தது.

ஆதம் வன்னிதா னெருப்பானதா லந்தச்சலத்திலே யழிந்த
தட்பேர, ஆதநபியுல்லா சுவர்க்கநாட்டி லனேககனியெல்லா மருந்து
நாளிற், சோதி நபியாத மாளிகைமுன் சொல்லத் தொலையாத வலங்
காரமாய், மாதர் குருவான வுலக மாதா மரத்தின் கனியாக விருந்
தாரப்போ. (375)

(இ-ள்):—பனீ ஆதங்கள் இவ்விதம் கொடும்பனீ நீரால் அழிந்த பிறகு மண் ஆதம்சுவர்க்க லோகத்தில் வீற்றிருந்தார்கள். இருந்து சுற்பக சோலையில் தான் நாடிய பழவர்க்கங்களைத் தின்று வந்தார்கள். அப்போது, ஆதமுடைய மாளிகைமுன் நின்ற ஒரு விருட்சத்தின் கனியாக ஹவ்வா இருந்தார்கள். எ-று

கனியா யிருந்தது ஹவ்வாவுமாங் கனியின் கடரொளி யழகு
விச, வினிய கனியுட வழகுகண்டே யிந்தக் கனிதின்ன வேணுமெ

னத், தனிய னிடத்திலே யாதநபி தருகவெனச் சொல்லி துஆ
விரந்தார், கனியை யவர்கையிற் கொடுவெனவே கத்த னுரைப்படி
ஜிபுரியீலும்.

(இ-ள்):— ஹவ்வா அம்மா அவர்கள் இருக்கிற கனியாகிறது அதிகமான ஒளிவு வீசிக்கொண்டிருந்ததினுலே ஆதமுக்கு அந்தக் கனியின் பேரில் ஆசையுண்டாகி, றப்பை மன்ருடி துஆக் கேட்டார். உடனே றப்பு அந்தக் கனியைப் பறித்து அவர் கையில் கொடுக்கும் படியாக ஜிபுரீலுக்கு உத்திரவு பிறந்தது. எ-று

உரைக்க விறையவன் ஜிபுரியீலு முவந்து கனிதனைக் கொடுக்க
வாங்கி, மறைக்கு னடங்காத கனிரசனை மகிழ்ந்தா ராதந்தம்
வயிர்பொருமி, யிருக்கு மவருட இடவிலாவி லெழுந்து சிலந்திபோ
லுடையும்போது, தரைக்கு ளிகரில்லா வடிவுகொண்ட தைய
லெனும் ஹவ்வா பிறந்தாரப்போ. (377)

(இ-ள்):— அதே பிரகாரம் ஜிபுரீல் அந்தக் கனியைப் பறித்து ஆதம் கையில் கொடுத்தார். உடனே ஆதம் அதை வாங்கித் தின்றதும் வயிறு பொருமி ஆதமுடைய இடது விலாப் பக்கத்தில் ஒரு சிலந்திக் கட்டிபோல் வீங்கிற்று அப்பால் அது உடையும் போது, அதனுள்ளிருந்து அழகிய வடிவுடனே, ஹவ்வா பிறந்தார்கள். எ-று

பிறந்த மதலையைப் பெற்ற தாதை பிரிசப்படக் கண்டு பெரிய
நாயன், வருந்தி யிருவர்க்கு மணமுடித்தான் வாழ்ந்து சுவர்க்கத்தி
லிருக்கு நாளிற், பெரிய கசடுள்ள லிபுலீசனும் பெண்ணின் சுருபமாய்
வந்தானங்கே, யிருந்து ஹவ்வாவு மிபுலீசனு மிருவர்களையும்
பேசினுரே. (378)

(இ-ள்):— பிறந்த ஹவ்வாவின் பேரில் ஆதம் இளியில்லாத மோகங் கொள்கிறதை, றப்பு தெரிந்து அவர்கள் இருபேருக்கும் கலியாணஞ் செய்து வைத்தான். அப்பாலவர்கள் சுவர்க்கலோகத்திலிருக்கும்போது இபுலீசு அங்கு வந்தான். எ-று

பேசியிருக்கையி லிபுலீசுதான் பெரிய கோதுமைக் கனியெடுத்து,
நேசம்பிரியாம லிருக்கஆத நீயு மவருமே யுண்பீராகுல், வாசமுமை
யல்லா லொருமாதரை வருந்தா தகைக்கிது மருந்தாமென்று, பேசி
யெறிந்தாலுங் கொடுத்தீராகி லெல்லா நுங்கையி லடங்கிப்
போமே, (379)

(இ-ள்):— கசடுள்ள மூதேவியான இபுலீசும் அங்கே வந்தான். வந்தவன் ஒரு பெண்ணுடைய சுருபத்தில் வந்தான், அப்போது இபுலீசும் ஹவ்வாவும் தங்கள் பழக்கங்களைப் பேசினவர்களாக இருந்தார்கள். இருக்குப்போது இபுலீசு றப்பு விலக்கின கோதுமைக் கனியைப் பறித்துக்கொண்டு வந்து. ஹவ்வா கையில் கொடுத்து இந்தக் கனியை நீங்கள் இருவரும் தின்ருல் ஆதம் உம்மையன்றி வேறு பெண்மேல் இச்சிக்கமாட்டார். இது ஒரு ஈடு ?மருந்தாக இருக்கும். இனி யெல்லாம் உமது கையில் தான் சிக்கிவிடும். எ-று

அடங்காத் திருந்தவ ரெனதுநேச ரடக்கிக் கொடுத்ததுமிக்க னிதா, னிடங்கேடனையவும் பற்றிவைத்தே யிபுலீ செழுந்துதான் போனபின்பு, கெடுதல் தெரியாமலாதம்நபி கிளியின்மொழிமாதி னிடத்தில்வந்து, மடியி லிருத்தியே ஹவ்வாதமை மகிழ்ந்து பேசியே யிருக்கும்போது. (380)

(இ-ள்):— இன்னும் இந்தக் கனியானது ஏனது நேசர்களில் அநேகம் அடங்காதவர்களை யெல்லாம் அடக்கிக் கொடுத்தது, என்று சொல்லி ஹவ்வாவை நல்ல கட்டு படுத்தி விட்டு இபுலீசு போய் விட்டான். அப்பால் ஆதம் நபி ஹவ்வா உடைய மாளிகைக் குள் வந்து மடியில் ஏற்றுக்கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கும் போது. எ-று.

இருக்கும்போதுதான் ஹவ்வா சொல்வா ரெனக்கு வாக் கொன்றுதருகவேணு, மிருக்கு முயிர்கேட்கி லுமக்கே தந்தேன் னெந்தவகைக்குமே யிணைந்தெனென்றுந், திருக்கை யடித்துத்தான் சிரசுதொட்டுத் தீங்காஞ் சத்தியஞ் செய்தபின்பு, பெருக்கும் பிழை யான கனிகோதுமைப் பேதையெடுத்தல்லோ கொடுத்துச் சொல்வாள் (381)

(இ-ள்):— அந்த இன்பமான நேரத்தில் ஆதத்தைப் பார்த்து ஹவ்வா சொல்வதாவது. நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும், என்ருர். உடனே ஆதம் இந்த சமயத்தில் நீ என் உயிரைக் கேட்டாலுந்தருகிறேன். என்று வலக்கையில் அடித்து தலையைத் தொட்டு பெரிய சத்தியம் செய்து கொடுத்தார். அதன் பிறகு ஹவ்வா அந்தக் கோதுமைக் கனியை எடுத்து ஆதம் கையில் கொடுத்து சொல்கிருர், எ-று.

சொன்ன பிராமண மிதையருந்தச் சொன்ன ளெனதுடதோழி யென்ரு, னென்னமதிகாணுமிபுலீசனு மிந்தக்கனிதன்னையிருவ ருண்டால், முன்னுளிறைதந்த தவங்குலைந்து மோசப் பெரும்பாவி யாவோமென்ருர், என்ன விதந்தாலு மிதுதின்னுதா லெனக்குமு மக்கினி யிக்லையென்ருர். (382)

(இ-ள்):— இந்தக் கனியைத் தின்னும்படியாக என் தோழி சொன்னுள். ஆனபடியால் தின்னத்தான் வேண்டுமென்ருர், அதற்கு ஆதம் சொல்வார், இது என்ன பேதைப் புத்திகாணும்? அது தோழியா! இபுலீசல்லவோ! இந்தக் கனியைத் தின்ருல் பாவியென்று றப்புசொல்லியிருக்கிருன் என்ருர். அதற்கு ஹவ்வா என்ன விதத்தாலும் நீங்கள் இந்தக் கனியைத்தின்னத்தான் வேணும். இல்லாவிட்டால் இப்பவே உங்களுக்கும், எனக்கும் உறவு இல்லவே இல்லை என்று சொன்ஞர். எ-று.

இல்லை யெனஹவ்வா பிரிவுசொல்ல வேங்கியழுதாதங்கனியெ டுத்துச், சொல்லுங் கனிதனை யிருவருமாய்த் தின்றவுடன் ருகமோ கமாகி, வல்லபெரியவன் சுவர்க்கந்தனில் வலமுஞ் சலமுமாய் நிறையும்போதி, லெல்லைப் பதியாளன் சுவர்க்கப்வுட்டே யிருவர் தமைத்தூக்கி யெறியுமென்ருன். (383)

(இ-ன்):— ஹவ்வா சொன்ன பிரிவான வார்த்தையை ஆதங் கேட்டுப் பரிதாபத்துடன், அழுது புலப்பிக்கை சேதப்பட்டவராக மேற்படி கனியை இருவரும் தின்ருர்கள். தின்றதும், பசியுடைய தாகமும், காமத்துடைய மோகமும், உண்டாயிற்று. பசிக்குத் தின்ன தின்ன வயிற்றில் மலஜலம் உற்பத்தியாகி ஆசனத்தின் வழியாக காற்றும் வந்து நாற்ற முண்டாக்கினது மல்லாமல் அந்த துப்புறவான சுவர்க்க லோகத்தைச் சுற்றி சுற்றி கொலலைக்கிருந்து எங்கு பார்த்தாலும் நாற்றமும், நரகலுமாக்கி வைத்தார்கள், எ-று.

எறியு மெனச்சொன்ஞன் பெரியநாய யேகனுரைப்படி ஜிபுரி யீலும், பெரியோ ஞதத்தை யெழுவானிலும் பேதை ஹவ்வாவைப் படுவானிலு, மெறியவிருவருந் தனியேநின்றே யேங்கியாயிரம் வருடமட்டும், அறிய பெரியோனே தம்பிரானென் றல்லா தனைநாடி யழுதாராதம். (384)

(இ-ள்):— ஆதம் ஹவ்வா இருவர்களும் சுவர்க்கத்தை அசிங்கஞ்செய்யத் தலைப்பட்டதும் றப்பு ஜிபுரீலைக்கூவி ஆதமையும் ஹவ்வாவையும் தூக்கி இதே க்ஷணத்தில் எறியும் என்றான் அந்தப்படி ஜிபுரீல் ஆதத்தை ஏழுவான் திசையிலும், ஹவ்வாவைப் படுவான் திசையிலும் எறிந்துவிட்டார், இருவரும் வந்து விழுந்த இடங்களில் கிடந்த கோலத்துடன் ஆயிரம் வருஷகாலமாக றப்பையும், தாம் இருந்த செல்வாக்குகளையும், நினைத்து அழுதார்கள். எ-று.

அமுதா ரசயிரம் வருடமட்டும் மனுவுமிரங்கிலனுதிநாயன்,
முழுதும் பிழையெல்லாம் பொறுப்பவனே முகம்மதை யெந்தன்
பாலனாகப், பழுதுவராம லமைப்பவனே பாலன் றனக்கு நான்
பிதாவல்லவோ, வெழுத முடியாத முகம்மதுக்கா யெந்தன் பிழை
யெல்லாம் பொறுப்பவனே. (385)

(இ-ள்):— ஆயிரம் வருஷம் வரையிலும் ஆதம் நபி அழுது, றப்பை நோக்கி யாறப்பி? நீ சொன்ன பிரகாரம் முகம்மதை என்பிள்ளையாகப் பிறப்பிப்பதனாலேயும், அவருடைய நூறைநான் சுமந்த பரக்கத்தாலேயும், என் பிழையைப் பொருத்தருள் என்று கெஞ்சினார். எ-று.

பொறுப்பாய் பிழையெல்லா முகம்மதுக்காய்ப் புகழ்ந்தேன்
முகம்மதை யுனதறிவாற், சிறப்பா முகம்மது நாமஞ்சொல்லச்
சீக்கிரம் வாருஞ்ஜிபுரீயீலே. நிரம்ப மாகவே யாதம்ஹவ்வா நீடுழி
வாழ்க வுலகமீதி, லிருக்கும் பதியின்பேர் மக்கநக ரிருவர்தமைக்
கூட்டி வாரு மென்றான். (386)

(இ-ள்):— இவ்விதம் ஆதம் நபி நமது நாயகம் முகம்மது ஸல்லல்லாகு அலைஹி வஸல்லமுடைய நாமத்தைக் கொண்டு கெஞ்சின உடனே, றப்பன் சீக்கிரம் ஜிபுரீலைக் கூப்பிட்டு நான் ஆதமுடைய பிழையைப் பொறுத்துக் கொண்டேன். நீர் ஆதமையும், ஹவ்வாவையும், கூட்டிக்கொண்டு மக்கம் என்கிற ஸ்தலத்தில் விட்டுவிடும். அவர்கள் சந்ததி பெருகினவர்களாக உலகத்தில் நீடுழி வாழட்டும் என்றான். எ-று

கூட்டி யிருவரை மக்கநகர் கோதையுடனாத மிருக்குநாளி,
லெட்டிலடங்காத வாதிநாய னிமையோர் மீக்காயீ றன்னைக் கூவி,

நாட்டிலாதத்தை யிறக்கிவைத்தே னுலா வகையெல்லா நிறைய
வென்றே, யாட்டம் பெரிதான றகுமத்தென்னு மறியகடனீரை
மேகவ்வாரி. (387)

(இ-ள்):— ஆதமும், ஹவ்வாவும் பக்கத்தில் வாழ்ந்திருக்கும் போது றப்பு மீக்காயீலைக் கூப்பிட்டு, ஆதமை நான் உலகத்தில் இறக்கி யிருப்பதால் அவருக்கு கனுஅக்துக்கு வழி செய்யும் பொருட்டு நீர் மேகங்களை யழைத்து றகுமத்தென்னும் கடலில் போய் நீரையள்ளச் செய்து மழையை வருஷிக்கப் பண்ணும். என்றான். எ-று.

வாரி ஜலத்தை மங்குலங்களுண்டு வையமுழுதுமேமழைபொ
ழியப், பேராற்பெரியவன் சொலனபடி பெய்யு மழையாக வுலக
மெல்லாஞ், சீராய்ப் புற்பூடு பலவிருட்சஞ் சிறந்த வகையெல்லா
நிறையவென்றான், பார கடனீர்தான் பலவித்தாகப் பாங்காய்
விருட்சம் புற்பூண்டாச்சே. (388)

(இ-ள்):— அவ்விதமே மீக்காயீல்மழைபொழியச் செய்தார் அந்த மழையால் றப்புடைய உத்திரவுப்படி தானியாதி விளை பொருட்களும், விருட்சாதிகளும் புற் பூண்டாதிகளும், ஆதிவித்தாக உற்பத்தியாயிற்று. எ-று.

உண்டுபடச்சொய்தா னொருமொழியி லுண்டுபடுத்தியவுயிரை
யெல்லா. மன்றேயுலகத்தி லிறக்குமென்று மனைத்து மிறங்கியே
யொன்றேடொன்றாய். நன்றாய்ப், பரிபார முலகுமிரு நடத்தி
யுலகெலா நிறயுநாளின், மண்டலமெங்கும் ஆதநபி மண்ணில்
விளைத்துண்ணப் பரிமானமாம். (389)

(இ-ள்):—அத்துடன் அறுவாஹில் ஆதத்துடன் உண்டுபடுத்திய உயிர் ஜீவாதிகளையும் இறக்கினான். உலகமெல்லாம் பல ஜீவ சந்தடிகள் பெருகிவிட்டன. அதன்பிறகு ஆதம் தீன்களுக்குறிய ஆகார வஸ்துக்களைப் பிரிக்கத்தெரியாதவராக இருந்தார், அப்போது முதல் ஸாஹபுகள் என்னும் தேவக்கட்டளை இறங்கிற்று. எ-று.

மண்ணை யுழுதவும் பலதானிய மகிழ்ந்து விளைந்ததை யருந்த
வென்றே, யெண்ணி லடங்காதான் விதித்தபடி யிருந்துபரிபார
நடத்துநாளி, லெண்ணி லடங்காத பெரியவனே யென்று நிதம்

புகழ்ந்தாநபி, முன்னுனுனதுட வெளிவிலான முகம்மதைக் காண வாசையானேன். (390)

(இ-ள்):— அந்த சஹ்புகளின் வாயிலாக ஏர் கட்டி பூமியை உழுது விதை விதைத்து கீரை குழைகளைப்பறித்து, காய்கனிகளைக் கொய்து இன்னின்ன விதம் சமைத்து சாப்பிடவேண்டு மென்ப தெல்லாம் சொல்லிற்று. அதன்பிரகாரம் ஆதம் செய்து வருப்போது றப்பை நோக்கி உன் ஒளியில் முத்தாக இருந்த முகம்மதென்னும் வடிவைக்காண மெத்த ஆசையாக இருக்கிறது. என்றார். எ-று.

ஆசை பொருந்திய தெனதுபால ரகுமதொளிவையென் பார்த்திலாக்கென, ரேசையாய்ச்செல முகம்மதுதா னொளிவுக் குத்தூவையு மொருமுத்தாக்கி, நேசமாயாத முதுகுதனி னேரே யுயரத்தி நிறுத்திவைத்தான், வாசநபியாதம் ஹல்வவுமாய் வாழ்ந்தே யிருவரு மிருக்குநாளில். (391)

(இ-ள்); — ஆனபடியாலே அந்த வரிசையான பிள்ளையின் ஒளிவை என் முதுகின் கண் பிரகாசிக்கும் படியாகச் செய்தருள் என்றார். உடனே றப்பு முகம்மதிய்யத்தான ஒளிவையும், குதுபு தையத்தையும் ஒரு முத்தாக ஆதமுடையமுதுகந்தண்டில்நிறுத்தி வைத்தான். அதிலிருந்து ஆதமும், ஹவ்வாவும் இன்பகரமாக இருக்கிற காலத்தில், எ-று.

இருக்குப்போதினி லிபுலீசனு மிலங்குமறிவாளர் வடிவு கொண்டே, யுருக்கமாய்ச் சொன்னான் ஹவ்வாதமை புலகி லுமக்கேது மதலையில்லை, யிருக்கு தெனக்கொரு வேழைப்பால னெடுத்து வளவென்றே யவர்குச்சொல்லி, யுருக்க மாய்வாடா மகனேயென்று னப்போ அருமறு வோடிவந்தான். (392)

(இ-ள்);— இவ்விதம் இருக்கும்போது இபுலீசுஹவ்வாவுடைய இடத்துக்கு ஒரு பெரிய ஆலிமைப்போல் வந்து ஏது பிள்ளை? உனக்கு இது பரியந்தம் குழந்தையில்லை? நல்லது இருக்கட்டும். என்வசம் ஒரு ஏழைப்பிள்ளை இருக்கிறது அதை எடுத்து வளர்ப்பாயாகில் அதன் பறக்கத்தைக்கொண்டு உனக்குப் பிள்ளைப் பலன் உண்டாகும் என்று ஏமாற்றிச் செல்லி வாடா மகனே என்று கூப்பிட்டான். எ-று.

வந்தா னருமறு மிபுலீசுமுன் வடிவு பொருந்திய பாலனுக யிந்தா பிடியுமென் றவன்கொடுத்தா னிணங்கி யிநகையால் ஹவ்வா வாங்கி, யெந்தன் குழந்தையென் றெடுத்தணைத்தேயிலங்கு முகத்தையு முத்திக்கொள்ளத் தந்தே னெனப்போனனிபுலீசப்பேர் நகப்பன் றனைத்தேடி யழவும்பாலன். (393)

(இ-ள்): – கூப்பிட்டதும் அருமறு என்கிற கன்னுஸா ஓடி வந்தான், அந்த அழகிய கன்னுஸைப் பிடித்து. இந்தாபிடி என்று கொடுத்தான். ஆசையுடன் ஹவ்வா இரண்டு கையையும் நீட்டி வாங்கி அவனுடைய முகத்தை வளைத்து வளைத்து முந்திக்கொண்டார். உடனே இபுலீசு கொடுத்தேன் கொடுதேன் பத்திரம் என்று சொல்லிவிட்டுப்போனன். எ-று

அழுகை யமர்த்திரூர் பாலகனை யாதநபிவந்தாரப்போதேக, குழ லிக் குரலேது வரிசையேது கூறுமெனக் கேட்க ஹவ்வா சொல் வார், கிழவர் பெரியவ ரொருவரீந்தார் கிடையா திதுபோலே வடிவுபாலன், முழுதுங் கெடுத்துவ னிபுலீசவன் மோசம் வருத்தவே வந்தா னென்றார். (394)

(இ-ள்): – அப்போது கன்னுசு இபுலீசைத் தேடி அழுது கொண்டிருந்தான். ஹவ்வா அட மகனே! கண்மணியே! அழுகாதே என்று அணைத்துக் கொண்டிருந்தார். வந்து, இங்கே குழந்தையின் சப்தம் எது! அது எவ்விதம் வந்தது? என்று கேட்க ஹவ்வா சொல்வார், ஒரு பெரிய கிழவர் கொண்டுவந்து கொடுத்தார், இந்த பிள்ளையைப் போல் அழகுள்ள குழந்தை இனி நமக்கு அகப்பட மாட்டாது என்றார் அதைக்கேட்டு ஆதம் அடிபைத்தியக்காரி நம்மை சுவர்க்கத்தில் இருக்க வொட்டாமல் குடி கெடுத்த பாவியான இபுலிசல்லோ அந்தக் கிழவன் என்றார். எ-று

வந்தா னிபுலீசு நமைக்கெடுக்க வடிவுப் பாலன் றன்கன்னுசாகுந் தந்தா னருமறென் றொருபேர் வைத்துத் தனது கசடெல்லாந்திரட்டி யொன்று. யத்தநேரமே யிளம்பாலனை யனேகம்பிளப்பாக வறுத்தறுத்தே, யிந்தப் புவியிலே குழியைக்கல்லி யெடுத்துப் புதைதல்லோ மிதித்து வைத்தார். (395)

(இ-ள்):—என்று சொல்லி மறுபடி ஹவ்வாவே இந்த உலகத்திலும் நம்மைக்கெடுக்க வந்தான், இந்தக் குழந்தையானது அவ

னுடைய கசடு என்னும் கன்னுசாக இருக்கும். உன்னை ஏமாற்ற வேண்டி அஹ்மது என்கிற பேர் வைத்துக் கொடுத்தான் என்ற உடனே அந்தகுழந்தையை அநேக துண்டங்கண்டங்களாக அறுத்து பூமியில் குழி தோண்டிப் புதைத்து மண்ணை மூடி வைத்தார். எ-று

வைத்தார் மதலைமே லாசைகொண்டு வாயிற் புலம்பியே யிருந் தார் ஹவ்வா, கத்த நபியாதம் போனபின்பு கபட னிபுலீசு வந்தா னங்கே.பத்தினிமாதே பாலனெங்கே பாரிற்புதைக்கவும்பயிததியனோ வொத்தை நொடியிட்டு மகனே யென்ருனுடி வந்ததே யொளிவு பாலன். (396)

(இ-ள்):—அந்த நேரத்தில் பிள்ளையின் பேரில் ஆசையுடன் ஹவ்வா அழுது புலம்பினவராக இருந்தார் ஆதம் போனபிறகு ஹவ்வாவிடம் இபுலீசானவன்வந்து ஏ! பிள்ளைஹவ்வாவே குழந்தையை அறுத்து புதைத்தது என்ன புத்தியென்று சொல்லி மகனே? வாடா என்று கையைச் சிட்டிகை தட்டினுன் உடனே அகுமறு ஓடி வந்தான். எ-று

பாலன் றனைமுன்போற் கொடுத்துப்போனுன். பார்தாராதமு மனம்பதறிப் பாலன் றனைவெட்டித் தீயிலிட்டுப் பத்தியெரிந்துநீருகிப் போச்சுக் கோலந்தெரியாம னீறைவாரிக்கொண்டு சலத்திலே கரைய விட்டார். மேலும் ஆதந்தான் போனபின்பு வீம்பனிபுலீசு வந்தா னங்கே, (397)

(இ-ள்):—வந்த பாலனை முன்போல ஹவ்வாவிடம் கொடுத்துப் பத்திரம் என்று சொல்லிவிட்டுப் போனுன். அந்த நேரம் ஆதம் அங்கே வந்தார் குழந்தை யிருக்கக் கண்டவுடனே, இன்னுலில்லாஹி யென்று பதறி உடனே அதை நெருப்பிலிட்டுக் கொழுத்தி சாம்ப லாக்கி வாரிக்கொண்டு போய் தண்ணீரில் கரைத்து விட்டார். ஆதம் போனபிறகு இபுலீசு இரண்டாந் தடவையும் ஹவ்வாவிடம் வந்தான் எ-று

வந்தா னிபுலீசு ஹவ்வாவுடன் வடிவின் பாலன்ரு னெங்கே யென்ருன், முந்த வகைபோல வெட்டிச் சுட்டு மோசநீரிலே கரைத் தாரென, வித்தசபாரெனநொடித்தான் கையை யிறந்த பாலன்ருன் வந்ததப்போ. திந்தாவெனஹவ்வா கைக்கொடுத்தே யிபுலீசெனும் பாவிபோயினுனே. (398)

(இ-ள்):— வந்து எங்கே நான் தந்த குழந்தை என்ருன், அதற்கு ஹவ்வா நெருப்பிட்டு நீரில் கரைத்து விட்டார், என்று சொன்னுர் இதோ! பார் என்று ஒரு சிட்டிகை தட்டினுன் உடனே கன்னுசு அவன் கையின் வழியாக வந்துவிட்டான் வந்த குழந்தையை ஹவ்வாவிடம் கொடுத்து விட்டு இபுலீசுபோய் விட் டான். எ-று.

போனபின்புதானுதம்வந்து பெண்ணேயேது காண்பாலனென் ருர். தானேசலத்திலே வந்ததென்ருர் தக்குபீர்சொல்லித் தலைய றுத்தே, யேனமதில்வைத்து நீரையூற்றி யேற்றியனலிலே தானவித் துத், தானும் ஹவ்வாவு மாகவுண்டார் தனக்குஞ் செய்யமென்ரு னிபுலீசனே. (399)

(இ-ள்):— அதன்பிறகு ஆதம் வந்தார் மூன்ருந்தடவையும் குழந்தை யிருக்கண்டார் என்ன ஹவ்வாவே எது குழந்தை என்று கேட்டார், அந்தக் குழந்தைத்தான் தண்ணீரில் நின்றும் முக்குளித் துக்கொண்டு வந்து விட்டது என்று ஜவாபு சொன்னுர், அப்பால் ஆதம் அவனை தக்பீர் சொல்லி அறுத்து சட்டியிலிட்டு அவித்து இருவருமாகத் தின்று விட்டார்கள். அதைக்கண்ட இபுலீசு இப்பதான் ஜயகாலம் பிறந்தது. என்று சந்தோஷங் கொண்டாடி னுன். எ-று.

செயமா முடலுக்குள் மூன்றுபங்காய் செனித்துப் பிதாவாதஞ் செய்தகுறை, பயமில்லாமலே யருமறென்ற பாலன்றனையவர ருந்தருந்த. வுவமையாகவே மூன்று பங்கா யுடலிற்றரித்திடும் வகையைகேளு, வகையா மீரலும் பற்குத்தியும் வழியும் பித்தி லும் கலந்ததாலே. (400)

(இ-ன்):- அவ்விதம் உண்ட அகுமறுடைய தேகச்சதையானது மூன்று வஸ்துக்களுடன் கலந்துவிட்டது. அவைகளாவன ஈரல். பல்குத்தி, பித்து இந்த மூன்றிலும் கலந்தது. எ-று.

கலந்த பித்நினிற் கசப்புண்டாச்சுக் கறுப்புநிறமீரல் பல்லுக் குத்தி, மலர்ந்த வறிவெல்லா மறந்துபோச்சு மன்னுமதிலுண்டாம் வகையைக்கேளு, நலந்தவிழியாசை பார்வையெல்லா நாட்டுஞ் செயித்தானின் பங்கதாகு, மலர்ந்த பார்வைதான் சரியேயென்று மதுதான் சடலமண் ணிணைவுமாமே. (401)

(இ-ள்):— பித்தில் கசப்பு உண்டாயிற்று, ஈரலில் கருப்பு நிறம் உண்டாயிற்று, பல்குத்தி சாம்பல் நிறம் உண்டாயிற்று, இவைகளால் பார்வை, கேள்விகளாகிய காமங்களும் ஈரலால் மண்பேரில் உள்ளே உலக மயக்கமும், பொய் பித்த லாட்டங்களும் உண்டாயிற்று. எ-று.

நினைவுஞ் சடலமும் பார்வை ரண்டு நேரே பொருந்திடிற் கொடுமையாகுங், கனதியாக நீ சோப்புதலுங் கத்தாபெரியவ னுரைத்தபடி, யினைப் பெருபாவஞ் செய்யுமென்று மிபுலீ செனும் பித்தின் பங்கு சொல்லுந், துனிவாய்ச் செய்திடும் பாவமெல்லாந் தொலைக்க வழிசேரத் துணையாய்க்கூடும். (402)

(இ-ள்):— அந்த மண்ணுசை என்கிற நினைவால் உலகத்தின் கொடுமையான பாதகச்செயல்களும் பித்தின் கசப்பால் கோபம் சோம்பல், குடிவெறி, ஜீனுமுதலியவெல்லாம் உண்டாகும் எ-று.

கூடுங்குபிரான நெஞ்சு மானுற் கொலையுங் கொடுமையும் வினையுமதா, ஞடுஞ் செயனல்ல நினைவுமானு னமக்குஹருமென்றேகாட்டிவைக்கும், பாடிப்பாடியே யிபுலீசுதான் பதினெண்ணுயிர மாலமட்டு, ஒடியோடியே கெக்கரித்தே யோதே சொல்வா னிபுலீசனே.

(இ-ள்):— இன்னும் கொலை களவு, ஆங்காரங்களும் உற்பத்தியாயிற்று குபிரியத்துகளும் அதனுல் தான் உண்டாகும். இது கொண்டு இபுலீசு ல அனத்துல்லா பதினெண்ணுயிரம் ஆலங்களிலும் பறந்து கெக்கரை கொட்டி சிரித்தான். எ-று.

இபுலீசு வெங்கும் பறையடித்தா னெனக்குப் பங்கேழு நபிக்கோர்பங்கு, கவியின்பிழைகண்டே யிறைபுரைத்தான் காபிர்குலத்துடனுனது பாலர், புவியிற் றுயர்தீர வழுதேயாதம் புகழுமுகம்மதை விழியிற்காணக், கபியை யிருகையின் பெருவிரலிற் கண்டேயிருமெனவிறையுரைத்தான். (404)

(இ-ள்):— சிறித்து ஒரு பறையடித்து எனக்கு இன்ஸானில் ஏழு பங்கிருக்கிறது முகம்மதுக்கு ஒருபங்கு தான் இருக்கிறது நான் தான் வல்லமையில் மிகுத்திருக்கிறேன் என்று சொலிலிக் கொண்டே திரிந்தான். அதுகண்டு றப்பு ஆதத்தின் முதுகில் இருந்த ஒளிவை அவருடைய விரலில் பிரட்டிவைத்து ஆதமே

என் ஹபீபின் ஜமாலியத்தை உமதுவிரலில் தெரிசித்துக்கொண்டிரும் என்று கட்டளையிட்டான். எ-று

உரைத்த முகம்மதி னொளியானது மொன்று யாதத்தின் முதுகுதனி,னிறத்தை யிருபங்காய்ப் பிரித்துவலலோ னேரேகை விரலிரண்டில் வைததான். குறித்து விழிதேய்த்து முத்திக்கொண்டு குதரத்துயா ஜனியெனறு, வரத்தைப்பொருந்திய ஆதநபி வாழ்ந்து பரிவார நடத்துமப்போ, சிறந்த * வெண்பத்தி ரண்டுஜோடு சேர்ந்தேயாண் பெண்ணுய்ப்பிறந்தனவே (405)

(இ-ள்):—விரலில் முகம்மதின் ஒளிவைக் கண்டு கண்ணில் வைத்து முத்தி யாகுதறத்துல் ஜனி யென்று சொல்லி முத்தினர், அந்தக்காலத்தில் ஆதமும், ஹவ்வாவும் கூடி எண்பத்திரண்டு ஜோடி குழந்தைகளைப்பெற்ருர்கள். எ-று

பிறந்த தாயிர வருடமட்டும் புவியிலிருந்ததே வயதாயிரஞ், சிறந்த முகம்மது நபியொளிவு சீது நபியவர் புறத்திலவர, விருந்தவாதத்தை யுலகுதனி லிட்டதலமல்லோ கருபாவுமே, நிறைந்த முகம்மது நூகுநபி நின்றே யிபுருஹீம் அலைகிஸ்லாம், (406)

(இ-ள்):—அப்படிப்பிறந்த குழந்தைகளுக்கு ஆயிரம் வயதுகளை றப்பு கொடுத்திருந்தான். அப்பால் முகம்மது நபியவர்களின் ஒளிவானது படிபடியாய் சீது நபியவர்களின் முதுகில்வந்து நின்றது. அவரையும், ஆதத்தையும் மக்கத்துடைய ஸ்தானத்தில் அமைக்கப்பட்டது. அப்பால் அந்தஒளிவானது நூஹு நபியில் நின்றுந்திரும்பி இபுருஹீம் நபியவர்களிடத்தில் வந்தது. எ-று

ஆன விசுமாயி சுருவிழியில் அப்துல்லா நெற்றி முத்தொளிவாய் மான நிறைந்திடு முலகமாதா மங்கையாமினு ரீன்றபாலர். தானுமனுரூப மெடுத்தார் நபி தாத்துஞ் சிபாத்துவுஞ் சாற்றக்கேளு மான வுருவாதம் ரூபங்காண வாத முடலிலே தரித்த தெல்லாம். (407)

(இ-ள்):—அப்பால் அந்த ஒளிவானது இஸ்மாயீல் நபியவர்களின் நெற்றியில் வந்து படிப்படியாகத் திரும்பி அப்துல்லாவுடைய நெற்றியில் நின்றும் பூலோகமாதாவாகிய ஆமினு அம்மா அவர்களின் கெற்பத்தில்வந்து நிரம்பி நமது நபிநாயகம் அவர்கள் மனுஷவதாரம் செய்தார்கள். அப்போதே தாத்தும், சிபாத்தும் ஒன்று பட்டது, எ-று

*எண்பத்தி ரண்டுஜோடு என்ற மொழியைப் பிரித்து எண் கணக்கென்றும் பத்துரண்டு ஜோடென்றது இருபது ஜோடியென்றும் பொருட்படுத்துக.

தரித்த விருபத்து நாலெழுந்துத்தரிக்கு மெழுத்துக்கோர் சிபாத்து மாகு. நிலத்திற் கண்ணுடி நிழலில்லாம னீண்ட முடிகாணு மறுஷின் மேலே, யொருத்த ரறியாரே மலஞ்சலத்தை யுடலிற புழுப்பூச்சி யொட்டாதங்கந், தலத்தி லடிதோயார் பொய்யுரையார் தருத்த ருவிலே தரிக்கும்பாதம். (408)

(இ-ன்):—தாத்தும் சிபத்திலும் உள்ள இருபத்துநான்கு அச்சரங்களின் தத்துவங்களாலே நபியவர்களின் சிரசானது, அறுஷின் மேலாகவும், சரீர நிழல பூமியில் விழாமலும், மலஞ்ஜலாதிகளை மனிதர் கண்கள்காணாமலும், சரீரத்தில் யாதொரு ஈ எறுபபு ஜெந்துக்கள் ஒட்டாமலும், பூமியில் பாதந்தோயாமலும், தருத்தருவில் பாதம் பதியவும், பொய் உரையாத துய்தானவர்களாகவும், ஆக இருந்தார்கள்.

எ-று

தரிக்கு மேகங்கள் குடைநிழற்றுந் தாபங்களையோட்டுங் வருத்தமில்லைச், சிரசிற் றரித்திடு நுபூவத்தாகுஞ் சிறந்த வுடலெல்லாமிலாஞ்சனையாங், கருத்திற்பெருமையுங் கரும்பகீலுங் கபடுங்கோபமுங் காணார்நபி, வொருத்த ரறியாமல் சத்தனச்செய்தோ ரொருநாளசதியு மறதியில்லை, கருத்தா லிருகண்ணு முன்பின் காணுங் கஸ்தூரிவாசங் காதம்வீசும். (409)

(இ-ன்):—இன்னும் அவர்களுக்கு மேகமானது குடைபிடித்தது, சிரசில் நபித்தனத்தின் முத்திராங்கம்என்னும் நுபுவத்துதோன்மட்டும் பிரகாசித்து, சரீரமெல்லாம் இலாஞ்சனை என்னும் தீர்க்க தரிசின ஆபரணங்கள் திகழ்ந்தது, மனதில் பெருமை, கெட்ட எண்ணங்கள் ஈயாக்குணம், கபடு, கோபம் இவை ஒன்றும் வந்து ஊசாடினவே கிடையாது. அவர்கள் பிறக்கும்போதே கத்ன என்னும் விருத்தசேதனம் செய்திருந்தது. அவர்கள் ஜீவிய பரியந்தம் ஒரு நாளாகிலும், அசதி, மறதிகள் வந்ததே கிடையாது. அவர்கள் பின்புறம் பார்த்தாலும் முகம்மானது தெரிந்தது உடலில் கஸ்தூரி வாசனை காத காத வழிவரையிலும் விசிக்கமழ்ந்தது.

எ-று

வீசும் பரிமள மழகுநபி வெடித்த சிரிப்பொன்றுஞ் சிரித்தாரில்லை. தேச மனுப்போலே வுருத்தெரியுந் தெரித்த வுருவெல்லாலுடலோ வில்லை, நேசமுடன்மூடி நபியின் ரோம நிலத்திற் களைந்தவரொருவரில்லை. பேசு மறுநான்கு சிபத்தாகப் பெரியோன் முகம்மது நபியாகுமே. (410)

(இ-ன்):— இன்னும் அவர்கள் ஒரு நாளாவது சிரித்ததும் இல்லை. அவர்கள் சரீரத்தை ஒருவர் உற்றுப்பார்க்கும்போது இல்லாமல் மறைந்தது, அவர்களின் தலை உரோமங்கள் பிறந்த அன்று இருந்ததைப்போல் நிர்யாண திசை வரையிலும் ஒரே நிதானமாக இருந்தது. இவ்விதம் இருபத்து நாலு சிபத்தும் கூடி நபி முகம்மதாக வந்தார்கள்.

எ-று.

பொருட்பால் முற்றிற்று. ஆக பாடல்-410.

——(o)——

3-வது.

காமப் பால்

——(o)——

நவகாமமறியும் வகை

நபியை யுலகத்தி லமைத்திலேயேல் நமது பதியேது நாமமேது, புவியுஞ் சகலது நபியாலேதான் பொங்கு முயிர்கடலிருந்ததெல்லாம், புவியிற் பலபல வுயிர்முளைக்கப் புருடர் தெரிவையராயிருப்பதெல்லாம், தவியா நவகாமந் தனையறிந்தாற் றன்னையறிந்தவர் தானாகுமே. (411)

(இ-ன்):— முகம்மது நபியவர்களைப் படைக்காத பட்சத்தில் இந்த உலகங்கள் ஏது? உயிர்களின் பேரேது? ஆனதால் உலகத்தில் சரீரமெடுத்து வந்த ஜீவாதிகள் ஒவ்வொன்றும் நவகாமம் என்கிற ஒன்பது இந்திரியங்களால் தான் அவதரித்து வந்திருக்கிறது அந்த ஒன்பது காமங்களையும் அறிந்தவன் றப்பையும் அறிவான்.

எ-று.

தன்னை நிகரில்லா வாதிநாயன் றரணி யமைக்கு முன்னிருளையி, லன்னி யெழுந்துதா னுக்தலிபா யொளிவு திரண்டதே முதற் காமபால், வன்ன மிலங்கிய விந்துநாதம் வைரத் திரளை வெண் டரளமாகப், பின்னு மொளிவதிற் சுடராய்விந்து பிறந்த கடலொன்று முருகாமப்பால் (412)

(இ-ள்):— அல்லாகுத்தஆலா ஆதியில் குன்தகன்ஸாவ்மகுபி யாவில் இருளாக மறைந்திருந்து அப்பால் தாத்தளவில திருப்பி நுக்தாவாகி யதில்நின்றும் அலிபாகி ஒளிவானதே அதுதான்முத லாவது காமமாக இருக்கும். அப்பால் அந்த ஒளிவானது விந்து நாதமாகி முத்தாகி ஹயாத்தல் கைபார் கடலானதே அதுதான் இரண்டாவது காமமாக இருக்கும். எ-று.

பாலி லொருகாமம் பகுந்ததைந்தும் பரிவச யொருகாமமிரு பங்காக, வேலைச் சுடர்காம மூன்று மொன்ருய் விளப்பு லிங்கமாம் காமமூன்ரும், பாலன் றனையடி தனிலிருத்திப் பார்க்க வொளி வேர்வை விந்து முத்தாய்க், காமக் கடலதி லுறைந்திருந்த கதை யாங் காமப்பா ஞதமாமே. (413)

(இ-ள்);— அவ்விதம் அலிபானது, அலிபு. லாம் மீம். ஆகி அதுவே முத்து, பவளம், பச்சையாகிய முச்சுடரில் வந்து நின்றதே அதுவே மூன்ருவது காமமாக இருக்கும். அந்த முச்சுடர் பின்னல் அல்லா, முகம்மது, ஆதமாக மீண்டதே அதுவே நாலாவது காமமாக இருக்கும். எ-று.

நாலா விதத்திறு லொருகனியை நாடி மயிலுண்ண மரத்தின் கீழே பாலசங் கிணற்றிலே யைந்துமுத்துப் பார்த்து மயிலுண்ண பதுங்கவொன்று, நாலு மயிலுண்ட தன்றேதானே நாலுதிசைகாகங் கூகையாந்தை, மேலு மிராஜாளி மயில்தடுவி லிதுதான் காமப் பாலேந்தாகுமே. (414)

(இ-ள்):— அப்பால் றப்பு தன் ஆசையால் ஒரு பார்வைபார்க்க அதனுல் மயிலுண்டாக அது எகீன் மரத்தில் இருந்து கனிதின்ன அப்பால் அதுநாலுமுத்துகளையும் தின்று, நான்கு முட்டையிட்டு காகம், ஆந்தை கூகை, இராஜாளியான குஞ்சுகளைப் பொறித்ததே அதுவே ஐந்தாவது காமமாக இருக்கும். எ-று.

ஆகந் துணுக்கிடா மயில்லன்னமா யந்த ஜெபருத்தி லாடும் போதி, லேகன் கிருபையா லிணங்கினேக்கி யெங்குஞ் சுடர்காம பிறங்கிவித்தாய், வாகு பெறவன்னந் தனியகாம மதுதான் காமப் பாலசுருமின்ன, மேக ஞெளிவினுல் தடுங்கியன்ன மெங்குஞ் சலமாக லெழுந்தவேர்வை. (416)

(இ-ள்):— அவ்மித மிருந்த மயிலானது. ஜபறுூத்தில் வந்து அன்னப்பட்சியாக ஆடி நின்றதே அதுதான் ஆருவது காமமாக இருக்கும். எ-று.

வேர்த்துப் பாற்கடற் சேர்ந்ததுதான் விளங்குங் காமப்பா லேழதாகும், பாத்திர மான கடனீர்தன்னைப் பருகு மங்குலம்பார் தனிலே, நேத்தி பாய்ப் பெற்ற வத்தனையு நிலையாங் காமப்பாலிரு நான்கிது, வேத்த மாகவே யெழுந்தவாசி யெல்லாம் படைப்புக்கு மிரணமாச்சே. (416)

(இ-ள்);— அப்பால் அந்த அன்னத்தை றப்பு உறுக்கிப்பார்க்க அதன் சரீரம் வியர்த்து பால்கடலாகத் திரண்டதே அது ஏழாவது காமமாக இருக்கும். அந்தக் கடலால் மேகங்கள் உற்பத்தியாகி பால்முழுதும் அள்ளிக் குடித்ததே அதுதான், எட்டாவது காமமாக இருக்கும். எ-று.

இரண வகை யென்ற கனிதசையு மிலேயுங் காயைத்து மிதுதி றையத், தருணம் வகையருத்தத்துவமிச் தந்தசைசாத்தம் விளைந்த நாதம், வர்ண மெவ்வுயி ருபநாதம் வருந்தி யிணைக்கத்தி லெழுந்த நாதந், தருணம் பவுலயி ரெழுந்தநாதந் தகபீகுநிலை நவகாமமே. (417)

(இ-ள்):— அந்தமேகங் கருக்கூடி பொழிய எல்லா உயிர்களுக்கும் அது இரணங்களாயிற்றே அதனுல் உலகதத்துவ இந்திரியங்களும், பிர்மதத்துவ இந்திரியங்களும், பூத கோடிகளும் உற்பத்தியானது தான், ஒன்பதாவது காமமாக இருக்கும். எ-று.

இதமாநவகாம வெல்லாருக்கு மிநநான்கிரு நாமெழுதினதால், விதமாம் வைரம்பொன்பவளமுத்து விருட்சம் புற்பூடு பல தானிய, நிதயாய் நிறைந்ததேயொன்ரேடொன்று நீதியுதிரயாய்த் தீனிலாச் சுப், பதமாங் குருதிநீர் விந்தாம்வாறும் பாங்கா யுலகெல்லாமறியச் சொன்னேன். (418)

(இ-ள்):— எல்லா ஜனங்களும் அறியவேண்டியது கடமையாகவே இருக்கிறது. உலக வாசிகள் அறியும்படியாக அதன் முழுக் கருத்தையும் அநந்தம் தானங்களில் விபரப் படுத்திக்கொண்டு வந்து விட்டேன். எ-று

சொன்னேன் மூவைந்து இறையத்தையுஞ் சூழ்ந்த வுலகுபல் லுயிரனைத்து, முண்ணு மமுதுடன் பாலுநெய்யு முண்பா ருலகத்தி

னுகையமாக, வாணும் பெண்ணுமாய்ப் பிரியும்வகை யறியாருலகத்
தின் முழுமூடராய், பூணு மிராவேதான் ருெண்டைமட்டும் போனுற்
குறைவதைப் புகலக்கேளே. (419)

(இ-ள்:— ஆதியில் தான் சொன்ன கணு அத்துப் பதினேந்து எழுத்தால் தான் உலகத்தார்கள் அறுசுவையான உண்டிகளேத் தின்கிருர்கள் இதன் விபரம் நல்ல உணர்ச்சியின் மேலே தான் தெரியவரும் உலகத்தில் ஜீவராசிகள், ஆணும் பெண்ணுமாக இருக்கிற சூட்சியை அறியாத மனிதர்களும், பெரிய மூடர்களாக இருப்பார்கள். எ-று.

புகலக்கேளுமே ரசனேயெல்லாம் பொசிக்கும் வாயினி லிருக்கும்
போது, சகல ரசனேயு மேளுக்குத்தான் ருவியமிர்தத்தை யுபா
வேற்றிப், பகலு மிரவிலாத் தலந்தனிலே பளிங்கிச் சுடரைப்பார்த்
தீயும்போதி லகலா ரசனேய தனேத்துஞ்சுட ரமுதமாகவே யருந்துந்
தானே (420)

(இ-ள்):— நாம் தின்கின்ற ஆகாரங்களின் உருஷி தொண்டைக்கு கீழ்போன உடன் ரசனே மாறிப்போகும் வகையின் கருத்து என்ன? அதைச் சொல்லுகிறேன். எப்படியானுல் கல்பு உருஷியை அதன் தானமாகிய மகாமன் மகுமுதில் வைத்து கிருஹித்துக் கொள்கிறது- சிரசின் குழாய்களுக்குள் சென்றது பூதங்கள் நினேவுடன் சம்மந்தப்பட்டு அவைகளே இரண்டாமுறை அமிர்தமாக்கி அருந்தி விடுகிறது அதனுல்தான் தொண்டைக்கு கீழ் போனுல் தம்மதல்ல. எ-று:

அருந்த இருவிழி நடுமூலத்தி லணிந்தவொளிவதின் சுடரெழுப்
பிச், சிவந்த நுக்கத்தலி பாகும்பார்வை செப்பிடா ரிதைச் செப்பி
னேனே, திருந்த வூண்சுகமெல்லாமென்பார் தீனுங் சுகமவனல்லா
தில்லே, நிறைந்த வுடலுக்குட் சென்றதெல்லா நெருக்கியேகுடற்
பிரிக்குமரண்டாய். (421)

(இ-ன்):— இருபுருவத்துக்கும் நடுவே நமது ஆத்மா என்கிற ஒளிவு இருக்கிறது. அந்த ஒளியே தீன்களின் ரசனேகளேத் தின்று மற்ற எண்பத்திராயிரம் தத்துவ கருவிகளுக்கும் அதன் சத்ஸதக்கொடுக்கின்றது, இதை உலகத்தாரர்களுக்குச் சொல்லப் படாது, ஞானிகள் கவனிக்கவேண்டும். இந்தக் கோட்

பாடாலே றப்பு அநுபவிக்காத சுகம் இஸ்லானில் எதுவும் கிடையாது எ-று

பிரிக்கு மசனத்தை யிருபங்காகப் பூணுஞ் சார்வேறுசக்கைவேருய்
சிறக்கு மினிப்புள்ள ரசனேயெல்லாஞ் செந்தாமரையுள்ளே பதிவுமாகு
முரைப்புங் கடுமையு நுரையீரற்கா முப்பும் புளிப்பது மீரற்காகும்,
விரைப்பாங் கசப்பெல்லாம் பித்துக்காகும் வெருவாயிலேப்பொல்லா
மண்ணுக்காகும். (422)

(இ-ன்):—இதன் விபரங்கள் எப்படி என்ருலோ! சொல்கிறேன் உலகத்தின் சமமான்ய ஜனங்களே கேளுங்கள் அந்த ஒளிவு அனுபவித்த பிறகு மற்ற ரசனேகளே சார் வேறு சக்கை வேருகப் பிரித்து இனிப்புள்ள ரசனேகளே யெல்லாம இருதயத்தாமரை குடிக்கும். உறப்புகளே நுரையீரல் அனுபவிக்கும். உப்பு புளிப்புகளே இரத்த ஈரல் அனுபவிக்கும். கசப்பு வகையருக்களேப்பித்து அனுபவிக்கும் இலப்பு துவர்ப்புகளே மண்ணீரல் அனுபவிக்கிறது. எ-று

ஆகும் விதமைந்து பங்கொன்றுக்கு மந்தத் தலத்தினி லுதிரம்
பூரித், தாகு முடலெல்லாநரம்பினுலே தானே யுதிரத்தாற்றசைதிமாகி
யேகுந் தசையதிற் கொழுப்புமீறி யேறிச் சிரத்திலே மூளையாகி, வாறு
பெறு மூளே யுருகி விந்தாய் வடியும் பிடரியினரம்பினுலே. (423)

(இ-ன்):—ஆகியே இந்த ஐந்து வீடுகளில் சென்று அநுபவிக்கப்பட்ட ரசனேகள் அந்தந்த பூதவாசலிலேயே இரத்தங்கள் திரண்டு நரம்புக்கால்வாய்களின் வழியாக வோடி சதையாகி கொழுப்பு உண்டாகி சிரசு மண்டலத்திந் ரஸ்தாவில் சென்று மூளையாகி அப்பால் அந்த மூளேயானது இருதப தினேவால் உருகிப்பிடறியின் வழியாக ஒழுவதே விந்தாகும். எ-று

நரம்பால் வடிவது விந்துமாகு நயந்த அசனத்தி .வின்னம்பாதி.
விரும்பி யெழுந்தது மூலந்தன்னில் வெந்து நீரெல்லா மூலமுண்டு
கருப்பு ரசனேயுஞ் சக்கைபோலெ களகு மாமங்குகனிச்சலெல்லாம்.
விரும்பி யுண்டது மூலஞ்சேர்ந்து வெந்த வயனீரைச் சிறுநீர் சொன்
னேன். (424)

(இ-ன்):—சுவையின் தத்துவ மிப்படி இருக்க சக்கையின்தத்துவமாவது மூலமென்கிற புடலத்தில் கிடந்து வெந்து கரும்பாலேயில் சக்கை மசைவது போல மசைந்து அதன் வழியாக

கொப்பளித்து ஓடிவருவது தான் மூத்திரம் ஆக இருக்கும். எ-று

சொன்னே ஞானேந்தரஞ் சோதிநாதன் சொன்ன முன்சோதியத னில் வெந்து, வெண்ணெ யுருகிநெய் சிவந்துநிற்கு மேனிச் சுடரதின் மூச்சுமாக, வுன்னிச்சுடருந்தான் கிருபைபொங்கி யொளிவு உடலெல் லா மோசையாகிக், கண்ணின் மணிநடு முகந்தனிலே காணுமொளி வந்தப் பெரியவனே. (425)

(இ-ள்):—இவ்விதம் ஒன்பது இந்திரியங்களின் வெளிச்சத்தால் நாதவித்தானது. சுவாசப்பலனுடன் நிற்கின்றது. அந்த சுவாசத்தின் பலத்தால் ஆத்ம ஒளிவானது இரண்டு நேத்திரத்துக்கும் நடுவே நின்று பிரகாசிக்கிறது. அதுவே றப்பாகயிருக்கும். எ-று

அந்தப் பெரியவன் றலந்தனிலே யாதி பெரியவ ளுசையானற் சத்தைப் பெருமொலி போன்முழங்குஞ் சத்தயாறஹீ மெனறுசொல்லி யுந்திக் கமலங்கீழ் மூலந்தனி லூற்ற முகம்மது நபியொளிவு, எந்த வகைநாய னென்னிறையே யாபக்கல்லாவென்றியம்புந்தானே (426)

(இ-ள்):—றப்புடைய மகாமில் ஒளிவுங்கூடினால யாஅல்லாஹ் என்ற சப்தம் முழங்கும், முகம்மதிய்யத்தானஒளிவானது உந்திக்கமல வட்டத்தின் தானத்தில் நின்றும் அந்த பரம றப்பை யாறப்புக்க அல்லா என்று திக்று செய்யும். எ-று

இயம்புமொளிரண்டு மாசையானு லீணையும் பார்வையுமிரண்டு மொன்று, மியங்கித் தழுவிடு மிருபார்வையு மெரியுங் கிருபையாலுரு கிமூளேத், தயங்கி டாமலே பின்றனர்ந்த தசலரநரம்பிறைலிறங் குநாத மயங்கிடாச்சுடர் மூலந்தனின்மண்ணுறதம்ஹறவ்வா வொளிவுமாமே.427

(இ-ள்):—அந்த இரண்டு ஒளிவுகளும் ஒன்றுகூடினால் நேத்ரத் துக்குப் பார்வையின் சக்தியை உண்டுபண்ணும் அப்போது ஆதம் ஹவ்வா உடைய ஒளிவானது அவைகளுக்குத் தொண்டுத் தனஞ் செய்யும். எ-று

ஒளிவி ளுதந்தா எிரவிபாக மோதும் யாதரபி மென்று சொல்லிச் சுழியின் மதிபாசம்ஹவ்வாசுடர் சொலிலும்யாக்காயிமென்று சொல்லி யொளிரு மிருசுடர் கிருபைபொங்கி யொன்ருயிணங்கிடு மாசையாலே குழியி லீசுரன் றலந்தனிலே குதித்து விந்து கீழிறங்கிநிற்கும். (428)

(இ-ள்:—அவைகளில் ஆதமுடைய ஒளிவு சூரிய கலையாகவும், ஹவ்வாவுடைய ஒளிவு சந்திர கலையாகவும் பிரிந்தோடுகிறது சூரிய கலே, யாதாயிம் என்றும் சந்திரகலே, யாகாயிம் என்றும் திக்றுசெய்து ஓடும் அந்த இருகலைகளும் கூடி ஆசையாகி இன்ஸானுடைய விந்தானது உருகி வழியும். எ-று

இறங்கித் தரித்திடுஞ் சிவந்தநாத மெரியுஞ் சூட்டினு லியங்கி வெள்ளை. யுறங்கும் வீடுதான் தாரையாகு முரைக்குஞ் சளிமுளை நீயதுதான், றிறங்கொள் வலக்கலை யதற்கு மானந் தீங்கு விடக்கலை யதற்கு விடங். குறையுமீனெனுஞ் சிறக்குமென்றுங் கூறுங்கலையுட குணமாகுமே. (429)

(இ-ள்):—வழியும் விந்தானது சிவப்பு ரெங்காக இருந்து சுழி முளையாகிய புடத்தில் இறங்கின. உடனே வெந்து வெள்ளை நிறங் கொண்டு குதிக்கும். அப்படி குதித்த நாதம் வடகலை பின்கலைகளென் னும் சுவாசங்களால் மணியாகித்திரளும். எ-று

ஆன காமப்பா லுதிரவீட்டி லணுப்போ லடங்கிய அட்டகோணம் பூணுஞ்சிரத்திலே தரிக்குமுயிர் பொருந்துங்குணமேழு கோணமதின், ருனே வலம்புரி நிலையதற்குத்தைய லிடம்புரி தரித்த கோண, மூனுங் குதறத்தைச் சேர்ந்தவகையுயிரும் போயினலிரணவகை. (430)

(இ-ள்):—மேலே சொன்ன காமங்கள் ஒன்பதும் இரத்தக்கடலில் வந்து விளைந்து எட்டு கோணங்களாக ஓடி வலம்புரிக்குள் நுழைந்து நாதமாகி அப்பால் கீதம்பாடி அப்பால் இடம்புரியில் வந்து முக்கால சிரஹ வசங்கள் எல்லாம் அமைக்கப்பட்டு குதுறத்துடைய மகாமில் வந்து இரண வகைகள் கற்பிக்கப்பட்டு நிற்கும். எ-று

இரணந்தரிப்பது மூன்றுதிசை யிளமையழகெல்லா மணையுநாவிற் றருணம் பலாபலன் யோகஞானந் தரிக்கும் விதமெல்லா மைந்தாங் கொப்பு, வர்ணந் துன்பமுந் துயரவீரம் வகையரய்ந் தரித்திடுமாருங் கொம்பின் வர்ணம்பெரும்பிணி படும்பாடெல்லாமதிப்பாய்த் தரித்திடு மேழாங்கொம்பில். (431)

(இ-ள்):—இரணங் கற்பிப்பது மூன்ருங்கொப்பு அழகு வயதுகள் ஏற்படுவது நாலாம் கொப்பு, ஞானம், பலாபலன் கல்வி

இவைகள் ஏற்படுவது ஐந்தாம் கொப்பு, துன்பம், இன்பம் வீரம், தனம், பிணி, மூப்பு இவைகள் ஏற்படுவது ஆரும்கொப்பு தீரும்பிணி, அதிஷ்டம், ஆயுசு இவைகள் எல்லாம் ஏற்படுவது ஏழாங்கொம்பாக இருக்கும். எ-று

கொம்பி லிருநான்கி னகத்தில் நிற்கும் கோலந் திசையெட்டும் பொருந்துமப்போ, திவ்பக்குதறத் துமெட்டுமிதே யின்னங் குதறத்துப் பதினெட்டுந்தா, னன்பா யுலகத்திற் பிறக்கும்போதிலன்றே தரித்தில மறுமூன்றுந்தான். கும்பி யுருவத்திற் றரித்தநாதங்கோலவுருவத்தைக் கூறக்கேளே. (432)

(இ-ள்):—மனதில் வந்து ஊசாடுகிற உலக மாயைகள் தான் எட்டாம் கொம்பாக இருக்கும். இன்னும் ஒன்பதாங் கொம்பாகிறது குதுறத்து பதினெட்டும், உலகத்திற் பிறக்கும்போது நடந்த சில கருமங்களுமாக இருக்கும். இனி நாதங்களுடைய கோலத்தைச் சொல்கிறேன். எ-று

கூறுமிருநான்காந் தரித்த நாதங் கோதையுதிரமுங் கொழுமி யொன்றுய்ப், பாறு நுக்கத்தின் முனைத்தமரம் பச்சைப்பவளம் வெண் டரளமான, வாறுங் குதாயோடு நபியும்ஆத மந்த விருளய்யேசு அஜா சீலாகு, நூறென்ற நூனும் றாகுப்வெண்மை நுக்கத்துச்சுழி முனை அலிபானதே. (433)

(இ-ள்):—எட்டு இந்திரியங்களாக உற்பத்தியான உதிரமானது ஒன்று சேர்ந்து நுக்கத்து என்கிற மரமானது முத்து, பச்சை, பவளம் ஆகி அல்லா, முகம்மது, ஆதம் ஆகி இருளானது அஜாஸீலாகி, நூனனது ஆத்மாவாகிய ஒளிவு நுக்கத்து அலிபு சுழி முனையாயிற்று. எ-று

அலிபில் வைரந்தா ஞதிபங்கா மந்த நடுநிலையிருபாகமுங், கலி மாமுஹம்மது சிவந்த சுடர் காணுமக்காமன் மகுமூதுமா, மொலியா முஹம்மதுகலிமாவினு லுருபமிருபத்துநாலெழுத்துப்,பவிதமாம்பச்சை யாதமென்றும் பாரு மருபத்தை ருபமென்றே. (434)

(இ-ள்):—அலிபில் வைரம் உற்பத்தியாகி அது அல்லாவுடைய சிபத்தில் உள்ளது. இடம் இருதயக்கமலமாகும். முகம்மதாகிறது, கலிமாவில் செவந்த ஒளிவு இடம், மகாமன் மகுமூதாக

இருக்கும். அதுகலிமா இருபத்து நாலு அட்சர ருபமாக இருக் கிறது ஆதம் அருவமாயிருந்து உருவமாயிற்று. எ-று.

உருவஞ் சுடர்மூன்றி லெழுந்தவாறு முயிரும் பரம்பொருள் விந்துநாத, முருகிச் சுழிமுனை நுக்கததலிபா மொளிவு பதினாலங் குலமுநீண்டு, அருவம் ஆனபோடு லாமுமீமும் அதுமேல் குன்னென் றனைந்தெழுத்துஞ், சுருப முகப்பத்து பயக்கூனென்று சொன்னேன் பதினாலு எழுத்துமாகும். (435)

(இ-ள்):— உருவமான, மூன்று சுடர்களும் ஒன்றுகூடி விந்து நாத வடிவானது உருவமான, சுழி முனையாகி, நுகத்து, அலிபு ஆகி, அது பதினான்கு அங்குலம் நீண்டு முஹப்பத்துக்கொண்டு லாமும், மீமும், கூடி குன்பயக்கூனுமாக பதினான்கு அட்சரங்க ளாயிற்று. எ-று.

பதினாலெழுத்தொன்று யிணங்கிநின்று பாற்கு மாகாய நிலையி னின்றே, இதன்கீழேறுகோண வாய்வுமாக வெழுந்து சீனென்று அகாரநிலை, யதிலே சிகாரமென்றெழுந்தஹேயா மக்கினி மூன்று திசையுமாகு, மதிலே யிருகோண மகாரமீமா மண்ணும் ஈகாரத் தருவுநாலே. (436)

(இ-ள்):— இந்தப்பதினான்கு எழுத்துகளும் ஒன்றுபட்டு, ஆகாய ருபத்தில் எழுந்து நின்றது. அதன் கீழ் காற்றானது. ஆறு கோண வடிவமாக உலாவி நிற்கின்றது. சீன் என்கிற அகாரமும், சிகாரமென்கிற ஹேயும் அக்கினியாக மூன்று திசையாக வட்ட மிட்டது. அதில் பூமியானது, மகாரம் என்கிற மீமாக நாலு உருவ மாயிற்று. எ-று.

நாலு மதலையு மீன்றபிதா நாம முழங்கிய பெருவெளியாய், காபக் கபுசைனி யென்னுமது கண்ணு மணியக்லா தின்னமுண்டோ, பாலன் ருபமாய்ப் பிறக்கும்வகை பலதுங் கலிமாவி னினையுங் கேளும், ஆலநபிபங்கும் அல்லாபங்கு மறுநான்கிருபத்து நாலெ ழுத்தே. (437)

(இ-ள்):— இந்த நாலுதிசை ஸ்தம்பங்களையும், பெற்ற மாதா வானது, வானுக்கும், பூமிக்கும் இடைநடுவாகிய பெரிய வெளி யாக இருக்கிறது அது எது வென்றால் காப கௌஸைனி என்னும் ஸ்தலமாக இருக்கிறது. அதானது, நமது கண்கள் இரண்டிலுந்

தெறிகிற ஒளிவு என்கிறபார்ப்பாவாகா இருக்கும். அதானது. அல்லாவுடைய பங்கும். முகம்மதுடைய பங்குமாகிய கலிமாவாக இருக்கும். எ-று.

இருபத்துநாலுயிரெழுத்தா மியம்பும் பனிரண் டெழுத்தைக்
கேளும், அருபருபமாய்ப் பொருந்தி நின்ற வாதிமுஹம்மது நா
லெழுத்துச், சுருப மானது அருபந்தானே சூலென்றெழுந்தது
மூன்றினுலே, பெரிய வுடலுக்குண் மூலாதாரம் பிசகா திருத்தியே
பாராக்கோட்டை. (438)

(இ-ள்):— இது இருபத்து நாலு உயிர் எழுத்தாக இருக்கிறது. இதில் பனிரண்டு எழுத்துக்களைப் பற்றிய விபரம் சொல்கிறேன். அருபமாக நின்ற சுருபமாகிய முகம்மதென்கிறது நாலெழுத்து சொருபமாகிய அருவமான றசூல் என்கிற, மூன்றெழுத்துக்களும் இந்த சரீரத்தில் மூலாதாரம் என்கிற கோட்டையாயிற்று. எ-று.

கோட்டைக்கு வாசு ஞலுமுண்டுங் கொழுந்து புகைத்தியா
யெரியுமதிற், சூட்டிக் கலிமாவின் முகம்மதுற்ற சூலேநீக்கியே லுல்லா
வென்ருர், பாட்டி ஞரைத்திடு மெழுத்துமுன்றும் பத்தியுடலினிற்
சிரமதாச்சு, தேட்டி லெழுதினேன் பத்தெழுத்தை யின்னமுறைக்
கிறே னெழுத்திரண்டை. (439

(இ-ள்);— அந்தக்கோட்டைக்கு வாசல் நான்கு உண்டு. அதில் நெருப்பும் புகையுமாக கொழுந்து விட்டு எரிந்து கொண்டே இருக்கும். இன்னும் றசூலுக்குப் பிறகு அல்லாஹி என்பது மூன்றெழுத்து அது சரீரத்தில் சிரசாக இருக்கிறது. இன்னும் இரண்டு எழுத்தின் விபரம் சொல்கிறேன். எ-று.

எழுத்திரண்டது விபரங்கேளு மெல்லா வெழுத்துக்குங்கடை
யெழுத்து. முழுத்தமாகிய முஹம்மதுற்ற சூலுல்லாகி யென்றுரைக்
கும் ஹேயாஞ், சுழித்த ஹேமூலக் குகையினிற்குஞ் சொல்லுவே
னினித் துலக்கமாகச், சுழற்றிக் கலிமாவில் மூஹம்மதுற்ற சூலென்
றுரைப்பதில் நிற்குப்றேயாய். (440)

(இ-ள்)- - அந்த இரண்டெழுத்தாகிறது முகம்மதுர்றசூல்லா லாஹி என்பதில் கடையில் வருகின்ற ஹேயும், றசூலுல்லா என்பதில் முன் வருகிற றேயுமாக இருக்கும். ஹேயானது மூலக்குகையாயிற்று. எ-று

றேயைப் பிரித்துத்தா னிருபங்காகத் திரேகந்தனி லிருமாங்கா
யென்று, வாயேயொருமாங்காய் வலதுபக்க மணியுமாங்காயோ
ரிடப்புறமாம், ஆயும் றேமாங்கா யெனுமதனி லசதிமறதி கொட்டாவி
விக்கல் நோயும் பலவகை யதற்குள்ளாகு நுவலுவேனிடப் பிறத்தின்
காயே, (441)

(இ-ள்):—றேயானது இந்த சரீரம் என்னும் விருஷத்தின் மாங்காயாக இருக்கிறது. அது இரண்டு வகையாக இருக்கும். ஒன்று வலது பக்கத்திலும், மற்றொன்று இடது பக்கத்திலும் இருக்கிறது. வலது புறத்தின் மாங்காயால் அசதி, மறதி, கொட்டாவி, விக்கல் முதலான பல குணங்களும் உண்டாகின்றன. இடது புறத்து மாங்காயால். எ-று

காயிற்குடி கொண்ட நித்திரையாங் கறுப்பு நிறமுள்ளே கலந்
திருக்கும், ஆயு மெழுத்தது அல்ஹம்தென்றுல் அறியுமெழுத்தது
வைந்துமாகும், வாய்வு நெருப்புநீர் புவியதாகும் வகையு மெழுத்
தைந்த தானவாறுங், காயி லாக்கனியாங்கலிமாக் கலந்தவகையையு
முரைக்குகிறேன். (442)

(இ-ள்):—அந்த மாங்காயானது கறிய நிறமாக இருக்கிறது. அதனுல் நித்திரை, சோப்பல் முதலான பல குணங்களும் உண்டாகின்றன. இனி அல்ஹம் தென்கிற எழுத்து ஐந்தானது. அந்த ஐந்தும் காற்று, நெறுப்பு, ஆகாயம், தண்ணீர், மணணெண்கிறஐந்து பூதங்களாகவும் இனி கலிமாவில் காயில்லாக்கனி என்கிற விபறம் சொல்கிறேன். எ-று

உரைக்கு முடலின்மண் ணுலுதிசை யுநவமெழுந்தது பல்லுக்
குத்தி, ஷறுத்தி னிதின்பேரும் அம்மாரதான் தரித்த வெழுத்ததில்
நாலுமாகு, திறத்தஜி புரீயீ லிருப்பிடமா திறமும் வெள்ளையாம்
பொற்ப்ரகாசஞ், சிறந்த பேச்சுட வீடுமாகுஞ் செப்பும் வாயினுலு
ரைப்பதுவே. (443)

(இ-ள்):—இந்த சரீரத்தில் மண்ணுனது நாலு திசையாக இருக்கிறது, அதானது பல்லுக்குத்தியாகும். அதன் பேராகிறது, அம்மாருவாக இருக்கும், இது நாலு அட்சரமாகின்றன.

அதற்கு அதிகாரி ஜிபுரீல், நிறமானது வெள்ளையாகின்றது. அது பேசுகின்ற வீடாகிய வாயாக இருக்கும். எ-று

உரைத்த வகையான பத்துமிஃதொன்ரு மக்காமிதென் றறிய வேண்டும். நிரைத்த ஈரலிற் சிவந்தநீராய் நிற்கு மேகோணமெழுத் துமீமாஞ். சிறந்த மீக்காயீ லிருப்பிடமாஞ்சேர்த்தரசனேயுமுப்புங்கைப் பாங், குறைந்திடாவிழிப் பார்வையாகுங் கூறும் லெவ்வாமத்தின் பேறுமாமே. (444)

(இ-ள்):—முன்னுல்சொன்ன பத்தும் ஒன்ரும் மகாம் என்றறிந்து கொள்ளுங்கள். இதானது ஈரலின் கண் சிவந்த நீராக நிற்கும் இதற்கு அட்சரம் மீமாக இருக்கும். இதில் இருக்கும அதிகாரியான வர் மீக்காயீலாக இருக்கும். இதன் ரசனையாகின்றது உப்பு ஆக இருக்கும். இதன் பேர் லவ்வாமா என்று சொல்லப்படும். இதன் மகாம் கண்ணுக இருக்கும். எ-று

பேறும் வகைபத்தி ரண்டாமக்காம் பேசு வேன் மூன்ரும் வகை யைக் கேளீற், கூறுமுல்கிம்மத் தென்ற வாய்வு கோணுமாடத்தின் பச்சையாகத், தேறு மெழுத்ததில் வனைந்த ஹேயாந் திறத்திலிசுருபீ லிருப்பிடமாஞ், சீறு மூக்குமூச் செழுந்தவிடு சேர்ந்த நுரையிரற்புளிப் புமாமே. (445)

(இ-ள்):—இன்னு பன்னிரண்டாம் மகாமின் மூன்ருவத நபுசைக் கேளுங்கள். அதன் பேர் முல்ஹிமா. வர்ணம், காற்று. நிறம், பச்சை, அட்சரம் ஹேய், அதிலிருப்பவர் இஸ்ருயீல். வீடு, மூக்கு. தானம், சுவாசம். சுவை, புளிப்பு, உருவம் நுரையீரலாக இருக்கும். எ-று

ஆனவகைபத்து மூன்ருமக்கா மக்கினி மூன்று திசையதாகத் தோணுங் கருநிறம் பித்தத்துக்குட் டுலங்கும் லாம் எழுத் துருவமாம் ஈான், காண இசுருயீல்கசப்புமதிற் காதின் வகைகேள்வியாகுமிது, பூணு மிதின்பேரு மூத்மயின்ன புகலு மிதுதானே நாலாமக்காம். (446

(இ-ள்):—இனிபதின் மூன்ரும் மகாம் ஆகிறது, முத்மஇன்ன என்று பேர். முக்கோண வடிவமாக அக்கினியாக இருக்கும். நிறங் கருப்பு. அட்சரம் லாம். உருவம் பித்து. அதிலிருப்பவர் இஸ்ருயீல். சரீரத்தில் செவியாக இருங்குங்கேள்வி. சுவை கசப்பு. இது நாலாம் நபுசு என்பது. எ-று

நாலு மக்காமையு மறியச்சொன்னே னவிலு மாகாயம் தாமரைக்கா, யேலும் பச்சையி லொளிகலந்தே யிருக்கும் வட்ட மாயினிப்புமாகக், கோலம்வுயிரொளி மூளைமுட்டுங் குறித்த எழுத் ததில் அலிபாகவும், ஆலமமைத்தானலிபுநிலை யதின்போசனுபரு மூ கப்பத்தாமே. (447)

(இ-ள்):— இந்த நான்கு மகாம்களையும் சொன்னேன். இனி ஐந்தாவதானது, ஆகாயமாக இருக்கும். அது சரீரத்தில் தாமரைக் காயாக இருக்கும். அது ஒளிவு கலந்த நீல் நிறமாகும். சுவை இனிப்பாகும். அதன் அட்சரம் அலிபு. அது மூளை ஸ்தானம் வரையிலும் நீண்டிருக்கும். அதன் பேர் ஸனுபரு. அல்லது மூஹப்பத்தென்று சொல்லப்படும். எ-று.

பத்து வகையொரு வீடுதனிற் பார வீடைந்து பகுத்துச்சொன் னேன். புத்தியறிந்தவ ரறிந்துகொள்ளப் பொருளையுரைக்கிறே னெளிப்பில்லாமற், சுத்த பெரியவன் அலிபுமிரு கமலத் திருக்கும் வாறதனைக்கேளு, மற்ற கதையிலே நினைக்கவேண்டா மதிப் புவிலையில்லாப் பொருளுமாமே. (448)

(இ-ள்):—ஒரு வீட்டில் பத்து வகையும், அதின் உள்ளே ஒரு ஐந்து வகை ரகசியங்களையும் விபரித்துச் சொல்லினேன். இனியும் இரகசியங்கள் இருக்கிறது, அதையுஞ்சொல்லுகிறேன். புத்தியுள்ள வர்களாயிருந்தால் தெரிந்து கொள்வார்கள். இருதயக்கமலத்தில் அலிபு இருக்கிறது. இதுமதிக்கப்படாதபொருளாக இருக்கும், எ-று

பொருளின் பேரியது கமலமாகும் புகலுங்கமலத்தின் பூவின் வாசம், அருளு மிருக்குது வாசந்தன்னில் அந்த வாசத்திற் கலப்பு மாகுந், திரளு மணியொளி விளக்குமாகுந் திரியுமுச்செண்ணெய்யா சையாகு, மிருளை விளக்கிய வொளிவுமாக விருக்கு மிறைசுடர் அலி பாகுமே. (449)

(இ-ள்):—அது கமலத்தில் நடுவே ஒருவிளக்காக நின்றெரிகிறது விளக்குத்தண்டு இருதயமாக இருக்கும். ஆசையானது, எண்ணெய் யாகவும், சுவாசமானது திரியாகவும், பத்தி எரிகிற சுடரானது அலி பாகவும் நின்று கொழுந்து விட்டெரிகின்றது. எ-று

அலிபு நிலைதன்னை யறியச்சொன்னே னடியிற் சிறந்தமூன்றங்கு லமாம், புடித மரம்பச்சை நிறமதாகப் பகரு மொருபதங் குலத்தின் மேலே, வலிய பொருள்வெள்ளை வடிவிலங்கி வண்டில்

லாமலர் வாறெளிபோல், ஒளியும் பொருள் றப்பில் ஆலமீனு மொளிவு மிலங்குமோ ரங்குலமே, (450)

(இ-ள்):—அந்த அலிபின் நிலையானது இருதய கமலத்தில் மூன்று அங்குலத்தின் அளவு உயர்ந்திருக்கின்றது. பச்சை நிறத்தில் ஒரு அங்குலம், நீல நிறத்தில் ஒரு அங்குலம், முத்தின் நிறத்தில் ஒரு அங்குலமாக இருக்கிறது. தாமரையின் நடுவே வெள்ளை நிறமாக வட்டமில்லாத மலர்வடிவாக றப்புடைய ஒளிவு பிரகாசிக்கும். எ-று

இலங்கும் பொருடன்னைத் துலங்கநன்ரு யிதமாயுரைக்கிறேன். மறைப்பொருளைத் துலங்கு மொளிமுனைக் கீழாகத் தூக்கி யுண்ணாக் கின் மேலதாகும், கலங்கா திருவிழி புருவத்திடை கண்டப் நிதானத்தி னேரேயாகு, மலங்கார மான கலிமாத்தன்னி லறியு மிருபத்து நாலெ ழுத்தே. (451)

(இ-ள்):—இன்னும் அந்தப்பொருளை நல்ல விபரமாகச்சொல்கி றேன். அந்த ஒளியின் நுனியானது, நேத்திரத்தின் வட்டத்திலிருந்து கீழே உண்ணாக்கின் மேல் வரையிலும் ஜோதி செய்கிறது உயிரே இரண்டு விழிகளின் நடுவே நிதானமாக மத்தியில் இலங்குகிறது. அதுவே கலிமா இருபத்து நாலு எழுத்துக்களையும் பொதிந்து இருக் கின்றது. எ-று

நாலா றெழுத்தினின் முகம்மதென்ற நான் மூன்றெழுத்தை யுமறியச்சொன்னேன். மேலாங் கலிமாவின் லாஇலாக இல்லல்லா கென்று மியம்புவது, கோலமா நடு அலிபென்பது கொண்ட கமலத் தின் வகையுஞ் சொன்னேன், மேலும் பதினொரு வெழுத்து முண்டு மெத்தப்பெரியது கடையெழுத்துப், பாலம் பலனிதைப் பின்னுற் சொல்வேன் பத்து எழுத்தையும் பகரகேளே. (452)

(இ-ள்):—கலிமாவில் இருபத்து நாலு எழுத்தில் முகம்மது என்கிற பனிரண்டெழுத்தையும், விபரமாக மேலே சொல்லிவிட்டேன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லும் விபரமும் நடுவே அலி புடைய கோலத்தையும், கமலத்தின் வகைகளையும் அதன் மேலே பதினொரு எழுத்துக்கள் உண்டு, அவைகளில் கடைசி எழுத்தானது மெத்தவும் பெரிய காரியமானது, அதன் விபரம் பின்னால் சொல்கி றேன். அதில் பத்து எழுத்தைச்சொல்கிறேன். எ-று

பகரு முதலாமும் இரண்டாம் லாமும் பாரச்செவியிருபிறத்திலாகு நிகரி லாவிரு லாம்வயிற்றி னிற்கு மிரு அலிபிருவிழியி,லுகரு மிதினி டைஅலிபொன்றுதா னுற்ற வாய்மொழியுறுதியாகுஞ், சிகர மேறிய மூச்சினோடே சேர்ந்தே யிருப்பது நடுவிற்கேளே. (453)

(இ-ள்):-கலிமாவில் உள்ள முதலாவது லாமும் இரண்டாவது லாமும் சரீரத்தில் இருசெவிகளின் புறமாக நிற்கிறது, மற்ற இரண்டு லாம்களும் வயிற்றில் நிற்கின்றன லாம்களில் உள்ள இரண்டு அலிபு களும் இரண்டு கண்களுக்கும் இடையில் பொருந்தி நிற்கின்றன. பறமொருத அலிபுவாய் மொழியாக இருக்கின்றது. சுவாசத்தின் வழி யாக நடு அலிபானது திறகின்றது. எ-று

நடுவில் அலிபை முன்னுமே சொன்னே னல்ல நடுலாமுமிதின் கூடத்தான் வடுவி லாவிரு லாமைக்கேளு வலமும் சலமுந்தான் வரு மிடத்திற், கடுகி மூலத்தி னிருபுறத்திற் கனதி யாதம் ஹவ்வாவு மாகுந், தொடுத்த அலிபோடு சொன்னேன் ஹேயும் தொகுத்தஆகூ வென் றெழுந்தமூச்சே. (454)

(இ-ள்):-நடுவ லிபானதின் விபரங்களை முன்னமே சொல்லி விட்டேன். மற்ற இருலாமும் வடகலையாகவும், இடகலையாகவும் சுழன்று வருகிறது. மூலத்தில் இருபுறமும் ஆதம், ஹவ்வாவுடைய ஒளிவுகள் வாசஞ்செய்கின்றன. மற்ற ஒரு அலிபும் ஹேயும் கூடி,ஹா ஹூ என்று எழுந்த மூச்சாக இருக்கிறது. எ-று

மூச்சும் பேச்செல்லாம் பிறந்தால் வருமுன்னேயறைந்தங்கே யிருக்குப்போது, சூக்ஷ முருவமா யெழுப்புவ்வாறுஞ் சுறுதியெழுத்தை யுமறியச் சொல்வேன், ஆச்சி யுதிரத்தோல்தசை முளையுமமிர்த்தக்கட லைந்து மன்னைப்பங்காம், பாச்சு விந்தோடு நரம்பெலும்பு சவ்வும் நகம் ரோம மாறும்பிதா. (455)

(இ-ள்):—மூச்சும் பேச்சும் அந்த ஹேயால் தான் வருகிறது, அதன் சூட்சமத்தைப் பொருட்பாலில் கூறிவிட்டேன். இனி அதன் ரகசியங்களைப் பற்றிய விஷயங்களைச் சொல்கிறேன். இரத்தம் தோல் சதை அமிர்தம் ஞணம் இது ஐந்து தாயுடைய பங்காக இருக்கிறது, விந்து. நரம்பு, எலும்பு, ஜவ்வு, நகம், ரோமம் இவை ஆறும் தகப்ப னுடைய பங்காக இருக்கின்றன. எ-று

ஆறுப் பிதாவோடு மன்னையைந்து மாகப் பதினொன்று மமையும் போது, கூறுமாகாயம் வாய்வுவன்னிக் கூறுன தண்ணீர்

மண்கொழுகியொன்ருய், நூறுநாழிகை யாடிநிற்கு நுரையாய்க் குமிழியா யைந்துநாளாங், கூறு மீராறு நாள்வரைக்குங் குமரி நெல்லிக்காயிபோற் றிரண்டுநிற்கும். (456)

(இ-ள்):—தகப்பனில்ஆறும், தாயில் ஐந்தும் ஆகப்பதிஞென்றும் கூடி சமையும்போது, ஐந்து பூதங்களும் அவைகளுடன் கொழுகிற்று. கொழுகி நூறு நாழிகையாக சுழலாடி, மிர்துவான நுரையாகி, அப்பால் ஐந்து நாளான பிறகு குமிழியாகி, அப்பால் பனிரண்டு நாள் வரையிலும் இருந்து நெல்லிக்காய்ப்போல் திரண்டது. எ-று

திரளும் அறுமூன்றிற் புன்னைக்காய்போற் றெளிவாயறுநான்கிற் றிரண்டவன்ன, முருநா ளுமையாறி லுதிரஞ்சேர்த்தே யொன்ருய் ஆமைபோ லுறைந்திருக்கும், அறுநாளாருது நாள்வரைக்கு மைந்து கோணமா யமர்ந்திருக்கும், பொருளா மாகாய மொருகோணத்திற் பொதியுஞ் சிரமெல்லோ ஆறெழினில். (457)

(இ-ள்):—இப்படி திரண்ட விந்தானது கெர்பத்தில் பதினெட்டு நாளானவுடன் புன்னைகாய் போல இருக்கும். இருபத்துநான்கு நாளையில் அன்னம்போல இருக்தும். முப்பதாவது நாளையில் ஆமை போல இருக்கும். முப்பத்தாறு நாளானவுடன் ஐந்து கோணமாக இருக்கும். முப்பத்தொன்பதாவது நாளில் ஆகாயஞ் சேர்ந்து ஒரு புறத்தால் தலை உண்டாகும். எ-று

ஆறெட்டு நாளில் நடுகோணத்தி லறுகோண வாய்வி லமைந்து நிற்கு, நேரெட்ட வொன்பத் தாறுநாளி னெரும்புத் திரிகோண நெஞ்சில்நிற்கும், ஒரேட்டாம் பிறைபோலே சலமுறையும் வயிற்றிலே யறுபதாநான், பாரெட்டு திசை நாலுமுலை பரிவாயடிவயிற்பத் தாறிலே. (458)

(இ-ள்):—நாற்பத்தெட்டு நாளான போது கெர்ப்பமரனது ஆறு கோணத்தில் நடுவாக நிற்கிற வாய்வுடன் கலந்து நிற்கும். ஐம்பத்து நான்கு நாளில் திரிகோண அஸ்திகாங்கையானது இருதயத்தில் வந்துநிற்கும். அறுபதாவது நாளில் எட்டாம்பிறை போலக் குளிர்ந்த தன்மையாக வயிற்றில் வந்து நிற்கும். அடிவயிறு சமையும். நாலு திசையாகும். மூலைகளும் உற்பத்தியாகி வரும். எ-று

அறுநான் கெழுவத்தொரு வெழுத்துமாகும் அல்லா கூவுடன் யாகூவல்லா, வரிவை புருடர்க்குந் தனியேபொரு ளார்க்குந் தெரிய வேவிளங்காப்பொரு, ளொருவர்க் கொருவர்தா னியாப்பொரு ளுவந் தாலொருவித்தே யுருவாம்பொருள், கருவை யுருவமாய்க்காணும் பொருள் கலிமா வெழுத்தொன்ருய்க் காணலாமே. (459)

(இ-ள்);—இருபத்துநாலு எழுத்திலும் ஒரு எழுத்து இருக்கின்றது. அல்லாஹு யாஹு அல்லா என்பது அது உலகத்தில் யார்க்குந் தெரியாத பொருள். உலகத்தில் ஒருவர்க்கு ஒருவர் கைமாத்துகள் பண்ணிக்கொள்ளாத பொருள். அதை உணர்ந்து வந்து ஒன்று சேர்ந்தவர்களை தன்னுடன் கலக்கச் செய்கிற பொருள். தன்னுடைய அசலைத் தன்னுருவம் போலக் காண்கின்ற பொருள் கலிமாவில் ஒரு எழுத்தில் நின்று ஆடுகின்ற பொருளாக இருக்கின்றது. எ-று

காணு மிருலாமும் அலிபினிற்குக் காணேகால்மேலுந் தலைகீழ் நின்று, பூணுமிருலாமும் மீம்நடுவிற் போடு முகம்மது கூவல்லாவு, மூணிப்பார்க்கவே யைந்ததுவா முணர்ந்த அலிபைந்து லாமுமைந்து நாலும் ஹேயது மொன்றுமாகும் நுவலும் பனிரண்டு எழுத்துமாகும் (460)

(இ-ள்):—மற்ற இரண்டு லாம்களும் அலிபுக்கு கீழும் மேலும் ஆக நின்று பொருந்தி, மற்ற இரண்டு லாம்களும் மீமுக்கு நடுவே ஹு அல்லாவும், நல்ல ஊன்றிப் பார்த்தால் ஐந்தாகும். அலிபும் ஐந்தாகும். லாமும் ஐந்தாகும். நானும், ஹேயும் ஒன்ருகும். ஆகப் பன்னிரண்டு எழுத்தாகும். எ-று

எழுத்து முகம்மது நாலுமாகு மின்ன மிருநான்கு மிதுவேயாகும் அழுத்தி வலம்புரி யாகுவல்லா வவன்பால் அலிபோடு நுக்கத்தும் ஹேயுஞ், சுழித்தே யிடம்புரி கூவல்லாவெனச் சுருப நிலையினலறிவே யாகு, முழுது மறிந்தாலே முழுக்கிறங்கு முடியா முழுக்கல்லோ வறியார்க்கெல்லாம். (461)

(இ-ள்);—முகம்மது என்றதற்கு அட்சரங்கள் நாலே ஆகிறது. இன்னும் அத்துடன் எட்டு அட்சரங்கள் உயிராக இருக்கின்றது. சுழிமுனை வலம்புரியில் முழங்குகிற யாஹு அல்லா என்பதும் நுக்கத்தும் ஹேயுமாக இருக்கும். சுழிமுனை இடம்புரிக்குள் முழங்கச்செய்ய வேண்டும். அப்போதுதான் ஹக்குவெளியாகும். இதை அறிந்த நாதாக்கள் தான் முழுக்கு இருப்பார்கள். அறியாதஜனங்கள் எல்லாம்

முழுக்குத்துடக்கைவிட்டும் நிவர்த்தியாகமாட்டார்கள். எ-று

பழுது ஸனுவொடு பாவந்தீரப் பாங்குமிதினுலே பறந்துபோகு,
மெழுது முத்திரையதனினும மெழுத்தை யறியார்க்கு மெதுதானுண்டு
மழுது தொழுதாலு மழிந்துபோகு மகலா தொருநாளும் ஸினுமுழுக்கு
முழுது மொழபத்திரெண்டு நாளின் முடியாவாண் பெண்ணு யுருவ
மாமே. (462)

(இ-ள்):—உலகத்தில் ஒருவன் செய்கிற ஜினுவின் பாவங்கள் மேல் சொன்ன காரியத்தாலே பஞ்சாய் பறந்து போகும். இந்தத் தீர்ச்சையை அறியாதவர்களுக்கு உலகத்திலும் ஆகிரத்திலும் ஒரு பயனுங் கிடையாது. எத்தெந்தப் பாவமும் தொழுது அழுதால் மன்னிக்கப்படும். ஜினுவுடைய பாவங்கள் மாத்திரம் ஒருக்காலும் பொறுக்கப்படாது. ஆதலால் ஜினுவின் முழுக்கும் இலகுவில் இறங்காது. இது நிற்க ஷை கர்பம் எழுபத்திரண்டுநாளையில் ஆண் என்றும் பெண் என்று உருவம் பிரிக்கப்படும். எ-று

ஆகுமாதந்தான் மூன்றுசென்ருலங்க முருவெல்லாம் பொருந்தி
நிற்கும், வாகு பெறுநாலா மாதந்தனில் வழியா யுறுப்புகளிரு
கோணத்தி, லாகம் பொருந்திய நகமும்ரோம மைந்தாந் திங்களி
லணியுமஃ, தேக வியாதியு மெழுத்து நிலே யிணையு மிருமூன்று நாதந்
தானே. (463)

(இ-ள்):—மூன்ருவது மாதத்தில் சரீரத்தின் உறுப்புகள் சரிவர சமைந்துவிடும். நாலாம் மாதத்தில் உறுப்புகளுக்கு ஊசாட்டமுற்பத்தியாகும். ஐந்தாம் மாதத்தில் நகம்உரோமங்கள் முளைக்கும். தேகத்தில் பல சுருசுருப்புகள் ஆருமாதத்தில் வந்து விடும். எ-று

இருமூன்ருருமாத நவதுவார மெல்லாந் திறந்திடு மிருநான்
கினி, லுருவஞ் சுருவந்தான் முறையொன்றில்லே மொ பதும் பத்து
முடலதுக்கு, மிருபத்து நாலு கலிமா நிலே யெல்லா மிணையுபின்ரண்
டெழுத்துச், சுருபத் தைவிட்டு மாவுக்குள்ளே சுழிகொண்டெழுந்திடு
மெழுத்தைக்கேளே. (464)

(இ-ள்):—ஏழாம் மாதத்தில் ஒன்பது துவாரங்களும் திறக்கப்படும். எட்டாம் மாதத்தில் சரீரத்தின் அவயங்களில் யாதொரு குறையும் இல்லாதபடி சோதிக்கப்படும். ஒன்பது பத்தாம் மாதங்களில, கலிமாவின் இருபத்திரெண்டெழுத்தும் சரீரம் போக மீதம்

இருக்கிற இரண்டெழுத்தும் கெர்பத்தின் வாசல் திறக்கின்ற மாக்கொடியாக சமையும். எ-று

எழுத்துக் கலிமாவில்லா இலாக இல்லல் லென்ற கடைசி ஹேயு,
முழுது மாகவே முகம்மதுற்ற சூலுல்லா லென்ற கடைசி ஹேயு,
மெழுத்துமாவுக்கு லிரண்டுமொன்ரு யிருந்து நடனந்தான் புரியும்
போதி, லெழுத்துப் பாலனே மாக்கொடியா லெறியப் பாலன்பாற்
செல்லுந்தானே. (465)

(இ-ன்):—அந்த இரண்டு எழுத்துக்களாவன அறிவுள்ளவர்களுக்குச் சொல்கிறேன். கலிமாவில் லா்இலா இல்லல்லாஹு என்கிறதின் கடைசியான ஹேயும், முகம்மதுர் றசூலுல்லாஹி என்கிறதின் கடைசி ஹேயும் ஆக இரண்டாக இருக்கும். இவை இரண்டும் ஒன்ருகச் சேர்ந்து நடனம் புரிந்து மாக்கொடியைக் கொண்டு கர்ப்ப சிசுவை இழுக்கும்படியாகச் செல்லும். எ-று

சென்றவுடன் பாலன் க்ஷணம் பிறந்து சிறந்த வகை பேச்சு
மூச்சுமாகும், பண்டு நிறைந்திடும் வலதடைத்துப் பாலன் வன்ன
மாய்ப்பாழுமாகு, மென்று மழியாத னுலகுயிரு மிந்த விதமெல்லோ
வமைத்தவாறு, நன்ருய்ப் பதினெட்டுக குதறத்தினி னளினம் பேச்
சோடு மூச்சுமாமே. (466)

(இ-ள்):—இவ்விதம் செல்கிற மாக்கொடி அட்சரங்கள் வலது புறத்தால் நன்ருகச் சென்ருல் உடனே சிசுயாதொரு சிந்தனையின்றிப் பிறந்து மூச்சுபேச்சும் உண்டாகும். அது வலதுபுறம் போகத்தடைப்பட்டால் உடனே சிசுவானது செத்து வெளிவரும். இந்த விதந்தான் உலகத்தின் உயிர் ஜீவாதிகள் முழுதும் வெளிவருகிறது. பிள்ளை பிறந்த உடனே குதுறத்தின் இலக்கப் பதினெட்டுஞ் பேச்சு மூச்சிலேயே நிறப்பமாகிவிட்டன. எ-று

மூச்சுப்பேச்சுடன் பார்வைகேள்வி யுயிரு முசுப்புடன் கலுப்ப
மில்லேக் காட்சிக்கலிமாவி லாஇலாக இல்லல்லாவென்ற கடைசி ஹே
யுஞ், சூட்சியாகவே முகம்மதுர்ற சூலுல்லாவென வுரைத்த ஹேயு,
மூச்சியாகவே யிரண்டு மொன்ருய் மூலக் குகையினிலுறைந்திருக்கும்.
(467)

(இ-ள்):—ஷை இரண்டு ஹேயும் சிசுவுக்கு மூச்சுப் பேச்சில்லாது போனுல், அந்த இரண்டும் மூலக்குகைக்குள்ளே அடங்கிப்போய் நிற்கும். எ-று

உறைந்து மூலத்தி லிரண்டுமொன்று யொடுங்கி நெருங்கியே யிணையும்போதி, லிருந்து நெருங்கியே சுழியாற்சுற்று மெரியுந்தணற் சற்று மிணைந்திடாது, சிறந்த குகைதனி லெழுந்தப்புகை சிறந்தகமலத்திற் ருவும்போது, பொருந்து முயிரொளி யுசுப்பிடாது பொங்கு மூச்சது தொலைந்திடாது. (468)

(இ-ள்):—அவைகள் இரண்டும் கூடி மூலக்குகையில் அடங்குமானல் மூலச்சுழிகள் சுழன்றுசுற்றி நெருப்புப்பற்றி எரியும். அது நூருது, அந்த நெருப்பால் உண்டான புகையானது இருதய கமலத்தில் தாவிவருமானல் உயிரும் போகாது, மூச்சும் தொலையாது. எ-று

தொலைந்திடாமலே வெழுந்தபுகை சொல்லு வேனிதன் பேரைக் கேளு, மிலங்கு மவனென்று சொல்லுவது மிதைப் புகையைத்தானெல்லவருங், கலங்கா வுதிப்பென்ருல் மூலமதிற் கத்த பெரியவன் ஹேயுமாகுந், துலங்த மறிவென்ருல் முகம்மதுற்ற சூலுல்லாவுடஹேயுமாமே. (469)

(இ-ள்):—இந்தப்புகைதான் ஹக்குடைய மர்த்தபாவில் உள்ளது இதைத்தான் பெரியவர்களான நாதாக்கள் அல்லா, முகம்மது, ஹயாத்து, நூகு என்று சொல்கிருர்கள். எ-று

ஆகி யிவைரண்டு மெழுந்த புகை யதுதா னினை வென்றே யறியலாகும். பார்க்குநினைவது மப்பின்விட்டிற்பட்ட வுடனேதான் பார்வையாகுந், தாவும் புகைப்பித்திற்கேள்வியாகும் தாபமண்வீட்டி லெழுந்த பேச்சு, வாகும் புதைத்தாரா யடைத்த தென்ருலந்த வீட்டினி லணுகிடாதே. (470)

(இ-ள்):—இந்த புகைகளைத்தான் நினைவென்று உணரவேண்டியது. இந்த நினைவான புகையானது, தண்ணீர் உடைய வீட்டில்வந்ததேயானல் உடனே கண் உலகத்தைப்பார்க்கும். அது பித்துடைய வீட்டில் வந்தால் உடனே காது கேட்கும். அதுமண்ணீரலில் வந்தால் உடனே வாயானது பேசும். அந்தப்புகை வருகிறவழியில் ஏதாவது தடைப்பட்டால் அந்தவீடு பழுதாகி விடும். எ-று

அணுகி டாவப்பு நினைவின்ருரை யற்ருல் விழிகுரு டாயிருக்கும், வணிக மணுகாத பேச்சில்லாமல் வாயு மூமையாம் வழியில்லாதா, னுணிதங் கேள்வியு மற்றுப்போகு முற்ற பித்துட னிறமும்

போகுங், கணிதம் பெருந்தாரை யடைந்ததென்ருல் ஹயாத்து மூச்சுமே சுழன்று போகும். (471)

(இ-ள்):— நினைவுக்குள் நீர் வரத்தடைப்பட்டால் உடனேகண் குருடாகிவிடும். மண்ணீரலில் வரத்தடைபட்டால் வாய்ஊமையாகி விடும். பித்தில் வர தடைபட்டால் காதுசெவிடாகிவிடும். இது வல்லாமல், தாமரைக்காயில் வரத்தடைபட்டால் உடனே சுவாசம் நின்று மரணம் வந்து சம்பவிக்கும். எ-று.

கழறும் வகைதனை விளங்கச் சொல்வேன் கலிமா வொழிந்திடாப் புகையின் வேகங், வழியாக் கலிமாவை கூவெருேதி வருகு மூச்சது முடலைவிட்டு, மொழியுங் கலிமாவில் அகாரம்ரண்டு மூச்சை யிருத்திப்பா ருள்ளேசெல்லும், ஒளியின் தாரைதா னடக்கும் போதி லொன்று முரையாமல வெளியேசெல்லும். (472)

(இ-ள்):— இனி இந்தப்புகையை விட்டும் தப்பிக்கொள்ளும் வகையைச் சொல்லுகிறேன். அந்தப்புகையின் வேகத்தால் ஹூவென்ற திக்றைப் பிரயோகித்து பின்னல் வருகிற சுவாசத்தை வெளியே செல்லவைக்க வேண்டும் உள்ளே அந்த இரண்டு அரங்களுடன் வாயுவை இருத்திப்பார்த்தால் அது உள்ளேதான் சுழலும் அப்போது இருவிழிகளுக்கும் உள்ளிருக்கின்ற ஹக்குதயமாகிறது தானே வெளியாகி உன்னை ஆதரிக்கும். எ-று.

சென்ரு லதுமீள வேகிடாது செத்தாரெனச்சொல்வா ருலகத்தோர்க, ணின்ற சுடரெல்லா மொன்ருய்க்கூடி நினைவி ற்சேர்ந்து நன் வழிமறந்து, பண்டு போன்மூலத் தடைந்து தீயும் பத்திக்கருகியே நூர்ந்துபோகு, நன்ருய் வகையெல்லா மறியவென்ரு னவிலுவேனி நயமதாக. (473)

(இ-ள்):— அவ்விதம் உள்ளே சென்ற நினைவானது இலேசில் திரும்பாது. அப்போது பிணம் போலகிடக்கும். அதைவுலகத்தார்கள் கண்டால் செத்தான் என்றுபேர்வைத்து விடுவார்கள். சிறிது நேரத்திற்குள் அங்கே, உலாவின் ஒளிவுகளெல்லாம் ஒன்று சேர்ந்து கூடி நினைவைக்கீழே இழுக்கும் அப்பால் உன்னை நீ காண்பாய்.

நவகாமம் அறியும் வகை முற்றிற்று.

——(x)——

றாகு வகை.

ஆடுங் குதறத்துமலருடை வாவி யறுகோணமானகலை, சூடும் றாணைகந்தின் குதுசியுட சுடரிருவிதா னெழுந்தகாலை, பாடுங் கவிக் குள்ளே சொன்னேனில்லை பாரப் பெரிதான கருப்பொருளைத், தேடக் கிடையாத வுலகத்துள்ளே தெளிவாய் பொருளினைச்சொல் லக்கேளே. (474)

(இ-ன்):— குதுறத்தென்கிற புஷ்பத்தில் இருந்துவாசனை செய்கின்ற ஆவியானது, ஆறு கோணங்களாக நிறைந்து அதுவே றாஹால் குதுசி என்னும் பிரதான ஆத்மாவாக நிற்கின்றது. அதைச் சூழ மற்ற ஐந்து ஆத்மாக்களும் நிற்கின்றது. இந்தரகசியத் தை முன்னோர்கள் தங்கள் கவிகளில் சொலலாமல் மறைத்துப் போட்டுப்போய் விட்டார்கள். நான் நீங்கள் ஏழை ஜனங்களாக இருபத்தினாலே விபரித்துச் சொல்கிறேன். கேளுங்கள். எ-று,

சொல்லக்கேளுங்கா ணுலகத்தாரே சூழ்ந்த வுடலுக்குளைந்து றாகு, வல்ல றாவொன்று நாமியாவாம் வகையாம றாவொன்று நாத்திக்சவாம், பொல்லா றாவொன்று நாபியாவாம் போகும் வரும்றாகு நகீமாவாம், வெல்லா றாகுக்குந் தலைவனாக விருக்கும் றாசல்லோ குதுசியாகும். (475)

(இன்):— யார்காணும் உலகத்தார்களே! இங்கே நான்சொல் கிற கருவின் பொருளின் கனத்தைத்தூக்கிப்பார்க்க உங்கள் மூளை களுக்கு அவ்வளவு சக்தி உண்டா? உண்டுமானால் உணர்ந்தறியுங் கள். இந்த சரீரத்துக்குள் ஐந்து றாஹாகள் இருக்கிறது அவை களில் ஒன்றாவது றாஹா நாமியாவாக இருக்கும். இரண்டாவது றாஹா நாத்திக்சாவாக இருக்கும். மூன்றாவது றாஹா, நாபியா வாக இருக்கும். நாலாவது றாஹா இது தான் வெளியே போய் வந்துகொண்டு இருக்கும் இது நகீமாவாக இருக்கும் இவைகளுக் கெல்லாம் தலைவனாக இருக்கிற றாஹானது குதுசி என்று சொல்லப் படும், எ-று.

றாகு குதுசிதானொளிவுமாக நிற்க்கு நயனத்தினிடைகொலுவில் றாகு குதுசிதான் ராஜாவாகும் றாகு நாலுமே யேவலாளாம்

றாகு குதுசிதான் றாகில் நின்றால் றாகுநாலுமே யாடிநிற்கும். றாகு குதுசிதானவனைச் சேர்ந்தால் றாறுயாவுமேயழிந்துபோகும். (476)

(இ-ன்):—றாஹால் குதுஸியானது இரண்டு விழிகளுக்கும் நடு வான கொலுவில் ஒளிவாக நிற்கும். சரீரத்தில் அது இராஜாவாக இருக்கிறது, மற்ற நாலு றாஹாகள் நான்கும் அதற்கு ஏவலாளராக இருக்கின்றது, இன்னும் றாஹால் குதுஸியானது அதன் தானத்தில் நின்றால் மற்ற நாலும் ஒடியாடி நிற்கும். அதுவானது றப்பைப்போய் தரிசித்தால் சரீரம் விழுந்து போகும். எ-று

அழியா றாகல்லோ குதுசியாகுமதுதான் சகலமுமாட்டி வைக்கும் வழியா மனுஷரில் குதுசிறாகு வல்லோனென்றனென்ற கேள்வி கேட்கும் அழிந்த றாகுதா னாலுமொன்று யாவியுருவாகி யமளிபடுந், தெளிவா முடலுக்குளைந்துறாகுந் திறத்தைப் பொருந்தியே யிருக்கும்போது. (477)

(இ-ன்):—மற்ற நான்கு றாஹாகளும் அழிந்து நிலைகுலைந்து போகும். அந்தகுதுஷியானது சதாவும் அழியாமல்நிற்கும். இன்னும் சரீரத்தில் எந்த ராஜகருவிகளையும் நடத்தாட்டி வைக்கிறதும் அது தான், மனுஷரிலும், அந்தகுதுசியே றப்பாக இருந்து கேள்விகேட்கும் அப்போது அழிந்த மற்ற நாலு றாஹாகளும் அதற்கு கைகட்டிநின்று சேவிக்கும். உலகத்தில் அவைகள் சரீரத்தில் இருந்து அதிகாரஞ் செய்யும்போது. எ-று

இருக்கும்போதுதானிராஜாவாக விலங்குங்குதுசியு நாலுறாகும் வருந்தி வணக்கத்தி லறிந்திருந்தால் வடிவு மனுஷரிற்றெரியுநன்றாய் சறுத்துப்பலபாவ நன்மை கேட்கிற் சாகாப்பழகிய பழக்கத்தாலே, திறுத்தி யெனக்குக்கீழ் கொலுவிருந்தாய் நீதான் செய்தவ னெனக் கேட்பதே. (478)

(இ-ன்):—அந்த சரீரத்தை யுடையவன் மேற்படி குதுஸியை அறிந்து அதுடன் பழகி யிருப்பானேயாகில் மஹ்ஷரில் அதை இன்னா ரென்று தெரிந்துக்கொள்வான். அப்போது குதுஸியானது நீ சரீரத் தில் என்னையன்றி வேறு வேலை பார்க்காதபடியாலே உன்னை நான் என்ன கேட்பது உனக்கு கேள்வி இல்லை என்று சொல்லும். எ-று

எனக்கு வலுமையோவுனையல்லாம லெல்லாஞ்செய்தவனீயே
யென்றுந். தனக்குள்ளாகிய குலமென்னவே தம்பிரான்கேள்வி
யொன்றுமில்லை, வணக்கமறியாத பாவிகளே வாழ்ந்து நாடோறு
மிருக்கும்போது கனக்க வுடலிலே யிருந்த றூகு கண்ணினிதானத்தில்
வருகும்போது. (479)

(இ-ள்):—உன்னைக் கேட்க எனக்கு என்ன வலிமை இருக்கிற தென்று சொல்லிவிடும். அதை சரீரத்தில்வைத்தறியாத மூடர்களுக்கு காலம்வந்து முடுகினபோது உடலிலே ஒடிக்கொண்டிருந்த ஆத்மா கண்ணின் ரஸ்தாவில்வரும் அப்போது. எ-று

வந்தா லிருவிழி வானைநோக்கும் வகையா மிசுருயீல் பார்வை
யென்பா, ரந்தபார்வைதான் றூகுநாலு மப்போ குதுசியையறியும்
பார்வை, யுந்தனுடலோட படிந்திருந்தா லுவந்து தொழுதுபோ
மென உரைக்கு, மந்த ராஜாவை யறியார்குல மாரோவெனச்
சொல்லி சிரசிலேறும். (480)

(இ-ள்):—இப்படி வருமானால் இரண்டு கண்களும் ஆகாயத்தை பார்க்கும், அந்தப்பார்வை தான் உலகத்தை இஸ்ருயீலுடைய பார்வை என்பார்கள். உண்மையில் அதுதான் நாலு றூஹுகளும் பிண்டத்தில் இருந்து தன் அரசனை குதுஸியை அண்டத்தில் வந்து சந்திக்கிறதாக இருக்கும். அவன் ஏற்கனவே அவைகளை அறிந்திருந் தால் அவனிடம் பிரயாணவிடை பெருமல்வராது. அறியாதபடியாலே இவன் ஆரோ என்று உதறிவிட்டு வருசிறபார்வையாக இருக்கும் எ-று

ஏறுஞ் சிரசினி லுலுறூகு மெழும்பி யுடல்விட்டுக் குதுசியாகுப்,
பேறும் பலன்பெற்ற குதுசிதானும் பெரியோன் பரத்திலே சேர்ந்து
போகு, மேறிச் சிரசான நாலுறூகு மிறங்கி மூலத்தினிறைந்திருக்கும்'
கூறு மிதுநாலு றூகானியுங் குதாயின்றிருமுன்னேயுருவாமினி (481)

(இ-ள்):—அவ்விதம் சிரசிலேறின நாலு றூஹுகளும் தன் எஜமானாகிய குதுசியின் சமுகத்தில் சென்று தங்கள் உத்தியோக அதிகாரங்களை ஒப்புக்கொடுக்கும். உடனே குதுசி தன் றப்பிடம் போய் விரவிக்கொள்ளும். அதிகாரமிழந்த றூஹுகள் நாலும் மூலத்தில் வந்து பதுங்கிக்கொள்ளும் இவைகளுக்குத் தான் றூஹானி என்று சொல்லப்படும். எ-று

உடநவ மாய்நின்று சாட்சிசொல்லு முடையோன் பரத்தை
முன்னறியாரெல்லாஞ், கருப முருவெல்லாஞ்சாட்சிசொல்லுஞ்சொல்
லும் பிறையெல்லாஞ்செய்தானென்று, பெரிய முனிவோடுபாவ
நன்மை பெலத்த துன்பமு மிவைநாலுக்கு, முருவிற் பொருந்திய
வைந்து றூகு முலகோ ரறியவு முரைக்கிறேன். (482)

(இ-ள்):— அந்த நாலு றூஹுகளும் சரீரம்செய்தபாவ நன்மைகளைக் குறித்துசாட்சி சொல்லும். தன்னையறியாத மடமாந்தர்களின் அவயங்களே இவன் இன்னது பாவம் இன்னது புண்ணியஞ்செய் தான் என்று வாக்கு முலஞ்சொல்லும். அப்பால் தான் கியாமம் நடைபெறும். அந்த ஐந்து றூஹுகளையும் தெளிவாகக் கீழே சொல்கிறேன். எ-று.

அறியும் றூகுதான் குதுசியுட ஆளாம் பணிவிடை நாலுறூஹு
மறியு முடலுக்குளிடதுமாங்கா யந்தக்கருநீரைச் சிரசிலேற,
நிறையுங் குதுசிதான் றூகுதானு நீடை காமாண்டு முள்ளேவாங்க
நிறையு மிருவிழி நித்திரைதா னிலையி னடிவாங்கக் கேள்வி போகும்.
(483)

(இ-ள்):— றூஹுல் குதுசியின் பணி விடைக்காரர்களாகிய மற்ற நாலு றூஹுகளும் இருக்கின்றன. றூஹுல்குதுசியானது இடது பக்கத்து இருதயத் தாமரைக்காயின் வடிவமாக நிற்கின்றது. அந்த மாங்காயானது இதழ் மூடும்போது நித்திரை வந்து இருவிழிகளும் மூடிமயங்கும் அப்போது பித்துடைய வீடும் அடைபட்டு கேள்வியும்மறந்து போய்நினைவும் அசந்துவிடும். எ-று.

கேள்வி பார்வையு முறக்கமானற் கிடத்திக் கீழே தான் சடத்தை
வைக்குஞ், சூழு முலகெலா மலைந்துபார்த்துச் சொல்லும் நால்
றூகு நகீமாவதும், நாளுங் கொடிதான பலவிதமு நமக்கு நமக்
கென்றே நாட்டங்கொள்ளுஞ், சூழுங் கொடும்பிழை விளக்கும் றூகு
சொன்னே னுபியா றூகுமாகும். (484)

(இ-ள்):— அவ்விதம் கேள்வியும் பார்வையும் நித்திரையில் தரிபட்டவுடன் குதுஸியானது மெதுவாக சரீரத்தைக் கீழே வைத்துவிடும், அப்போது அந்த நான்கு றூஹுகளும் வெளிப்பட்டு உலாவிக்கொண்டு திரிந்து கண்ணுக்கழகான சரீரமெல்லாம் பார்த்து இதுநம்மது அதுநம்மது என்று சொல்லும். இந்த நாலில்

கொடிய பாவச்செயல்களை யெல்லாம்செய்கின்ற றாஹானது நாபிய்யாவாக இருக்கும். எ-று.

றாகு நாத்திக்கா பசியுந்தாகஞ் சுகியும் பலவெல்லாம் சேர்ந்து வரும், வாகி னறிவோடு பலபுகழு மறிய நாமி ா றாகுமாகு, மேகன் றாகைந்து மிருக்குமிட மிறையோன் குதுசிதான் சிரசினிற்கும், ஏகம் பொருந்திய நாமியாவு மிடதுமார்பினிற்றரிக்குந்தானே. (485)

(இ-ள்):— நாத்திக்கா என்கிற றாஹானது சரீரத்தில் பசி, தாகம், சுகம், இன்பமுதலான பலகுணங்களையுங் கொடுக்கின்றன. நாமிய்யா என்கிற றாஹானது புகழ்ச்சி, பெருமை, கல்வி முதலானவைகளைக் கொடுக்கின்றது, இந்த றாஹாகள் குதுஸியைத்தான் சூழ்ந்துகொண்டிருக்கும். இவைகளில் நாமியா என்கிற றாஹா மாத்திரம் இடது மார்பில் இருந்து அதிகாரஞ் செய்கின்றது. எ-று.

தரிக்கும் பலவெல்லா நாகிற்காணத் திரிகோணத்தீயினடுநெஞ் சிலே, கருகி யுருநிற்கும் நகீமாவது கனத்த ஈரலி ஞபியாவா, மறியும் வகையெல்லாந் தனக்கேயென்று வாகை வழியிலே யாடிநிற்கும், உரிசை பொருந்திய நாத்திக்காவு முறைந்தே யிருப்பதுபல்லுக்குத்தி. (486)

(இ-ள்):— நகீமா என்றது மூன்றுகோணமான நெருப்பின் திசையில் நின்றும் வெந்துகருகி உருகிப்போய் நிற்கின்றது, நாபியாவானது ஈரலோடும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இது சரீரம் எதை அரிய நாட்டங்கொள்கிறதோ அதைத் தூண்டிக் கொடுக்கின்றது. நாத்திக்கா என்றது பல்லுக்குத்தி என்கிற தானத்தில் நின்றும் ஆசை வஸ்த்துக்களை அநுபவிக்கின்றது. எ-று.

பல்லுக் குத்திதான் பரப்புவியாம் பாங்கா யடிவயிறதிலிருந்து, நல்ல ரசனையு நால்வகையு நாடி யுண்பது நாத்திக்காவாம், வல்ல புகழான வைந்து றாகில் வடிவுகுதுசியை யறியார்குபிர், அல்லா வருளான குதுசியாகு மந்தக் குதுசியை யறியவென்றுல. (487)

(இ-ள்):— பல்லுக்குத்தி என்பது நான் பூமியுடைய மண்டலமாக இருக்கிறது. மேற்படி நாத்திக்கா என்ற றாஹானது அதில் உட்கார்ந்துக்கொண்டு நல்ல ருஷிகரமாக உண்டிவஸ்துக்களையுண்டு

அவைகளின் ரசங்களைக் கிருஹிக்கின்றது. இந்த றாஹாகளில் பிரதான றாஹான குதுஸியைப் பகுத்தறியாத சண்டாள ஜனங்கள் எல்லாரும் கடைசி முடிவில் திட்டமாகக் காபிராகத்தான் இருப்பார்கள். அதுதான் றப்பு என்பது அதை யறியவேண்டுமானால் சொல்கிறேன் ஒரு உபாயம். எ-று

அந்தக் குதுசியைத் தானறிந்தே அதைத்தான் றிருமுன்னே நிறுத்தவென்று. லந்தப் பதினாறு முஷாகிதாவி லைந்தாம் வணக்கத்திலாகுமுக, முந்தஜெம்கூத்து லாகூத்திலு மூழக்கமாகிய ஆகூத்திலுஞ், சிந்தைத் தெளிவைநீ தெளிவதாக்கித் தெளிவு மிலங்கியே யிலங்கும் போது. (488)

(இ-ள்):— ஜனங்களே! நீங்கள் அந்த றாஹால் குதுஸியை யறிந்து உங்களில் தரிசிக்கவேண்டுமானால் பதினாறு முஷாகிதாவில் ஐந்தாவது முஷாகிதாவை நீங்கள் பற்றிப் பிடித்து உங்கள் முகங்களை ஜம்கூத்திலும், லாஹூத்திலும், வலம்புரி முழங்குகின்ற ஹாஹூத்திலும் ஏற்றி வைத்துக்கொண்டு இருதயத்தை நல்ல தெளிவாக்கி அந்தத் தெளிவுக்குள்ளே உணர்ச்சி என்கிற நினைவுடன் உற்றுப் பார்ப்பீர்களேயானால் அங்கே இலங்கி நிற்கும், எவ்விதமேயானால் எ-று

இலங்கும் கருங்கட லக்கணத்தி லிருந்தவளை வெள்ளை விசை கொண்டாடு, மூலகு நிலையீமான் வட்டத்துள்ளே யொளிவு முச்சுடர் லளைநடுவி. லிலங்கு நிலையுட்டாள் வட்டத்துக்கு ளிலங்கும் பளிங்கியில் அருபருபம், அலையா நிலையுருந் தோன்றுமாகி லதுதான் குதுசியென் றறிந்துகொள்ளே. (489)

(இ-ன்):— அவ்விதம் இலங்குகின்ற வஸ்தானது கருங்கடலாகிய இரண்டு கண்களின் கருப்பு வட்டத்தின் சூழாலே வெள்ளைக் கடல் வளைந்து இருக்கும், அதற்கப்பால் ஈமான் வட்டம் என்கிற பச்சை நிறத்துக் கப்பால் முச்சுடர் வகை என்கிற செவப்பு ரெங்கு குவளைக்கு நடுவில் ஒரு கண்ணாடியில் விழுகின்ற சூரிய ஜோதிபோல பளிரென்று ஒரு ஒளிவுயாதொரு உருவமுமில்லாதபடி சுமார் ஒரு கசகஸாப் பிரமாணம் இரண்டு நேத்திற்கும் நடுவே தெரியும். அப்படிக் கண்டாயே அதுதான் சத்தியமாக றாஹால் குதுஸி என்று நல்ல உறுதியாக அறிந்துகொள்வாயாக. எ-று

அறியுங் குதுசியின் விபரந்தனி லனு போலுரைக்கிறேனறி
வாளர்க்குக், குறியுமிருமுக நயனத்திடை கூறும் பொருளொன்று
யிருந்தகலும், அறுகோ ணவாசி கண்ணேவிதா யதுதானுருச் செய்த
பரம்பொருளா, முருவி னுருவில்லா தொளிவு நாதனுண்மை குதுசி
யென் றறிந்து கொள்ளே. (490)

(இ-ள்):— இன்னும் அந்த குதுஸியின் அடையாளங்களில் ஒரு அணுப்போல் உடைத்துவிடுகிறேன். கூர்மையுள்ள புத்திசாலிகளாயிருந்தால் தெரிந்துகொள்ளட்டும். அதாவது:— சரீரத்தில பிரதான கருவியாக முகத்தின் இரு விழிகள் நடுவிலும் அந்த குதுஸின் பிரகாசம் நல்ல வெட்ட வெளிச்சமாகத் தெரியும். அறுகோணம் எபது கண்ணைத்தான் சொல்கிறது, அதுதான் அறுஷு, அதில் நின்றுந்தான் சரீரம் சமைக்கப்பட்டது அந்தக் கண்களுக்கு நடுவில் ஒரு நாதமானது நுக்கத்துடைய சூரத்தில் ஒளிவாகத் தெரியுமாகில் உடனே அதுதான் குதுஸி என்றறிந்து இஸ்லாமிலாகி விடுங்கள். அன்றைக்கித்தான் இஸ்லாம். எ-று

கண்டகருவுக் குணிநேவு மென்றுய்க் கலந்த தணலாகுந்
தெளிவின் சுடர், நின்ற வளைவட்டம் வான்நடுவுள் நுக்கத்து
நுன்வளை யிருவாலுமாய்ச், சென்று மயல்றாகு ஜுபிலி தன்னைச்
சேர்ந்தே யனுதினஞ் சிறந்திருக்கு மென்றும் பழுதில்லா திறையோன்
சுடரிதுதான் குதுசியென் றறிந்து கொள்ளே. (491)

(இ-ள்):— அப்படி நீ கண்ட அதுதான் சரீரத்தின் கருப் பொருளாக இருக்கும். அது நினைவுக்குள் கலந்து உஷ்ணவாயுவுடன் தெளிந்து பிரகாசஞ் செய்கின்றது. ஒரு நுக்கத்துப்போல் வட்டவளையமான ஒரு ஒளிவு அது வலம்புரி இடம்புரியாக இரண்டு கண்களின் மத்தியத்திலும், அலிபுவைச் சேர்ந்து இலங்குகின்றது. இதைப்பற்றி குணக்குடி மஸ்தானும் நேத்திரம் ரண்டினும் நேராயிலங்குது நீ டொளிபோன்றது. தேடரிதாகிய காத்திரம் உள்ளது யாவும் பொதிந்தது கையிலும் காலிலும் எட்டப்படாததோர் சூஸ்திரப்பாவை என்று சொல்லி இருக்கிறார்கள். பார்த்து சக்கற உணர்ந்து கொள்ள வேண்டியது. எ-று.

எல்லாங் குதுசிதா னெழுந்தகோல மிலங்கும் பளிங்கியிற்றே
ரியும்ருப, மெல்லோர்க்குந் தோன்றும் வணக்கந்தனி லிறையோன்
குதுசியு மெல்வகையு, மெல்லாங் கருவிலே யமைத்தவாரு

யெந்த வெழுத்துட வலுப்பமொன்றாற், சொல்லு மெழுத்தொரு
மூன்றுமாகச் சூலென் றுரைப்பது சுழிமூலமே. (492)

(இ-ள்):—உலகோடிகளில் உருவெடுத்து வந்தவைகளெல்லாம் அந்த குதுஸியின் கோலங்களைப் போலதான். அந்த சூரத்து இருதய கசடறுந்து மனக்கண்ணாடி என்கிற பளிங்கியில் பார்த்தால் தெரிய வரும். அது மூலத்தில் இருந்து சுழித்து எண்பத்து நான்கு நூறாயிரங் கோடி நரம்பு ஸ்தலங்களுக்கும் ஆதியில் ஏற்பட்ட விதி வசப்பிரகாரம் ஓர் எழுத்தின் வல்லாமையைக் கொண்டு சூல் என்கிற பெயருடன் மூலத்தின் சுழினைக்கு ஸ்தம்பமாக இருந்து வருகிறது, எ-று

சூலென் றெழுத்தது மூன்றினாலே சூலுண்டாகிய மதலையாச்சு,
சூலைச்சுமந்தது முகம்மதியா சூலால்வர் நாம மிறசூலாச்சு, பாலனுரு
வாச்சு சூலிநாளாலே பாரவகையெல்லா நிறைந்து போச்சு, மேலுங்
குதறத் திருபத்தாறு மேன்மை பொருந்திய வயனங்களே. (493)

(இ-ள்):—சூல் என்கிறது முச்சுடரின் காலத்தில் அதற்கு உண்டாயிற்று அதனாலேதான் கெர்ப்பத்தில் மதலையானது சூலாச்சுது. சூலைபரி வாரமாகச் சுமந்தது, முகம்மதிய்யா என்று சொல்கிற பேரொலிவாக இருக்கின்றது. அதனால் தான் முகம்மதுக்கு றசூல் என்கிற காரணம் பெயர் உண்டாயிற்று இதில் குதுறத்தின் இருபத்தாறு வகைகளும் வந்து நிரம்பிற்று. எ-று

வயணங்குதறத்தி லிருப்பத்தாறும் வகிர்ந்து பொருந்திய விதத்
தைக்கேளுஞ், செயமா முயிர்நிலை யட்டகோணஞ் சேர்ந்தே யுயிர்நிலை
பொருந்திநிற்குஞ், சுகமா யஞ்சிறு மைந்தேயாகுஞ்சொல்லு முதிப்
போடு நினைவு புத்தி, மயமாறிவோடும் அக்கிலுமருள் மற்றும்
கிம்மத்துப் பகுமுமாமே. (494)

(இ-ள்):—மேற்படி குதுறத்தின் வயணங்கள் இருபத்தாறும் பிரித்துச்சொல்கிறேன். எப்படியானால், உயிர் நிலைகள் தோறும் எட்டிநிற்கின்ற அஞ்சிறுகள் ஐந்தும், இன்னும் உதிப்பு, நினைவு புத்தி, அகில், ஞானம், அருள், ஹிம்மத்து, பஹ்மும். (இன்னும்)

ஆகு முணர்வோடு மிரக்கங்கல்வி யறியும் வெறுப்போடு றாஹா
ஸியும், வாகினிருபத்தாற் குதறத்தாகும் வளமைகுளுமையுஞ்சூடுநீரு

மேக வளவோ கொடிவளவு மிச்சைசோபமுஞ் சபூறுகுணா, மாகும் வகைபத்தும் அஹதிய்யத்து மறியக் கிரியைத்துமருளக்கேளே. (495)

(இ-ள்):—உணர்வு, இரக்கம், கல்வி, வெறுப்பு, றூஹானி ஆகிய இவைகளாக இருக்கும். வழக்கம், குளிர்ச்சி, சூடு, வடிவு. போகம் அளவு, தேசபம், பொருமை இந்தப்பத்தும் அஹத்தியத்தாக இருக்கும். கிரியைத்தைச் சொல்கிறேன். எ-று

அறியுங்கிரியைத்து வைந்து சொன்னே னதிலே பிரிவெல்லாமறியச்சொன்னேன், பொருளுங் கிதாயத்துச் சுயமகிழ்ச்சி புளிப்புமினிப்போடு கசப்புமாகும், புரளுந்துவர்க்கைப்பு மிலைப்புபேச்சும் பொங்குங் கிதாயத்து மொருபத்தொன்றும், திரளு முலகெல்லா மனதிலொன்றித் திருந்த னவனென்று வணங்கவென்ருர். (496)

(இ-ள்):—கிரியைத்து ஐந்து வகையாக இருக்கின்றது. அவைகள் இனிப்பு, புளிப்பு, கசப்பு. உப்பு. துவர்ப்பு ஆக இருக்கும். ஹிதாயத்து பத்து காரியங்களாக இருக்கிறது. உலகநடவடிக்கைகள் யாவும். இருதய வில்லில்வந்து நிற்கும். எல்லாம் றப்புடைய வரத்தால் என்று நிர்ணயத்து வியாபகமாக நினைத்து வணக்கஞ் செய்ய வேண்டும். எ-று

என்றுங் காமப்பால் தவங்களெல்லா மெடுத்தேயுரைத்திட்டேனுலகத்தோர்க்கு. மன்றே பெரியவ ஞதிஞய னறிவிலறிவாக அருபரூபமென்று மழியாத னுலகுயிரை யந்தவிதமாக யமைத்துவைத்து நன்று நெறிநன்மை தீமைரண்டும் நடப்பா லறியவும் நாட்டினனே. (497)

(இ-ள்):—இவ்விதமாக நடக்கின்றகாமபாலின்குண தணங்களின் விபரங்களை எல்லாம் சொல்லிவிட்டேன் றப்பு அருவத்தில் உருவமாக இருந்து உலகசிருஷ்டிகளை இவ்விதமாகநடத்துகிருன். இதில் நப்ஸுகளின் நடப்பால் நன்மை தீமைகளையும் அறிகிருன், என்றுணர்வீர்களாக, எ-று

நாட்டி னுலமாக்க ளெல்லோருக்குந்தா னயமா யுரைத்த முப்பாலிதாகு, மேட்டி லெழுதினேன் முப்பாலையு மிதமா யறிந்தவர் குருவுமாகுந், பாட்டி லுரைத்ததின் பயனறியார் பாரிற் குருவென்று பகரோணுது. நாட்டிலறியாத மூடர்க்கெல்லா நல்ல முஷாஹதாவினி மேற்சொல்வேன். (498)

(இ-ள்)— இந்த உலகத்தின் கண்ணே, அறிவில்லாத உலமாக்களுக்கு நயத்துடன் இரங்கி என் முப்பாலையும் ஏடு ஏடாக எழுதி விட்டேன். இந்தமுப்பாலையும் அறிந்தவர்கள் தான் குருமார் என்று வெளிவர வேண்டும். என்னுடைய முப்பாலின் தாற்பரியங்களைக்கண்டு கொள்ளாமல் குருவென்று வருபவர்கள் பாவியாகிப் போவார்கள், இனி முஷாஹிதாவின் விபரஞ் சொல்கிறேன். எ-று.

இனிமே லுரைப்பது குருவின்முறை யெல்லா நபிமாரு நடத்து முறை. துனியாவிலுள்ள குருவின்மாருஞ் சூழ்ந்தவொலிக்குத்தூபெல்லோருந்தா, நிதமே இதுதானே நடந்தமுறை நேராமுறை யெல்லாம் வீணமென்று, மதினு முகம்மது நபியுஞ்சொனுர் மருகரலிப்புலிதாமுஞ்சொன்ஞர். (499)

(இ-ள்):— இனிமேல் நான் சொல்லி வருவது குருமார்களுக்கு வேண்டிய கை வல்லியமான முறையாக இருக்கும். இதுவானது, நபிமார்கள், றசூல்மார்கள், ஒலிமார்கள், குதுபுமார்களும் நடந்து பயன் கண்ட முறையாக இருக்கும். இது அல்லாத மற்ற முறைகளெல்லாம் வீணான வழிகேட்டு முறையாகுமென்று மதினநகரத்தில் அடங்கி விளங்கு நமது உலக ரட்சகரான முகம்மது நபியவர்களும், ஞானத்தின் அஸ்திவாரமாகிய ஹலரத்து அலியவர்களும் கடைபிடைத்துச் சொல்லி இருக்கிருர்கள். எ-று.

அலியார்க் குறைத்தன ராலநபி யால நபிக்கெல்லா சொன்னதெல்லாம், அலியா ரொளியான குத்தூபுமாகு மபூபக்கரும றுதுமானுக்கும், அலியா ருலகுள்ள குருமார்களெல்லாம் அல்லாவருள் பெற்றகுத்தூபுமாகும், அலியின் ரகசியம அறிந்தாரில்லை யல்லா வொருவனே யறிந்த நாயன். (500)

(இ-ள்):— அலியவர்களுக்கு நமது நபிகள் பிரான் அவர்கள் உபதேசஞ் செய்தார்கள். நபியவர்களுக்கு மிஃறுஜியுடைய இரவையில் றப்பு உதிப்பாக்கி வைத்தான். ஆனதால் அலியவர்களாகிறது அபூபக்கர், உமறு உதுமான் இந்த அமீறுகளுக்கும் மற்ற குதுபு ஒலிகளுக்கும் சற்குருவாக இருக்கும். அலியுடைய ரகசியம் உலகத்தில் யாரும் கண்டதே இல்லை, அல்லா ஒருவன் தான் அறிந்திருக்கிருன். எ-று.

நாயன் புலியான அலியார்சொன்னார் நபியாமுகம்மதுசொன்னா
ரென்று, பாவியாகாம னுலகோர்க்கெல்லாம் பதினா லுபதேசஞ்
சரியாய்ச்சொன்னா, ராகு முபதேசந் தனைவிலகி யனேகவிதஞ்
சொல்லி யழிப்பதெல்லா, மாவியொடுங்கையில் இபிலீசுதா னறியாச்
சுருக்கிட்டு மாட்டுவானே. (501)

(இ-ள்):— அலியவர்கள் ஞானத்தைப்பற்றிச் சொல்லும்போது எனக்கிதை நமது நபிநாயகம் சொன்னார்கள் என்று உறுதி சொன்னார்கள். அதனால் உலகத்தின் ஞானிகளெல்லாம் பதினான்கு உபதேசங்களையும் சரிவரத்தெரிந்தார்கள். இந்தப் பதினாலு முஷாஹிதாவின் வழியைச் சருகி நடந்த மூடர்களை அவர்கள் மரண நேரத்தில் இபுலீசானவன் நரகத்து அக்கினி சங்கிலியால் சுருக்குப் போட்டு இழுப்பான். எ-று.

மாட்டைப் பிடுங்கிய கடுங்காகப்போல் மலக்கங் காப்போ
குமிரப்போர்களுங், கூட்டி முடிப்பார்கள் விசளமெல்லாம் குப்பா
ரென்றறியாமற் கொள்வோரீமான், வாட்டப் படுமந்த நரகந்தனில்
வாதைப் படுவார்கள் மீளாரென்றுந், தீட்டு மிருமுனை வாளெடுக்
குஞ் சிங்கப்புலிமாமனூற்றருளிச்செய்தார். (502)

(இ-ள்):— அலியவர்களுக்கு நபிகள் பெருமானார் அவர்கள் ஞான உபதேசஞ்செய்யும்போது அலியே! இந்த முஷாஹிதாக்களை யறியாத ஜனங்கள் தடையன்றி காபிராக இருக்கும். அவர்கள் அப்படியே சரீரத்தை விட்டு விடுவார்களே யாகில் அவர்கள் நரகத்தின் வேதனைகளை விட்டு ஒருக்காலும் மீட்சி பெறமாட்டார்கள். அவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது என்று திருவாய் மலர்ந்து சொல்லி இருக்கின்றார்கள். எ-று.

செய்யு முபதேச மூலகத்தோர்க்குச் செய்யி திறகூலுமலிக்குச்
சொல்ல, வைய மனுவோர்க்கு மலியார் சொன்னார் வையமனு
வோரே குருமார் தம்மைப், பையப் பழகியே மனமறிந்து பஞ்ச
வானாலைத் தீருமென்று, மெய்யுஞ் செயல்கண்டார் பாதந்தொடு
மெல்லாஞ் சரியென்றுக் குருவாகுமே. (503)

(இ-ள்):— இவ்விதம் நம்மாண்டவர்கள் சொல்ல அதைக்கேட்டு அலியவர்கள் உலக வாசிகளுக்கு உபதேசஞ்செய்யும்போதே பல பல சமிக்கினைகள் செய்திருக்கிறார்கள். எப்படி என்றால் பரம

அறிவில்லாத ஏழை ஜனங்களே! நீங்கள் வேஷம்போட்டு வருகிறவர்களை யெல்லாம் குருவென்று கையை நீட்டி விடாதீர்கள். பல நாளும் அவர்கள் பால் போய் பழகியவர்களின் செயல்களை மனதில் அறிந்து ஆராய்ந்து பார்த்து நான் சொல்லி இருக்கின்ற நற்சாதனங்கள் அவர்களிடம் உண்டாயிருந்தால் மாத்திரம்கையை கொடுங்கள் என்று வற்புறுத்தி யிருக்கிறார்கள். எ-று.

குருவை யறியாதார் குருடராகும் குருவேகதியென்றுற் கோடி
பாவங், குருவே யிறையென்றுற் குபிருமாகுங் குருவே தானொரு
வாகாளுவா, னுருவை யுடலுமே யூனுறக்க முடையு மலஞ்சல
மொதுக்கமாசை, யரிவைசுகமின்ப துன்பம்விடா ரசதி மறதியு
மழகுகோலம். (504)

(இ-ள்):— இன்னும் குருவைப்பழகி அறியாதவர்கள் விழி கண் குருடராவார்கள். குருவே கதி என்று அறியாமல் நம்புவார்களானால் கோடாகோடி பாவத்தைச் சுமந்த கழுதையாவார்கள். குருவினால் தனக்குப் பயன்கிடைக்காத பட்சத்தில் அவரை அல்லா என்றும், ஆதி யென்று வீணாகப் புலம்பினால் உடனே காபிராகிப் போவார்கள். குருவுடைய நிலைமையில் என்றுந்தான் அறிந்தாவது நடந்தாவது இல்லாமல் பொய்வேஷந் தரித்துக் கொண்டு உலகத்தாரை மருட்டி நான் தான் குரு என்று சொல்வானாகில் அவன் தான் நரகத்திற்கு முதல் முதல் தள்ளபடுவான். எ-று.

கோலம் புனைந்துதான் சீராவுள்ள குட்டிச்சுவைரைத்தான்
குருமாரென்று லாலம் படைத்தவன் றனக்கொள்வாதே யண்ணல்
முகம்மது நபிக்கொவ்வாதே, நாலுமறையுடன் ஷறகுநாலு ராலு
இமாமுடனாலுபீருஞ், சீலச் சறகுள்ளோர் தமக்கொவ்வாதேசெய்யுஞ்
செயனல்ல குருவுமானால். (505)

(இ-ள்):— நல்ல சரீரத்தை வளர்த்து இரவும் பகலும் நித்திரையில் குரட்டைபாடி, நெய்பால் கறியுடன் வேளைக்கு வேளைத் தின்று வயிறு தொந்திபட்டு, அடிக்கடி பேண்டு மோண்டு, வீடுகளெல்லாம நாற்றமாக்கி இரவெல்லாம் சௌந்திரிகரமான ஸ்திரிகளுடன் உருண்டு புரண்டு சப்போக இன்பங்களையும் அனுபவித்து அசதி மறதியுடன் மேனியை மினிக்கிக்கொண்டு பகல் வேஷம் போட்டு அறியாத சொற்பமதியுள்ள ஏமாளி ஜனங்களை மிரட்டித் திரிகின்ற

திருட்டுக்குட்டிச் சுவர்களை சற்குரு வென்று கையைக் கொடுத்து விட்டீர்களானால் உங்களை அல்லாவும் ல அனத்துச்செய்வான். அவனுடைய றசூல்மார்களும் திட்டுவார்கள். நாலு வேதங்கள், நாலு மதஹபுகள், நாலு இமாம்கள், நாலு பீர்மார்களும் பதுஆச் செய்வார்கள்.
எ-று.

நல்லசெயலுள்ள குருமார்தம்மை நாட்டி லுரைத்திடும் வகையே தென்றாற், சொல்லும் ஷறஹதிற் குருவிமாமாஞ் சூழ்ந்தஜமாத்துப தேசம் பெற்றோர், சொல்லுந் தரீகத்திற் பீரல்லென்று சொன்னாற் குபிரல்லாற் சுகமேயில்லை, நில்லும் ஹகீகத்திற் பீரு நாமு நிலத்தி லுயிரெல்லாஞ் சரியாகுமே. (506)

(இ-ள்):— இப்படி யன்றி நல்ல செயல் உள்ள குருமார்கள் உலகந்தில் எப்படி நடப்பாரேயானால் நபியுடையஷரீஅத்திற்கிணங்க நடப்பதும், இஸ்லாமான ஜமா அத்துகளுக்கு இமாமாக இருப்பதும், உலகத்தில் உள்ள உயிர் ஜந்துக்களைக் கிருபையுடன் அணைத்து ஆதரிப்பதும் அவருடைய சுயகுணமாக இருக்கும். எ-று.

சரியா மஹரிபத் தேறிபாருஞ் சாற்றுங் குருவேரு நாமும் வேறோ, வரிய பெரியோனு மலக்குகளு மண்ணல் முகம்மது நபி மார்களு, மூரிய படைப்புகள் குலமுதாமு மொன்றே குலமல்லா லுபாதியுண்டோ, தரத்திற் பெரியவர் சிறியவருந் தன்னை யறிந்தவர் தலைவராமே. (507)

(இ-ள்):— யாரப்பா ஞானம் அறியவந்த மகனே! மஅரிபத் தின் துறைமுகத்தில் நின்று உலகமதை ஆராய்ந்து பாரு. றப்பு என்பதும், நபிகள் என்பதும், உலகத்திற் பலபல சமையத்தார்கள் என்றிருப்பதும், நீயும் வேறு படாமல் எல்லாம் ஒன்றாகவே வந்து கலந்துகொள்ளும். ஆனால் ஒன்றிருக்கிறது. எவன் ஒருத்தன் உலகத் தில் தன் இருதயத்தை உணர்ந்து தன்னைப்பளிங்கியில் முகம் பார்க்குந் தன்மையாகக் கண்டுகொண்டானோ! அவன் எல்லாருக் கும் தலைமைத்தன முடையவனாக இருப்பது மாத்திரம் உண்மை.
எ-று.

தலத்தில் வேந்தனா யிருந்தாலுஞ் சாதி யுயர்த்தியாயிருந்த தாலும், பெலத்தில் வேங்கைபோ லிருந்ததாலும் பெரிய வயதாக விருந்ததாலும், குலத்தி லனந்தப்பேரபேச்சையாலுங் குறையாத் திரவியங் குவியலாலு. நிலத்திற் சிங்கார வழகினாலு நிறுத்துமுத்தி யோகப் பெலத்தினாலும். (508)

(இ-ள்):— இதன்றி இந்தப் பொய்யான பூலோகத்தில் கிரீடம் தரித்து ஆள்கின்ற சக்ராதிபதியாக இருந்தாலும், ஜாதியில் ஸாதாத்து, அல்லது பிரமதலமாய் இருந்தாலும். வேங்கைக்கொப் பான பலாட்டியவீரனாக இருந்தாலும், ஊர்களுக்கெல்லாம்நாட்டாண் மையுள்ள பெரிய மனுஷனாக இருந்தாலும், மலைகளைப்போல் குவிந்துள்ள திரவிய வந்தனாக இருந்தாலும், நாடெல்லாம் அஞ்சக் கூடிய ராஜ அதிகாரியாக இருந்தாலும், அழகில் யூசுபு நபியை ஒத்திருந்தபோதிலும், அதனால் அவன் யாதொரு பிரயோஜனமும் தன் வாணாளுக்குத் தேடிக்கொள்ள ஏலாதே ஏலாது. மரணநேரம் வந்து விடுமேயாகில் ஒரு உப்புக்கல்லுக்கும் மதிக்கப்படாத கம்பி நாட்டி போல் பறக்க முழிப்பான். எ-று

ஓர்மை குறையாம லச்சந்தீர்ந்தே யுல்கிலுயிரெல்லா மொன்றே யென்றும், ஆர்க்குங் கிருபையாய் நடப்பதுவு மநேகங் கொடுமையும் பொறுப்பதும், பாரில் வழிகெட்ட மனுடர்க்கெல்லாம் பரிவா மறிவதைப் பயிற்றிவைத்தே, ஆர்க்கு மூடனாய் வெளியிற்றோன்ற லறிவுக் கடலெல்லா மடக்குவானே. (509)

(இ-ள்):— எந்தக் குலத்தில் பிறந்த ஈனஜாதியானாலும், அவன் கூர்மையான புத்தியுடன் காரியமான ஞானத்தையுணர்ந்துகொள் வானானால் உலகத்திலுண்டான சிருஷ்டிப் பொருட்களெல்லாம் அவனை தலைசாய்த்துவணங்குவதுடன் எல்லாம் அவனாகவும் அவன் எல்லா ஜீவத்திலும் சங்கிலித்துடர் போலப் பொருந்தி இருக்கவும் காண்பான். அப்போது தான் இந்த மாயா வினோத வலையில் சிக் காமல் தப்பித்துக்கொண்ட ஒரு பெரிய காரியத்தை உள்ளுக்குள்ளே நினைத்து பரவச சாகரத்தில் கிடந்து மிதப்பான். எ-று.

நாலு வேதமுஞ் சுமந்ததாலு நளினங் குறையாதமொழியின லும், கால மொருநூறு தலைமுறையாய்க் காமில்த் தனமாக வந்த தாலு, மால நிறைந்திடுங் குருமாரெல்லா மனேக விதமெல்லாங் கொடுத்ததாலுங், கோலம் புனைந்திடுங் குருமாகுங் குருவென்று ரைத்திடக்காபிராமே. (510)

(இ-ள்):— இன்னும் கல்விமான்களைப் பற்றிச் சொல்கிறேன் நாலு வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்றதாலும், அவைகளின் உள்ளுறைந்த அர்த்தங்கள் ஆழமாகத் தூண்டித்துருவி யறிய சோம்பேறித்தனங் கொண்டு நுனிப்பில்லை மேய்ந்த மாடுகளைப்

போல் பட்டணக் கரைகளிற் சென்று பிரசங்கங்கள் செய்து ஜனங்கள் சொல்லும் புகழ்ச்சிகளைப் பெற்றுக்கொண்ட போதிலும், ஒரு ஜாண் அளவுள்ள பாழும் வயிறை வளர்த்துக்கொள்ளும்பொருட்டு ஜனங்களிடத்தில் தேனை வார்ப்பதுபோல இனிய மதுரமானவார்த்தைகளைப் பேசித்திரிந்தாலும், இன்னும் நூறு தலை முறைகளாக காமில்த்தனமான ஷெய்கு மார்களின் வம்மிஷத்தில் உள்ளவனாக இருந்த போதைக்கும், இன்னும் ஆயிரம் குருமார்களிடத்தில் தனித் தனியே உபதேசம் பெற்ற அடையாளங்கள் உள்ளவனாக இருந்த போதிலும், அவன் போட்டிருக்கும் வேஷந்தான் குருவென்கிற ஒரு பொய்ப்பெயரைக் கொடுக்குமேயன்றி அவனைக்குருவென்று உறுதி கொண்டால் அந்தக்கூட்டத்தார்கள் காபிராக இருப்பார்கள் எ-று.

குருவை யறியவே குறியேதென்றூர் கோல மெவர்போலு மவ
ரிருப்பார், உருகுங் கிருபையு மீவிரக்க மொன்றுந்தெரியாதே
யெனக்கே யென்பா, ரறிவை புருஷர்க்குஞ் சரிநிதானம் அல்லும்
பகலுமேசரிநிதான, மொருமூச்சாகிலு மொழுகிடாம லுருவாமுடலுயி
ரோர்மையுள்ளார். (511)

(இ-ள்)— அன்றி காமிலான குருமார்கள் எவ்விதம் இருப்பார்கள் என்றால் ஜீவராசிகளின் பேரில்சமரசமான கிருபையுள்ளவர்களாகவும், மனிதர்கள் பேரில் ஈவு, இரக்கம், பொறுமை, தலை வணக்கம் உள்ளவர்களாகவும், மனிதர் கூடிய ஜமா அத்துக்குத் தாங்கள் வர அதனால் ஜனங்கள் மரியாதைகள் செய்யவிருப்பமில்லாத ஒதுங்கிய குணமுள்ளவர்களாகவும், எனக்கு ஒன்றுந்தெரியாது நான் அறிவில்லாதவன் என்று சொல்கிறவர்களாகவும், நிர்விசாரி, நிர்க்காமி, அதாவது மனதில் எண்ணமற்ற ஆனந்தியாகவும், ஸ்திரிகள் பேரில் மோக மில்லாதவர்களாகவும், ஏழைகளும், சீமான்களும் சரிநிதானமாகக் கண்டவர்களாகவும், ஒரு மூச்சையாகிலும் றப்புடைய நினைவன்றி வீணாக்காதவர்களாகவும், எந்த விஷயத்திலும் உண்மையே சொல்லப்பட்டவர்களாகவும், கபடில்லாத பேதமையுள்ளவர்களாகவும், இருப்பார்கள். எ-று.

அடக்க முடைய யறிவுடையோ ரவரே குருவென்று மறிய
லாகு, மெடுக்கும் ஷறகுள்ள பாதைநாலு மெட்டுமக்காமுடனிவ்
வகையுந், தொடுக்கும் தவநிலை பலஞானமுந் தொகையிலடங்காத
தொலையாப் பொரு ளடக்குமுறை யெல்லாங் குருவின் மார்க்கு
நாயன் முகம்மது நபி சொன்னாரே. (512)

(இ-ள்):—இவ்விதம் அடக்கமுடையவர்களிடத்தில் தான் ஞானமென்கிற திரவியம் பெருகி இருக்கும் ஆனபடியாலே இவர்களைத் தான் குருவென்று நம்பவேண்டும். ஷரீஅத்திலுள்ள நான்கு மதஹபுகளையும், எட்டு மகாம்களின் இரஹஸியங்களையும், பல பல நிஷ்டைகற்பாஸனங்களின் விதிவிலக்குகளையும், மனிதர்கள் ஞானத்தைப் பற்றிக்கேட்டகும் எவ்வித வினாக்களுக்கும் உடனே விடை சொல்லும் உணர்ச்சியும் பகுத்து விளங்கி இருப்குபவர்கள்தான் குமார்களுக்கு லாயக்குள்ளவர்களாவார்கள். எ-று

நபியா முகம்மது முலகோர்க்கெல்லா நவின்ற வுபதேசந்தன்னைக்
கேளும், புவியின் மனுவெல்லாந் தலைவணங்கப் புறுக்கான்றனை வல்
லோனிறங்கி வைத்தான், பவம தாகாமற் படைப்பனைத்தும் பாதை
யறிந்துதான் பணியச்சொல்லிக் கலியின் மறைநாலிற் சொன்னபடி
ஹபீபுமுகம்மது நபியுஞ்சொன்னார். (513)

(இ-ள்):—நபிநாயகம் அவர்கள் சொல்லி இருக்கிறதாவது பூலோகத்தில் உள்ள மானுடர்கள் தன்னை வணங்கும்படியாக றப்பு குர்ஆன் என்கிற வேதத்தை இறக்கினான். அந்தவேதத்தில் உண்மையான அர்த்தங்கண்டு வணங்குப்படியாக அநேகத்தானங்களில் திருவுளமானான். அந்த ரகஸியங்களைக் கலிமாவில் வந்து அறியும்படியாக சமிக்கினை பண்ணினான் என்று சொன்னார்கள். எ-று

சொல்லுங் கலிமாத் தான் லாயிலாக இல்லல்லாப் பொருள் மஹ
ரிபத்திற், சொல்லுங் கூவென்ற மூச்சுறாத சோதி யாரென்றால்
அல்லா அது, இல்லென் றுரைப்பது மொன்றேபொருளெங்கு நிறைந்
தது மதுதானென்றும், இலாகியினில்லை இஃதொழிய வெங்கும்
வேறில்லை லாவென்ற சொல். (514)

(இ-ள்):—கலிமாவில் லாஇலாஹ இல்லல்லாவின் பொருளாவது மஅரிபாவில் ஹூ என்கிறசுவாசத்துடன் றாகாகிறது "கருத்தாவது" அல்லாவாக இருக்கும். இல்என்கிற கலிமாவாகிறது ஒரு பொருளாக இருக்கும். அது எங்கையும் நிரம்பிய சமதாக இருக்கிறது. இல்லல்லாஹூ என்பதின் பொருளாவது அது ஒழியவேறில்லை என்பதாம். லாவென்பதின் பொருளாவது, நானில்லை மற்றவைகளும் இல்லை, உண்டும் என்ற வஸ்து அதுதான். எ-று

சொல்லுங் கலிமாத்தான் லாஇலாஹ இல்லல்லாகென்ருல் ஷரீ அத்தாகும். இல்லல்லா கூவுதான் தரீகத்தாகும். இன்னல்லாகூ ஹக கீகத்தாகும். சொல்லுங் கூவென்ருல் மஹரிபத்தாஞ் சுழியா முஹப் பத்து யாகூவாகும். எல்லா நிறுத்திய கூவுமீழும் இருத்தி நினைவிலே மிகுதிதாத்து. (515)

(இ-ள்):—லாஇலாஹ இல்லாஹ் என்ற கலிமாவாகின்றது ஷரீ அத்தாக இருக்கும். இல்லல்லாஹு வென்றது தரீகத்தாக இருக்கும் இன்னல்லாஹு என்பது ஹக்கீகத்தாக இருக்கும். ஹு என்பது மஅரிபத்தாக இருக்கும். யாஹுவென்பதுதான் முஹப்பத்தாக இருக்கும். இவைகள் ஒவ்வொன்றையும் நினைவில் நிறுத்திப்பழகி வந்து யாஹுஉடன் மீமையும் நினைவிற்கலக்கச்செய்வது இஷ்த்திதாத்தாக இருக்கும். எ-று

ஏத்தி வாய்மொழி செவியிற் கேட்க லெதுவுஞ் ஷரீஅத்தைச் சேருமிது, பார்த்து பல்கலைப் பொருளையெல்லாம் பகுத்தாற் றரீக்கத் தின் பாங்கமாகு, நேர்த்தி வணக்கத்தின் றெரிசனைதா னிறுத்தும் ஹகீகத்தி னிலையுமாகும். பார்த்தும் பலமொழி யுடலுயிருப் பகுந்தால் மஹரிபத்தாகுந் தானே. (516)

(இ-ள்):—எந்த தவ்ஹீ தாகிலுஞ்சரிஒருவர் சொல்ல செவியிற் கேட்டுகொள்வது ஷரீஅத்தில் சேருகிறது. கேட்டதை அர்த்தந் தெரிந்து ஆராய்வது தரீக்கத்தைச் சேருகிறது. அதை உறுதிப்படுத்தி அமல செய்கிறது ஹகீகத்தில் சேருகிறது. அதை சந்தேகமற உணர்ந்து ஒன்றுபடுத்துவது மஅரிபத்தில் சேருகிறது. (இன்னும்)

தானே யுருவழ முடலுமொன்ருய்ப் தகுக்கீ கிணங்கிடில் முஹப் பத்தாகும். ஈணமணுகாதான் ருனெனவே யெல்லாநிப்பரமுநிறையு மாகிற். ருஞ யிருப்பது சமதெனவே தரிக்கு நினைவிலே மிகுதிதாத்து. மீனமணுகாத நினைவே அல்லாவெந்தவிதமென்ருமியபக்கேளே(517

(இ-ள்):—அப்பால் தான் என்பதை பனுவாக இல்லாமல் ஒழித்து நிலைபட்டிருக்கிற வஸ்துஎதுவோ! அதுடன்கலந்து விரவிக்கொள்வது முஹப்பத்தில் போய்ச்சேருகின்றது. அப்படிக் கலந்துகொண்ட பிறகு தான், எல்லா உலகங்களிலும் உள்ள ஜீவஜந்துகள் முதலிய சராசரங்களிலும் இருந்து பிரகாசிப்பது ஸமதில் போய்ச்

சேருகிறது, அப்படி ஸமதான நினைவுதான் றப்பில் தரிபடுகிறது. அதுதான் இஷ்த்திதாத்தில் சேருகிறது. எ-று,

இயம்பக் கேளுங்காண் குருஆனிலே யேக னிறக்கிய ஆயத் தொன்றில், நயமாம் லிக்க அ றப்புயென்று நாயனினைவிலோர் நினை வேயென்று, மியப்புந் தவமெல்லா நினைவேயாகும் இபாதத்து றப்பி அஹதா பென்ருர், செயமாயறைந்திடு மறுசுதனிற் சிறந்தகின்தீ லாய் வகுத்த வல்லோன். (518)

(இ-ள்):— அப்போது றப்பு என்பது எவ்விதம் இருக்குமாறல் சொல்கிறேன் கேள். குர் ஆனில் ஒரு ஆயத்தில் ஹக்த ஆலா திருவுளம் பற்றியதாவது ''லிக்கா அறப்பி'' அல்லாவானவன் துப் புறவாகிய நினைவில் ஒரு நினைவாக இருக்கிருன், என்று சொல்லப் படுவதுபோல எல்லா ரகஸியங்களும் அந்த நினைவில் தான் வெளி யாகும். அதுதான் அஹதுடைய இபாதத்தாக இருக்கும். எ-று.

வல்லோன் குதறத்தா லறுசுதனில் வள்ளல் முகம்மதைகிந் தீலாக்கிச், சொல்லத் தொலையாத தருக்கீக்குடன் கருப்பம பதினலு முகவிளக்காய், நல்ல பதினலு முகமிலங்க நாட்டும் பதினலுமி பாதத்தாக, வெல்லும் பதினலு இலமுமாகும் விளக்கம் பதினலு வழியாகுமே. (519)

(இ-ள்):— றப்புடைய குதறத்தாலே அறுஷில் நூறுல் முகம் மதிய்யாவை பதினன்கு முகமுள்ள விளக்காய் கொழுகியிருந்தான். அந்தப்பதினன்கு முகங்களுங் பதினன்கு இபாதத்தாகி, அப்பால் அது பதினன்கு இல்மாகி, அப்பால் அது பதினன்கு கான்வதாக் களாகி, அப்பால் அது பதினலு முஷாஹிதாவாகி, அப்பாலதில்இரு பத்தெட்டு நிஷ்டை கற்பாசங்களாகி, அதிலே ஆறுவித முஷாஹி தாக்கள் அந்தரமாகி. அதில் ஒன்று எல்லாவற்றிக்கும நாயகத்தன் மையிலாகி விட்டது. எ-று.

ஹாஹு வகை முற்றிற்று.

— - —

பதினன்குமுஷாஹிதாவின் விபரம்.

——(x)——

பதினலு விதந்கான்வாதானும் பதினலுவித முஷாஹதாவும் மதினலுடன் கூடப் பதினலுண்டும் பாங்கு பெருமியா திங்கிருபத்தெட்டு, மதிலே பதினலு முஷாஹதாவில் ஆறு முஷாஹதா அந்திரமாம், விதமா முஷாஹதா யாதுக்கெல்லாம் வெற்றிக்கான் வாதாசெய்யுதுசைன். (520)

(இ-ள்):— பதினன்கு வகைப்பட்ட கான்வாதாக்களும், பதினன்குவிதமான முஷாஹிதா என்னும் நிஷ்டைகளிலும், ஒன்றுபட்டதாக அதன் கூட பதினலுவித இருப்புசமாதியங்கள் உண்டு. இவைகளில் இருபத்தெட்டு யாதுகள் உண்டு ஷை பதினலு நிஷ்டைகளிலும் ஆறுநிஷ்டை ரகசிய பொருளாக இருக்கிறது. அதுவே மேற்கூறிய எல்லா நிஷ்டைகளுக்கும் தலையாக இருக்கிறது. எ-று.

செய்யிது ஸாதாத்து பாக்கியாகும் செய்யிது சுல்த்தானுல் ஆரிபாகும், செய்யிது அல்பியா றாபியாகும் செய்யது சுல்தானுல் பாக்கியாகும், செய்யிது சுல்பியா ரூபியாகும் செய்யிது நாத்திபுக்கிபுரியாகும், செய்யிது முருக்கிபுல் றபாமியாகும் செய்யிது அல்பியா காதிரியாகும், செய்து சஸ்தா சிற்றியாகும் தபக்காத் தியாசிற்றியாகுமாமே. (521)

(இ-ள்):— பாக்கியா, ஆரிபிய்யா, அல்பியா, றூபிய்யா ஸரூரிய்யா, சுல்தானுல் பாக்கியா, ஸாலபியா, நாத்திபுல் கிபுரியா, முருக்கிபுல் றபாகியா, அபில்யா, காதிரியா, ஸஸ்தயா, சிர்றியா தபக்காத்தியா இந்தப் பதினன்கு கான்வாதாக்களாக இருக்கும்.

எ-று.

சிற்றியாவுடன் காதிரியாய்ச் சிறப்பாங்கான் வாதா பதின் மூன்றுக்கு, மூயர்த்தி ருகுனி யாசமாகு மொருபத்து மூன்றுக்குயர்த்தியாகும் உயர்த்திக்கான்வாதாபதினலுக்குள் சகலவித்தையுமறிந்துபாரே. (622)

(இ-ள்):— இவைகள் எல்லாவற்றிற்குசிர்றியாவு, காதிரிய்யாவும் தலைமைத் தனமுடையது ஆகிலும் பதினலு கான்வாதாக்

களும் மேன்மை பெற்றவைகள் தான். இவைகளுக்குள்ளே தான் பதினலு முஷாஹிதாக்கள் அடங்கி இருக்கின்றன. இதைச்சத்தியமாக நீ இபாதத்துச்செய்து உன்னை கண்டுகொள்வாயாக. எ-று

பாரி லிசமியா வரசிலென்று பறக்கும் சிஸ்த்தியாக் கற்பமுண்டால், ருத்தி புல்க்கனி சன்னதமா மஸ்துக் குபுரியா வெட்டுக்குத்துத், தரித்த மாந்தாரி மூச்சடங்கந்தாபதண்டமு முளவணக்க, முறைத்த முஷாஹதா ஆறுமிதே யோர்மை நிலைக்கெட்ட அந்திரமே. (52?)

(இ-ள்):—இவைகள் பதிலுமன்றி வேறு பதினன்கும் இருக்கின்றன அவைகளில் இஸ்மியா, வாசி பிடிக்கிறது, சிஷ்த்தியா காயகற்பமுண்கின்றது, ருத்திபிய்யா கூத்தாடுகிறது. சன்னதியா சங்கீதம் கேட்கின்றது. மஸ்தகிபுரியா வெட்டுக்குத்து செய்கிறது. மதாரிய்யா சுவாசத்தை அடக்கி அண்டபிண்டமும்முட்டவிடுகிறது. இந்த ஆறு முஷாஹிதாவும்தான் அந்திரமானதிஷ்டைகள். எ-று

மேலாம் நாகுத்துமலக்கூத்துடன் விளங்குஞ்ஜெபறூத்துலா கூத்துமாங், கோலஞ் ஜம்கூத்துப் பாகூத்துடன் குதறத்துலா கூத்துதம்கூத்துமா, மேலாம் வணக்கமா யொன்றுக்கொன்று விதயாய்ப்பதினலு மறியாதவர், கோலம் புனைந்துதான் குருமாரென்று குபிரில் வருத்துவார் பரமறியார். (524)

(இ-ள்):—நாகுத்து, மலகூத்து, ஜெபறூத்து, லாகூத்து, ஜெம்கூத்து, பாகூத்து, குதுறத்து தம் ஹாசித்து ஆகிய இந்த மேலான வணக்கங்களை ஒன்ருென்ருகப் படி படி ஏறி நிற்பது தான் பதினன் முஷாஹிதாவின்வணக்கம் என்பது. இந்த வணக்கங்களிற் பழகி காட்சி சொரூபம் காணுத மோட்டுப்பயல்கள் நான் குருவென்பாளுகில் திட்டமாக அவன்கள் ஷெய்தாளுகவும், காபிராகவும் இருப்பான்எ-று

பரத்தை யறியவே பலவிதமாய்ப் பாரிற் குருமார்கள் பகர்வதெல்லாம், நிறத்த கதிர்மதி நினைத்தபடி நிழலும் பரவெளி நக்ஷத்திரந், திரத்த கண்ணடி திருவுளத்தைத் திசைவீ ரொருபேரையிருவிழியே, நிறைந்த வன்னத்தை நிலைநிறுத்த நிசமா யிருவருங்காபிராவர் (525)

(இ-ள்):—இப்பேர்ப்பட்ட வழியை நேர்பாதையாக அறிவிக்கத் தெரியாபடி உலகத்தில் பலவிதப்பட்ட குருமார்கள் தம் முரீது

களுக்கு சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கண்ணாடி முதலியதுகளால் றப்பைக்காட்டுவார்கள். அவ்விதம் குருமார்களும், முரீதும் காபிர்களாக இருக்கும். எ-று

ஆன குருமுறை யுலகுதனி னருளும் பதினாலு விதங்களெல்லாம்,
பூணிப்பாகவே புகழ்வதற்குப் பொருளாங்கலிமாவைப் பிரித்துச்சொல்
லேவன், இன்னம் அல்லாகூ முகம்மதுதம் எந்தவழிக்குமே யிது நிலை
யாஞ் சொன்ன கலிமாத்தான் லாஇலாக இல்லல்லாகூ அான் சொல்
வதாமே. (526)

(இ-ள்):—குருமுறையாகிறது இந்தப்பதினால் முஷாஹிதாகளைச் சேர்ந்து தான் இருக்கவேண்டும். இன்னும் கலிமாவில அல்லாஹூ என்பது முகம்மதாகும், எந்தகுரு நிலைக்கும் இதுவே நிலையாக இருக்கும். எ-று

சொல்லும் பதினாலு பீர்மார்களுஞ் சொல்லு முபதேச மிருபத்
தெட்டு மெல்லாருஞ் சொல்வாரெவர்க்குமுண்டு மிதுவே ஷரீ அத்தினு
பதேசந்தா, னெல்லாக் கலிமாவு மிறை நாமமு மெங்கள் முகம்மது
வாமாமென்றும். இல்லல்லாகூ வென்றேயிருந்த இதுதான்ஷரீஹத்து
பதேசமஞ்சே. (527)

(இ-ள்):—பதினான்கு பீர்மார்களுஞ் சொல்லிக் கொடுக்கின்ற விஷயங்கள் இருபத்தெட்டாக இருக்கும். காமிலான குருமார்கள் யாவரும் இந்த முறைகளைதான் சொல்லுவார்கள். இது ஐந்துந்தான் ஷரீ அத்துக்கு உகந்தது. எ-று

அஞ்சு உபதேசஞ் ஷரீ அத்தாகு மறியும் இல்லல்லாகூவென்ன
வுங், கொஞ்சும் அல்லாகூஹக்கல்லாகூ கூறுந்தாகத்தின் குரு மந்திர
மிஞ்சு மகுறூபும் யாக்கரீமும் அற்ற கீமுடன் யாறஹீமும், துஞ்சா
வகை ஹக்குமவுஜூதென்றுந் தோத்திரமஞ்சும் ஹக்கீகத்தாகும (528

(இ-ள்):—இன்னும் ஷரீ அத்தில் ஐந்துவிதமான உபதேசமுண்டு அவைகள் இல்லல்லாஹூ எனவும், ஹக்கல்லாஹ் எனவும், மஉறூபுல்கரீம், அர்றஹீம், யாமவ்ஜூது என்பவைகளாம். இதில்காண்கும் தோத்திரங்கள், ஹகிகத்தாக இருக்கும். எ-று

அஞ்சு தோத்திரம் குன்கூவென்று மதிலேகுன்னென்றுகூவல்லா
வென்று, மிஞ்சிடாமலே கூவென்பதும் இணைத்த கூவுடன்

ஹம்கென்பதும், அஞ்ச மிதுதானே மஹரிபத்து ஆதியெனச்
சொல்லும் கூஅதுவும், அஞ்சியாகூவும் யாகூவல்லா அறிமுகப்
பத்துயாகூவுமீமும். (529)

(இ-ள்):— தோத்திரங்களாவன குன்ஹூ வென்றும், குன் என்றும், ஹூ அல்லாவென்றும், ஹூவென்றும், ஹக்கென்றும் இந்த ஐந்து மஅரிபத்தாக இருக்கும். இனி ஹூவும், யாஹூவும், யாஅல்லாவும், யாஹூமீம் என்பதும் முஹபத்தாக இருக்கும். எ-று.

யாகூவு மீமு மாகு மென்று மிதுதான் முஹபத்து நிலையுமா
கும், வாய்விடாமலே ஹேயும்மீமும் வருந்தி கும்மென்றே யிருத்
துவதும், ஆயுள் காபோடு மீமுங்கூட்டி யதுவே கும்மென்றே யிருத்
துவதுந், தாயுமாகவே யோரெழுத்தைச் தரிக்கு மீமல்லோ மகு
திதாத்து. (530)

(இ-ள்):— யாஹூமீம் என்பது தான் முஹபத்துடைய நிலையாக இருக்கும். அதை வாயால் சொல்லாமல் கும்! என்று இருதயத்தில் இருத்திக்கொள்வது காபும் மீமும் கூட்டி நினைத்து அதையும் கும்! என்று இருத்துவதும், எந்நாளும் பழக்கத்தில் திக்றுசெய்கிறது, மீமைக்கண்டு கொள்வதும், ஞானமாம். எ-று.

யாது வகையாகு மிருபத்தெட்டும் யாது ஹக்குமே லேதுமில்லை.
யாது வாய்மூடு மீமல்லவோ இதுதான் வாய்பேசா தெழுத்தென்பதே,
யோதியோதியே பெரியோர் சொல்லு மூமையெழுத்தென்றமீமது
தான், சோதி மீமது கூவதுதான் சொல்லு முகம்மது அல்லாவிதே.
(532)

(இ-ள்):— ஆனால் நினைவில் வைப்பது இருபத்தெட்டு வகையுண்டும். அவைகளில் ஹக்கை நினைப்பதுக்குமேல் எதுவுங்கிடையாது. இன்னும் மீமை யாது படுத்துவதும் மேலானது இதுதான் ஊமை எழுத்தென்பது இன்னும்ஹூ வென்பதும் மீம்தான் அதுவே றப்புமாகும். எ-று.

இதுதான் பதினாலு வுபதேசமா யெடுத்துப் பதினாலு குருவுஞ்
சொல்வார், அதிலே தவமுறை யைந்துவிதம் அறையுந் தஜல்லி
யும் விரித்துச்சொல்வே, னிதமே முடலுமாய்த் தலைசுழற்றி நீளக்
குாலோசை தஜல்லியாமே. (532)

(இ-ள்):— இதைத்தான் பதினலு பீர்மார்களும் உபதேசிப்
பார்கள். அதிலே ஐந்துவிதமான தவங்கள் உண்டு. அவைகள்
தஜல்லி, கல்பி, றூஹு, சிர்றி, கபீ இவைகளாக இருக்கும் இவை
களில் தஜக்லி என்பது தலையை அசையாமல் சுவாசத்தை நினைவில்
பூட்டுகிறது. எ-று.

ஆன வணக்கந்தா னவரவர்க்கு மல்லும் பகலுந்தான் கல்பி
யாகுந், தானே வணங்கிடு மூச்சையெல்லாந் தவரு நிலைப்பட்ட
மூகியாகும், ஊணி நினைவெல்லா மொருபொருளை யொருமித்திருப்
பது சிற்றியாகும். தானே தானல்லாமல் வேறென்றில்லை தன்னை
யறிவது கபியுமாமே. (533)

(இ-ள்)— கல்பியாகிறது, இரவும்பகலும் இருதய ஞாபகத்தில்
இருக்கிறது. விடுகிற மூச்சுகளில் ஒன்றையாவது விணுக்காமல்
றப்பை நினைப்பது றூஹியாகும். சிர்றியாகிறது, வருகிற நினைவு
களை ஒரு மைமில் வைத்துச் சாதிப்பது. றப்பென்பதும் உலக
மென்பதும் நாம்தானே யன்றி வேறு இல்லை என்று நீக்க மற்ற
வைராக்கியம் பிடித்து முன்னேறுவதே கபீ என்பதாக இருக்கும்.
எ-று.

கவியுந் தலத்திலே யெட்டுவகை காலு நாசூத்து மலகூத்
துடன், குவியுஞ் ஜெபறூத்து லாகூத்துடன் கோலம் ஜெப்கூத்து
பாகூத்துடன், தவியா காகூத்து தப்கூதுமாந் தலமு மிருநான்கு
மக்காமிதுவாம், புவியி னிறைந்திடுங் குரும்மார்களே புகலுமிருநான்கு
தலமுங்கேளும். (534)

(இ-ள்):— இன்னும் தலங்களில் எட்டு வகைகள் இருக்கின்றன
அவைகளாவன். நாசூத்து, மலக்கூத்து, ஜெபறூத்து, லாஹூத்து
ஜெம்ஹூத்து, பாஹூத்து, ஹாஹூத்து, தம்ஹூத்து. இந்த
எட்டு மகாம்களாக இருக்கும். ஓ! குருமார்களே! இனி இவைகளின்
ஸ்தலங்களை விபரிக்கிறேன். அறிந்துகொள்ளுங்கள். எ-று.

தவமாநாசூத்துப் பரவெளியாந் தனது இடப்புறமார்புமாகு,
நிலையாம் ஷரீஹத்து மண்ணின்கோல நீதி ஆதந்தான் புருவின்
ரூபந், தலையைவலமாகச் சுழற்றித்திக்கீர் தரிக்குநெஞ்சிலே பார்வை
யாக, நிலையாயிருவிதி யிடதுமார்பி னிறுத்தும் பிசுமிலோா நினைவின்
மேலே. (535)

(இ-ள்):—நாசூத்து என்பது திறந்தவெளி அது இடதுபுறத்து
மார்பாக இருக்கும். அது ஷரிஅத்து, பூதம், மண், உரும், ஆதம,
அறுவாஹ், புரு, பிஸ்மில் என்கிற திக்றை இடது புறத்து மார்பில்
பார்வையை வைத்து நினைவை நிறுத்துகிறதாக இருக்கும். எ-று

மேலாமலக்கூத்து குயில்மாடமும் விளம்புமிருகோணந்தரீத்திருக்
குங், கோலமிருநாசி நடுநிலையிற் கொளுத்திப் பார்வையிற் குருவை
நாட்டிச், செல்லு மலக்குட பார்வையாகுஞ் சேருந் தவத்தோடே சரத்
தையேற்றி, யெல்லாத் தவநிலை மலக்கூத்தென்றே யிருக்குஞ் ஜெப
றூத்தை விளம்பக்கேளே. (536)

(இ-ள்):—இனிமலக்கூத்தானது, அறுவாஹ், குயில், ஸ்தானம்
மூக்கு, பார்வை மலக்கு, சுவாசத்தை நினைவில் பொருந்திப் பார்க்
கின்றதாக இருக்கும. மார்க்கம் தரீகத்து. எ-று.

கேள்வி ஜெபறூத்துக் கண்ணாடியாங் கீறு முக்கோணநெருப்பின்
வீடு, மீளும் ஹகீகத்து மிருபார்வையும் விளக்கும் புருவத்தினிடையை
நோக்கிச் சூழ் மாகாயம் அன்னவரூபஞ் சுரூபம் அலிபென்ற நிலையு
மாக, நாளுஞ் ஜெபறூத்து நிலையுமாகு நவிலு மலக்கூத்தை நன்றாய்ப்
பாரே. (537)

(இ-ள்):— ஜெபறூத்தென்பது ஸ்தானம் கண். அது முக்கோண
மாகிய ஞானக்கண்ணும் சேர்ந்தது அது நெருப்புடைய வீடாக
இருக்கிறது மார்க்கம் ஹக்கீகத்து அறுவாஹில் அது அன்னத்தின்
ரூபமாயிருந்தது. அலிபு என்கிற நிலையையுடையதாக இருக்
கின்றது. எ-று.

பார்வை யிருவிழி சுழற்றிக்கீழே பள்ளி மக்காமிலே பகருங்
காற்றுக், கூறு மலக்கூத்து மஹரிபத்தாங் கோல துபுவத்தின் குறி
தெரியுந்,தேறு மலக்கூத்துக்காட்சியெல்லாஞ் சிறந்தவழி யெல்லாம்
பொருவுமதில், நூறு விதங்காணு மலக்கூத்திலே நுவலுஞ் ஜெம்
கூத்தை நோக்கிப்பாரே. (5[illegible]8)

(இ-ள்):— லாஹூத்தானது இரண்டு விழிகளுக்கும் நடுவே
உள்ளே பள்ளியாக இருக்கும் சொரூபம் காற்று, மார்க்கமானது,
மஅரிபத்தாக இருக்கும். அதுதான் றசூலுல்லா அவர்களின் நுபு
வத்து. அந்த மகாமில் தான் இன்ஸானுடைய சிர்றுகள் யாவும் வெளி
யாகும் அதைமதிப்பிட யாராலும்கூடாத காரியமாக இருக்கிறது,

பாரும் ஜெப்கூத்து முஹப்பத்துமாம் பதித்த வுயிர் குத்து புதையங்காணு, மேலும் விழித்தாரை நிலைமிறசேர்க்க விலங்குப பொருள் றப்பில் ஆலமீனுர், ஆருந் தலமெல்லா நபியிறகு லதுதான் றூருட பாங்குமாகும், பாகும் விழிமூடி நினைவினலே பாரப்பா கூத்தைப் பகரக்கேளே (539)

இ-ள்):— ஜெப் ஹாலித்துடைய மகாமாகிறது முஹப்பத்தாக இருக்கும். அதில் குதுபுதையமானது தோன்றும். கண்களைச் சுருட்டி இருபுருவத்திற்கும் நடுமத்தியில் உயர்த்துப்போது றப்புடைய பிரகாசமானது பளிரென்று வீசும், முகம்மதியாவின்கோலமானது அதுவே ஆக இருக்கிறது, அதில்தான் றூஹால்குதுசியும் இருக்கின்றது. ஆனபடியால்மகனே! நீ அதனவில் சுருசுருப்புவைத்து உன் இரண்டு பார்வைகளையும் உயர்த்தினவனுகை ஞாபகம் வை. எ-று

பகரும் பாகூத்து முஹப்பத்தென்று பதினலு வித நுபுவ்வத் தாகுங். கூறும் றூஹானி யுதிர்வதுபோற் கொழுகி விளக்கிலே நிறுத்திப்பார்க்க, ஆரும் விளம்பாரே முகம்மதுட வழகு விறைய வன்வணக்கமாகு, நேராய் விழிமூடி நினைவிற்பாரு நீதியாகூத்தை நிசமாய்ச்சொல்வேன். (540)

(இ-ள்):— பாஹூத்தும் முஹப்பந்தில் உள்ளதென்றாலும், அது பதினன்கு விதமான நுபுவத்தை யுடையதாயிருக்கின்றது. றூஹானிகளென்றும் தத்துவாதிகள் அதிலேதான் கொழுகியாடுகின்றன. அதை யுணர்ந்து உன் இருதயத்தில் நினைவைக்கொழுகிப் பார் அப்போது நூறுல் முகம்மதியாவானதுமுகவரை கீருத ஒரு வாலிப கன்னிகையின் உருவத்தில் வெளியாகும் அதுதான் இறைவனுடையஞான வணக்கமாக இருக்கிறது இந்தசங்கதியை உலகத்தில் யாராலும் சொல்ல சக்தி கிடையாது. இந்த மகாமில் இரு கண்களையும் மூடி, சமவெளியா யாக்கிக்கொண்டு நினைவில் கூடிக் கலக்க வேண்டும்,

எ-று.

நிசமாயாகூத்தை மூகுதிதாத்து நிற்குங் குதுசியா முருவம் ரண்டும், வசமாங் குதறக்தின் வாசிலாத்து வரையும் நுபுவ்வத்துசியத்துமாகும், பிசகா வுயிர்நிலை ஆவும்கூவும் பேச மொழியிலேப றுலகுன்னத்து, கசகா நினைவான பார்வைகாணுங் கருத்தி லறிவது காட்சியாமே. (541)

(இ-ள்):—யாஹூத்தானது றூஹுல் குதஸியுடைய இஷ்த்திதாத்து இரண்டுமாக இருக்கிறது. இன்னும் அருகுதறத்துடைய வாசிலாத்தாகவும், நுபுவத்தாகவும், தாத்தாகவும், சிபாத்தாகவும் இருக்கிறது. இருதய ஸ்தம்பத்தில் ஹாஹூவென்று திக்றுசெய்து வாயாலே மொழிந்து பறுலு சுன்னத்தாக தொழுது வர வேண்டியது

எ-று

காட்சி தம் கூத்து முகுஜீதாத்து ஹைக்குத் தானல்லாலொருவருண்டோ, பேச்சு மூச்சவன் பேருமவன் பெலமுங்கோபமுமவனே யாகுஞ். சூட்சமவனிவனென்று சொல்லுந் சொல்லுஞ் செயலாக வழங்கி நிற்குந், தாழ்ச்சி ரட்சியும் பாவந்தனே தாத்திலுயிரெல்லாம் பரத்தினலே. (542)

(இ-ள்):—தம் ஹூத்தானது மகாம் றப்பாக இருக்கிறது பேச்சும், மூச்சும் அதாக இருக்கின்றது அதுவே உஜூதாக இருந்து, பேர், பலம், கோபம் கொண்ட எல்லாம் றப்புடைய சூாத்தில் வெளியாகி எல்லாச்செயலும் அவன் செயலாகக் கொள்வது. எ-று

பரமாயிருநான்கு மக்காமுடைய பாங்கையுரைக்கிறேன், பாங்கருக்கே. உரமா நாசூத்துப்புரவொளியா முடலிலுள துடமார்பிற் சொன்னேன். தரமா மலக்கூத்துக் குயின்பாடமுந் தகைக்குளிருநாசி சுழிமுனையாங், கரமாஞ் ஜெபறூத்துக் கண்ணடியாங் காணும் புருவத்தினிடையாகுமே. (543)

(இ-ள்):—இந்த எட்டு மகாம்களையும் சுருக்கிச்சொல்கிறேன். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், ஒன்ருவது நாசூத்து அதுவானது சரீரத்தில் இடது பக்கத்து மார்பாக இருக்கிறது. இரண்டாவது மலக்கூத்து அது இரண்டு நாசிகளாக இருக்கிறது அதுவே சுழுமுனை என்று சொல்கிறதாக இருக்கும், மூன்ருவது ஜபரூத்து அதுகண்ணடியாக இரண்டு புருவ மத்தியாக இருக்கிறது. ஏ-று

ஆகூலாகூவில் உலமாநபி யதுதா னுடலுக்கு ளிருபுரிசையேகனரூஷிலே கிந்தீலாக விரேமுலகமு மிலங்கிநின்ற, தாகுஞ்ஜெபருத்தினுடலுக்குள்ளே ஐனுங்கலிமாவுள் ளிருத்திப் பார்க்க, வாகுசுவர்க்கசிங் காதனத்தில் வள்ளல் முஹம்மது கொலுவிருந்தார். (544)

(இ-ள்):—நான்காவது லாஹூத்து அது சரீரத்தைப் பாதுகாக்கின்ற கோட்டை கொத்தளமாக இருக்கின்றது. அது முகம்மதிய்யாறப்புடைய அறுஷில் பதினன்கு லோகங்களுக்கும் வெளிச்சங்கொடுக்கும்படியான கிந்தீல் என்னும் மணி விளக்காயிருந்த கோலமானது. இன்னும் அதில் நின்றும் ஜெபருத்தின் திக்றை உச்சரித்து ஐனும் கண்ணுக்குள் நினைவை உயர்த்திப்பார்த்தால் அந்த சிங்காசன கொலுமகாமண்டபத்தில் முகம்மதென்னும் மஉஷூக்கானவன் இருந்து அரசு செய்வதைக்காண்பாய். எ-று

இருந்தார் பதினலு நாற்பத்தொன்ரு மிதுதான் யாகுத்தா முட
லுக்குள்ளே. பொருந்தியைனெனுங் கலிமாத்தன்னைப் போதம்பிசகாம
லிருத்திப்பார்க்கிற், சிறந்தநுக்கத்தது. அலிபினலே சிறப்பாய்
பதினெரு விலாயத்தோடே, யுறைந்த ஆகூத்து முடலுக்குள்ளே
யொன்பது வாச லடைத்துப்பாரே. (545)

(இ-ள்):—இவ்விதம் முகம்மதியா சொர்க்கத்தில் வீற்றிருந்ததைதான் யாகூத்தென்கின்றது, இது ஐந்தாவதுமகாமாக இருக்கின்றது இந்த மகாமில் தரித்து ஐன் என்கிற விழியில் கலிமாவை இருத்தி நோக்கினல் நுக்கத்தும் அலிபும் பதினெரு விலாயத்துடன் கலந்திருந்த சூரத்து வெளியாகும். ஹாஹூத்தென்னும் சரீரத்தில் உள்ள ஒன்பது நவது வாரங்களையும் அடைத்துப் பார்க்க வேண்டியது. எ-று

பாரமக்காமான தேழுமது பாரிலுரைத்தது தப்கூத்தினி, நூறு
முஹம்மது மிறையுமுன்னுள் நூக்கத்திலொளிவான நூறிலங்கும்,
வேறே பிறிந்தவ தாரமாகி வேணவிதமெல்லா முருவெடுத்துப் பாரின்
முகம்மதாய்ப் பிறந்தவள்ளல் பாங்கா யருளுன்கு சிபத்ததாமே (546)

(இ-ள்):—ஆருவதுமகாம் தப்ஹூத்து. அந்த மகாமில்றப்பும், முகம்மதும் ஆதியில்நுக்த்தாவில் இருந்தநீங்காப் பிரியமுள்ள சொருபவொளிவானது தோன்றும். அந்த நுக்கத்திலிருந்து வெவ்வேருய்ப் பிரிந்த பிறகு முகம்மதானது, அநேக யுகாயுகங்களில் அநந்தாநந்தம் வடிவுகளை எடுத்து கடைசியாக இந்தப்பூலோகத்தில் மனுஷ அவதாரங்கொண்டு வந்தது இருபத்துநான்கு சிபத்தாக இருக்கிறது. எ-று

அறுநான்குவிதஞ் சிபாத்ததெல்லா மறுநான் கக்ஷர மனபந்த
தலே, யுருவா மிருந்தல்லோ வுலகையாண்டு முருவி ருெருபா
வினுண்டைசென்று, திருவிற் பிறந்துருத் திருவிற்சேர்ந்து திருவு
முருப்பண்டு போலொன்ருகி, யுருவாய்த் திருவைதான் றிறக்கும்
போதி லொருவன் றிருமுன்னே முகம்மதென்றும். (54)

(இ-ள்):— இவ்விதம் இருபத்தெட்டுவித சிபத்துகளுங்கூடி, இருபத்தெட்டு அட்சரங்களாகி அவைகள் சரீரமாகிச் சமைந்து வந்து உலகை சீர்திருத்தம்பண்ணி ஆண்டு அப்பால் திருவாகிய றூஹில் நின்று அவதரித்து வந்த முத்தாகிய நபியவர்கள் அந்த திருவுடன் சென்று ஒன்ருகிக்கலந்து. எ-று.

என்றுமுப்பான முகம்மதென்று மேகன்றிருமுன்னேயெவர்
பிழையுங். கொண்டுபொருத்துமன் ருடுமெங்கள் குதாயுமுகம்மது
மொனறேயாகும். விண்டுவுருரண்டு மொன்றே பொருள் விளங்கும்
தப்குத்துவுடலுக்குள்ளே, யன்றுகருநாத ஞெளிநினைவு மதுதா
னிறப்பமாயாகுந்தானே. (548)

(இ-ள்):— அவ்விதம் தன்னுடைய உகப்பாகியும், சிருஷ்டிப் படைப்புகளுக்கெல்லாம் முதிய ஒளிவாகவும் உள்ள நமது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மஹஷரில் மன்ருடும்போது அவர்கள் திருமுகத்துக்காக வேண்டி றப்பு நம்முடைய பிழைகளைப்பொருப்பான். நமது நபியவர்கள் அல்லாவின் சிர்றில் உள்ளவர்கள், அவர்கள் சிர்றில் நின்றுந்தான் சகல படைப்புகளும் வெளியா யிருக்கின்றன. இந்த இரண்டு ஒன்ருன கோலத்தைத்தான் தம்ஹூத்தென்று அறியவேண்டியது இதுதான் கருவிந்து நாதனுடைய ஒளிவு நிறப்பமாகின்றன. எ-று.

ஆகமெழுப்பிய கருநினைவும் ஆதமுகம்மமதின் னட்சரமா, மாக
வெழுப்பியகருநினைவு மகத்திற்குடி கொண்டே யிருக்குமது, ஆகந்
தனைக்கருவஃதெழுப்ப வந்தக்கரு வகத்துள்ளிருந்தே, ஆகாக்கரு
நினை வாயிருக்கும் ஆதமுகம்மதென் றறியுமதை. (549)

(இ-ள்):— மேற்படி கருவிந்து நாதனுடைய ஒளிவானது ஒரு நினைவாக இருக்கிறது. அதுஆதமுடைய அட்சரமாகவும், இருதயத்தில் குடிகொண்டதாகவும், நினைவுகளைத் தூண்டக் கூடிய ஞாபகக் கருவியாகவும், இன்னும் தூண்டாக்கருவியாகவும், ஆகிய அது

முகம்மதிய்யாத்தான ஒளிவுடன் கலந்து விரவினதாகவும் இருக்கின்றது. எ-று

அறியப்பெதான முகுதிதாத்தை யணுவுங்குறையாம லறிய
வேணு, மறியு மூச்சுடர் வணக்கமொன்ரு யதுதா னுருக்காபு நிலையு
மாகு, முறையாக்கடற்பத்தி வணங்கும்வாறு முரீது நிலையென்றே
மொழியலாகு, மறியந்தாலியு மெக்கீனின் மயிலரிய தவஞ்செய்யு
மதலை நாலே. (550)

(இ-ன்):—இந்த முஹ்த்திதாத்தை ஒரு அணுவாகிலுங்குறைவு படா வண்ணம் அறிந்து இருதயத்தில் திட்டப்படுத்தவேண்டும். இது தான் மூச்சுடர் வணக்கம் என்று சொல்வது, ஞானவான்களான பெரியோர்கள் காபு நிலை என்று சொல்கிறதும் இது தான் கடலுடைய வணக்கமும் இதுதான், இதுவே முரீது நிலையுமாகின்றது. இனி உபதேச சீஷர்கள் அறியவேண்டியது எக்கீன் மரத்தில்மயிலாக நபி இருக்கும்போது அந்த மயிலைச்சூழ்ந்த பிள்ளைகள் நாலுமாக இருக்கும், எ-று

நாலாம்வேதத்தி லிறைவகுத்தா னபியாமுகம்மது அலிக்குரைத்
தார். பாலரிருபேர்க்கு மலியார்சொன்னர் பாரிற் குருமார்களனை
வோருக்கு. நாலுமதுகபுக்காரருக்கு நாலிமாம் நபியும்மத்தோர்க்கும்
ஆலநபிவழி யொலிகுத்தூபா னவர்க்குப் ஹசனுசைனுரைத்ததாமே.
(551)

(இ-ன்):—இதைப்பற்றி அல்லா குர்ஆனில் ரகசியமாகத்தன் ஹபீபாகிய தமது நபிநாயகம் அவர்களுக்குச் சொல்லி சமிக்கினை செய்தான். அதை நபியவர்கள் தங்கள் மருமகனுராகிய அலியவர்களுக்குச் சொல்லினுர்கள். அதை அலியவர்கள் தங்கள் குமாரர்களான ஹஸன் ஹுஸைன் இருவர்களுக்கும் உபதேசஞ்செய்து வைத்தார்கள். அதையவர்கள் உலகத்திலுள்ளகுதுபுகள், அக்தாபுகள் ஔலியாக்கள், ஷெய்குமாரர்களான சற்குருமார்கள் முதலான எல்லோருக்கும் உபதேசித்தார்கள். எ-று

உரைத்தபதினலு குருவின்மார்க்கு முண்மை அசனுசைன்குரு
வுமாகும், வரத்தைப்பொருந்திய விருபாலர்க்கும் வள்ளலலிப்புலி
குருவுமாகும். கருதிப்பெரிவனலிப்புலிக்குக் காட்சி முகம்மதே குருவு
மாகு, மொருத்தரறியாமல் முகம்மதுக்கு முடையோன் ரகசியமுரைத்
ததாமே. (552)

(இ-ன்):— ஆனபடியாலே ஞானத்தில் கடைசி முடிவாக இருக்கின்ற பதினன்கு கான்வாதாக்களின் பீர்மார்களாகிய நாதாக்கள் பதினன்குபேர்களுக்கும் ஹஸன்ஹுஸைனேசற்குருவாக இருக்கிருர்கள். இவர்களுக்கு அலியவர்களே சற்குருவாக இருக்கிருர்கள். அலியவர்களுக்கு நபியவர்களே சற்குருவாக இருக்கிருர்கள். நபியவர்களுக்கு அல்லாகுத் தஆலாவுடைய திருவுளம் சொல்லி இருக்கின்றது. எ-று.

உரைத்தரகசியங் குருமுறைதா னிருபத்துநாலு மொழுங்
காய்ச்சொல்லிக், கருத்தில் வழியான பாதையாறுங்கனதிமக்கா
மைந்தும் வணக்கமெட்டுங், குறித்தமேலான குருமுறைதான் கூறி
னேனிதிலொன்றதிகம். பொருத்து முஷாஹதாப்பதினலுக்குட்
பொலிவு முஷாஹதா ஆருகுமே. (553)

(இ-ன்):— இவ்விதமுள்ள ஞானந்தான் குரு முறையாக இருக்கின்றது. இதிலே பதினன்கு வகைப்பட்ட விதங்களையும், ஆறு விதப்பட்ட பாதைகளையும், ஐந்து வகைப்பட்ட மகாம்களையும், எட்டு வகைப்பட்ட வணக்கங்களையும், சரிவர வரையறுத்துச் சொல்லிவிட்டேன். ஆனல் இவைகளில் ஒன்று அதிகம் பதினலு முஷாஹிதாக்களில் உயர்த்தியானவை ஆறுவகை இருக்கின்றன.

ஆறுமுஷாஹதா அந்திரமா மதின்மே லிருநான்கு தவநிலை
யாங், கூறுமிருநான்கு முஷாஹதாவிற் குறித்த முஷாஹதாவொன்
றதிகந், தேறுமிருபத்தெட்டுயாதிற் றெளிவுநிலையாது மொன்றே
சொன்னேன். ஆறுமறித்தொலிமார்களாக வரியதவமினியருள்
வதாகும். ((554)

(இ-ன்):— ஆறுவிதமான முஷாஹிதாக்கள் அந்திரமாகவும், அதன்மேலே எட்டு முஷாஹிதாக்கள் தவநிலையாகவும், அதில் ஒரு முஷாஹிதா அதிகமாகவும், அவைகளில் இருபத்தெட்டு யாதுகள் உள்ளமையாகவும், அதிலொன்று றப்பைச் சேர்ந்ததாயும் இருக்கிறது. இவைகளை சந்தேகமில்லாமல் உணர்ந்தவர்தான் ஒலிமார்கள் என்பது. இனிமேல் தவநிலைகளைச் சொல்கின்றேன். எ-று.

ஆகும்பறுலோடுகன்னத்தையு மரியதவநிலையாரிக் நிலை, ஆகங்
கடந்தோர்கள் பாவந்தீர வாதிபெரியவன் தோஸ்துமாக, வேகபெ

சியவன் வணக்கங்கோடி யெதுக்கு மிதுதானே முதன்மையென் றப், வாகுபெறுமொலித்தனமுண்டாகும் வணக்கமுஷாஹிதால ழியைக்கேனே. (555)

(இ-ள்):— பறுலு சுன்னத்துகளான தொழுகையில் தரிபட்டிருப்பது, தவநிலையும், ஆரிபுகளுடைய நிலையுமாக இருக்கும். மனிதர்களுடைய பாவங்களையும் தீர்த்துவிடும். அல்லாவும் ஹபீபாக இருப்பான. இன்னும் இதுவே கோடாகோடி வணக்கங்களிலும் முக்கியப்பட்டது. இதுவே ஒலித்தனத்திற்கும் அடி மூடாக இருக்கிறது. இதில் செய்ய வேண்டிய முஷாஹிதாக்கள் என்னவென்ருல்:— எ-று.

வழியாந்தொழுகையைத்தொழுதுக்கொண்டு வாய்வகையுசும்பாமலிருந்துகொண்டு, தெளிவாய்மனதுக்குணிலேவினுலே தீர்க்கமாகவேயுலுவுஞ்செய்து, நெழுயாத்தொழுகையை நினைவினுலே நினைத்துத்தொழுதுதான்முடிந்தபின்பு, சுழியாமுனைமேலே முனையின் கீழ் சோதிநெற்றிகீழ்புருவத்தோடே. (556)

(இ-ள்):— உலுச்செய்யும்போது, மனதில் தியானித்தும், தக்பீர் கட்டும்போது, சரீத்தைப் பஞவாக்கி எல்லாம்அவன் என்ற நினைவில் தரித்துறுக்கூவு, ஸஜூதுகள் செய்து முடிந்த பிறகு சுழுமுனைமேல் நினைவைப்பொருத்தி அதன் கீழையும்நினைவைவிட்டு,புருவமத்தியை நோட்டமிட வேண்டியது. எ-று.

புருவத்திடைநடுமுகந்தனிலே பொங்கியிலங்கிய வொளிவை நோக்கி, வருடிக்கலிமாவின் அல்லாவென்று வருமுதல் அலிபெழுத்த தனைப், புருவக்குழிதொட்டுநெற்றிமட்டும் போதநினைவினில் நிலைநிறுத்தி,யுருவா முகம்மது முதல்மீம் தன்னை யுற்றகுழிதொட்டுக் கீழேநீட்டே. (557)

(இ-ன்):— அப்படியே பழகிவரும்போதே புருவமத்தியில் ஒளிவு தோன்றும், அதைக் கண்டவுடனே இது என் றப்புடைய நூறு என்று கலிமாவைச் சொல்லிக்கொண்டு நூறை சரீரமெல்லாம் பிரகாசிக்கச் செய்ய அலிபை நினைவில் வைத்துப் பாராட்ட வேண்டும். எ-று.

நீட்டித்தலைமேலுங்கால் கீழுமாய் நேராய் மூக்குடகொழுந்து மட்டுந், தேட்டமாகிய அல்லாவென்று செப்பும்லாமதில்முதலாம்

தன்னைக் கூட்டிமீமுட வாலைத்தொட்டுக் கோர்வையாகக்கீழ்த்தாழ் வாய்மட்டும், பூட்டியிறகுலிலுறைத்தறேயைப் பொருத்தியெழுத் தோடே கீழேவாங்கே. (558)

(இ-ள்):— அலிபை அவ்விதம் நீட்டி நினைவை தலைமேலும், காலகீழுமாக மூக்கின் முனை வரையிலும் பொருத்தி அல்லா என்கிற தேட்டத்துடன் திக்றுசெய்து, அப்பால் மீமை நினைந்து திக்றுசெய்து றகுல் என்கிற றேயை நினைவுடன் இழுத்து கீழே வாங்க வேண்டியது எ-று

கீழாங்குரவளை நெஞ்சாங்குழி யதின்கீழ் இல்லென்ற லாமை நாட்டி, யாளுங்கமலத்தினடுநிலை யி லலிபினிலையொளிவாகவெண்ணி மீளுஞ்சுழலாகவெழுந்தமூச்சை வீணாய்ப்போகாமலெழுத்தைக்கூட்டிச் சூழுமூலத்திலிருந்தெழுப்பிச் சொருகிவிழியோடேசுடரைநோக்கி,(559

(இ-ன்):—கீழே ஈந்தமட்டுப்என்ருல் குரவளையிலிருந்து நெஞ்சாங்குழி வரையிலும் இல் என்கின்ற லாமை நாட்டி இருதயக்கமலத்தில் அலிபின் நிலையுடைய ஒளிவை தியானித்து அதற்கப்பால்சுழன்று வருகின்ற மூச்சை வீணாக்காமல் கலிமாவில் நிறுத்திவைத்து மூலத்திலிருந்து எழுப்பி இரண்டுகண்களுக்கும் இடையில் சொருகிப்பார்த்தால் ஒளிவு தோன்றும். எ-று

சுடராமிருவிழிநடுவிலாடுஞ் ஜோதிபெரியவனிலையுமாகித், திடமாய்வருமூச்சை மூலந்தனிற் றிறத்திலிருந்தியே யெழுப்பிநெஞ்சில், அடவாய்ச்சரத்தோடே யெழுத்தைப்பூட்டி யந்தவெளியிலே விழியை நாட்டி, யெடுத்தசரந்தையாகூவல்லா வென் றிலங்கு மொளிவிலே சொருகிப்பாரே. (560)

(இ-ன்):—இருவிழிகளுக்கும் நடுவே நடனஞ்செய்கின்ற பிர்ம ஜோதியை றப்பு என்று உறுதிகொண்டு மூலத்தில் இருந்து எழும்புகிற சுவாசத்தை இருதயத்திற்குக் கொண்டுவந்து கலிமாவைப் பொருத்தி விழியை அத்துடன் கொழுகி, அத்துடன்நினைவை யாஹூ அல்லா என்று ஒன்று படுத்திப்பார். எ-று

பார்வைசோராமற்சரமோயாமற் பாங்காய்ச்சரத்தைமுன்னிறுத்து போது, தேருந்திருச்சொல்ஆ வென்றிருத்தித் தெளிவாய்கூவென் றுவீசவேணும், எறுஞ்சரத்திலே நினைவைப்பூட்டி யிலங்கு

மொளிவிலே விழியைநாட்டிற், கூறு முஷாஹதாவிது போலில்லைக்
குணமாயறுந்திலைதயிருந்துபாரே. (561)

(இ-ள்):—அடேமகனே! நீ அவ்விதம் செய்து பார்க்கும்போது உன் கண்கள் சோர்ந்துவிடக்கூடாது, நீ விடுகின்ற சுவாசங்களும் ஓயக்கூடாது. அதில் நிறுத்தி ஞாபகத்தையும் நழுவவிடக்கூடாது. இவ்விதப் பத்தியத்துடன் செய்த நீ இருக்கும்போது, ஹா என்கிற திருச்சொல்லை இருதயத்தில் இருத்தி ஹூவென்று வீசவேண்டும். உடனே மேலேறுகின்ற வாசி நிலையில் நினைவைச் சேர்த்துவிட வேண்டியது. உடனே உன்றப்புடைய வெளிச்சத்தைக் காண்பாய். இதுபோல ஒரு தெளிவான முறையை உனக்கு எவரும் சொல்ல முடியாது. இதை உறுதிகொண்டு அப்படி இருந்து பார்த்துக்கொள். எ-று

இருப்பிலுறக்கம் போற் காணும்போதி லிருந்த விடத்திலோ
ரொளிவுதோன்றுந், தருப்பில்லா தவனிபுலிசென்றுந் தன்னைமறந்
திடும்வலதுபக்கஞ், சிறப்பாய் வருமொளி முகம்மதென்று சிரசுபணிந்
திடும் புவியைநோக்கி, நிரப்பிவருமொளிசந்திரனை நீண்டமுடிமேலே
கண்டதானல், (562)

(இ-ள்):—அவ்விதம் இருக்கும்போது ஒருவிதமான அசதியுடன் நித்திரையைக் கொண்டுவந்துவிட்டு ஒளிவுவொன்று தோன்றும் அது லஅனத்துப்பெற்ற இபுலீசானவனுடைய ஒளிவென்றுகண்டுகொள்ள வேண்டியது. இனி தன்னைமறந்து தன் நினைவுடன் ஒரு ஒளிவானது வலதுபக்கமாகத்தோன்றும் அதை நூறுல் முகம்மதிய்யாவின் ஒளி வென்று திட்டப்படுத்த வேண்டியது. அந்த ஒருமையான நினைவுடன் தலையைசாய்த்து ஸுஜூதுசெய்யும்போது பூரண சந்திரன் ஒளிவைப் போல் வெளியாகும் பட்சத்தில் அது றப்புடையஒளிவென்று அறிந்து நினைவை மருளவிடாமல் அதனிடத்தில் கேட்கக்கூடிய முனஜாத்துக் களைக் கேட்கவேண்டியது. எ-று

கண்டவொளிறப்பில் ஆலமீனுங் கருணைப் பதங்கண்டுதொழுது
கொள்ளும், விண்டுஆயிரந்தேன் மலராய் விரிந்தேயிலங்கிநின்றுடும்
போதில், வண்டுமலராடவடங்கும்போதி லதிலேஅலிபென்ற வெழுத்
தைக்காணு, நன்றாய் நோக்கிப்பாரெழுத்துருகி நல்லவானமும் புவி
யுங்காணும். (563)

(இ-ள்):— அப்படி றப்புடைய திருமணி வெளிச்சமானது வெளியான உடன் சற்று நிமிஷங்களுக்கெல்லாம் ஒருவித அமிர்தத் தடாகம் தெரிந்து அதனடுவே பொற்பிரகாசம் பொருந்திய ஆயிரத்து எட்டு இதழ் தெய்வத் தாமரையானது விரிந்து வெளிவரும். வந்து அதன் ஒவ்வொரு இதழ்களுக்கும் துளிக்கின்ற தேவாமிர்தங்களை உன் வாயில் கொண்டுவந்து ஊட்டும். ஊட்டிய உடனே நன்றது நிற்க அது பளிரென்று வெட்டி மறைந்துவிடும். அப்பால் ஒரு அலிபு வெளியாகும். அது உருகி ஆகாயமாகவும், பூமியாகவும் ஆகிப் படரும். எ-று.

காணு மாகாய முலகந்தனிற் கண்ணுமணிக் குத்துபுதயங்காணு,
முனிப் பார்க்கவே விண்டதுக்கு ஞருவந்தெரியவே கண்ணடியிற்,
ரோணுமவரவர் சுரூபம் வருந் துய்யபிங்காணிற் பாலுமேந்திப்,
பேணிக் கொடுக்கவே குடிக்கக் கண்டாற் பெரியோன் முஹப்பத்தி
னதாமே. (564)

(இ-ள்):— அந்த ஆகாயத்திலும் பூமியிலும் குதுபு பிரகாசமானது எழுந்து ஜொலிக்கும். அதில் கண்ணடிபோல ஒரு பளிங்கியானது வந்து நிற்கும். அந்தப் பளிங்கியைப் கூர்க்கப் பார்த்தால் உன்னுடைய சொருபம் தெரியும். அப்படி நீ கண்டவுடன் ஒரு பிங்காணில் பால்வந்து உன் வாயருகில் மணக்கும். அதை நீ சாப்பிட்டவுடன் அப்பதான் முஹப்பத்தென்னும் மஉஷிக்குடன் கலந்த ஒன்றுபட்ட அடையாளம் நிறைவேறும். எ-று.

தாகமோகங்கள் ஸிஃப துன்பந் தாத்தை வெறுத்தொருபரத்தை
நாடி, மேவிச் சிலையுடமுச்சினலே விளப்பும் விழியன்பா லெழுத்தை
யேற்றிப், பாவந்துலைந்தபின் கிலுறுநபி பார்த்துக் கருத்தோடே
பலன் பெற்றோர்க்கு, வேகளவுலியாக் குத்துபே யென்று மின்ன
மொலியென்ற நிலையிலாகும். (565)

(இ-ள்):— நீ அந்த அமிர்தத்தை சாப்பிட்டவுடன் உன்காம விகாரங்கள் கபடு வஞ்சனை இரு வினை முதலான பாமரச் செயல்கள் யாவற்றும் உன்னை விட்டும் விலகிவிடும். உன் நோக்கமானது றப்புடைய ஹலரத்தையே நாடிக்கொண்டிருக்கும். அந்தக்காலத்தில் ஹயாத்து நபியாகிய கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து உன்னிலையைத் தரிபாடாக்கி உன் பதவியின் தரம்போல் குதுபு,

அக்தாபு, ஒளவிய, ஒலி என்னும் பட்டங்களை சூட்டி அந்தந்த தரஜாக்களில் உயர்த்திவிட்டுப் போவார்கள். எ-று.

ஆகம் பொருந்திய பிர் நிலைமை யறிவாலறிவோர்க்கிங் கறிவு சொல்வேன், ஏக இருதாரை யொருதாறைக்கு விலங்கு மிதிஞெளி யிருபாகமும், வாகமைனென்னுங் கலிமாநிலை வானஞ்சுழற்றியே யிருத்தி யேற்றி, யேகநிலையிலே யேற்றி மூட்டி யிருத்திப் பார்க்கவே யிலங்சந்தானே. (566)

(இ-ன்) :— இனி சற்குருவின் தோற்றரவு காண்கவேண்டு மென்று நினைப்பவர்களுக்குச் சொல்லுகிறேன். இரண்டு கண் களிலும் தெரிகிற பாப்பா என்னும் ஒளிவை ஒரு கண்ணுக் கிடையில் வரச்செய்து ஐன் என்கிற கலிமாவில் ஆகாய நினைவைப் பொருத்தி உயர ஏற்றி ஒரே நிலையாகக் கதிற் முனைபோல எண்ணத்தை வைத்து உன் பிரை ஒருமையாகச் சாதிப்பாயானால், உடனே ஷெய்குடைய சூறத்து வெளியாகும் பார்த்துக்கொள். எ-று

இலங்கும் ஜெம்கூத்தினிலையைப்பாரு இதழு மலராக விரிந்த சோதி. துலங்குமாயிரந் தேன் மலராய்த் தோன்றுநடு நிலை நுக்கத்து மாக விலங்கு நுக்கத்தைப் பார் அலிபுமாக விருக்கும் மீமென்ற வெழுத்துமாகுங், கலங்கிமீமுடதலைவிரிந்து காணுந்தோஸ்தம் பொற் கணையாளியாம். (567)

(இ-ன்):— அவ்விதம் இலங்குகின்ற ஜெம்ஹூசித்தாக இருக்கும். அது ஒரு அழகிய செந்தாமரை மலராக விரிந்து அதன் நடுவே ஒரு நுக்தாவானது ஒரு அலிபும் ஒரு மீமையும் சுமந்ததாகத் தோன்றும். அதில் அலிபு அருவமாகவும், மீம் அழகிய சூறத்தில் சுருபமாகவும், விரலில் கணையாளி மோதிரந் தரித்ததாக இருக்கும். எ-று.

கணையாளிக்குள்ளே அகார வட்டம் கண்ட பனிரண்டு மொன் ருகவே, யிணையுங்காபுகூகியுமாகு மிருக்குமீமைந்து மெழுத்துமாகு, மணையுமீரா றெழுத்து மொன்ரு யடங்குந்திருட் சூட்ச மதுவுமாகு, யிணையில்லாச் சுடருதயங்காணு மென்னுலினிச் சொல்ல விளங்க வில்லை. (568)

(இ-ன்):— அந்த மோதிரத்திற்குள்ளே முச்சுடர் வட்டம் வெளி யாகும். அது கலிமா முதல் பன்னிரண்டு அட்சரங்களும் நிரப்பி

நிற்கும். அது ஹா ஹீ ஹூவாக இருக்கும். மீமானது ஐந்து எழுத்துக்களாகப் பிரிந்து நிறதும். அந்த மீமே கலிமா இருபத்தி நாலு அட்சரங்களும் ஒருமிக்கப் பொதிந்ததாக இருக்கும். இது வே ஞானத்திற் கடையாளம் அமையாத சூட்சாதி சூட்சமாயிருக் கின்றது நான் இதற்கப்பால் என்னதான் சொல்லப்போகிறேன் இதற்கந்தப் புறம் பேச்சென்ன இருக்கின்றது. எ-று.

இல்லமிலங்கிய அலிபிரண்டு மிணையும்ஐனெனுங் கலிமாத் தனனை, மெல்லவிளக்கியே மௌனமூட்டி மூடியிருத்திப்பார்மூச்சடக்கி வெள்ளமமதிகதிரிற்சூட்டி விருத்தம் விளங்கிய வேகத்தாலே. இலங்கியென்பதுரேகைப்பூட்டி யெழுநிநாற்பத்து மூன்றுகோணம.

(இ-ன்):— இன்னம் ஒருவிதமுஷாஹிதாச் சொல்கிறேன் பிரிய மிருந்தால் செய்துபார் இருதயத்தில் பூண்டிருக்கின்ற அலிபெனகிற தை, ஐன், என்ற கலிமாவில் வைத்து மெதுவாக மௌனமாக எழுப்பி மூட்டி சுவாசத்தை அடக்கிற விதமாக அடக்கி இருத்திப்பார். ஒருவித வெள்ளைச்சந்திரன் போல கதிர்காட்டும் அந்த வேகத்தோட இலாஹி என்பது நாற்பத்து மூன்று கோணங்களாக வெளியாகும். எ-று.

கோணநாற்பத்து மூன்றுமாகக் குறிகொண்டாடிய மண்டபத் திற், ரேணு நுபுவ்வத்து நிலைநின்ருடுந், துலங்கு நவரெத்னத் தோடுசாமாம், நூறு பொருந்திய தேக்ஷமாக நுக்கத்து பொருத்திய நடுநிலையு, மாணிக்கமுத்துப் பவளம்பச்சை மக்காமன்மகுமூதர் நிலைதெரியும். (570)

(இ-ன்):— நாற்பத்துமூன்று கோணங்களுடன் அந்த உஜூது குடிகொண்டிருக்கு மணி மகாமண்டபத்தில் நுபுவத்துடைய தோற்றங்கள் நின்று நடனமாடும். அதிலே ஒன்பது வகை ரத்ன கஜிதங்களின் பிரகாசமும் வெளியாகும். இன்னும் அதிலே நுக்கத் துடைய ஜலாலியத்துகளும, முத்து, பவளம், பச்சை, மாணிக்கம், என்னும் மகாமன்மகுமூது வெளியாகும். அப்போது முகம்மதுடைய வெளிச்சம் தோன்றப் பார்ப்பாய், எ-று.

தெரியுமொளிவாக இலங்கும்வட்டந் தெளிவாய்நடுநிலைசுறு மாவட்ட, முறையுங்கண்ணடி யொளிவுக்குள்ளே முகவரையில்லா விளம்பாலனும், வரையிஞ்சிபத்தைப் பொருந்திப்பார்த்தால் வன்

எல்முகம்மது வடிவுதோன்றும், அறியும் பீர்நிலையிதுவே நிச மனே கவிதஞ்சொல்வார்க்குபிராகுமே. (571)

(இ-ள்).— இன்னும் அந்த மண்டபத்தில் ஒரு பீடம் வந்து தோன்றும், அதிலொரு சுருமாவட்டம் வெளியாகும் அந்த வட்டத்தில் ஒரு பளிங்கிக்கண்ணாடி வந்து நிற்கும், அதற்குள்ளேமுகம்மதானது முகவரை கீராத இளம்பாலிய வடிவில் இருந்து பிரகாசிக்கும், அடே மகனே! பீர்நிலை என்பது, இதுவே சரியானமுறை இதைப்பற்றி இன்னும் அநேகர் அநேகவிதங்களுஞ் சொல்வார்கள் அவைகள் எல்லாம் குபிரியத்தாகவும், ஷெய்தானுடைய ஏமாற்ற வழிகளாகவும் இருக்கும் மாட்டிக்கொள்ளாதே ஞாபகம் எ-று.

குவியுமூலத்திற் சுழன்றவாய்வு கோணமாறுரீகும் கருநிலையில், எவ்விஎவ்வியே வருகுமூச்சு யாகூவெனச்சொல்லி யெழுந்த மூச்சு, ஒவ்வியிருக்கு மாமைந்தெழுத்து மோதும் யாகூவும் வாவுமசீமுப், செல்வி விழிநாசி வாயடைத்துச் சேர வெழுத்தைந்து மிருத்திப்பாரே (572)

(இ-ள்):— இன்னும் குவிந்திருக்கின்ற மூலக்குகையில் நின்றும் ஒரு மூச்சானது சுழன்று பிராணவாயு உள் வரும். அது ஆறு கோணங்களுக்கும் கருநிலையான மகாமில் வந்து எவ்வி, எவ்வியே பாயும், அது யாஹூ என்கிற திக்றை உச்சரிக்கும். அப்போது நீ யாஹூவையும், வாவையும், சீமையும் நினைத்து, கண்களையும், நாசியையும், வாயையும், அடைத்து மேற்படி அட்சரங்களையாதுடன் இருந்திப்பார். எ-று.

இருத்திச்சடத்தை யுள்ளடக்கும்போது லெல்லா மறந்திடு மிலங்குமொளி, தரித்தகமலத்தினடுநிலையிற் றகுத்தன்றெழுதியபத் தெழுத்தி, னிறத்ததகுதறத்தின் மலரின்மேலே நீதியெழுத்தெல்லாம் பொருந்தியொன்ருய். வகுத்துந் தவிசின்மேல் வாலிபனுய் வகையில்லாமுகத்தொளிவு தோன்றும். (573)

(இ-ள்):— அப்படி நீ வியாபகத்துடன் இருத்தி இருதயக் கண்ணாடியில் அடக்கும்போது உலகத்தின் செயல்கள்முற்றும் மறந்துவிடுவாய். அங்கே வெளிவந்து தோற்றக்கூடிய ஒளிவானது இருதயக் கமலத்தில் உள்ள பத்து வகையான எழுத்துகளுடன் கலந்து குதுறத்தென்கிற தாமரையின் மேலே மேற்படி எழுத்துகளுடன் பொருந்தி ஒன்றுபட்டு அந்த சிங்காசனமேடையின்பேரில் இணையில்லாத வஜீகரத்தையுடைய முகசௌந்திரிய வாலிபனைத் தோன்றும். எ-று

தோன்றுமொளிவாக அலிபுநிலை துலங்தப் ரூபத்தின் மடியின் மீதிற், கூண்டுபருதி போலொளிசிறந்து குதுறத்திலங்கிய நுபுவ்வத்தின்மேற், பூண்டுபணியாடை யணிந்திலங்கப் பொன்னின குடம் போலேதனமிலங்கக், கூண்டகுழைக்காதி லணிந்ததோடு குமரிரூபமாம்குழந்தை போல. (574)

(இ-ள்):— அப்படித்தோன்றுவது அலிபுடைய நிலையாக இருக்கும். அந்த வாலிபனுடைய மடியின்மேலே இளஞ்சூரியப்பிரகாசம் போல் ஒளிவு வீசவும், நுபுவத்துடைய குதறத்துகள் சூழ்ந்துநிற்கவும் இரத்தனங்கள் இழைத்து பதினெண்ணாயிரம் ஆலங்களையும் தோற்கடிக்கின்ற மதிப்பிலடங்காத அநேகவித ஆபரணதிகளையும்முத்தாடைகளையும் அணிந்த, பொன்குடங்கள் போன்ற ஸ்தனபாரங்கள் குலுங்கவும் இரண்டு காதுகளிலும் இரத்தனத்தோடு என்கின்ற குண்டலங்கள் ஆடித்தொங்கவும் ஆன ஒரு வாலிபப்பெண்குழந்தை சுரூபத்தில் வெளியாகும். (இன்னும்)

குழந்தை கரத்தினிற்குருனிருக்குங் கூவென்றோதியே குயின் மொழியு மெழுந்தகுதறத்தின் மடியின் மீதிலிருக்க மகுசூக்கு முகம்மதிய்யா, வெழுந்தகுதறத்திறேசையெல்லாம் ஆமீனுமினெனறெழும்புவது, தெளிந்த ஆஷிக்குமகுசூக்கொன்ருச் சேர்ந்தங்கிருப்பதை நினைவு கண்டால். (575)

(இ-ள்):— அவள் கையில் குர்ஆன்என்கிறநாலாப்வேதம் இருக்கவும், அவள் வாயில் குயிலின் குரலோசையில் ஹூவென்று திக்று சப்தம் மகா இனிமையாகக் கேட்கவும், மேற்படி ஆஷிக்கான குதுறத்தானதின் மடியில் வைத்து தாராட்டவும், மஉஷூக்கென்ற முகம்மதியாவானது, வீற்றிருக்கவும் காண்பாய். அப்போது அந்த முகம்மதியாவானது, ஆமீன் ஆமீன் என்று சொல்லும் அந்த நேரத்தில் உன் நினைவைக்கொண்டு அந்த ஆஷிக்கையும், மஉஷூக்கையும், ஒன்றுபடுத்தி விரவிப்பார்த்தால் அந்த இரண்டு சொரூபங்களுங்கூடி உன்னையன்றி வேறே எதுவையும் நீ கண்டதேயில்லை. எ-று

கண்டாருலகத்தின் காக்ஷிகாணர் கமாலுல் எக்கீனென்ற காட்சியாலே, கொண்டாராசையு நபுசுநாஹுங் குறித்த நினைவல்லா

வெனநிறுத்தி, நின்றநினைவெல்லாம் கூவோடல்லா நினைவு றாகுல் லாழச்செனவே, கண்ட குதறத்தி னிலைக்குங் கீழே காணும் பாரத்தீ னிலையுமாமே. (576)

(இ-ள்):— அவ்விதங்காண்கிறதைக் தான் கமாலுல் எக்கீன் என்று சொல்கிறது. அந்தக்காக்ஷிகளைக் கண்ணுற கண்டவர்கள் இந்த பொய்யான பூலோகத்தின் காட்சிகளைச் சட்ட பண்ணிப் பார்க்கவே மாட்டார்கள் அவ்விதங்கண்ட தோற்றரவுகளுடன் உன்நப்ஸாகன் நாலும், றப்பென்றே உறுதிக்கொண்டு நினைவுடன் நிறுத்தி மற்ற நினைவுகளெல்லாம் ஹூவென்றும் அது வாசியின் பெருமை என்றும் கண்டு அந்த குதறத்து நிலைக்கு கீழே காணுகிறது. தீனிலை என்று கருதவேண்டியது. எ-று

நிலையாச நுபுவ்வத்து நின்றிலங்கு நினைவிலறிந்திடத்தெளிந்த விழி, கலகநிறைந்திடு நரகந்தன்னைக்காணுதொருநாளுங்கனவிலுமே யிலங்கு நுபுவத்துப் பாகூத்தென்று மிதுதான மக்காமன்மஹமூத் தென்று முலகு நிலையெல்லா நிறைந்திருக்கு முலமாமுகம்மது நபியுஞ் சொன்னார். (577)

(இ-ள்):— அந்த தினிலையில் நுபுவத்துடைய பிரகாசங்கள் வீசிக் கொண்டிருக்கும். அதைக்கண்ட பெரிய மனுஷரின் கண்கள் ஒரு காலத்திலும், கனவிலுங்கூட நரகத்தைக் காணமாட்டா. "அந்த நுபுவத்து தான் பாஹூத்தென்கிற மகாமன் மஹமூதாக இருக்கும், என்று ஆதஞான மூலக்கருத்தாவாகிய நமது நபியவர்கள் திருவாய் மலர்ந்து சொல்லி இருக்கின்றார்கள். எ-று

சொன்னார் முகம்மதுநபியிரசூல் சூபில்ஜெம்கூத்து நிலைதெரியு மண்ணின் மலிக்கென்னு மாலீக்கென்னு மக்காமன் மஹமூது நிலைக்கு மேலே சொன்னேன் ஜெம்கூத்து நிலையாவது சுல்தானசீருவென்றெ வர்க்குந்தோன்ற, வின்னங்குதறத்தில் ஆரிபீனு மெங்கள் முகம்மது நபியுஞ்சொன்னார். (578)

(இ-ள்):— இன்னும் இந்த மகாமில்ஜெம்ஹூத்துடைய நிலையும் தெரியவரும். மேற்படி மகாமன் மஹமூது நிலைக்கு மேலே வந்த ஜெம்ஹூத்தாவது சுல்தானன் நஸீருவாகஇருக்கும். இதுதான் குதறத்து ஆரிபீன் என்கிறது. என்று நமது நபியவர்களும், உறுதி சொல்லி இருக்கின்றார்கள். எ-று

நபியாமுகம்மது வுலகோர்க்கெல்லா நல்ல மகிழ்ச்சியாலேது சொன்னார். புவியிற்பொருளெல்லாமொளித்த பொருள் பொருளை

வெளியாக விழித்துச்சொல்வேன், கவியாதிருக்குதென் றிருக்கொணுது கண்ணின் மணிபோல கருத்தில் வைத்துப், புவியிலறிந்தோர்க்குத் தாள் விலையே போதுமிதற் றமேற்பொருளிலையே. (579)

(இ-ள்):— இன்னும் நமது நபியவர்கள் உலகத்தார்களுக்கு சொன்னதாவது, ஓ மனிதர்களே! இந்த உலகத்தில் நீங்கள் வருத்தப் பட்டு எவ்வளவோ பொய்ப்பித்தலாட்டங்களுஞ் செய்து தேடி வைக்கும் ஆஸ்திகளெல்லாம் உங்கள் கண்பார்க்கத் தடபாடி இன்னொரு வல்லைகயில் போய்விடும்படியான பொய்யானதாக இருக்கிறது. ஆனபடியாலே அநித்தியமான பொருளை உதறிவிட்டு நித்தியமான பொருளைத் தேடிக்கொள்ள எவ்வளவும் பிரயாசை எடுத்துக்கொள்ளுங்கள். என்று சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய மஅரிபத்து மாலையில் இல்லாத உபதேசம் யாருடைய கிதாபுகளிலும் கிடைக்காது. அல்லாஉடைய இருலோகத்துகஜனகளை இந்த மாலையில் அள்ளியள்ளிச் சொரிந்து விட்டிருக்கிறேன் யாரப்பா கூர்மையான புத்தியுள்ளவனே! தமிழ் பாஷையின் கவிதைகளாய் இருக்கிறதென்று அசட்டை பண்ணாமல் உன் கண்ணுக்குள் இருக்கின்ற மணிபோலப் பாவித்து உன் சரீரமென்கிற உயிர்க்கூண்டை விழுத்தாட்டிப் பிய்த்து நீ இல்லாமல் போய்விடாமல் தப்பிப்பிழைத்துக்கொள் அடமகனே! இவ்வளவே போதுமானது. இதற்கு மேல் உனக்கு எவன் சொல்லப்போகிறான். எ-று.

இல்லென்றுரைப்பதுமிறையிறும மில்லாவிளங்கிய ஜெம்கூத் திலே, சொல்லுமலராட்டங் குதறத்தாகும் சுல்தானசீருவும் நுக்கது மாகும். இல்லென்றெழுத்தது மலிபுவாகு மிருத்த மீமலேமிகுதி தத்து, வல்ல மீம் தலை கமலமாகும் வானந்தெரியாத ஆகாயமே. (580)

(இ-ள்):— இனி முடிவைச்சொல்கிறேன் இல் என்பது றப்புடைய திருநாமம். இல்லா என்பது ஜெப்ஹூறுத்தில் உள்ளது ஆயிரந்தெட்டிதழ் உடையதெய்வத்திற்கு மணமுடைய வெளிச்சம் சுல்தான் னன்ன சீருவாக இருக்கும். அதன் கருத்து நுக்கத்தாக இருக்கின்றது. இல் என்பது அலிபாக இருக்கிறது. வாசியில் வைத்து இருக்கின்றது. மீம் உடைய தலையாக இருக்கும் அதோ, இருநயக் கமலத்தின் நாட்டமாக இருக்கும். அதுவே யாருக்கும் தெரியப் படாத ஆகாய வெளியாகவும் இருக்கின்றது. எ-று

ஆகாயந்தனிற்குதுபுதய மதுதான் றூகென்றுமறியலாகு. மேக கதிரொளிகுதூசியாகு மிருகோணம்பிறைமுச்சுடராம், வாகாய்த் தலைகுடி யிருபதுதான் வல்லோன் காவோடுகீயுமாகும்கலிமாத்தான் கண்ணாடி போலறியும் அல்லாகு வென்றகூட்டில். (581)

(இ-ள்):— அந்த ஆகாயத்தில் குதுபுதையப் பிரகாசிக்கும் அது தான் றூஹுகள் என்று உணர்ந்து கொள். அந்த வெளியெல் லாம் ஏகது விதமாகிய ஒரு ஜோதி நின்று பிரகாசிக்கும் அதுதான் றூஹல் குதுஸி யென்று அறிந்துக்கொள். இரண்டு கோணங்களி லும் ஒரு சந்திர வெளிச்சந்தெறியும், அவைகளே முச்சுடர்களின் கோலம் என்று அறிந்துகொள். உலகமெல்லாவற்றிலும் ஒரு வஸ்து வையும் விடாமல் பொருந்தி இருக்கும் ஹா ஹீ என்கிற கலிமா வென்று திட்டப்படுத்தி நீ என்கிற நினைவை அல்லாஹு வென்கிற கிளிக்கூண்டில் பிடித்து அடைத்துக்கொள்வாயாக. எ-று.

கூட்டும் பொருளெல்லாஞ் ஜம்கூத்திலே கோலம்பாகூத்தைக் கொழுகிப்பார்க்கி, லாட்டபலரெல்லா நுபுவ்வத்தோடு மந்தக்கட விலேகல்புமாகுஞ், சூட்டும் ஓங்கார வட்டமீமாஞ் சூழ்ந்தநிறம் வெள்ளை நடுநிலையி, லாட்டம் வைரப்பொன் பவளம் பச்சை யது தான் மக்காமன் மகுமூதுமே. (582)

(இ-ள்):— நீ காண்கக்கூடிய தோற்றப்பொருட்களெல்லாம் ஜெம்ஹூத்துடையதாக இருக்கிறது. அதை உணர்ந்து அப்பால் பாஹூத்தை ஏறிப்பார்த்தால் எல்லாம் நுபுவத்துடைய ஆட்ட மாகவே காண்பாய் அது ஒரு கடல் போன்ற வடிவாய் இருக்கும், கருத்து கல்பாக இருக்கிறது, இனி மகாமன் மகுமூதெனபது, ஓங்கார வட்டம் என்று சொல்கிறது. அது மைரெங்கு வெள்ளையாக இருக்கின்றது, நடுவே வைரம், பச்சை, பவளம், பொன் இவைகள் எல்லாம் அதிலுள்ளது. எ-று.

இதுதான் மக்காமன் மகமூநுமா மிதுக்குநடுநிலைசுறுமாநிற, மதுதான் முகம்மது வடிவுமாகு மதுக்கு நடுவேநின்றிலங்கு,சுடரது தான் குதரத்துல் ஆலமீறு மந்தவொளிவல்லாகுவெனவே, யதின மாய்வந்து முடியிரு னருளில் லாக்கள்ள ளிபுலீசுமே. (583)

(இ-ள்):— இதுதான மகாமன் மகுமூதென்று அறிந்துக்கொள். அதுவே முகம்மதுடைய வடிவென்பது இதற்கு நடுநிலையானது சுறுமா உடைய ரெங்குள்ளது, அந்த சுருமாவுக்கு நடுவே

ஒரு ஒளிவானது பிரகாசிக்கும். அது றப்புல் ஆலமீனுக இருக்கும் அந்த ஒளிவானது அல்லாஹுவென்று சொல்லும். இப்படியல்லாமல் ஏக இருளாக வந்து மூடி வெளியாகுமே யாகில் திட்டமாக அது இபு லீசுடைய செயலாக இருக்கும் என்று உணர்ந்து விலகிக்கொள். எ-று

கள்ள னிபுலீசைத் தவுபாவெட்டுங் கண்டாலிறையேயுன் கலிமா நிலை. கொள்ளுமீமானு மிதுதான் சொல்னேன். தோலமிசுலா மூமிது தான் சொன்னே, னள்ளத்தொலையாத அல்லாபொருளாதமனிதர்க்கு கொள்ளையாக, வுள்ளபடியேதா னொளிப்பில்லாம லுலமாமுகம்மது நபியுஞ்சொன்னர். (584)

(இ-ள்):— அவ்விதம்வெளியான கருமத்தை நீவென்றுகொள்ள வேண்டுமானல் உடனே தெளபாவை வாயால் சொன்னல் அதுவே ஒரு வாளாக வந்து அவனை வெட்டி நாசமாக்கி விடும். இதுதான் ஈமானு, இசுலாமுமாக இருக்கும். அல்லா உடைய கஜானுவாகிய இவைகளை உலகத்தார்க்குச்சொல்லிவிட்டேன, அள்ளி அநுபவித்துக் கொள்ளுங்கள். எ-று

சொன்னபதினலு மூஷாஹதாவுஞ் சுழுயி னிருபத்தெட்டியாது, மென்னயாதாக விருப்பதாலு பெழுத்தை மாற்றியே தலைகீழாக, முன் பின்னாய் மாற்றிப் பிடிக்கறியார் மூடர் படும்பாடு நாடாமென்று மின் னம் பெரிதாகு முகுதிதாத்து மெழுத்தை யிருத்தினலிது போதுமே (585)

(இ-ள்):—மேலே சொன்ன பதினன்கு மூஷாஹிதாக்களின் விபரங்களையும் அதன் அடிமூடுகளையும் சொல்லிவிட்டேன். இனி அதில் இருபத்தெட்டு யாதுகள் இருக்கிறது, அதை மாற்றி தலை கீழாகவும் முன் பின்னாகவும், பின் முன்னாகவும் வரமாற்றி பிடித்துக்கொள்ள வகை தெரியாத மனிதர்களெல்லாம் நாளை மரணநேரத்தில் திருட்டுப் பயல்களைப்போல் பறக்கப் பறக்க முழிப்பார்கள், அப்போது,எவ்விதம் முழித்தாலும் ஒரு பிரயோசனமும் அவர்கள் காணப்போகின்றதே கிடையாது. கமலத்தை வெளிச்சமாக்க வேண்டியது முக்கிய காரியம் எ-று

போதமாகிய வணக்கந்தன்னிற் பொங்கி யுடலெல்லாம் பொதுமி மீறி, யாதியருளின ளைந்துபோரா யாவியொளிவாகி வணங்கி நிற்கு

நீதிபெரியவன் றனையுகான்பா னினைவு பெருமையுமறியலாகுஞ். சோதிவணக்கந்தா னிதுபோலிலைச் சுவர்க்கப்பலதெல்லாய்விழியிற் ருேன்றும். (586)

(இ-ள்):—இவ்விதம் வைங்குகின்றதால் தவமானது அதிகப் பட்டு சரீரத்தின் கருவி கரணங்களெல்லாம் தன் வசப்பட்டு கூடி நிற்கும். அப்போது ஐந்து றூஹுகளும் ஒளிவாகப்பெருகி வணங்கி நிற்குப்படியான றப்புடைய தோற்றரவையும் காண்பாய். நீதிபெரியவன் தன்னையுங்காண்பாய். உன் நினைவுகளுடைய சொரூபங்களையும் கண்டு கொள்வாய். றப்பை காண்கிறதற்கு இதுபோலொரு வணக்கமும் கிடையாது, சுவர்க்கத்தையும் அதிலுள்ளகாட்சிகள் பலவகையும் உன் கண்ணிற்கண்டுகொள்வாய். எ-று

தோன்றப் பணிவிடை செய்யும்வகை சொன்னேனிதக் கொருகுஷங்களீர், உண்ட அசனத்தை நாளுக்குநா ளொவ்வோர்பிடியாகக் குறைப்பதுவும் விண்டுவெளியாக்கூ மூச்சையெல்லாம்வீணுய்ப்போகா மலெழுத்திற்சேர்க்க, வண்டருலகுபாதாளஞ்சென்று மவனிவன்மீளும் வேறதாமே, (587)

(இ-ள்):—ஆனால் இந்த தவங்கள் கைகூடி வரவேண்டுமானால் நான் ஒரு உபாயஞ்சொல்கிறேன், கேள். நீ தின்றுவருகிற சாப்பாட்டை நாளுக்குநாள் சிறிதுசிறிதாகக் குறைத்துக்கொண்டுவருவதுடன் நீ விடுகின்ற மூச்சிலும் ஒன்றையாவது பழுதாக்காமல் உன் நினைவில் பூரணமாக்கிக்கொண்டு வரவேண்டியது, அவ்விதம் வரும்போது உலகமெல்லாம் உன்னில் வந்து கலந்து ஒன்றுபட்டுவிடும். எ-று

ஆகும்வணக்கந்தா லுறங்கும்போதி லசதி வருகாமலிருக்கவென்ருல், வாகாய்வருமூச்சைத்தவறிடாமல் வருந்தி யாகூவைவாசிலாக்கி சாவுமரணமு மணுகிடாது சற்றுகிலுநினை வொளிந்திடாது. வாகாம் வணக்கந்தா னுலகத்தோர்க்கு மனதுவாக்குடனுரைத்திட்டானே(588

(இ-ள்):—அவ்விதம் தவஞ்செய்யும்போது; உன்வசம் இபுலீசானவன் அசதிகளையும், நித்திரையையும் கொண்டு வந்துவிடுவான், அதற்கொரு உபாயம் சொல்கிறேன். மூலத்தில் இருந்த வருகிற சுவாசத்தைத் தவறவிடாமல் ஞாபகத்தில் நிறுத்தி அத்துடன்

யாஹூ என்கிற கலிமாவைப் பொருந்தி வாசிலாக்கி விட்டாயாகில் மேற்படி கருமங்கள் உன்னை விட்டும் விலகிவிடுகிறதும் அன்றி எமனுடைய உத்தியோகமாகிய மரணமும் உனக்கில்லவே இல்லை. ஒரு நிமிஷநேரமாவது நினைவைவிட்டும், நீங்கி இருக்காதே ஞாபகம், சொன்னேன். எ-று

உலகத்தகுருமுறை யுள்ளுதனி லொருநூறு கோடிவிதங்களுண்டும், பொருளெல்லா மறிந்து பார்த்தேன்வழி நானடந்தவாறிதாகுமே. யெழுத்திலடங்காதே யினிச்சொல்லநா னிதுபோதுமறிவுள்ளோர்க்கெல்லம், வருந்தி நிலையான முப்பாலையும் வணக்கமுஷாஹிதாத் திட்டமெல்லாம். (589)

(இ-ள்)— அடமகனே! என் மஅரிபத்தாலையை ஒரு மதிப்பிடாத ஆணிமுதல் மாலையாக உன் இருதயத்தில் அணிந்துக்கொள். குருமுறை! குருமுறை என்று உலகத்தில் கோடா கோடியான முறைகள் உண்டும். அவைகளெல்லாம் ஒரு பக்கமிருக்க இந்த முறைதான் அல்லாவும், அவனுடைய றசூலும் சொன்னமுறை. இதுதான், நான், பூரிதுபெற்று, தவஞ்செய்து இந்தக் கடல் சூழ்ந்த அகன்ற உலகத்தின் கண்ணே நீண்ட காலங்களாக இருந்த முறையாக இருக்கும். இன்னும் இந்த முறைதான் நம்மில் உள்ள அநேக பாரதூரமான ஔலியாக்கள், குதுபுகள், கௌதுகளெல்லாம் எடுத்துச் செய்த தவங்களாக இருக்கும். நானும் இந்த முறையை இலேசில் காணக இல்லை. நானும் எவ்வளவோ முறைகளை யெல்லாங் கண்டு அவைகளில் ஒன்றும் காணுமல் கடைசியாக இந்த அரிய பெரிய முறையால் தான் வஸ்த்தைத் தெரிந்தேன். நான் கண்ட பயனை மனதில் இரக்கம், வைத்து உங்களுக்கும் சொல்லிவிட்டேன் இதைப்பற்றி விரித்தக்கால் இந்த உலகந்தண்டியில் ஒரு புத்தகம் எழுதினுலும் அடங்காது ஆனதால் அறிவுள்ளவர்களுக்கு இவ்வளவு போதுமானது எல்லா முஷாஹிதாக்களும் என்னுடைய முப்பாலில் அடங்கிவிட்டன. எ-று.

திட்டமாகவே நிலைக்கச்சொன்னேன் தீன்தீன்முகம்மதுமஹரிபத்தை, மட்டில்லாமலே கடலாய்ச் சொன்னேன் மக்காமுகம்மது மஹரிபத்தை, வொட்டில்லாமலேயுதரிச்சொன்னே னுண்மைமுகம்மது மஹரிபத்தை, வெட்டி வெட்டியே பிளந்துசொன்னேன் வேதமுகம்மது மஹரிபத்தை, (590)

(இ-ள்):— எங்கள் கருணைக்கோடிக்கடலாகிய தீன் தீன் முகம்மதுடைய மஅரிபத்தை நான் சொல்வதில் முடிவைச் சொல்லிவிட்டேன். மட்டிலடங்காத கடலாகவும் சொல்லிவிட்டேன். யாதொரு மூடியும், இல்லாதபடி வெட்டவெளிச்சமாகச் சொல்லி விட்டேன். இன்னும் மஅரிபத்தென்கிற வாசனை சந்தன விருட்சத்தை ஏழை ஜனங்களுக்காக வேண்டி வெட்டிவெட்டிப் பிளந்து வைத்துவிட்டேன்.
எ-று.

புட்டுப்புட்டல்லோ வகுத்துச்சொன்னேன் புறுக்கான்முகம்மது மஹரிபத்தை, சட்டமாகவே விரித்துச்சொன்னேன் சாகாமுகம்மது மஹரிபத்தைக், கட்டுமட்டாகப் பிரித்துச்சொன்னேன் ஹபீபு முகம்மது மஹரிபத்தை, வெட்டுவிதத்திலே யறியச்சொன்னே னெங்கள் முகம்மது மஹரிபத்தை. (591)

(இ-ள்):— நமது வள்ளலாகிய உலகமகா குருநாயகம் முகம்மது நபியவர்களின் மஅரிபத்தின் முறைகளை அப்படியே புட்டுப் புட்டு வைத்திட்டேன். இன்னும் அது சொல்லும் சட்டதிட்டப்போல நல்ல ஒழுங்காகச் சொல்லிவிட்டேன். எட்டுக் கோட்டைகள் வளைந்து, அதனுள் பதினான்கு விதமான பட்டணங்கள் உற்பத்தி செய்து, அதனுள் நபிநாயகம் அவர்களின் சங்கைபெற்ற மஅரிபத்துல்லா வை யடைத்து நிரப்பிவிட்டேன்.
எ-று.

சொன்னார் முகம்மதரொசியத்தாகச் சூழ்ந்த புவித்தீனொரெல் லோர்க்குந்தான், முன்னாலுரைத்திடுந் தவநிலையை முகியாவணக்கத் தின் வணங்கினாலு, மென்னவிதத்தாலுஞ் ஷறகைவிட்டா லென்னை மிகந்தவனிபுலீசாவா, னின்னந்தவம்பாழா நரகாளும்வா னெந்தன் ஷபாஅத்துமவர்க்கிலையே. (592)

(இ-ள்):— அத்துடன் நபியவர்கள் ஞானிகட்குச்சொல்லி இருக்கிற ஒசியத்தாவது. எப்பேர்ப்பட்ட தவத்தை யுடைய ஞானியாலும், என்னுடைய ஷரீஅத்திற்கு மாற்றஞ்செய்வானேயாகில் அந்தப்பாதகன் என்னை இகழ்ச்சி செய்த இபுலீசாக இருப்பான். அவனுடைய தவங்கள் எல்லாம் பாழாகி நரகத்திற் சேருவான் என்பதே.
எ-று.

எந்தன் ஷறகான வணக்கமெல்லா மிறையோன் குறுஆனிறக்கி வைத்தா, னிந்தனைசெய்து ஷறகைத்தள்ளி நிலைக்குந்தவமெந்தன் மறையிற்சொன்ன, னெந்தன் ஷறகைத்தா னெகிழ்த்திட்டாலு

மவர்க்குஞ் ஷறகேதிங்கெனச்சொன்னாலு, முந்தப்பெரிய வன்முய்வு பெற்ற மூதேவியென்று முடுகிவெட்டே. (593)

(இ-ள்):—என் ஷறகுக்காக வேண்டி வந்தது, குர்ஆன். குர்ஆனிலிருந்து, ஞானம் ஆனதால் ஞானத்திற்குத் தாயுந்தகப்பனும் ஷரீஅத்தாக இருக்கும். ஓ சிநேகிதர்களே! எந்த ஞானியாலும் என் ஷரீஅத்திற்கு மாற்றம் பேசுவார்களாகில் அந்த வார்த்தைகளை காதில கேட்டவர்கள் அந்த மூதேவிகளை நாயனுடைய ஷனத்துப்பெற்றவர்கள் என்று வாளால் வெட்டுங்கள் என்று நபிநாயகம் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.
எ-று

வெட்டுங்கரத்தின் வாளினைத்திடாமல் வீச்சொன்றுடறண்டாய் விழத்துணித்தா, வெட்டுச்சுவர்க்கமு மவனுக்கீழ்ந்தே யிறைக்கு மெனக்குமேதோழனவான், வெட்டாதிருந்தாலென் றும்மத்தார்க்கு வேதமுகம்மது பினையுமில்லை, மட்டில்லாக்குரு னையத்தொன்றின் மன்னனிறைசொன்னான் மயக்கந்தீர. (594)

(இ-ள்):—ஆனால் ஒரு வெட்டில் இரண்டு துண்டங்கள் விழும் படியாய் வெட்டி அவனுடைய உயிரை வதைப்பவர்களுக்கு அல்லா ஹுத்தஆலா சுவர்க்கத்தைச் சொந்தமாக நன்கொடை கொடுப்பான். அதல்லாமல் அவர்கள் கேட்குந் துஆக்களையும் ஹபுல்செய்வதுடன் என்னையும் என் றசூலையும் தன்னுடைய ஹபீபாய்க்கணிப்பான். அப்படி கொற்ற வார்த்தைகளை கேட்டும் வெட்டாமல் விட்டு விடுவானாகில் அவனுக்கு என் மூஹம்மதுடைய ஷபாஅத்தும் கிடையாது என்று றப்பு திருவுளமானான்.
எ-று

மயமாங்குறு ஆனிலிறையோன் சொன்னான் மனுடவிசுலாத்திற் றொழுகைவிட்டாற், பயம்மத்து போனகாபிராகும் பயஹாப்பர் ஒரு ஹதீதுஞ்சொன்னார், நயமாங்காமீதும் காமிலோடு நயமாரொகு ருந் தாபுலசத்தோறுஞ், ஜயமாஞ்ஷறகைத்தான் றறுக்குச்செய்தாற் சச்ச யமில்லைக்காபிரானார். (595)

(இ-ள்):—குர்ஆனில் ஒரு ஆயத்தில் ஹக்தஆலா சொல்லி இருக்கிறதாவது, எவனாகிலும் ஒருவன் என் றசூலின் ஷறகிற்கு மாற்றமாகத் தொழுகையை விட்டிருப்பானாகில் திட்டமாக காபிராக இருப்பான் என்று நபியவர்களும் சொல்லி இருக்கின்றார்கள்.
எ-று

காபிரிசுலாமுஞ் சரிதானென்பார் கத்தபெரியவ னமைத்தானென் பார், பாவநன்மையுஞ் சரிதானென்பார் பலதுமவனதுசெயலேயென் பார், கோவியாமலே மார்புதனிற் குளிர்ந்த சந்தணந்தன்னைப

பூசி. யாவியெழும்பலே மலூலவக்காய்ச்சி யழுத்திச்சொருக்க மேழு தாரையில். (596)

(இ-ள்):—காரியமிப்படி இருக்க, உலகத்தில் சிலபலமூடாத்து மாக்கள், காபிரும், இசுலாமும் ஒன்றுதான், எல்லாரையும் நப்பு தான்படைத்தான் என்றும், நன்மையுந் தீமையுஞ் சரிதான என்றும் நாம் நடத்தும் செயல்கள் யாவும் அவனுடைய செயலல்லாது வேறில்லை என்றும் சொல்லித்திரிவார்கள். அவர்களுடைய மார்பில் சந்தனத்தைப்பூசி அதில் இரும்பை நன்றாக காய்ச்சி சோதித்துப் பாருங்கள் அவன் சும்மா இருப்பானேயாகில் அவன் சொல்லப் பாத்திரவாளன் தான் என்று எண்ணிக்கொள்ளுங்கள். எ-று

இட்டமழுவோடு சந்தனமுமிரண்டுஞ்சரியாக இருக்குமாறுற் கெட்டபயல் சொன்னான் பலஞானத்தைக் கெடுமை புகழ்ச்சியும்மரி யென்னலாம், எட்டு விதத்திலே தெரியச்சொன்னே னின்னயது சொலக்கேட்பவர்க்குப், பட்டா லினிவந்து பலன்பெறுவோர் பாரில் வணங்காரேபாவியாகும். (597)

(இ-ள்) —ஓ, எளிய அறிவுள்ள மனிதர்களே! நான் இந்த மாஅ ரிபத்துமாலையில எல்லா ஞானத்தின் அந்தத்தையும் எட்டே விதத் தில் சொல்லிவிட்டேன், இதை நம்பாத வீணர்களெல்லாம் அநியாய மாகக் கைசேதப்பட்டு முழிப்பார்கள். எ-று

பாரில் வணங்காதோர் பாவியென்றும்படித்துப் பொருள்கண்டு வணங்கவென்றுங், கூறினேனிதை மஹரிபத்துக் குணமாமென்று சொல்லியுலகத்தோர்க்கு, ஆரும்பொருள்கண்டு தவமேசெய்வறியார் தமக்கெல்லா மெளிதாமின்னம், வாருக ஞானரெத்னமாவஞ்சி வகை யையுறைத்திட்டே னறிந்துபாரே. (598)

(இ-ள்):—இந்தமாலையைப் படிப்பவர்கள் பெரியோர்களல்லர் என்கிலும், அதன் அர்த்தப்போகின்ற பாதையைத் தனித்திருந்து அறிந்து போகவேண்டும், இதன் முடிகளையெல்லாங்கூட்டித்திரட்டி என்னுடைய ஞானரத்னக் குறவஞ்சியில் சொல்லிவிட்டேன் நுழைந்து பார்த்தறிந்துக்கொள். எ-று

அறிந்துபாருங்காண்ஞானரெத்ன மதினுமதிகமாம் பிசுமிக்குறம் இறந்துபோகுமுன் தீனோர்களேயான்சொன்ன பிசுமில்க்கும்மதனைப் பொருந்தி யதிலுள்ள பொருளைப் பாரும் பூவிலாருண்டும்

பொருளுரைக்க வருந்தியதின்படி வணக்கஞ்செய்தால் வல்லபெரியவ னருளிலாவார். (599)

(இ-ள்):— என் ஞானரத்னக் குறவஞ்சியிலும் அதிகமான பொருட்களைப் பிண்டம்பிண்டமாகக் கட்டவிழ்த்து என்னுடைய பிஸ்மில் குறத்தில சொல்லிவிட்டேன் ஓ அற்பமதியுள்ள மனிதர் களே! நீங்கள் இருக்கின்ற களவிலிருந்து வினைசெத்துமடிந்து உங்கள் சரீரத்தைவிட்டு விடுவதற்கு முன்னமே என் பிஸ்மில் குறத் தைஏறிட்டுப்பார்த்து ஆளாகிப்போங்கள். என் பிஸ்மில் குறத்துக்கு அர்த்தம் சொல்ல இந்தப் பூமியில் ஒரு ஆண்பிள்ளை பிறந்தும் இருக்கின்றானா? அதன்படி நடந்துகொள்வார்கள் அடையும் சந் தோஷத்தை நான் ஏன் இப்போது சொல்லவேண்டும். எ-று.

வல்லோனருள் கடற் கடுகிலான வாக்கு முனதுட னேர்மை யாகச், சொல்லுங்காவிய மிதுமுன்றையுஞ் சுருக்கியானந்தக்கலிபா வொன்றி, லெல்லாப்பொருளையுங் கடுவொன்றுக்கு ளேழுகட லுள்ளே யடைத்தவாறுய், அல்லாவடியாரினபியுமத்தி லறிந்தோர் ரொலியாகக் கூறினேனே. (600)

(இ-ள்):— இந்த மூன்று ஞானக் காவியங்களையும் ஒருங்கே திரட்டி நமமுடைய ஞான ஆநந்தக் கலிப்பா என்கிற சிறிய நூலில் அடக்கிவிட்டேன். எப்படியானால் ஒருகடுகைத்துளைத்து அதனுள்ளே ஏழு கடல்களையும் அடைத்த வண்ணமாகச் சொல்லிவிட்டேன். நபியுடைய உம்மத்தில் அதை அறியும் கெட்டிகாரர்கள் அறிந்து ஒலிமார்களாவார்கள். எ-று.

கூறும்பொருளான ஷறகறியேன் குதாயே யொருநாளுந் தொழுதறியேன். வேறும் பெரியோர்களிடஞ் சென்று யான்றேர்ந்து படித்திடும்பொருளறியேன், பாரிற்கொடிதான பாவமெல்லாம் பாவிமுழுதுமேசுமந்தபயல், பீருமுகம்மதென் றெளியபயல் பெரிய பிழையெல்லாஞ் செய்தபாவி. (601)

(இ-ள்):— இந்தக்காவியங்களைப் பாடியவன் எப்படிப்பட்டவன் என்றால், நபியவர்கள் சொல்லிய ஷறகில் ஒரு சிறிதும் அறியமாட் டேன், றப்பை ஒரு நாளாவது தொழுதும் அறியமாட்டேன், ஞான வான்களான நாதாக்களைப் பின் தொடர்ந்தும் அறியமாட்டேன், தமிழும் படித்தறியமாட்டேன், இந்த உலகத்தில் என்ன எவ்வித

பாவங்களும், தடையில்லாமல் செய்து அஸ்லிச்சமந்தபாவியான அடிமைத்தன முடையவன், பீர் முகம்மது என்கிறபேர் உடையவஞக இருக்கிறேன். எ-று.

பாவியான்செய்தபெரும்பாவங்கள்பதிஞலுலகுபோற்பதிஞயிரம்.
பாவியான்செய்த பிழையனைத்தும் படைத்தபெரியோனே பொருத்
தருள்வாய், பாவிப்பயலையும் மற்றோரையும் படைத்தோனிருபதி
தனில்வாழ்விக்கப், பாவியானுந்தான்பதம் பணிந்தேஞ பணிந்தேன்
பாவிதானே, (602)

(இ-ள்):— இலாஹியாகிய நப்பே! இப்பாவியாகிய நான்செய்த பெரும்பாவங்கள் பதிஞலு உலகத்தையும் நிரப்பி இருக்கின்றது, அவை எல்லாவற்றையும் பொருக்கும் கிருபையாளன் உன்னை அன்றியாரும் கிடையாது. ஆகையால் உன் சிற்றடிமையான என்னையும், மற்ற தீஞேர்களையும் ஆதரித்து பிழை பொறுப்பது உன் தயாள கடஞகை இருக்கும், அதற்காக நான் உன்னைப் பணிகின்றேன் எ-று.

பாவியாகாமனுலகத்தோர்க்குப் பாரக்கடலதனையுடைத்துவிட்டே
ஆவிலழியுமுன் றனையறிந்து மறியாப்பரத்தையுமறிந்திடுங்காள்,
காவியாவிலையழியாமலே ஹபீபுமுகம்மது ஷறகின்படி. யாகுமுமின
கடவமுஞ்செய்தா லவனே யிவஞகுந்தான்வனே. (603)

(இ-ள்):— வஞ்சனைக்காரப் பாவி என்று என்னை உலகம் தூற்ருமல் ஞானமென்கிற கடலை உடைத்துக் காட்டிவிட்டேன் அறிந்தவன், அடிமைத் தனத்தை விட்டும், றப்புடைய சிபத்தில் ஒன்றுபடுவான் இவனே அவஞகவும் இருப்பான். எ-று.

தானே தானவன் ருஞனவன் தம்பி ரானவ னெம்பிரானுப்,
ஆன வகையோட பொருந்திப்பார்த்தே யறிவிஞலறிவறிவிற்கூட்டு,
மீன மாகவே யவஞவென்ரு லிபுலி சிற்கெட்ட இபுலீசாக,
மாணங்குலையவே கணவாயைந்து மரித்து நரகந்திற் றுஞ்சுவாரே.

(இ-ள்):— அறிகின்ற திறமையாளர்களான புண்ணியவான்கள் எல்லாம் றப்புடைய சூறத்தில் விரவிக்கொள்வார்கள் இந்த அகமியத்தை மௌனஞ்சாதியாமல் வீதிதோறும்வாய்ப்பினத்திக்கொண்டு திரிகின்ற நாய்களெல்லாம் காபிராகி நரகயாதனைக்குட்படுவார்கள். நபியுடைய ஷபா அத்தும் அவர்களுக்குக் கிடையாது. எ-று.

துஞ்சுஞ் சக்கருத்துக் கணவாயொன்று தோன்றுங்க புரினிற்
கணவாயொன்றங், கஞ்சமகுசறிற் கணவாயொன்றே யறியதிராசி
னிற்கணவாயொன்று, மிஞ்சும்பாலத்திற் கணவாயொன்று மெத்தத்
தளம்பியே நரகாளுவான், பஞ்சமஞுடரேபகரக்கேளும் பரத்தையறி
யார்க்குத் தனிமையாகும். (605)

(இ-ள்):—சக்ருத்தில் ஒரு நெருப்புமலை, கபுறில் ஒரு நெருப்புமலை, மஹ்ஷரில் ஒரு நெருப்புமலை, மீஸானில் ஒரு நெருப்புமலை, சிறாத்துல் முஸ்தக்கீன் பாலத்தில் எத்தனையோ நெருப்புமலைகள் வந்து தோன்றும். கலிமாவின் பொருளைக் கண்டறியாதவர்களெல்லாம் அகப்பட்டு எரிந்து நரகவேதனையடைவார்கள். எ-று

ஆருமுலகத்திற் றனிமையாகு மரியசக்கருத்திற் றனிமையாகு
மேருங் கபுறினில் றனிமையாகு மிருவர் கேள்விக்குந்தனிமையாகும,
வாகு மகுஷரிற் றனிமையாகு வறையு மேட்டினிற் றனிமையாகும்,
பாகுந்திராசினிற் றனிமையாகும் பாலங்கடக்க வுந்தனிமையாகும்,
(606)

(இ-ள்):—ஒவ்வொரு மனிதனும், உலகத்திலும், சக்கருத்திலும். கபுறிலும், கிருமன் காத்தீபீன்களுடைய கேள்விக்கும், மஹ்ஷரிலும், மீஸான் தராசிலும், சிறாத்துல் முஸ்த்தகீன் பாலத்திலும் தனித்தவஞகவே இருக்கிருன். எ-று

ஆகுந் தனிமைதா னறிந்திலார்க்கு மருவினருளெல்லாமறிந்த
பேர்க்கும், ஏகனிறைவனருளினலே யெல்லாத் தனிமையுமெளிதா
மின்னப், வாகுபெருமுழிப்பதிதனிலே வாழ்வாருலகத்தார் தானறியத்
தாகு முப்பாலின் வகைகளெல்லாந் தரணியறியவு முரைத்தமுத்தே
(607)

(இ-ள்):—றப்புடைய தவத்தைக்கண்டு ஒழுங்குபோலச் செய்த நாதாக்களுக்கு ஒரு தனிமையுங் கிடையாது. அவர்கள் அநேகத் துணையுடன் இருந்து சிறப்படைவார்கள், சதாவுஞ்சுவர்க்கலோகத்தல் வீற்றிருப்பார்கள். எ-று

முத்துப் பவளமுமாணிக்கமு முறைபுட்ப ராகம் கோமேதக.
மற்றக்கனதயல்ல மஹரிபத்தை மகிழ்ந்து சரமாகத்தொடுத்தமாலை,
யெற்றுதெவர்க்குமே யுலகந்தனி லிறையோ னருள்பெற்றுவேற்று
மெற்றும், வித்தை மதமல்லப் பொய்யுமல்ல வேதாம்பர் சொன்
ஞரிதின்பெருமை. (608)

(இ-ள்):— முத்துமுதலிய ரத்தினங்களால் தொடுத்திருக்கின்ற மாலைகளைப்போல் என்னுடைய மஅரிபத்துமாலை என்பதை எண்ணி விடாதீர்கள். அது உங்களை விட்டு விலகிவிடக்கூடியது. இந்த மாலையோ உங்களை ஈடேற்றம் பெறும்படி செய்வது இதன் பெருமை நபியவர்களைக் கொண்டும் தெரிந்திருக்கின்றது. எ-று.

பெருமையுரைக்கவும் வலுப்பமில்லாப் பெரியோர்படிக்கவுங் கேட்டிருந்தா, லொருவர் மனதுக்குட் டரித்தபல ஞெரு கோடிஹச்சுப் பலனுமாகும், பிரியமாகவே முழுதுங்கேட்டாற் பெரியோனபிமார்கள் கோடிபலன், வரிசைப் பொருளிலேகொஞ்சங்கொஞ்சம் வலுமையவர் மட்டும் படித்தபேர்க்கு. (609)

(இ-ள்):— இத்தனை அருமை பெருமைகளை யுடைய இந்த நூலானது, இருலோகங்களுக்கும் ஸாஸனமாக இருக்கின்றது. ஒருவர் இதைப்படிக்க அதை மற்றவர்கள் கேட்ட பலனானது, கோடி ஹஜ்ஜு செய்தபவனைப் பார்க்கிலும் அதிகம் உள்ளது. இதைப் படிக்க முழுதுங்கேட்டால் ஒரு நபிக்குரிய தறஜாத்துக் கிடைக்கும். கேட்கும்போது இதன் பொருளை கொஞ்சம் மனதில், பதியவைத்தால் உடனே யாவர்களுக்கு நரகம் ஹறாமாக இருக்கும். எ-று.

படித்த பேர்க்கெல்லாநரகம் ஹறாம் படைத்தோன் ரகசியங் கடனானதால், முடித்து முழுதுமே படித்தார்பலன் முகியாதெழுது வாரிமையோ ரெல்லாம், படித்தபொருட்கண்டு பல பேர்க்கெல்லாம் படைத்தோ னிடத்திலே தோஸ்துமாகும், அடித்தான் மனையிலே வெள்ளி திங்களதபாவுலுவுடன் தீட்சைசெய்தால். (610)

(இ-ள்):— இதைப்படிந்த பலன், கேட்ட பலன், அதனால் அர்த்தம் தெரிந்த பலன் இவைகளால் றப்புடைய முஹப்பந்திற் குரியவனாவான். தீனானவர்கள் தங்கள் வீடுகளிலும் இதை வைத்துப் படித்து வருவார்களானால் அந்த வீட்டார் யாவரும் காமிலான ஷெய்கின் கையில் முரீது பெற்ற பலன் உண்டாகும், எ-று.

செய்த உபதேசம்பாத்தியாவைச் சிறப்பாயோதியபேராகட் கெல்லா, மெய்யாயவர் செய்த பாவமெல்லா மேனிதனைவிட்டுக் கழன்று போகும்,வைய மனுவோடு வாழ்ந்திருப்பார் வாழ்வாகுல கூழிகாலமட்டு, மைய மறிவேதா னுலகத்தோர்க்கு மறியவுரைந்திட் டேன் ஆமீன் ஆமீன். (611)